# பகுப்பாய்வு நோக்கில் நீல பத்மநாபன் புதினங்களில் சமூகச் சிக்கல்கள்

# ANALYSIS OF SOCIAL ISSUES IN THE NOVELS OF NEELA PADMANABHAN

கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்காக
அளிக்கப்பெறும் ஆய்வேடு


ஆய்வாளர்

**ரமா, பா.**

(பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்)

(பதிவு எண் : CHARRAM001)

நெறியாளர்

**முனைவர் ப.முருகன்**

இணைப்பேராசிரியர்

**தமிழ்த்துறை & ஆய்வுமையம்**

**அரசுக்கல்லூரி, சித்தூர்,**

**பாலக்காடு - 678104**



**நவம்பர் - 2024**

# ANALYSIS OF SOCIAL ISSUES IN THE NOVELS OF NEELA PADMANABHAN

## பகுப்பாய்வு நோக்கில் நீல பத்மநாபன் புதினங்களில் சமூகச்சிக்கல்கள்

THESIS SUBMITTED TO THE UNIVERSITY OF CALICUT
FOR THE AWARD OF DOCTOR OF PHILOSOPHY
DEGREE IN TAMIL

BY


**REMA.B**
(Reg.NO. CHARRAMOOI)

**Guide**
**Dr.P. MURUGAN**
**Associate Professor**

DEPARTMENT OF TAMIL & RESEARCH CENTRE
GOVT. COLLEGE CHITTUR, PALAKKAD


NOVEMBER-2024

**முனைவர் ப.முருகன்**
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை & ஆய்வு மையம்,
அரசுக்கல்லூரி, சித்தூர்,
பாலக்காடு – 678104.

# மேற்பார்வையாளர் சான்றிதழ்

**"பகுப்பாய்வு நோக்கில் நீல பத்மநாபன் புதினங்களில் சமூகச் சிக்கல்கள்"** என்னும் தலைப்பில் **ரமா, பா.** (Reg No. CHARRAM001) அவர்களால் கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட இவ்வாய்வேடு எனது மேற்பார்வையின் கீழ் ஆய்வாளரது சொந்த முயற்சியில் உருவானது என்றும், இவ்வாய்வின் மீது ஆய்வாளருக்கு எந்தப் பல்கலைக்கழகத்தாலும் பட்டம் எதுவும் அளிக்கப்பெறவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்

இடம்: சித்தூர்
நாள்: - - 2024

நெறியாளர்

**ரமா, பா.**
(பதிவு எண் - CHARRAM001),
தமிழ்த்துறை & ஆய்வு மையம்,
அரசுக்கல்லூரி, சித்தூர்,
பாலக்காடு - 678104.

# ஆய்வாளர் உறுதிமொழி

**"பகுப்பாய்வு நோக்கில் நீல பத்மநாபன் புதினங்களில் சமூகச் சிக்கல்கள்"** என்னும் தலைப்பில் அமைந்துள்ள இந்த ஆய்வேடு 2016 - 2024 கால அளவில் கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெறுதல் தொடர்பாக சித்தூர், அரசுக்கல்லூரித் தமிழ்த்துறை & ஆய்வு மையத்தில் ஆக்கப்பட்டது. இவ்வாய்வு எனது சொந்த முயற்சியில் உருவானது என்றும் இந்த ஆய்வின் மீது இதற்கு முன் எந்தப் பட்டமும் அளிக்கப்பெறவில்லை என்றும் உறுதியளிக்கின்றேன்.

இடம்: சித்தூர்
நாள்: - - 2024

ரமா, பா.
(ஆய்வாளர்)

உறுதிக் கையொப்பம்

**நெறியாளர்**
**முனைவர் ப.முருகன்**
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை&ஆய்வு மையம்,
அரசுக் கல்லூரி,சித்தூர்,
பாலக்காடு - 678104.

**துறைத்தலைவர்**
**முனைவர் க.முத்துலக்குமி**
தமிழ்த்துறை&ஆய்வு மையம்,
அரசுக் கல்லூரி,சித்தூர்,
பாலக்காடு - 678104.

# நன்றியுரைத்தல்...

**"பகுப்பாய்வு நோக்கில் நீல பத்மநாபன் புதினங்களில் சமூகச் சிக்கல்கள்"** என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொள்ள அனுமதி வழங்கிய கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழகத்திற்கும் சித்தூர் அரசுக் கல்லூரித் தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையத்தின் தலைவர் **முனைவர் க.முத்துஇலக்குமி** அவர்களுக்கும், ஆய்விற்கான தலைப்பு தொடங்கி. ஆயவேட்டைக் கட்டமைக்கும் ஒவ்வொரு அங்கத்திலும், பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் எனது ஆய்வை செம்மை செய்து என்னை உருவாக்கிய எனது நெறியாளர் **முனைவர் ப.முருகன்** அவர்களுக்கு மதிப்பிற்குரிய நன்றிகள்.

என்னை அன்போடு அரவணைத்து, முனைவர் பட்டம் பெறுமளவிற்கு உயர்த்திய எனது தந்தை, **பாஸ்கரன்** அவர்களுக்கும், என் தாய் **மாதவி** அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகின்றேன்

இவ்வாய்வு தொடர்பான அனைத்து செயல்களிலும் உடனிருக்கும் என் கணவர் **திரு. அனந்தகிருஷ்ணன்** அவர்களுக்கும், என் அன்பு கலந்த நன்றிகள். என்னுடைய இன்ப துன்பங்களில் எப்போதும் உடனிருந்த, உடனிருக்கும் என் உடன் பிறப்பு **மீரா, மினி, ரமேஷ்குமார், ரதி** ஆகியோருக்கும், என்னுடைய செல்லக்குட்டிகள் **யாமிகா, அனிகா** மற்றும் **குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும்** என் நன்றிகள்.

ஆய்வு தொடர்பான என்னுடைய ஐயங்களுக்கு விளக்கமளித்த முனைவர் **முனைவர் த.கவிதா** அவர்களுக்கும், பேருதவி புரிந்த **முனைவர் ந.மனோகரன்** அவர்களுக்கும், **முனைவர் க.சிவமணி** அவர்களுக்கும் **முனைவர் க.கதிரவன்** அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

சித்தூர் அரசுக்கல்லூரித் தமிழ்த்துறை பேராசிரியப் பெருமக்கள் முனைவர் **த. சுஜாதா, முனைவர் சு.பாத்திமா, முனைவர் வை.தர்மலிங்கம், முனைவர் ர.ரதி, முனைவர் த.மு.சல்மா மகஜபீன்** ஆகியோருக்கும் என் நன்றிகள் மேலும், என்னுடன் ஆய்வு செய்யும் **ஆய்வு நண்பர்களுக்கும்** எனது அன்பு கலந்த நன்றிகள். கணினித் தட்டச்சு செய்து கொடுத்த த.ராஜ்குமார் அவர்களுக்கும் என் நன்றி.

இவண்

ரமா, பா.

## சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| குறள் | - | திருக்குறள் |
| தொல். | - | தொல்காப்பியம் |
| நூ. | - | நூற்பா |
| ப. | - | பக்கம் |
| பக். | - | பக்கங்கள் |
| பா. | - | பாடல் |
| புறம். | - | புறநானூறு |
| மேலது. | - | மேலே குறிக்கப்பட்ட நூல் |

# பொருளடக்கம்


| இயல் | தலைப்பு | பக்கம் |
| --- | --- | --- |
| | ஆய்வு முன்னுரை | 1 |
| 1 | நீல பத்மநாபன் புதினங்களில் சமூகச்சிக்கல்கள் | 10 |
| 2 | நீல பத்மநாபன் புதினங்களில் குடும்பச் சிக்கல்கள் | 76 |
| 3 | நீல பத்மநாபன் புதினங்களில் பண்பாட்டுக்கூறுகள் | 142 |
| 4 | நீல பத்மநாபன் புதினங்களில் கதாமாந்தர்கள் | 189 |
| | ஆய்வு முடிவுரை | 245 |
| | துணை நூற்பட்டியல் | |
| | பின்னிணைப்புகள் | |

# முன்னுரை

# ஆய்வு முன்னுரை

## ஆய்வுப் பொருள்

தமிழிலக்கிய உலகில் ஒரு நூற்றாண்டைக் கடந்து மேலும் இருபதாண்டுகளைக் கடந்த வரலாற்றைக் கொண்ட ஒரு நவீன இலக்கிய வகைதான் புதின இலக்கியம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழுக்கு அறிமுகமான இவ்விலக்கியம் தமிழிலக்கிய வரலாற்றில் தனக்கென ஒரு நிலைத்த இடத்தைப் பெற்று இன்றும் பல்வேறு முயற்சிகளையும் ஆக்கங்களையும் உள்வாங்கிக்கொண்டு புதிய பரிமாணத்தைக் கண்டு வருகின்றது.

தமிழ் புதினம் பல்வேறு கூறுகளையும் தன்னகத்தே கொண்டது. சமூகம் பற்றியும், அதன் நிறுவனங்கள் பற்றியும் பொது நிலையிலும் சிறப்பு நிலையிலும் இதனுள் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன. தனிமனிதன் பற்றியும் அவன் சமூகத்தோடு கொண்டுள்ள உறவுகள் பற்றியும் முழுமையாகப் படைத்துக் காட்டுவது என்பது போன்று இதுவும் ஒரு கலை வடிவம்தான் எனினும் இதனுள் ஒரு மனிதனின், ஒரு சமூகத்தின் உண்மையான இயக்கத்தை உள்ளவாறே காணமுடிகிறது. அதனாலேயே இஃது ஒரு கலை வடிவம் என்பதற்கும் மேலாகச் சமூக ஆவணம் என்பதற்கான தகுதிகளையும் பெற்று விளங்குகின்றது.

சமூக நிறுவனங்களான சமயம், அரசியல், பொருளாதாரம், குடும்பம் முதலான அனைத்தையும் புதினங்கள் வழி அறிய முடியும். உலகின் வாழ்வியல் சூழலுக்கேற்ப மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசி வருகின்றனர். இனம், மொழி, பண்பாடு, நாகரிகம் போன்றவற்றால் வேறுபட்டுக் காணப்பட்டாலும் சிந்தனைத் திறத்தாலும் படைப்பாக்கத்திறத்தாலும் இவர்கள் ஒன்றுபட்டே காணப்படுவதை இலக்கியங்கள்

மெய்ப்பிக்கின்றன. பல்வேறுபட்ட கோணங்களில் சிந்தித்த மனிதன், பல்வேறு வடிவ வகைமைகளை வகுத்துக் காட்டினான். புத்தாக்க வடிவங்களின் ஒன்றான புதினம், தனக்கென தனியிடத்தைப் பிடித்துக்கொண்டு மனித வாழ்வியல் சிக்கல்களை அலசி ஆய்கின்றது.

தற்கால புதின இலக்கியப் படைப்பாளிகளின் வரிசையில் தனக்கென ஓர் அடையாளத்தைப் பதிவு செய்து கொண்டு இருப்பவர் நீல.பத்மநாபன். இவர் மனித உறவுகளுக்கிடையேயான போராட்டச் சிக்கல்கள், மனித மனோபாவங்களையும் தன் படைப்பின் மூலம் உணர்த்துகிறார். இதன் வழி சமுதாய மாற்றங்கள், வாழ்வியல் சூழல்களில் ஏற்பட்ட சிதைவுகள் குறித்த அடையாளங்களை இவர் புதினங்கள் கண்டறியும் விதமாக இவருடைய புதினங்கள் அனைத்தும் இவ்வாய்வுக்குரிய பொருளாகும்.

**ஆய்வு வகை**

இருக்கை ஆய்வு, களஆய்வு என்னும் இருவகை ஆய்வுகளுள் இவ்வாய்வு இருக்கை ஆய்வைச் சார்ந்தது.

**ஆய்வுத்தலைப்பு**

“பகுப்பாய்வு நோக்கில் நீல.பத்மநாபன் புதினங்களில் சமூகச்சிக்கல்கள்” என்பது ஆய்வுத்தலைப்பாகும்.

**ஆய்வு முன்னோடிகள்**

1. “நீல பத்மநாபன் நாவல்கள் ஒரு திறனாய்வு”, பிஎச்.டி., ஆய்வேடு, கேரளப் பல்கலைக்கழகம், 1991.

2. “இமையம் புதினங்களில் சமூகச் சித்தரிப்பு”, பிஎச்.டி., ஆய்வேடு, பாரதியார் பல்கலைக்கழகம், 2019.
3. “பள்ளிகொண்டபுரம் ஒரு திறனாய்வு”, எம்ஃபில் ஆய்வேடு, தமிழியல் ஆய்வு மையம், இந்துக்கல்லூரி, திருநெல்வேலி, 1995.
4. “நீல பத்மநாபனின் உறவுகள் ஓர் ஆய்வு”, எம்ஃபில் ஆய்வேடு, தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை, 1992.

**ஆய்வு நோக்கம்**

தற்காலத்தில் பண்பாடு நாகரீகத்தின் மாற்றத்தால் மனிதனின் வாழ்வியலும் மாறுகிறது. சூழ்நிலைக்கேற்ப வாழ்ந்தாலும் நலிந்த மனிதர்களின் நிலை கவலைக்கு இடமாகவேயுள்ளது. நீல.பத்மநாபனின் படைப்புகள் கிராம வாழ்வியலைக் களமாகக் கொண்டு கட்டமைக்கப்படுகின்றன. காலத்தின் தேவைக்கேற்ப புதியவற்றின் வருகையினை ஏற்றுக்கொள்ள இயலாத மனநிலை அதைத் தவிர்க்க முடியாத சூழல் இதனிடையே விளிம்புநிலை, சமூகத்தில் காணலாகும் கருத்தாடல்கள், மக்களின் எதார்த்தங்கள் சார்ந்த சிக்கல்களைத் தனது படைப்புகளில் சித்தரித்துக் காட்டுகிறார். இவர் படைப்பாற்றலையும் படைப்பின்வழி சித்தரிக்கின்ற சமூக அவலங்களையும் வெளிக்கொண்டு வருவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வின் கருதுகோள்**

நீல.பத்மநாபன் புதினங்கள் சமுதாயச் சிக்கல்களை மையமாகக் கொண்டே அமைந்துள்ளன என்பதே இவ்வாய்வின் கருதுகோளாக அமைகின்றது.

**ஆய்வு எல்லை**

1. தலைமுறைகள்
2. பள்ளிகொண்டபுரம்

3. ஃபைல்கள்

4. உறவுகள்

5. மின்உலகம்

6. நேற்று வந்தவன்

7. உதயதாரகை

8. வட்டத்தின் வெளியே

9. பகவதிகோயில் தெரு

10. போதையில் கரைந்தவர்கள்

11. தீ..தீ

12. முறிவுகள்

13. யாத்திரை

14. அனுபவங்கள்

15. சமர்

16. பாவம் செய்யாதவர்கள்

17. இலை உதிர்காலம்

ஆகிய நீல.பத்மநாபனின் பதினேழு புதினங்களும் ஆய்வுப்பொருளின் எல்லையாக அமைகின்றன.

**ஆய்வு மூலங்கள்**

இவ்வாய்விற்கு பயன்படுத்தப் பெறுகின்ற ஆய்வு மூலங்கள் இரண்டு வகையில் அமைகின்றன. அவை

**முதன்மைச் சான்றுகள்**

மேற்கூறிய பதினேழு புதினங்களும் முதன்மைச் சான்றுகளாக கொள்ளப்படுகின்றன. இதில் சமர், யாத்திரை, அனுபவங்கள் சமர் என்ற தொகுதியாகவும், போதையில் கரைந்தவர்கள், தீ..தீ.., முறிவுகள் ஆகிய மூன்று புதினங்களும் போதையில் கரைந்தவர்கள் என்ற தொகுதியாகவும் வெளிவந்திருக்கின்றன. பதினேழு புதினங்கள் (குறுநாவல்கள்) உட்பட இங்கு ஆய்வுக்குரிய சான்றாதாரங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆய்வுக்குரிய பதினேழு புதினங்களிலும் சமூகச் சிக்கல்கள் ஆராயப்பட்டுள்ளன.

**துணைமைச்சான்றுகள்**

இவ்வாய்வின் துணைமைச் சான்றுகளாக நீல.பத்மநாபன் புதினங்கள் பற்றிய ஆய்வு நூல்கள், அவரது படைப்புகள் பற்றி அவரே எழுதிய கட்டுரைத் தொகுப்புகள், அவரது படைப்புகள் குறித்து எழுதப்பட்ட திறனாய்வுகள், ஆய்வேடுகள், ஆய்வு கட்டுரைகள் ஆகியவை துணைமைச் சான்றுகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

**ஆய்வின் பயன்**

தமிழ் மொழியின் இலக்கியங்களான புதினங்களை ஆராய்ச்சி செய்வதற்கும் நீல.பத்மநாபனின் புதினங்களில் சமூகச் சிக்கல்களை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கும், அப்புதினங்களில் தோன்றிய சூழலைப் புரிந்து கொள்வதற்கும் இவ்வாய்வு பெரிதும் பயனுள்ளதாக அமையும்.

**ஆய்வு அணுகுமுறை**

இவ்வாய்வில் வரலாற்றியல் அணுகுமுறையும் (Historical Approach), விளக்கமுறை அணுகுமுறையும் (Descriptive Method), சமூகவியல் அணுகுமுறையும், பகுப்பாய்வு அணுகுமுறையும் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பகுப்புமுறை**

**“பகுப்பாய்வு நோக்கில் நீல.பத்மதநாபன் புதினங்களில் சமூகச் சிக்கல்கள்”** என்னும் தலைப்பைக் கொண்ட இவ்வாய்வேடு முன்னுரை முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

இயல்-1 நீல பத்மநாபன் புதினங்களில் சமூகச்சிக்கல்கள்

இயல்-2 நீல பத்மநாபன் புதினங்களில் குடும்பச் சிக்கல்கள்

இயல்-3 நீல பத்மநாபன் புதினங்களில் பண்பாட்டுக்கூறுகள்

இயல்-4 நீல பத்மநாபன் புதினங்களில் கதாமாந்தர்கள்

**முன்னுரை**

ஆய்வுப்பொருள் தெரிவு - பகுப்பாய்வு நோக்கில் நீல பத்மநாபன் புதினங்களில் சமூகச்சிக்கல்கள் குறித்த ஆய்வின் இன்றியமையாமை – ஆய்வுநோக்கம் – ஆய்வு மூலங்கள் – ஆய்வுப்பொருள் – ஆய்வு அணுகுமுறை – ஆய்வேட்டின் அமைப்பு ஆகியன முன்னுரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**இயல்-1 நீல பத்மநாபன் புதினங்களில் சமூகச் சிக்கல்கள்** என்னும் இவ்வியலில் நீல பத்மநாபன் எழுதிய பதினேழு நாவல்களுள், பள்ளிகொண்டபுரம், ஃபைல்கள், உறவுகள், சமர், அனுபவங்கள், மின் உலகம், வட்டத்தின் வெளியே ஆகிய ஏழு நாவல்கள் அரசு அலுவலகத்தைப் பற்றி பேசுகின்றன. இதில் பள்ளிகொண்டபுரம், உறவுகள் தவிர பிற ஐந்து நாவல்களும் அலுவலகத்தின் சூழல்களை ஆசிரியர் தம் நாவல்களில் அதிக அளவில் கையாண்டுள்ளார். மேல்நிலை ஊழியர்கள் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு தங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்களை அடக்கி

ஆள்வதை ஃபைல்கள், வட்டத்தின் வெளியே, மின்உலகம், அனுபவங்கள் ஆகிய புதினங்களின் வாயிலாக அறியமுடிகிறது. 'மூத்த குடிமக்களின்' பிரச்சினைகளைப் பற்றி 'இலை உதிர்காலம்' புதினம் வாயிலாக அறியமுடிகிறது. மேலும் பொருளாதார ஏற்றதாழ்வுகள், சமயப்பிரிவினைகள், மக்களின் யதார்த்த வாழ்வில் ஏற்படும் சிக்கல்கள் மட்டுமல்லாது இதற்கான சூழலையும் ஆராய்வதாக இவ்வியல் அமைகின்றது.

**இயல்-2 நீல பத்மநாபன் புதினங்களில் குடும்பச் சிக்கல்கள்** என்னும் இவ்வியலில் குடும்பம் எனும் அமைப்பிலிருந்து மனிதசமூகம் எனும் பரந்த அமைப்பு விரிவுபெறுகிறது. ஆதலின் குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படையாக உள்ளது. மேலும் நம்மைச்சுற்றி மனிதர்கள், நல்லுறவுகள் இருந்தால்தான் வாழ்வின் அனைத்து சிக்கல்களையும் நம்மால் எளிதாகக் கையாளமுடியும். கணவன் -மனைவி, மகன் – தந்தை, தாய் – மகள், பாட்டி – பேரன், உடன்பிறப்புகள், மாமனார் – மருமகன் போன்ற பலவிதமான உறவு நிலைகளால் ஏற்படும் இடர்ப்பாடுகளையும் குடும்பச் சிக்கலின் வழியாக குடும்ப அமைப்பின் அடிப்படைத்தேவை ஆழமான புரிதல்தான் என்பதை உணர்ந்து செயல்படுதல் நன்று என தன்னுடைய புதினங்களின் வாயிலாகத் தொகுத்து இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது.

**இயல்-3 நீல பத்மநாபன் புதினங்களில் பண்பாட்டுக் கூறுகள்** என்னும் இவ்வியலில் மனித இனம் எப்படி வாழவேண்டும் என்பதைவிட எப்படி வாழக்கூடாது என்று வாழ்வியலைக் கற்றுக் கொடுத்த தமிழரின் பண்பாட்டு அடிச்சுவடுகள் இன்றும் உலகம் முழுவதிலும் தடம் பதித்து இருக்கிறது என்றால் உயர்ந்த சிந்தனைகளையும் உயர்வான எண்ணங்களையும் சமூகம் என்னும் மணற் பரப்பில் விதைத்துச் சென்றிருக்கிறது என்று கூறலாம். அவ்வகையில் பண்பாட்டுக்கூறுகள் என்னும் மூன்றாவது இயலில் தமிழ் இலக்கியங்கள் கூறும் பண்பாட்டுக் கூறுகள், பண்பாடும்

மொழியும், சடங்குமுறைகள், பழக்கவழக்கங்கள், விடுகதைகள், விளையாட்டுக்கள், ஒப்பாரிப்பாடல்கள் மற்றும் காதல் உறவுகள், முறையற்ற காதல் உறவுகளைப்பற்றித் தொகுத்து ஆராய்வதாக இவ்வியல் அமைகிறது.

**இயல்-4 நீல பத்மநாபன் புதினங்களில் கதாமாந்தர்கள்** என்ற நான்காவது இயல் ஒரு படைப்பாளி தன் மனதில் தோன்றுவதைத்தான் எழுத்துக்களாக நமக்கு படைக்கிறான். அதில் தெளியும் காட்சிகளும் கதைமாந்தர்களும் நம் மனதை ஆட்கொள்ளும்போது அது ஒரு சிறந்த படைப்பாகிறது. இந்த வகையில் நீல பத்மநாபன் நமக்கெல்லாம் அறிமுகமான கதாபாத்திரங்களைத் தன் கதைமாந்தர்களாகக் கொண்டு புதினம் படைத்து வெற்றி பெற்றவர். எழுத்தாளன் வாழ்க்கைச் சிக்கலிலிருந்து விலகியோடும் மனவுணர்வினாலேயே எழுதுகின்றனர். அவனது குறைகள், அனுபவங்கள் போன்றவற்றைப் படைப்பின் மூலமாகக் கூறுகிறான். அவனது பல்வேறு மனநிலைகளுக்கேற்ப பல்வேறு கதாமாந்தர்களைத் தொகுத்து ஆய்வதாக இவ்வியல் அமைகிறது.

**முடிவுரை**

நான்கு இயல்களில் ஆராயப்பட்டதன் ஆய்வு முடிவுகளை விளக்கும் பகுதியாக முடிவுரை அமைகின்றது. இவ்வாய்வு பொருண்மையோடு தொடர்புடைய மேலாய்வுக்களமும் சுட்டப்பெற்றுள்ளது. முடிவுரையைத் தொடர்ந்து துணைநூற்பட்டியலும் பின்னிணைப்பும் தரப்பட்டுள்ளன.

# இயல் - 1

# நீல பத்மநாபன் புதினங்களில் சமூகச்சிக்கல்கள்

# இயல் - 1

## நீல.பத்மநாபன் புதினங்களில் சமூகச் சிக்கல்கள்

உலகின் வாழ்வியல் சூழலுக்கேற்ப மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசி வருகின்றனர். இனம், மொழி பண்பாடு, நாகரிகம் போன்றவற்றால் வேறுபட்டுக் காணப்பட்டாலும் சிந்தனைத் திறத்தாலும் படைப்பாக்கத்திறத்தாலும் இவர்கள் ஒன்றுபட்டே காணப்படுவதை இலக்கியங்கள் மெய்ப்பிக்கின்றன. பல்வேறுபட்ட கோணங்களில் சிந்தித்த மனிதன் பல்வேறு வடிவ வகைமைகளை வகுத்துக் காட்டினான். புத்தாக்க வடிவங்களின் ஒன்றான புதினம், தனக்கென தனியிடத்தைப் பிடித்துக் கொண்டு, மனித வாழ்வியல் சிக்கல்களை அலசி ஆய்கின்றது.

தற்கால புதின இலக்கியப் படைப்பாளிகளின் வரிசையில் தனக்கென ஓர் அடையாளத்தைப் பதிவு செய்து கொண்டு இருப்பவர் நீல.பத்மநாபன். இவர் மனித உறவுகளுக்கிடையேயான போராட்டச் சிக்கல்கள் மனித மனோபாவங்களையும் தன் படைப்பின் மூலம் உணர்த்துகிறார். இதன் வழி சமுதாய மாற்றங்கள் வாழ்வியல் சூழல்களில் ஏற்பட்ட சிதைவுகள் குறித்த அடையாளங்களை இவருடைய புதினங்கள் வெளிக்காட்டுகின்றது.

இன்றைய புதினங்கள் மக்களின் வாழ்க்கை முறைகளையும், யதார்த்த வாழ்வின் சிக்கல்களையும் கருப்பொருளாகக் கொண்டவை. சமூகத்தைக் கூர்ந்து கவனிக்கும் படைப்பாளி தான் கண்டுணர்ந்த நிகழ்வுகளை படைப்புகளின் பாடுபொருளாக்குகின்றனர். சமுதாயச் சிக்கல்களை மட்டுமே சொல்லாமல் அதற்கான தீர்வுகளையும் புதினங்களின் வழியாக பதிவு செய்துள்ளார்.

“சமுதாய சிக்கல்கள் என்பவை மாறிவரும் அரசியல் பொருளாதார நிலைகளின் காரணமாகச் சமுதாய உறவுகள் மத்தியிலும் மதிப்புகள் மத்தியிலும் காணப்படுபவை. உண்மையில் சமுதாயம் என்பது ஒரே சீரான நிலையை வளர் நிலையைக் கொண்டதல்ல. அடிப்படையில் சமுதாயம் என்பது அதன் அமைப்பிலேயே சில முரண்பாடுகளைக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாகவே அதிலே சிக்கல்கள் தோன்றுகின்றன”[1].

சமுதாயத்தின் முன்னேற்றத்தை சீர்குலைக்கும் அனைத்தும் சமூகச் சிக்கல்களாகும். ஒரு மனிதன் சிக்கலில் அகப்பட்டுத் தவிப்பது தனிமனித சிக்கல் என்றும், பல மக்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சிக்கலினால் துன்பப்படுவது சமூகச் சிக்கல்களுக்கு அடிப்படையாக அமைகின்றன. சமூகத்தில் நிகழ்கின்ற சிக்கல்களை எடுத்துக்காட்டும் விதமாக பலவிதமான இலக்கியப் படைப்புக்கள் தோன்றிய வண்ணம் உள்ளது. அவ்வகையில் நீல.பத்மநாபனின் படைப்புக்களும் மக்களின் வாழ்வியலில் எதிர்கொள்ளுகின்ற சிக்கல்களையும் வடிவமைக்கின்றது.

**சமூகச் சிக்கல்கள்**

குடும்ப அமைப்பு சமூகத்தில் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. அந்த அமைப்பில் ஏற்படும் பாதிப்பிற்கு சமூகம் பல நேரங்களில் காரணமாகிறது. இதன் அடிப்படையில் பல அறிஞர்களும், சமுதாயச் சிக்கல்கள் தனிமனிதனையும் குடும்பத்தையும் தாக்குகின்ற நிலையைக் காணமுடிவதைப் பார்க்கலாம்.

“இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தச் சமுதாயத்தில் இருந்த இழிவுகள் ஒன்றா? இரண்டா? சாதிக் கொடுமை, சமய மடைமை, தீண்டாமைப் பேய், கடவுள் பேரால் கயமை, கண்மூடித்தனம், பெண்ணடிமை, மூடநம்பிக்கை, ஏற்றத்தாழ்வு

எனப் பெருகிக் கடந்தன"[2] என்று அறியும்போது சமூகத் தாக்குதலுக்குக் காரணமும் நன்கு புலனாகிறது.

நீல.பத்மநாபன் தனது இலக்கியப் படைப்பில் கூறுவது வாழ்க்கையின் தொடக்கத்திலிருந்து தொட்டால் சிணுங்கி செடியைப் போல் இருந்ததாக ஒத்துக்கொள்கிறார். எனவே தான் அவர் மனிதன் படும் துயரைக் கண்டு வேதனைப்படுவதை நம்மால் உணர முடிகிறது. மேல் தட்டு, வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு எழுதும் எழுத்தாளர்களைக் கண்டிக்கிறார். ஏனென்றால் ஏழை நாடான இந்தியாவில் வாழும் ஏழைகளின் பிரச்சனைகளை ஒதுக்கி விட முடியாது என்று கருதுகிறார். ஆங்காங்கே மாறிவரும் சூழ்நிலையைப் பயன்படுத்தி பணம் சம்பாதித்து வாழ்க்கை நடத்தும் பணக்காரர்களைப் பற்றியும் இவர் நாவல்களில் காணமுடிகிறது. பொய், லஞ்சம், பித்தலாட்டம் மற்றும் தவறான வழியில் சலுகைகள் பெறுதல் ஆகிய செயல்கள் மூலம் செல்வத்தைப் பெருக்கி வாழும் மனிதர்களைப் பற்றியும் பேசப்படுகிறது.

"ஒரு எழுத்தாளனை மதிப்பீடு செய்ய வேண்டியது அவன் படைப்புகளின் அடிப்படையில் மட்டுமே இருக்க வேண்டுமேயன்றி தன் படைப்புகளைப் பற்றிய அவன் விளக்க உரையால் அல்ல"[3] என்று நீல.பத்மநாபன் தன் கட்டுரையில் கூறியிருப்பது போல், சமூகத்தின் பாதிப்புக்குள்ளாகும் தனி மனிதர்களின் மன உணர்வுகள் அவரின் படைப்புகளில் உள்ளது உள்ளவாறு இயல்பாகச் சித்தரிக்கப்படுகின்றன.

மனிதனின் ஒழுக்கலாறுகளை ஆராய்வதையே குறிக்கோளாகக் கொண்ட சமூகவியலும் இலக்கியமும் நெருங்கிய தொடர்புடையவை. இலக்கிய வகையுள்

ஒன்றாகிய புதினம் சமூகவியலுடன் மிகவும் இயைபுடையதாக விளங்குகின்றது. சமூகத்தின் ஓர் உறுப்பினரான மனிதனின் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்களைத் தன்னகத்தே படித்துக் காட்டும் ஆவணமாக விளங்கும் புதினம் இன்றைய சமூகம் எங்கே போய்க்கொண்டிருக்கிறது எனவும் காட்டுகிறது.

எனவே, "சமுதாய மாற்றங்களின் உந்துதலினாலேயே நவீன வடிவமாகிய நாவல் படைக்கப்பட்டது"[4] எனக் கூறுவர். சமுதாயம் மற்றும் சமுதாய மாற்றம் குறித்த விளக்கம் இத்தொடர்பை நன்கு அறிந்திடத் துணைபுரியும். ஆகவே, இவியலுள் சமுதாய சிக்கல்கள் குறித்த விளக்கமும், சமூகச் சிக்கலுக்கும் புதினக் கலைக்கும் உள்ள தொடர்பும் விளக்கப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து நீல.பத்மநாபனின் நாவல்களில் இடம் பெற்றுள்ள சமூகச் சிக்கல்கள் ஆராயப்படுகின்றன.

ஏழூர் செட்டியார்களின் குடும்பத்தில் நேரும் சிக்கல்கள் பற்றி நீல.பத்மநாபனின் 'தலைமுறைகள்' காட்டுகின்றது. "ஒரே பெற்றோர்களின் பிள்ளைகள் ஆளுக்கொரு பண்பினையும் போக்கினையும் கொண்டிருப்பதால் அக்குடும்பம் இறுதிவரை ஒற்றுமையும் மகிழ்ச்சியும் இல்லாது அல்லலுறும் நிலையினை ஐசக் அருமைராஜனின் 'கீறல்களில்' அறிய முடிகின்றது. நாவல் வரலாற்றின் இறுதிக் கட்டத்தைச் சார்ந்த நாவல்களான வண்ண நிலவனின் கடல்புறத்தில், கம்பாநதி பூமணியின் பிறகு ஆகியன முன்னர் குறிப்பிட்ட நாவல்களில் பதிவு பெறாமல் விடுபட்ட மக்களின் குடும்ப வாழ்வியலைப் பதிவு செய்துள்ளன".[5]

**முதியோர்களின் சிக்கல்கள்**

நாவல் ஆசிரியரின் இருபத்தைந்து வயது இளமையில் அவர் படைத்த கூனாங்காணி பாட்டா, உண்ணாமலை ஆச்சி, சற்றும் வயதேற, பள்ளிகொண்ட புரம்

அனந்தன் நாயர், உறவுகள், பரமேஸ்வரன் பிள்ளை போன்ற முதுமை வயதை எட்டிய பிறகு அவர்களின் உள்ள உடல் உபாதைகளையெல்லாம் அனுபவித்து அறிந்து கொண்டிருக்கையில் மீண்டும் அவருக்குள்ளே எழுந்த நாவல் இலையுதிர் காலம் ஆகும். இந்நாவல் மூத்த குடிமக்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளை முன் வைக்கிறது. ஆசிரியர் நீல.பத்மநாபன் இளமை நாட்களிலிருந்தே பாட்டி, தாத்தா முதலியவர்கள் மட்டுமல்ல, உறவில் நட்பில்,பழக்கத்தில், எல்லாம் வீட்டில் வருகிறவர்கள், அவர்களின் முதிர்ச்சியான பேச்சு வழக்குகள், பிரச்சனைகளைக் கவனிப்பதில் ஒரு ஆர்வம் இருந்து வந்தது.

அறிந்தும் அறியாமலும் ஆசிரியருடைய படைப்புகள் பலவற்றிலும் கதாபாத்திரங்கள் வலம் வந்து கொண்டிருந்தார்கள். உண்ணாமலை, ஆச்சிகளாய், கூனாங்காணிப் பாட்டாக்களாய், விம்மல்கள் மட்டுமல்ல, வாழ்வையும் மரணத்தையும் எதிர்கொண்ட துணிச்சல்கள், வயோதிகர்கள் ஆவதற்குக் காத்துக் கொண்டிருக்கும் உற்றம் சுற்றத்தினரிடமிருந்து ஏற்கெனவே வயோதிகத்தை எட்டி விட்டவர்களுக்கு ஏற்பட்டுக் கொண்டிருந்த எள்ளல்கள், அவமதிப்புகள், ஒரு காலத்தில் வணங்காமுடிகளாக நிமிர்ந்து வாழ்ந்தவர்கள் நோய்க்கும், நன்றி மறந்தவர்களின் வாய்க்கும் அடிபட்டு, நாதியற்று ஓய்ந்து விட்ட நிலைகள், இதில் வாசகர்களின் கரம் பற்றி அழைத்துச் செல்கிறது. ராதா கிருஷ்ணன் சார், பி.பி. சார், சர்மா ஹரி வித்யாதரன் சார் என்று வரும் கதாபாத்திரங்களை இலை உதிர்காலம் போல வேறு எந்தக் கதையிலும் காணுதல் அரிது. மெல்ல மெல்ல இளமையிலிருந்து முதுமையை அடைந்து கொண்டிருந்தபோது, மேலும் தீவிரமாய், நேருக்கு நேர் காண நேர்ந்தவை, அனுபவித்தவை, அவர் வேலை பார்த்த அண்டை மாநில அரசு சார்பான நிறுவனத்திலிருந்து ஐம்பது வயதிலேயே முப்பது ஆண்டுகால வேலையிலிருந்து ஓய்வு

பெற்றபின், இன்னும் அதிகமான நெருக்கமான செய்திகள். அவர் சமவயதினர், சற்று மேலும் கீழுமுள்ள அவர் போன்ற வயோதிகர்கள் ஏனோ கிழவர்கள், கிழவிகள் என்ற சொற்களை அதிகமானோர் விரும்புவதில்லை. கொஞ்சம் கூடக் கௌரவமான சொல்லுக்கு மூத்த குடிமக்கள், சீனியர் சிட்டிஸன்ஸ். ஒரு சிலர் தவிர பல்வேறு பிரச்சனைகளுக்கு இடையில், வெளிப் பார்வைக்கு 'சுகம்' நலம் என்ற முகமூடிகள் அணிந்து வாழ்ந்து தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.  என்று தான் சொல்ல வேண்டும் வயதான பிறகும் கொழுப்பு அடங்கல்லே, நாய்க்கு நரைச்சது போல நரைச்சால் மட்டும் போதுமா? இத்தனைக் காலம் அனுபவிச்சாச்சே இனிக் கொஞ்சம் அடங்கிப் போனால் என்னவாம்? கோயில் குளம், புராண உபந்நியாசம் என்றெல்லாம் இருந்தால் போதாதா? இப்படி நிறையச் சொல்லம்புகள்.

மனமுவந்தும், வேறு வழியில்லாமலும் முதியோர் இல்லங்களைச் சரணடைகிறவர்கள், அங்கேயே இல்லாமலாகி இறுதிச் சடங்குக்கும் விதிக்கப்பட்டவர்கள். ஆசைகள் அடங்குவது வேறு அடக்குவது வேறு அந்நாள் வரை கோயில் குளம், அருட்பாக்கள், கீதை, ராமாயணம், குறள் என்றெல்லாம் அலட்டிக் கொள்ளாதவர்களிடம் திடீரென்று அவற்றிற்கு மாறிவிட ஸ்விட்ச் ஓவர் பண்ணச் சொன்னால்? அந்நாள் வரை அடங்கி ஒடுங்கி இருந்தவர்கள் மனைவி மக்கள் உட்பட, உதாசீனம் செய்வதை சீரணிக்க இயலாமை, மகன் கையால் அரை வாங்கியவர்கள் மகனின் மனைவி மருமகளால் அவச் சொல்லுக்கு ஆளாக்கப்பட்டவர்கள். இப்படி இப்படிப் பட்டியலிட்டவாறே சொல்லலாம். இவற்றிற்கெல்லாம் இன்னொரு கோணம் மறுபக்கம் சம்பந்தப்பட்டவர்கள் சார்பாக உண்டு என்பது தெரிந்திருந்தும், இவர்கள் எல்லோரும் மீண்டும் மீண்டும் அக அமைதியைக் தொலைத்தவாறு தம்மை வெளிக்காட்டிக் கொண்டிருந்தனர்.

“அப்பாவுக்கு இங்கே என்ன செலவு? சாப்பாடு போடுறாங்க, மெடிக்கல் கெயறும் அவங்க பொறுப்பு, அப்புறம் மணியார்டரில் வந்த இந்த மாச பென்ஷன் தொகையை என்ன பண்ணுனீங்க”?[6] இளைஞனின் உரத்த குரல், எதிரில் நிற்கும் வயோதிக தகப்பனாரின் பலவீனக் குரல், பதில் சரியாக காதில் விழவில்லை ஊமை வெளிச்சத்தில் இருவர் உருவமும், முகங்களும் சரிவரத் தெரியவில்லை ஆனால் விடுதிவாசிகளுக்கெல்லாம் அடிக்கடி பார்த்துப் பழக்கப்பட்ட காட்சி, எனவே இருளில் அரங்கேறினாலும் அந்த சோக நாடகத்தின் உருவங்களும், உள்ளடக்கமும் சரிவரத் தெரிந்தவைகள் தானே.

வீட்டில் இருக்க முடியாமல் பிடிக்காமல் கடைசிப் புகலிடமாக இங்கே சரணடைந்தவர் இந்த நல்லசிவம், அனேகமாக இங்கேயுள்ள ஏனைய மூத்த குடிமக்களைப் போல, இப்போது இங்கே வந்த பிறகும், இப்போது இப்படி காசிக்குப் போனாலும் கர்மம் தொலையாது என்பதைப்போல்! நடந்து கொண்டிருக்கையில் அழைபாயும் மனம் இலாகாவில் இந்த நல்லசிவத்திற்கு இருந்த பெயரென்ன, பெருமை என்ன இப்போது இங்கே விடுதியில்.

பட்ட மரங்கள் என்று வெட்டிச் சாய்த்து விட வேண்டியதுதானா? குழந்தையைப் போல் தெய்வத்தைபபோல் கொண்டாட வேண்டாம். ஆனால், தள்ளாத இந்த வயதில் ஒரு துளி அன்பு, ஆதரவு, அங்கீகாரம், ஆறுதல் இவற்றை எதிர்பார்ப்பது பாவமா? மாறி மாறி நேருக்கு நேர் கேள்விகள் எழுப்பிக் கொண்டிருந்தனர். எது எப்படியோ மனித வாழ்விலும் இளவேனில், முதுவேனில் காலங்கள், கார்காலம், கூதிர்காலம், முன்பின் பனிக் காலங்கள் என்று பருவங்கள் உண்டு. பாலபருவம் இளமை முதுமை என்பது இயல்பு இடையில் உதிர்ந்து விடாமல் முதுமையை எட்ட முடிவது ஒரு வரப்பிரசாதமாகும்.

நாமெல்லாம் தனித்தனித் தீவுகளாக இருப்பதை விடுத்து பிறருக்கு நம்மால் முடிந்த உதவிகளைச் செய்வதையும் உறவு முறைகளோடு வாழ்வதையும் கடமையாக எண்ணி வாழ்தல் வேண்டும் என பத்மநாபன் அவர்கள் 'இலையுதிர்க் காலம்' நாவலின் வாயிலாக எடுத்துரைக்கின்றார்.

**தலைமுறைகள்**

சோழ தேசத்திலிருந்து கேரளத்திற்குக் குடிபெயர்ந்து நிலை கொண்ட ஒரு தமிழ்க் குடும்பத்தைப் பற்றிய கதையானதால், தலைமுறைகளின் மொழிநடையும் பாணியும். தமிழ், மலையாளம் ஆகிய இரு கலாச்சாரங்களின் முரண்பாட்டு மோதல்களினால் வளமை பெற்றிருக்கிறது. வேற்றிடத்தில் சென்று குடியேறியதைப் பற்றிய கதை, நாவல் பின்புலத்தின் ஒரு பகுதியாக அமைகிறது. பத்மநாபனுக்கே சொந்தமான ஒரு தனித்த பாணியில், இது நாவலுக்கு உத்தியையும் ஆழத்தையும் கொடுக்கிறது. வயது முதிர்ந்த படிப்பறிவில்லாத ஆச்சிக்கும், வளர்ந்து வருகிற பேரனுக்குமிடையே நிகழும் கருத்துப் பரிமாற்றங்களை, நாவலில் கதாநாயகனான திரவியின் மனத்தில் பாரம்பரியமாக நிலவி வருகிற பழக்க வழக்கங்களின் முக்கியத்துவத்தை ஆழப் பதிய வைக்கும் கருவிகளாக நீலபத்மநாபன் உபயோகப்படுத்தியுள்ளார்.

தலைமுறைகள் மத நம்பிக்கைகளைக் கட்டிக் காப்பதற்கும், தலைமுறை தலைமுறையாக அந்தக் குடும்பத்துக்குள்ளே வழிவழியாக வந்த பாரம்பரியத் தன்மைகளைக் காப்பாற்றுவதற்கும் போராடுகிற ஒரு குடும்பத்தின் நேரடியாகவும் மற்றும் பொருளாதார ரீதியான இந்த உலகத்தில் படிப்படியாக மோசமாகிக் கொண்டு வருகிற சூழ்நிலைகளை எதிர்கொண்டு தைரியமாக எதிர்த்து நிற்க முயல்கிற ஒரு குடும்பத்தைப் பற்றிய கதையாகவும் விளங்குகிறது.

தந்தை அவற்றை எதிர்த்துச் சமாளிக்க முடியாதவராயிருக்கிறார். அவருடைய மகன் நடைமுறை மரபுகளை அலட்சியம் செய்துவிட்டு, பிரச்சினைகள் குறித்துத் தீவிரமாக முன்னோக்கிச் செயல்படுவதற்கு முன் மிகுந்த தயக்கம் கொள்ள வேண்டியவனாயிருக்கிறான். அவன் மேற்கொண்ட ஒரு தைரியமான நடவடிக்கை, கணவனால் குழந்தை பெறத் தகுதியற்றவள் என்று ஒதுக்கி வைக்கப்பட்டப் பெண்ணுக்கு மறுமணம் செய்து வைக்க முயன்றதாகும். இதில் உண்மையென்னவென்றால் அந்தக் கணவன் தான் ஆண்மையற்றவன். இந்த உண்மையை ஒரு பெண் மருத்துவர் மூலம் உறுதிப்படுத்திக் கொண்ட திரவி ஒரு பெண்ணை ஒரு பெண் மருத்துவரிடம் பரிசோதனைக்கு அனுப்ப அந்தக் குடும்பத்தில் ஒத்துக் கொண்டதே நடைமுறை மரபு மீறிய ஒரு நடவடிக்கை தான். இந்த உண்மையைக் கொண்டு அவளின் கணவனைச் சந்தித்து, அவளை மீண்டும் மனைவியாக ஏற்றுக் கொள்ளும்படி செய்ய முயல்கிறான். கணவன் அவளை ஏற்றுக் கொள்ள மறுத்தபோது அவளை மறுமணம் செய்து கொள்ள விரும்புகிற ஒருவனுக்கு அவளைக் கொடுக்க அவன் தயாராகிறான். மிகவும் தைரியமான புரட்சிகரமான ஒரு நடவடிக்கை இது. ஆனால் திரவி அதில் வெற்றி பெறவில்லை, அவளை மறுமணம் செய்து கொள்ள விரும்புகிற அந்த இளைஞன் இறந்து போகிறான். அதன் பிறகு அந்தக்குடும்பம் வேறிடத்திற்குக் குடிபெயரத் தீர்மானிக்கிறது. இந்தத் தீர்மானமே ஒரு புரட்சிகரமான முடிவு தான்.

ஆச்சியின் கதைகள் கடந்த காலத்தைப் பற்றிச் சொல்வதோடு, நிகழ்காலத்தில், உலக நடப்புகளையும் சொல்லிச் சிறுவன் திரவிக்கு அறிவுறுத்துவனவாக அமைந்தன. பற்பல உறவு முறைகள் பற்றி அவள் அவனுக்குத் தெளிவு படுத்தினாள்.

பாரம்பரியக் குணங்களை ஆச்சி அவன் மனத்தினுள் நிறையப் புகட்டியிருந்த போதிலும், தனது சகோதரியின் நிலைமையை எதிர்கொண்ட போது அவன் புதிய விஷயங்களுக்குத் திரும்பினான். அவளுடைய திருமணத்தில் அவன் பங்கேற்கும் போது அவன் சிறு பையனாக இருந்தான். அவள் குழந்தை பெறுவதற்கு தகுதியற்றவள் என்று கணவனால் ஒதுக்கி வைக்கப்பட்ட சம்பவத்தைக் காணும் போது, அவன் பள்ளி மாணவனாக இருந்தான். என்னதான் முயற்சி செய்தும், அவன் சகோதரிக்கு இழைக்கப்பட்ட கொடுமையைக் கிராமப் பஞ்சாயத்தினரால் சரி செய்ய முடியவில்லை. “நாகு அக்காளை மாப்பிள்ளை வீட்டிலிருந்து விரட்டிவிட்ட சம்பவத்தின் திடீர் அதிர்ச்சி ஒடுங்கி, தொடர்ந்து கொண்டிருக்கும் ஒரு அன்றாட யதார்த்த நிலைமை ஆகிவிட்டது. காலம் எல்லாவற்றையும் ஆற்றிவிடும் பழையபடி வீட்டு விஷயங்கள் நடந்து கொண்டிருந்தன. “நாகு அக்கா எல்லோருடைய மனசிலும் உறுத்திக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் இப்போது எழுந்திரிச்சு வீட்டு வேலைகளையெல்லாம் வலிய வந்து செய்யத் தொடங்கினாள். என்ன நினைத்துக் கொள்வாளோ, திடீர்ண்ணு வாரியலை எடுத்துக்கிட்டு போய் களம் முழுவதையும் பெருக்கத் தொடங்கி விடுவாள். பிறகு கிணற்றிலிருந்து தண்ணீரை இறைச்சு, இறைச்சுத் தொட்டி நிறைஞ்சு வடிவது கூடத் தெரியாமல் விட்டுக் கொண்டே இருப்பாள். ஒண்ணும் கிடைக்காவிட்டால் கொஞ்சம் நெல்லைக் காயப்போட்டுக் குத்தத் தொடங்கி விடுவாள்”. இப்படி எப்போ பார்த்தாலும் ஏதாவது வேலை செய்துகிட்டே இருக்கணுமென்ற ஒரு போக்கில் போய்க்கொண்டிருந்தாள். உம் அப்படியாவது தன் கவலையை மறந்து விடப் பாடுபடுகிறாளோ என்று திரவிக்குத் தோன்றும் “.[7]

தலைமுறை நாவல் நாகம்மை என்ற பேதைப் பெண்ணின் அவலத்தை மையமாகக் கொண்டது. அவளை மணந்து கொண்டவன் தனது ஆண்மையின்மையை

மறைக்க அவளது பேதமையையும் தனது பொருளாதார வசதியையும் கொண்டு அவளை வாழ வெட்டியாக ஆக்குகிறான். இந்த நிகழ்ச்சி மூன்று வேறு தலைமுறைகளைச் சேர்ந்தவர்களையும் மூன்று விதமாகப் பாதிக்கிறது. பழைய தலைமுறையைச் சேர்ந்த உண்ணாமலை ஆச்சி 'நம்ம கையிலே ஒண்ணும் இல்லை அவரவர் தலையில் எழுதியிருப்பதைப் போல எல்லாம் நடக்கும்' என்று கடவுளின் மீது பாரத்தைப் போட்டு விடுகிறாள். இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்த அப்பாவும் அம்மாவும் தம் மகள் இனி வாழ்நாள் பூரா வாழா வெட்டியாக இருந்து அல்லல்படப் போவதை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறெதையும் நடைமுறையில் செயலாற்ற முடியாத தங்கள் இயலாமையை நினைத்து சலித்துச் சலித்து உள்ளுக்குள்ளேயே குமுறிக் கொந்தளித்துப் புழுங்கியவாறு நாளைக் கழித்து விடக் கூடும், ஆனால் மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்த திரவி புதிய தலைமுறையின் பிரதிநிதியான இளைஞனான தனக்கு, தன் கூடப் பிறந்தவளின் இந்த நிலைமையில் இப்படிப் பாரத்தை வேறு தலையிலாவது போட்டு விட்டோ, இல்லை கோழைத்தனமான வெறும் மனப்புழக்கத்துடனோ நின்று விட முடியுமா? என்று யோசிக்கத் தொடங்குகிறான். இது தலைமுறை வித்தியாசங்களில் வித்தியாசப்படுகின்ற மனப்போக்குகளை வாழ்க்கைக் கண்ணோட்டங்களை, மதிப்புகளை உணர்த்துகிறது. பழைய தலைமுறைகளின் வாழ்க்கை மதிப்புகளுக்குள் சென்றழுந்திவிடாமல், தன்னைச் சுதாரித்துக் கொண்டு மாற்று வழி காணப்புறப்படும் புதிய தலைமுறையினைத் திரவியின் மூலம் அவனுடைய வளர்ச்சியின் மூலம் நீல பத்மநாபன் சுட்டிக்காட்டுகின்றார். மேலும்,

நாவலின் இறுதியில் திரவியும் குற்றாலமும் மாறுதலுக்குட்பட்டதும் புதிய சமூகத்தின் பிரதிநிதிகளாகவே நம் முன் காட்சியளிக்கின்றனர். இன்றைய சமூகத்திற்கு

திரவியும், குற்றாலமும் போன்ற இளைஞர்கள் வரும் தலைமுறையினர்களுக்கு இன்றியமையாமையாக விளங்குகின்றனர் என்பதை ‘தலைமுறைகள்’ நாவலில் பத்மநாபன் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்.

இன்றைய சமுதாயச் சூழலில் அல்லல்ப்படும் மானுடர்களின் ஆச பாசங்கள், விருப்பு வெறுப்புகள், காழ்ப்புணர்ச்சிகள், சுய கௌரவங்களை உணர்வுபூர்வமாக அனந்த சிவமய்யரின் மகன் பகவதீஸ்வரன் மூலம் நமக்கு விளக்குகிறார் இக்கதை ஆசிரியர்.

“இப்போ கொஞ்ச நாளா இந்தத் தெருவில் யுத்தம் விடாமல் நடந்துகிட்டிருக்கிறது. தூண்டி விடுகிறவங்க சுகமாய் சொகுசாய் இருக்கிறாங்க…

கீழே உள்ள ஏழை பாழைகளின் ரத்தம் இப்படி தெருப்புழுதியை நனைக்கிறது”[8] என்ற வரிகளில் கால மாற்றத்தால் ஏற்படும் விளைவினை இத்தெரு மூலமாகக் காட்டுகிறார்.

‘பகவதி கோயில் தெரு’வில் கதாபாத்திரங்களின் எண்ணங்களுக்குப் போர்வை போர்த்திக் கொண்டு உலவும் மனிதர்களைச் சற்று நிதானமாகவே நமக்கு அறிமுகப்படுத்துகிறார். இதற்கு இவரது நடை கைக் கொடுக்கிறது. பழைமையை அடிவருடி நடக்கின்ற உணர்வுப் பாதையில் எண்ணங்கள் எப்படியெல்லாம் ஊர்வலம் போகின்றன என்பதை இந்த பகவதி தெருவினூடே நின்று நோக்குகிறார் ஆசிரியர்.

பகவதிகோயில்தெருவில் பல்வேறு வாழ்க்கைச் சிக்கல்களை பல்வேறு கதாபாத்திரங்கள் மூலம் நமக்கு விளக்குகிறார். டி.ஆர்.செட்டியாரின் மூன்றடுக்கு மாளிகை மர்மம், எல்லா ஊரிலும் கோயில் சேவகம் செய்யும் மயில் கம்பர் அண்ணாவியின் குடும்பம், சிரிப்புப் பொத்துக் கொண்டு வரச் செய்யும் ரங்கநாயகி,

கெஞ்சிக் கெஞ்சிக் குழைந்து சாவி வாங்கி குடிவந்த பின், வீட்டைக் காலி செய்ய மறுத்த சட்டம் பேசும் பிள்ளைத்தாச்சிப் பொம்பளையை அப்படியே தூக்கியெடுத்து கீழே போட்டு ரேப் பண்ணினால் என்ன என்று உள்ளம் கொதிக்கும் கதாநாயகன் தோட்டத்தில் மேய்ந்த கன்றின் வாலை ஒட்ட நறுக்கிய 'வால் நறுக்கி' சித்தலிங்கம் முதலான பாத்திரங்கள் பல்வேறு வாழ்க்கைச் சிக்கல்களை நம்முன் வைக்கின்றன.

"பச்சையாய் மனிதர்கள் பரஸ்பரம், கத்தியால், சோடாப்புட்டியால், குத்திக் கிழிப்பு, குறுந்தடியால், சைக்கிள் செயினால் சுழற்றித் தாக்குதல்.... இதென்ன பண்பாடு, படிப்பு, பகுத்தறிவு கொண்ட மனிதர்களா, இல்லை வனவிலங்குகளா, என்ன பகவதி... பார்த்தாய் இல்லே இதுதான் இன்றைய அரசியல் முறை நமக்கு அளித்த வரப்பிரசாதம்"[9]

நாவலில் இறுதியில் தூண்டிவிடுகிறவங்க சுகமாய் சொகுசாய் இருக்க, கீழே உள்ள ஏழை பாழைகளின் இரத்தம் தெருப் புழுதியை நனைக்கும் கோரக்காட்சி ஒன்று நம் கண்ணெதிரில் விரிந்து, இன்றைய சமுதாயத்தில் நடக்கும் நோயைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

'இலை உதிர் காலம்' என்ற நாவலில் வரும் 'ருக்குமணி அம்மாள்' என்ற மூதாட்டி அவருடைய மகன், மகள் இருவருக்கும் திருமணம் செய்து கொடுத்த பிறகு அவர்களிடமிருந்து எந்த உதவியும் கிடைக்காததாலும் குடியிருப்பதற்கு பழைய வீட்டையே வாங்கியதாலும், அந்தக் கடனை அடைப்பதற்கு முதிய வயதிலும் பிறர் வீடுகளுக்குச் சென்று சமையல் தொழில் செய்வதைப் பார்க்க முடிகிறது. "அந்தக் கடனைத் தீர்க்கத்தான் இப்ப வீட்டு வேலைக்கு இறங்கியிருக்கிறேன்.....காலாம்பாற எழுந்து அவருக்குக் குளிக்க வெந்நீர், பூஜைக்குத் தேவையானவை, சமைச்சு சாப்பாடு

இதெல்லாம் ரெடியாக்கி வச்சுக்கிட்டுத் தான் இங்கே வாரேன்"[10] என்று ருக்குமணி அம்மாள் சர்மாவிடம் கூறுவதால் அவர் முதுமையிலும் உழைக்க வேண்டிய நிலையில் இருக்கிறார் என்பதை 'இலை உதிர் காலம்' என்ற நாவல் காட்டுகிறது.

முதியோர் தங்களின் தேவைகளை தாங்களே நிறைவு செய்து கொள்ள இயலாத நிலையில் பிறரை எதிர்பார்க்க வேண்டிய நிலைக்கு ஆளாகிறார்கள். சமூகத்தில் வசதியாக வாழும் குடும்பம், நடுத்தரக் குடும்பம், உழைத்து வாழும் எளிய குடும்பம், ஆகிய அனைத்துக் குடும்பங்களிலும் இந்த சிக்கல் முற்றுப் பெறாத கதையாகத் தொடர்கிறது. முதியவர்கள் அவர்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் போன்றவற்றுக்காகவும், உடலில் நோய் ஏற்பட்டால் உதவி செய்வதற்கும் பிறரை எதிர்பார்க்க வேண்டிய நிலையில் உள்ளனர். பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்டவர்கள், பிள்ளைகளுக்கும் உறவினர்களுக்கும் தங்களால் தொல்லை வேண்டாம் என்று நினைக்கும் முதியவர்கள், பிள்ளைகள் அயல்நாட்டில் இருக்கும் சூழ்நிலையில் முதியோர் இல்லத்தை நாடுபவர்கள், கணவனைப், பிள்ளைகளை இழந்த மனைவி, தாய், தந்தை ஆகியோர் முதியோர் இல்லங்களுக்குச் செல்லும் சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் இவர்களுடைய வாழ்வாதாரம் கேள்விக்குள்ளாகின்றது என்பதனை சமூக சிக்கலை தனது நாவலின் வாயிலாக பத்மநாபன் முன் வைக்கிறார்.

**நீல பத்மநாபன் புதினங்களில் சமுதாயச் சித்தரிப்பு**

மனிதன் தன் தேவைகளை தாமே பூர்த்தி செய்ய முடியாது என்பதை உணர்ந்து ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ வேண்டுமென்று, என்று நினைத்தானோ அன்று சமுதாயம் பிணைந்த நாளே சமுதாயம் உருவான நாளாகும்.

“ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் கூட்டம் ஏற்படுத்துக் கொள்ளும் அமைப்பே சமூகம்”[11]

சமுதாயத்தை “society” என்ற ஆங்கிலச் சொல்லால் அழைப்பர். சமுதாயம் என்ற சொல் வடமொழியின் பிரிவு என்பதால் அதைத் தனித் தமிழில் சமுதாயம் என்றும் அழைப்பர். மேலும் சமுதாயம் என்ற சொல்லுக்கு கூட்டம் என்பது பொருள் ஆகும். மனிதனை விலங்கினத்திலிருந்து பிரிப்பதே இந்த சமூகம் அல்லது சமுதாயம் என்று சொல் தான் என்று கூறுவர். மேலும் தனி மனிதர்களையும் பல்வேறு அமைப்புகளையும், நிறுவனங்களையும், குழுக்களையும், துணைக் குழுக்களையும் தன்னகத்தே கொண்ட ஓர் அமைப்பாகச் சமுதாயம் விளங்குகின்றது.

“சமுதாயம் என்ற சொல் அரசியல், பொருளாதாரம், கலை, கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம், மதம், இனம் சாதிப்பாகுபாடுகள், கொள்கைகள், ஒழுக்கலாறுகள், நம்பிக்கைகள், குடும்ப வாழ்க்கை, பழக்க வழக்கங்கள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிக்காட்டும்”[12]

**சமுதாய புதினம்**

“எப்படியும் ஏதாவதொரு சமூகத்தைச் சார்ந்து தான் மனிதன் வாழ்கிறான். சமூகம் இன்றி அவனால் வாழ முடியாது. எனவே, சமுதாயத்தின் வளர்ச்சியும் வாழ்வும் தனிமனிதனுடன் நெருங்கியத் தொடர்பு கொண்டிருக்கின்றன”[13]

இத்தகைய சமூகத்திலிருந்து மூழ்கிப்பதே இலக்கியம். இவ்விலக்கிய வகைகளுள், மற்ற இலக்கியங்களைக் காட்டிலும் புதின இலக்கியம், மனித சமுதாயத்துடன் மிக நெருங்கியத் தொடர்பு கொண்டிருப்பதாய் இருக்கின்றது. அது எவ்வகை புதினமாக இருப்பினும் அதற்கென ஒரு பின்னணி இன்றியமையாததாகிறது.

வரலாற்றுப் புதினமாக இருப்பினும், சமூக புதினமாக இருப்பினும் அது சமுதாயத்துடன் இணைந்ததாகவே இருக்க வேண்டும். ஏனெனில் இன்றைய சமூகம் தான் நாளைய வரலாறாகின்றன. இதனால் தான் புதினம் ஒரு காலகட்டத்தின் உணர்ச்சி என்றும், வெளிப்பாடு என்றும் கருதப்படுகின்றன. இதனடிப்படையிலேயே விடுதலைக்குப் பின்னர் தோன்றிய புதினங்களும் விடுதலைக்கு முன்னும் பின்னுமான சமுதாயத்தை எடுத்துக்காட்டுகின்றது.

சமுதாயத்தால், சமுதாயத்திற்காக சமுதாயமே உருவாக்கிக் கொள்ளும் மிக முக்கியக் கொள்கைகளே, சமுதாயத்தின் இன்றியமையாக் கூறுபாடுகளாகின்றன. அரசியல், சட்டம், குடும்ப வாழ்வு, பொதுவாழ்வு நாகரிகம், பண்பாடு போன்றவை சமுதாயத்தின் சில பொதுக் கூறுகள். இத்தகைய பொதுக்கூறுகளுக்கு தனக்கான இடத்தை முழுவதுமாக தந்திருக்கும் இலக்கியம் புதினம் இலக்கியம்.

**கதாசிரியனும் சமுதாயமும்**

“நாவலாசிரியன் தான் வாழும் சமுதாயத்தின் சிக்கல்களை அச்ச சமுதாயத்தை உருவாக்கிய மக்களுக்கு உணர்த்த நாவலை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறான். கலைகளுள் வாழ்க்கையை ஆழமாக பாதித்து அழகுற சித்தரிக்கும் கலை நாவலே”[14] என்னும் டாக்டர் மு.வ.வின் கருத்து இதனை வலியுறுத்துகிறது. இலக்கியக் கலைஞன் கண்டுபிடித்த வடிவங்களிலேயே நாவலுக்கு நெகிழ்ச்சியும் தழுவல் பண்பும் அதிகம். இந்த நெகிழ்ச்சி, தழுவல் ஆகிய இரு பண்புகளும், புதினத்தை சமுதாயத்தின் மிக அண்மைக்கு கொண்டுவர உதவுகின்றன. இலக்கிய கலைகளுள் புதினத்திற்கு ஒரு தனிச்சிறப்புண்டு. அது வாழ்க்கையோடு புதினம் கொண்டுள்ள தொடர்பு. புதினத்தைப் போல் வாழ்க்கையை பாதிக்கவல்ல வாழ்க்கையோடு உறவும், உரிமையும் கொண்டாட வல்ல பிற கலை வடிவம் இல்லை. நாவலாசிரியரும் அவ்வண்ணமே. அவர் தான்

சமூகத்தில் கண்டதையும் அனுபவித்ததையும் வைத்துக்கொண்டு புதினத்தைப் படைக்கிறார்.

“சமுதாயத்தில் நாவலாசிரியன் காணும் எழிற்காட்சிகளும், அலங்கோலங்களும், நாவலில் செய்திகளாகப் படைக்கப்படுகின்றன. சமுதாய கொடுமைகளை பலரும் உணர்ந்தாலும், அதனைக் காட்டிக் கொடுக்கின்ற உரிமையும் உணர்வும் நாவலாசிரியனுக்கே உரியதாகிறது. இதனையே டாக்டர் மு.வ. நல்ல நாவலுக்கான காரணியாகக் கூறியுள்ளார். சில குற்றங்களுக்கு தனிமனிதன் காரணமல்ல. அவனைச் சூழ்ந்துள்ள சுற்றுப்புற வாழ்வியல் அமைப்பும், சமுதாயத்துடனான நிலைபாடும் காரணமாகக் காண்போம். அப்பொழுது அச்ச சமுதாயத்தின் கொடுமையை அம்பலப்படுத்தி காட்டிக்கொடுக்க நம் மனம் விரும்பும். ஆனால், நமக்கோ உரிமையில்லை. அந்தக் குறையை தீர்த்து வைப்பதே நல்ல நாவலாகிறது”[15]

அவ்வகையில் நீல.பத்மநாபனின் புதினங்கள் மக்களின் வாழ்வில் ஏற்படும் நெருக்கடிகளையும் போராட்டங்களையும் அவற்றைக் களைய அவர்கள் மேற்கொள்ளும் முடிவுகளையும் நிதர்சனப்படுத்தியுள்ளன.

**தனிமனித உணர்வும் சமூகமும்**

மனிதன் இயல்பாகவே சமூகத்தில் வாழும் ஆர்வமுள்ளவன். இதனாலேயே அவன் சமூக விலங்கெனப்படுகிறான். தனி மனிதனுடைய சிந்தனையும் பழக்க வழக்கங்களும் சமூகத்தாலேயே அளிக்கப்படுகின்றன. இன்னின்னவை சமூக நலத்திற்கு உகந்தனவென்றும் தீங்கானதென்றும் சமூகம் தன் பட்டறிவால் உணர்ந்து கொள்ளத்தக்கன, தள்ளத்தக்கனவற்றைப் பாகு பாடு செய்கின்றது.

இவை பற்றிய சிந்தனைகளின் தொகுப்பே அறம் அல்லது ஒழுக்கவிதி எனப்படுகிறது. தனி மனிதன் சமூகத்தின் விதிகளுக்குட்பட்டு அதன் வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் பாடுபட வேண்டுமென சான்றோர் எதிர்பார்க்கின்றனர். பல நிலைகளிலும் பண்பட்டிருந்த சங்க காலச் சமுதாயம் தனி மனிதர்கள் பின்பற்றி நடக்க வேண்டிய பல உயர் நெறிகளையும், அவை தொடர்பான நம்பிக்கைகளையும், பழக்க வழக்கங்களையும் உருவாக்கிப் போற்றியுள்ளது. அவை அனைத்தையும் தொகுத்து நிரல் படுத்தி விளக்க முற்படாமல் அவர்கள் போற்றிய சிறப்பான அறக்கோட்பாடுகளையும், சமூக நடைமுறைகளையும், எடுத்துக்காட்டி அவை தனிமனிதனைச் சமூகத்தோடு எங்ஙனம் உறவுபடுத்திக் கொண்டன என்பதைப் புலப்படுத்துவது இவ்வியலின் நோக்கமாகும். தனி மனிதர்கள் ஒருங்கு கூடி சில நெறிகளின் அடிப்படையில் வாழ்வது சமூகம். எனவே, சமூகத்தின் உறுப்புகளாக அமையும் தனி மனிதர்களின் பண்பைப் பொறுத்தே சமூகத்தின் பண்பும் அமைய முடியும், இப்பேருண்மையைச் சங்கப் புலவர் ஒளவையார்,

“நாடா கொன்றோகாடா கொன்றோ

அவலா கொன்றோ மிசையா கொன்றோ

எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லை வாழிய நிலனே”[16]

என உணர்த்துகின்றார். ஒரு நாடு அதன்கண் வாழும் மக்களின் தன்மையைக் கொண்டே மதிக்கப்படும் என்பது இச்செய்யுளால் நன்கு விளக்கப்படுகிறது.

இங்ஙனமே தனிமனிதனின் வாழ்வு அவன் வாழும் சமூகத்தைப் பொறுத்தே இன்பமானதாகவோ, துன்பமானதாகவோ அமையக்கூடியது என்ற உண்மையையும்

சங்ககால மக்கள் உணர்ந்திருந்தனர். தனிமனிதன் தன்னைச் சூழ்ந்து வாழும் பிற உறுப்பினர்களின் ஒத்துழைப்பின்றி மகிழ்ச்சியாக வாழ முடியாதென்பதனை உணர்த்தியுள்ளார்கள்.

சமூகமாகக் கூடி வாழும் மனிதர்கள் ஒருவரையொருவர் நம்பியே வாழ வேண்டியுள்ளது. உதவுபவராக ஒருவருக்கொருவர் வாக்குறுதியளித்தாலும், ஒருவர் வாழ்க்கையை மற்றவர் நம்பி ஏற்றுக் கொள்வதும் உலகியலில் தொன்றுதொட்டு இருந்து வரும் சமூக மரபுகளாகும்.

சமூகத்தின் ஒரு பாகமாகவுள்ள தனிமனிதனின் நலம் சமூகத்தின் நலனுடன் இரண்டறக் கலந்துள்ளது. எனவே, சமூகத்தின் நலத்திற்காகவும், வளத்துக்காகவும் உழைக்கவும், தேவைக்கேற்றபடி தன் உயிரையும் கொடுக்கவும் அவன் கடமைப்பட்டவனாவான்.

தனிமனிதனின் ஒழுக்கலாற்றினைக் கூர்ந்து நோக்கும் சமூகம் அவன் செயல்களில் நல்லன காண்கையில் ஏற்றுக்கொண்டும், தீயன காண்கையில் தன் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றது. புகழ்ச்சி என்பது சமூகத்தில் ஏற்பையும் பழிப்பு என்பது அதன் எதிர்ப்பையும் காட்டும் சின்னங்களாக அமைகின்றன. இதை சங்க இலக்கியத்தில்,

“புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்குஎன முயலா நோன்தாள்,
பிறர்க்குஎன முயலுநர் உண்மையானே”[17]

புகழ்வரும் என்றால் தம் உயிரையே வேண்டுமானாலும் கொடுப்பர். பழி வரும் என்றால் உலகம் முழுவதும் கிடைப்பதானாலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் மனம் தளர மாட்டார்கள். இத்தகைய சிறப்புடையவர்கள் தமக்காக உழைக்காமல், பிறருக்காக வலிய முயற்சியுடன் உழைப்பவர்கள் இருப்பதால் தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

"விதிமுறையாகவும், எதிர்மறையாகவும் சமூகம் வற்புறுத்தும் பண்பாடுகளை ஒவ்வொருவரும் பின்பற்றி வாழ வேண்டுமென்று சமூகம் எதிர்பார்க்கின்றது. நல்லனவற்றை விரும்பிச் செய்யவும் தீயவற்றைத் தவிர்க்கவும் தூண்டுதல்களாக அமையுமாறு சமூகம் பல செயல்களை மனிதன் மீது திணிக்கிறது".[18]

**தலைமுறைகள் குல மரபு சிக்கல்**

தலைமுறைகள் ஏழு வீட்டுச் செட்டிகளின் குடும்பத்தில் குல மரபின் வாய்மொழி ஐதீகமாக ஒரு கதை உள்ளது. அவர்களுடைய பூர்வீகம் காவிரிப்பூம்பட்டினம். அவர்கள் அங்கிருக்கும்போது அங்குள்ள சோழ மன்னனுக்கு விலைமதிப்பிட முடியாத சில பவளங்கள் கிடைக்கின்றன. அதில் துளை போட்டு மாலையாக்க அங்குள்ள எல்லா பொற்கொல்லர்களும் முயன்ற போதும் முடியவில்லை. பவளங்கள் உடைந்து விடக்கூடும் என்ன செய்வதென்று மன்னன் தவித்து கடைசியில் தன் அவையில் இருந்த ஒரு செட்டியாரை கூப்பிட்டு நீர் என்ன செய்வீரென்று தெரியாது. நாளைக்கு விடிவதற்குள் இந்த பவளங்களுக்கு துளை போட்டு கொண்டு வர வேண்டும் இல்லையேல் கழுத்தில் தலை இருக்காதென உத்தரவு போடுகிறான். வீட்டுக்கு வந்த செட்டியார் கவலையுடன் இருப்பது கண்ட அவரது இரு மகள்கள் தங்கம்மையும் தாயம்மையும் தேற்றுகிறார்கள். துளையை தாங்கள் போட்டு விடுவதாகச் சொல்கிறார்கள். ஊசி நுனியில் பனைவெல்லச் சாறை தொட்டு ஒவ்வொரு

பவளத்திலாக ஒரு பொட்டு வைத்து அவற்றை வரிசையாக எறும்பு புற்றுக்கு முன்னால் போட்டு விடுகிறார்கள். எறும்புகள் வெல்ல வாசனையை குறிவைத்து அரித்து எல்லா பவளங்களிலும் சிறு துளை போட்டு விடுகின்றன.

இந்த விஷயம் தெரியவந்தபோது மன்னன் இத்தனை அறிவுள்ள பெண்கள் இருக்க வேண்டிய இடம் அந்தப்புரம் தான் என்று சொல்லி பெண் கேட்கிறான். சாதியை விட்டு பெண் கொடுக்க செட்டியார் குலத்துக்கு விருப்பமில்லை. மறுக்கவும் முடியாது. ஆகவே செட்டியார் தன் வீட்டில் இருந்த நிலவறைக்குள் அப்பெண்களை போகச் சொல்லி மூடி மேலே மண்ணை நிரப்பி விட்டார். பிறகு எல்லாரும் அங்கிருந்து கிளம்பி நடந்து குமரி மாவட்டம் வந்து இரணியலில் குடியேறுகிறார்கள். இந்தக் கதையை இந்நாவலின் முக்கிய கதாபாத்திரமான உண்ணாமலை ஆச்சி தன் பேரனும், கதாநாயகனுமாகிய திரவியத்துக்கு குழந்தையாக இருக்கும்போது வீட்டை பெருக்கி கோலம் போட்டபடி சொல்கிறாள். குறியீட்டு ரீதியாகப் பார்த்தால் பெண் புதைக்கப்பட்ட மேடு மீதுதான் ஏழு வீட்டு செட்டியார் குலமே கட்டப்பட்டுள்ளது. அந்தக் குற்றவுணர்வு தலைமுறை, தலைமுறையாக கைமாறவும் படுகிறது. ஆனால் அடிப்படையில் அது ஆண்வழி அதிகாரக் குலம், அதன் அடையாளம் உலகமே தனக்கானது என்று எண்ணும் கூனங்காணிப்பாட்டா. ஆகவே நாகு அக்கா அவள் கணவனால் குழந்தை பெற முடியாதவள் என்று விளக்கப்பட்ட போது, சர்வ சகஜமான அந்த செயலுக்கு எதிராக திரவி செயல்பட ஆரம்பித்தது ஒரு முக்கியமான புரட்சி, மருத்துவமனைக்கு கூட்டிக்கொண்டு போய் அக்காவிடம் எந்தப் பிரச்சனையுமில்லை என்று அவன் நிரூபித்தது ஒருவகையில் அடுத்த காலகட்டத்தின், அறிவியல் கால கட்டத்தின்- வருகையின் குறியீடுமாகும். அவள் கணவன் அவளை ஏற்க மறுத்தபோது அவளுக்கு மறுமணம் செய்விக்க அவன் முயன்றது கண்டிப்பாக ஒரு பெரும் புரட்சி

நடவடிக்கையே... தலைமுறைகள் ஒரு நீண்ட வாய்மொழி மரபின் ஐதீக மரபின் இன்றியமையாத தொடர்ச்சியாகும். அம்மரபில் இருந்து வரும் அவல முடிவை அதுவும் தவிர்க்க முடியாது. அதாவது அந்த பவளம் கோர்க்கும் கதை நாவலின் தொடக்கத்தில் வந்ததுமே குறியீட்டு ரீதியாக நாவலை அது தீர்மானித்து விட்டது. அதை நீல.பத்மநாபன் மீறி விட முடியாது. சொந்த வாழ்வில் அவர் அதை மீறிவிட முடியாது. கதை எப்போதுமே கதை மரபின் தர்க்கத்துக்கு உட்பட்டது.

"அவ தலைவிதி அது! அவளைப் படைச்ச கடவுளே செய்த சதி அது! அதுக்கு நான் என்னேய முடியும்? இடையில் கல்யாணமுண்ணு ஒண்ணு நடக்கவே இல்லேண்ணு நெனச்சூட்டு இருக்கச் சொல்லு"[19] என்று வழக்கம்போல் அவர் சொன்ன வார்த்தைகள் திரவியின் பொறிகளை அப்போது உணர்ச்சிவசப்படுத்தியதேதாயினும் அவன் ரொம்ப சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு மௌனமாய் நின்றான்.

"நான் ஒண்ணு கேட்பேன், அத்தான் கோபப்பட வேண்டாம், உங்களிடம் கடவுள் இப்படியொரு சதியைச் செய்திருப்பதாக உங்க கல்யாணத்துக்கு அப்புறம்தான் உங்க பொண்டாட்டி அறிந்தாளுண்ணு வச்சூடுங்கொ, அப்பம் உங்களை வேண்டாமுண்ணு இப்படி தள்ளி வச்சு விட்டுப் போய், இன்னொரு கல்யாணம் செய்து கொள்ள நீங்க அவளைச் சம்மதிப்பேளா?"[20] என்று திரவியமிடமிருந்து அடக்கமாக ஆனால் பளீரென்ற தெளிவான தொனியில் எழுந்த இந்தக் கேள்வியை சிவந்தப் பெருமாள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இறுதியில் திரவியும் குற்றாலம்மும் மாறுதல் விரும்பும் புதிய சமூகத்தின் பிரதிநிதிகளாகவே படைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தனிமனித வாழ்க்கையில் சமுதாயம் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒரு மனிதன் சிறப்புற வாழ வேண்டுமானால் அவன் நிச்சயமாக சமுதாய கட்டுப்பாடுகளுக்கும் அதன்

கோட்பாடுகளுக்கும் உட்பட்டு இருக்க வேண்டும். அப்பொழுதுதான் புறவய உறவு சுமூகமாக இருக்கும். வெளி உலகில் நமக்குச் சொந்தம் இல்லாதவர்களிடம் தோன்றும் உறவையே புறவய உறவுகள் என்கிறோம். அலுவலகத்தில் பணிபுரிபவர்களின் உறவுகளே நீல. பத்மநாபன் நாவல்களில் அதிகமாகக் காணப்படுகிறது.

"என்னைச் சூழ்ந்திருக்கும் வாழ்க்கையே பெரும்பாலும் என் கதைகளின் கருப்பொருளாகிறது"[21] என்கிறார் அகிலன். அதுபோலத்தான் நீல.பத்மநாபன் அரசு அலுவலர் உலகத்தைக் களமாகத் தன் நாவல்களில் படைத்துள்ளார். அவரது படைப்பின் நோக்கமே அலுவலக உலகம் என்றால் அது மிகையன்று. தாம் ஓர் அரசு ஊழியராக இருக்கின்ற காரணத்தால், அரசு அலுவலகத்தின் இயக்கமும், ஊழியர்களிடம் உள்ள பாகுபாடும், அதனால் ஏற்படுகின்ற விளைவுகளும், அதை ஒட்டிய நிறை குறைகளும் இவருக்கு நேரடியாக நன்கு பழக்கப்பட்ட சூழலாகி விட்டதால் இதைத் தம் படைப்புகளுக்கு உரியதாக்கிக் கொண்டார்.

"எந்த ஒரு சிறந்த கலைஞனான எழுத்தாளனும், உண்மையில் தன்னைப் பற்றித்தான் எழுதுகிறான். தனக்கு தெரிந்த உலகைப் பற்றித்தான் எழுதுகிறான் என்பதற்கு நீல.பத்மநாபனின் எழுத்துக்கள் பலமான சாட்சியாகும்"[22] என்று நீல.பத்மநாபனை சிறந்த படைப்பாளியாக வெ.சாமிநாதன் அவர்கள் அடையாளப்படுத்தியுள்ளார்.

**சமூகத்தில் நிலவுகின்ற அலுவலகச் சிக்கல்கள்**

நீல.பத்மநாபன் எழுதிய பதினேழு நாவல்களுள் 'பள்ளிகொண்டபுரம்', ஃபைல்கள், 'உறவுகள், 'சமர்', 'அனுபவங்கள், 'மின் உலகம்', 'வட்டத்தின் வெளியே', ஆகிய ஏழு நாவல்கள் அரசு அலுவலகத்தைப் பற்றிப் பேசுகின்றன. இதில்

‘பள்ளிகொண்டபுரம்’, உறவுகள் தவிர பிற ஐந்து நாவல்களும் அலுவலக உலகத்தைக் களமாகிப் படைக்கப்பட்டவைகளே. வேறு எந்த எழுத்தாளரும் கையாளாத வகையில் அலுவலகத்தின் சூழல்களை நீல.பத்மநாபன் தம் நாவல்களில் அதிக அளவில் கையாண்டுள்ளார். இது குறித்து நீல. பத்மநாபன் பின்வருமாறு கூறியுள்ளார்.

“இந்த நாவல்கள் எல்லாம் Bureaucracy Technocracy என்கிறோமே அந்த உணர்வுகள் சம்பந்தப் பட்டவைகள். ஒரு நோக்கில் சொல்வதனால் இந்நாவல்களை ஒரு Necessary evil என்று கூட சொல்லலாம். இன்றைய வாழ்க்கை முறைக்கு, இந்திய நாட்டு மக்களின் மேம்பாட்டிற்கு இந்த Bureaucracy Technocracyயும் நம்மால் தவிர்க்க இயலாது. வழி தவறி அகப்பட்டுக் கொண்ட நாம் அதில் ஒரு அங்கம், எனவே எனக்கு நேரடியாக அனுபவங்களும், தெரிந்தவைகளும் என் எழுத்துக்கு Raw Material ஆகவோ களமாகவோ அமைந்தது என தோன்றுகிறது. பிறர் வெளியிலிருந்து பார்க்கும் பொழுது தெரிந்து கொள்ள முடியாத, பலவிதமான மானிடப் பிரச்சனைகள், தர்ம சங்கடங்கள் இந்த உலகில் உண்டு. அதைத்தான், மேற் சொன்ன நாவல்களில் கையாண்டிருப்பேன் போல் தோன்றுகிறது. மேலும் அந்த உலகிலேயே வாழ்கிறவர்களுக்கு நித்தம் நித்தம் அனுபவமாகும். சில பல தனித்தன்மை வாய்ந்த பிரச்சினைகளும் உண்டு கீழ்ச்சிப்பந்திகள் மேலதிகாரிகள், அரசியல் தலையீடுகள் தவிர அவனது சொந்த குடும்பம், பொது ஜனங்கள் இவர்களை எல்லாம் தனது மனசாட்சியை அடகு வைத்துக்கொண்டு அதே வேளையில் தான் அந்தத் துறைக்கு முழுக்கு போடாமல் சமாளிக்க வேண்டிய நிர்பந்தம்”[23]

நீல.பத்மநாபன் ஊழியர்களின் அலட்சியப் போக்கினை தனது நாவல்களின் வாயிலாக வெளிப்படுத்துகின்றார். புதியதாக, பணிக்கு அமரும் ஊழியர்களின் நிலை, ஊழியர்கள் பணி புரியும் நிலை, செம்மையாகச் செய்யும் ஊழியர்கள், பணியைப்

பொழுது போக்காகப்பயன்படுத்தும் ஊழியர் நிலை, ஊழியர்கள் தங்களுக்குள் ஒருவரைப் பற்றி ஒருவர் குறை கூறும் நிலை, பொறுப்பேற்றுக் கொள்ளும் போது ஏற்படும் இடர்ப்பாடு, ஊழியர்களின் சுயநல போக்குகள், உதவி புரியும் மனப்பான்மை, மேலதிகாரிகளிடம் சலுகையை எதிர்பார்த்து உதவி புரியும் ஊழியர்கள், கீழ்நிலை ஊழியர்கள் செய்யும் இடர்ப்பாடுகள், தொழிற்சங்கம், வேலை நிறுத்தம், பெண் ஊழியர்கள் நிலை, அதிகாரிகள் கூடும் கூட்டங்கள், அவர்களுக்குள் தோன்றும் உறவுகள் போன்ற செய்திகள் இவரது நாவல்களில் சொல்லப் பட்டிருக்கின்றன.

**அரசு - பொதுமக்கள் உறவு**

மக்களுக்கும், அரசாங்கத்திற்கும் பாலமாக இருப்பவர்கள் அரசு அதிகாரிகள் மக்கள் செலுத்துகின்ற வரிப்பணங்களை வைத்துக் கொண்டு அவர்களின் நல்வாழ்விற்கு ஏற்பப் பல திட்டங்களைத் தீட்டுகிறார்கள், அவர்கள் அரசின் அனுமதியுடன் அத்திட்டங்கள் மக்களிடம் சென்றடைவதற்குரிய ஏற்பாடுகள் செவ்வனே நடைபெறத் துணை புரிகிறார்கள். மக்களுக்கு எவையெல்லாம் பயன்பாடு உடையனவோ அவற்றிற்கெல்லாம் தனித்தனியாகத் துறைகளை அமைத்து அதன் வழியாக நல்வாழ்வுத் திட்டங்களை உருவாக்கி அரசு அதிகாரிகள் நடைமுறைப்படுத்துகிறார்கள். பொது மக்களுக்கு பல விதங்களில் உதவி புரிகின்றனர். இதனை “போதையில் கரைந்தவர்கள்” நாவல் சித்திரிக்கின்றது. அந்நாவலில் விஷசாராயம் அருந்தியதில் பலர் இறந்து விடுகின்றனர். பலர் உயிருக்காக்கப் போராடுகின்றனர். அதில் மருத்துவர் பஷிர் என்பவரும், காவல்துறை அதிகாரியும் சேர்ந்து சாராயக் கடைகளை அடைக்கச் செய்து பலரின் உயிரைக் காப்பாற்றினார்கள். “வியாழக்கிழமை மத்தியானம் இங்கே ஒன்றிரண்டு கேஸ்கள் வந்ததும் போலீஸ் எஸ்.ஐ. பிரான்ஸிஸை போன் பண்ணினேன்... உடனையே வந்தார்... நாங்க ரெண்டு

பேருமா சேர்ந்து இங்கிருந்த முப்பதுக்கும் மேல் சாராயக் கடைகளை கட்டாயப்படுத்தி அடைக்க வைச்சோம். இல்லாட்டி இதைவிட பெரிய உயிர்ச்சேதம் வந்திருக்கும்”[24] இவ்வாறு ஆசிரியர் சுட்டுகிறார்.

அலுவலர்கள் கல்வியின் அடிப்படையில் பகுப்பு முறை செய்யப்படுகின்றார்கள். அலுவலர்கள் தங்கள் கல்வித் தகுதியின் அடிப்படையில் பதவி பெற்று அலுவலகத்தில் பணியாற்றுகிறார்கள். அரசு அலுவலர்கள் மேல்நிலை, இடைநிலை, கீழ்நிலை, ஆகிய பகுப்பு முறையில் மூன்று வகையாகப் பகுத்துள்ளனர்.

அரசு நிர்வாக எந்திரத்தின் நுண் அமைப்பில் மேல்நிலை ஊழியர்கள் என்போர் உயர்நிலை அதிகாரிகளாவர். இதற்குக் கீழ் உள்ள இனத்தவர்கள் இடைநிலை ஊழியர்களாவர். அதன் கீழ். உள்ளவர்கள் கீழ் நிலை ஊழியர்களாவர். நீல.பத்மநாபன் தம் நாவல்களில் இடைநிலை ஊழியர்களையே தலைமை மாந்தர்களாகப் படைத்துள்ளார் அவர்கள் மூலமாகவே நாவலில் கதை சொல்லப்படுகிறது. எனவே மேற்கூறிய ஊழியர்களின் பகுப்பு முறை இடைநிலை ஊழியர்களை வைத்தே பகுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பகுப்புகளில் முதலாவதாக இடம் பெறும் மேல்நிலை ஊழியர்கள், தங்கள் கீழ்பபணிபுரியும் ஊழியர்களிடம் பணி பற்றி நேரிடையாகவோ, தொலைபேசி மூலமாகவோ, கட்டளையிடுபவர்களாக நீல.பத்மநாபன் நாவல்களில் படைக்கப்பட்டுள்ளனர். அரசு அலுவலகம் இயங்குவதற்குத் துணை நிற்பவர்களாக இடைநிலை ஊழியர்கள் சித்தரிக்கப்படுகின்றனர். மேல்நிலை, ஊழியர்கள், இடைநிலை ஊழியர்கள் இருவருக்கும் பணியில் துணை புரிபவர்களாகக் கீழ்நிலை ஊழியர்கள் நாவல்களில் இடம் பெறுகின்றனர்.

இடைநிலை ஊழியர்களுக்கும் மேல்நிலை ஊழியர்களுக்கும் உள்ள உறவும் பகையும், இடைநிலை ஊழியர்களுக்கும், கீழ்நிலை ஊழியர்களுக்கும் உள்ள உறவும் பகையும் மிகுந்த அளவில் நீல.பத்மநாபன் நாவல்களில் பேசப்படுகின்றன. நீல.பத்மநாபன் நாவல்களில் இடைநிலை ஊழியன் ஒருவனை மையமாக வைத்து, மேல்நிலை அதிகாரிகள் நிலை, கீழ்நிலை ஊழியர்களின் நிலை அவர்கள் நடந்து கொள்ளும் முறைகள் விளக்கமாகச் சொல்லப்படுகின்றன; நீல.பத்மநாபன் தாமே ஓர் இடைநிலை அலுவலராகப் பணி புரிந்ததால் அவர் இவ்வாறு படைத்திருக்கக் கூடும்.

“நீல.பத்மநாபனின் நாவல்களில் நிகழ்காலத்தையும், கதை மாந்தர்களின் பிரச்சினைகளையும், சிந்தனைப் போக்குகளையும், சமூக வாழ்க்கையின் ஓட்டத்தோடு இணைத்தும் அவற்றின் பாதிப்பால் ஏற்படும் ஒருமையையும் முரண்பாட்டையும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறார். அழிந்து வரும் ஒரு சமுதாயத்தின் சீரழிவையும், புதிதாய் முளைத்துக் கிளம்பும் புதிய போக்குகளின் உயிர்த் துடிப்பையும் அவர் நாவலின் இதயத்துடிப்புப்பாகக் காண்கிறார். சமூக ஆய்வு இந்நாவல்களில் காணப்படுகிறதென்பதைப் பக்தவத்சலன் எடுத்துக்காட்டுகிறார்”[25]

**மேல்நிலை ஊழியர்களின் செல்வாக்குகள்**

மேல்நிலை ஊழியர்கள் செல்வாக்கும் மிகுந்தவர்கள் தங்கள் பதிவியாலும், பணத்தாலும், செல்வாக்குப் பெற்றவர்கள். அரசாங்கம் ஊழியர்களுக்கு வழங்கும் பல சலுகைகளை முதலில் அடைபவர்கள் இவர்கள்தான். தங்கள் பதவியினை வைத்து இவர்கள் நிகழ்த்துகின்ற செயல்கள் இவர்களை அடையாளம் காட்டிவிடுகின்றன. நீல.பத்மநாபன் நாவல்களில் இவர்கள் உறவினைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

மேல்நிலை ஊழியர்கள் தங்கள் அதிகாரத்தை பயன்படுத்திக் கொண்டு தங்களுக்குக்கீழ் பணிபுரிபவர்களை அடக்கி ஆள எண்ணுவர். அவர்களுக்கு இடையே உள்ள உறவுகளையும், செயல்களையும் கீழ்க்கண்ட நாவல்களில் படைக்கப்பட்டுள்ளார். அடக்கி ஆள எண்ணும் மனப்பான்மை கடமையைச் சரிவரச் செய்யாத நிலை களஆய்வில் ஈடுபடாமலே கட்டளையிடுதல் இட மாற்றத்தின் போது நடந்து கொள்ளும் நிலை ஊழல் புரியும் நிலை, வேலை வாங்கும் உத்தி மனிதாபிமானமற்ற செயல்களைச் செய்தல் மேலதிகாரிகள் தங்கள் அதிகாரப் பலத்தால் தங்களின் கீழ் பணிபுரிபவர்களை எப்பொழுதும் தங்கள் கைப்பிடிக்குள் வைத்திருக்க வேண்டும் என்றே எண்ணுவார்கள். இத்தகைய மனநிலைக்கான காரணங்கள் இரண்டு, அவை வருமாறு

முறையற்ற வழியில் மேலதிகாரியாதல் பதவி தருகின்ற இறுமாப்புணர்வு முறையற்ற வழியில் மேலதிகாரியாக வருகின்றவர்கள் தங்கள் திறமை இல்லாமல் தங்களது செல்வாக்கினால் இப்பதவியை அடைகிறார்கள். இப்பதவிக்குரிய செயல்பாடுகள் என்ன என்பதை முழுமையான அளவில் தெரிந்து கொள்ள முடியாத காரணத்தால், அவை வெளியே தெரியாதபடி மற்ற ஊழியர்களை அடக்கியாள வேண்டும். என்ற எண்ணம் இவர்களுக்கு ஏற்படும். திறமையிருந்தாலும் இல்லாவிட்டாலும் உயர் பதவி தருகின்ற வசதிகள், செல்வாக்கு, இவற்றால் பெற்ற இன்பம் இவர்களை நிலை தடுமாறச் செய்கிறது. பதவி தரும் மயக்கத்தால் தம்மால் எதுவும் செய்ய முடியும் என்ற நிலையை எய்துகிறார்கள். எனவே தான் தம் கீழ் வேலை பார்க்கும் ஊழியர்களை, அடக்கியாள வேண்டும் என்ற குரூர மனப்பான்மை இவர்களிடம் வந்து விடுகிறது. இந்நிலையை “மனசாட்சியை மழுங்கடித்து மலடாக்கிக் கொண்டு பெரிய மனிதர்களின் பட்டியலில் இடம் பெற்ற மேலதிகாரியின் அதிகார மமதை”[26] என்று விமர்சனம்

செய்கிறார் தாமரைக் கண்ணன் இத்தகைய மேல்நிலை அதிகாரிக்கு எடுத்துக்காட்டாக. 'ஃபைல்கள் 'நாவலில் வரும் சந்திரசேகர் இடம் பெறுகிறார். பெ.வி.சந்திரசேகர் விற்பனை அதிகாரி, மேலதிகாரி முறையான வகையில் திறமையால் பதவியுயர்வு பெற்றவரல்லர். இவருடைய தந்தை வாசுதேவதம்பி அரசியலில் செல்வாக்கு மிக்கவர். இன்டர் மீடியேட்டில் தோல்வியுற்ற சந்திரசேகரன் தன் அப்பாவின் அரசியல் செல்வாக்கினால் ஒரு மேல் நிலை குமாஸ்தாவாக நுழைகிறான். இவனது தந்தை தன் அரசியல் செல்வாக்கினால் பர்ச்சேஸ்க்கு எனத் தனியாக ஒரு பிரிவை ஏற்படுத்தி அதில் தலைமைக் குமாஸ்தாவாகத் தன் மகனைப் பணியில் அமர்த்துகிறார். பின் சந்திரசேகரன் இளநிலை கண்காணிப்புப் பிரிவில் பதவி உயர்வு பெறுகிறான். அதன் பிறகு 'கெஜட்டட்ராங்'கில் அமருகிறான். இவ்வாறு மேலதிகாரியானவன்தான் சந்திரசேகரன். இவன் கீழ் வேலை பார்ப்பவன் ரவீந்திரன். முறைப்படித் தேர்வு எழுதி வெற்றி பெற்று ஒரு குமாஸ்தாவாக வேலைக்குச் சேர்ந்து சந்திரசேகரன் கீழ் வேலை பார்க்கிறான். சந்திரசேகரன் தன் கீழ் வேலை பார்க்கும் ரவீந்திரனை அடக்கியாளும் நிலை நாவல் முழுவதும் பரவிக் காணப்படுகிறது. அதிகாரிக்கும் குமஸ்தாவிற்கும் உள்ள உறவினை நாம் காண முடிகிறது. சான்றாக ஒன்றிரண்டு இடங்களைக் காணலாம். தொலைபேசி மணி அடிக்கிறது ரவீந்திரன் எடுக்கிறான். "யாரு ரவீந்திரனா?" "கரகரப்பான அந்தக் கட்டைக் குரலின் உரிமையாளர் வேறு யாராக இருக்க முடியும்? அதிகாரத் தோரணை என்பது சந்திர சேகரின் தொனி விசேஷம்"[27] என்ற ரவீந்திரனின் மன ஓட்டத்தின் மூலம் சந்திரசேகரனின் அடக்கியாளும் நிலையை நீல.பத்மநாபன் "ஃபைல்கள்" நாவல் மூலம் விளக்குகிறார்.

ரவீந்திரன் ஒரு ஃபைலைத் தேடிக் கொண்டிருக்கிறான். இரண்டு முறை தொலைபேசி மணி அடிக்கின்றது, சந்திரசேகரனிடம் ரவீந்திரன் விரைகிறான்.

“உடனேயே டெலிகிராபிக் ஆர்டர் கொடுத்து விடு, இன்றே டிட்டயில்ட் ஆர்டர் தபாலில் போகணும்” என்று சற்று முன் கையொப்பத்திற்காக அவரிடம் நான் கொடுத்த ஃபைலை என் முன்னால் விட்டெறிகிறார். அவர் கூப்பிட்டவுடன் அங்கே ஆஜர் ஆகாததின் கோபம் அந்த எறிதலில் தெரிகிறது”[28] என்ற ரவீந்திரன் கூற்றின் மூலம் வெளிப்படுகிறது. ரவீந்திரன் ஓர் ஊழியன் என்ற அடிப்படையில் மனிதாபிமானத்தில் மேலதிகாரியான சந்திரசேகரன் மேற்கூறியவாறு நடக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் அடக்கியாள வேண்டும் என்ற மனப்பான்மை அவரிடம் தலைதூக்கி நிற்பதால் இப்படியொரு செயலை அவர் செய்கிறார்.

தான் உயர்ந்த அதிகாரியாய் இருக்கின்ற காரணத்தால் அடுத்த நிலையில் உள்ள ஊழியர்கள் தனக்கு செலுத்தும் மரியாதையைக் கூட கண்டு கொள்ளாத மேலதிகாரி உண்டு என்பதற்கு வட்டத்தின் வெளியே நாவலில் வரும் தலைமை இயக்குநர் எஸ்.பி.மாரார் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். இவர் செயல் இயக்குநர் பிலிப்போஸ் அறையில் அமைந்திருக்கிறார். அப்பொழுது உதவி பொறியாளர் ஜெயக்குமார் அவர் அறையில் அமர்ந்திருக்கிறார் அப்பொழுது உதவி பொறியாளர் ஜெயக்குமார் அவர் அறையினுள் சென்று வணக்கம் செலுத்துகிறான். அவர் இவனைத் தெரிந்து கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. இவனை அவருக்கு நன்றாகத் தெரியும். இந்நிலை மேலதிகாரிகளின் ஆணவப் போக்கினையும், அவர்கள் தங்கள் கீழ்வேலை பார்ப்பவர்களிடம் கொண்டுள்ள உறவினையும் சுட்டிக்காட்டுகிறது.

**கடமையைச் சரிவர செய்யாத நிலை**

‘வட்டத்தின் வெளியே’ நாவலில் வரும் மேலதிகாரி பிலிப்போஸ் கடமையைச் சரிவர செய்யாத அதிகாரியாகத் திகழ்கிறார். பிலிப்போஸ் மின்சார அலுவலகத்தில் செயல் இயக்குநராகப் பணியாற்றுகிறார். அவர் சொந்த ஊர் பள்ளி கொண்டப்புரம்.

“இப்பொழுது மகாபலிக் கரையில் வேலை பார்ப்பதால் அவர் மட்டும் தனியே தங்கியிருக்கிறார். எனவே அடிக்கடி வெளியூர் முகாம் என்று சொல்லிவிட்டுத் தன் சொந்த ஊரான பள்ளிகொண்டபுரத்திற்குச் சென்று விடுகிறார். "பிலிப்போஸ் தன் கடமையை உணர்ந்து சரிவர இயங்காமல் அடிக்கடி தன் சொந்த ஊருக்குச் செல்வது ஒரு பொறுப்புடைய மேலதிகாரி செய்யும், செயலாகத் திகழவில்லை, அவர் கடமையிலிருந்து தவறுபவராகப் படைக்கப்பட்டுள்ளார். 'வட்டத்தின் வெளியே' நாவலில் மகாபலிக் கரைக்கு மாற்றலாகிப் பொறுப்பேற்க கதைத் தலைவரான ஜெயக்குமார் வருகிறான். இவனுக்கு முன்னால் அவ்விடத்தில் இருந்த சின்னச்சாமி பொறுப்பை ஜெயக்குமாரிடம் ஒப்படைத்த உடனே செல்ல வேண்டும் என்று எண்ணுகிறான். ஜெயக்குமார் தான் எல்லாவற்றையும் சரிபார்த்த பின்னர் சின்னச்சாமியும், ஜெயக்குமாரும் செயல் இயக்குனர் பிலிப்போஸைச் சென்று பார்க்கின்றனர். உரையாடல் கீழ் வருமாறு அமைகின்றது.

"பிஸிக்கலா வெரிஃபை பண்ணாம எப்படி சார்? சின்னச்சாமி உடனே போகனும் என்கிறாரே? "இதில் பயப்பட ஒண்ணும் இல்லை. இங்கே நம்ம ஆபீஸில் கம்மி ஒண்ணும் வராது."அப்போ நான் கையொப்பம் போட்டுக் கொடுக்கவா…?”[29]

"தைரியமா போட்டு கொடு இவன் எழுந்தான். மனசுக்கு உறுத்தல்"[30]

இந்த உரையாடலில் உயர் அதிகாரியான பிலிப்போஸின் பொறுப்பற்ற தன்மை வெளிப்படுகிறது. கணக்குகள் சரிபார்க்கப்பட்ட பின்னர் தான் பொறுப்பை எடுக்க வேண்டும் என்று சொல்ல வேண்டிய மேலதிகாரியே இப்படிப் பொறுப்பற்ற தன்மையோடு பேசுவது என்பது அவரது கடமையைச் செய்யாத நிலையைச் சுட்டிக் காட்டுகிறது. மற்றொரு முறை மேலதிகாரி பிலிப்போஸ் ஜெயக்குமாரை அழைத்து தம்

துறைத் தளவாடப் பொருட்கள் எல்லாம் 'குண்டுப்பட்டி'எனும் இடத்தில் முடங்கிக் கிடக்கின்றன. அதை எடுத்து வரும்படி ஆணையிடுகிறார். தொழிலாளர்கள் தளவாடப் பொருட்களை ஏற்ற விடாமல் தடுக்கிறார்கள் என்ற செய்தியைக் கூறுகிறான் ஜெயக்குமார்."உம் உம் நானும் அறிஞ்சேன், ஆனா அதுக்காக மெட்டிரியல்ஸ் எடுக்காமலிருந்தா நம்ம ஒர்க் சபர் ஆகாதா! எப்படியாவது சமாளி" என்று ஜெயக்குமாரிடம் பிலிப்போஸ் கூறுகிறார்."[31] இவ்வாறு பதில் கூறுவது பொறுப்புள்ள மேலதிகாரி மேற்கொள்ளும் செயல்பாடாகத் தோன்றவில்லை.

இது போன்ற மற்றொரு முறை "ஆலங்குளத்தில் வைத்து நடைபெறப்போகும் "டிடிஸி" கூட்டத்தில் எனக்குப் பதில் நீ கலந்து கொள்ள வேண்டும்"[32] என்கிறார். இந்த கூட்டத்தில் அந்த மாவட்டம் தொடர்பான அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து நகர சபை உறுப்பினர்கள், தலைவர்கள் அனைவரும் மாவட்ட ஆட்சியாளர் முன்னிலையில் கலந்து கொள்வார்கள். கூட்டத்தில் கலந்து கொள்ளும் அரசு ஊழியர்கள் பொறுப்புடன் பதில் கூறுதல் வேண்டும். இத்தகைய ஒரு கூட்டத்தில்தான் ஜெயக்குமாரைக் கலந்து கொள்ள ஆணையிடுகிறார் மேலதிகாரி பிலிப்போஸ்."நான் புதுசா இங்க வந்தவன், அவுங்க ஏதாவது கேட்டா பதில் சொல்ல வேண்டாமா?" என்கிறான் ஜெயக்குமார், "ஓ-அதெல்லாம் பரவாயில்லே"[33] என்று பிலிப்போஸ் பதிலைச் சொல்லிக் கொண்டே போகிறார். ஒன்று அவரே கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும். இல்லையெனில் புதிதாக வந்த இவனை விட்டுவிட்டு வேறு ஒரு பொறுப்பான அலுவலரை அனுப்பியிருக்க வேண்டும். இரண்டையும் செய்யத் தவறி விடுகிறார்.

'மின் உலகம்' நாவலில் வரும் செயற்பொறியாளரும் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்கிறார் இவரிடம் அகில இந்திய மின்னாற்றல் நீர்ப் பாசனம் தொடர்பான

கூட்டத்திற்குரிய வரவேற்பு இட வசதிப்பொறுப்புகள் தரப்படுகின்றன இப்பொறுப்பினை ஏற்றுக் கொண்ட செயற்பொறியாளர் இது தொடர்பான செயல்பாடுகளைத் தான் செய்யாமல் தம் கீழ் வேலை பார்க்கும் இளநிலை பொறியாளரான ராஜசேகரனிடம் ஒப்படைக்கிறார். இந்தப் பொறுப்பு முழுவதையும் இளநிலை பொறியாளரான ராஜசேகரனிடம் செயற்பொறியாளர், ஒப்படைக்கிறார். வருகின்ற விருந்தினர்களை அழைத்துச் செல்ல நம் அலுவலக வண்டிகளைப் பயன்படுத்த வேண்டாம். வாடகை கார் ஒன்றைப் பிடித்துக் கொள் என்கிறார்" சார் அதுக்கு வாடகை? என்று மனசுக்குள் தான் ராஜசேகரனால் கேட்க முடிந்தது"[34] அரசுத் துறையில் உயர் பொறுப்புகள் வகிப்பவர்கள் தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய பொறுப்புகள் முழுவதையும் தம் கீழ் உள்ள அதிகாரிகளிடம் சுமத்தி விட்டு அதில் வரும் இடர்பாடுகளைப் பற்றி கவலைப்படாமல் இருக்கும் மனநிலையை இதன் மூலம் நீல பத்மநாபன் சித்தரிக்கிறார்.

மேலதிகாரியின் கட்டளைகள் எல்லாம் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோதான் நடைபெறுகின்றன. எதிராளி சொல்வதை வைத்துக்கொண்டு அதற்கு ஏற்ப முடிவு எடுக்கும் நிலை ஏற்படுகிறது. வேலை நடைபெறும் இடத்திற்குச் சென்று அங்குள்ள சிக்கல்கள் என்ன என்பதை உணராமல் கட்டளையிடுவது மேலதிகாரியின் உறவுகளின் குறைபாடுகளுள் ஒன்றாகும். இதற்குச் சான்றாக 'மின் உலகம்' 'அனுபவங்கள்' நாவல்களில் வருகின்ற செயற்பொறியாளர்கள் படைக்கப்பட்டுள்ளனர். உதவிப் பொறியாளராக 'அனுபவங்கள்' நாவலின் தலைமை மாந்தரான சந்திரன் பதவி உயர்வு பெற்று புனல்புரத்திற்கு இடமாற்றலாகி வருகிறான். நடுமண் என்ற இடத்தில் துணை மின் நிலையம் கட்டுவது தொடர்பாகக் கள ஆய்வு செய்ய சந்திரன் செல்கிறான் அந்த இடத்தில் நாற்பத்தெட்டுக் குடும்பங்கள், முப்பது

ஆண்டு காலமாகக் குடியிருக்கிறார்கள். அவர்களை வெளியேற்றினால் தான் அங்கு, துணை மின் நிலையம் உருவாகச் செய்ய முடியும். இச்சூழலில் செயற்பொறியாளர் சிவராமன் நாயரைச் சந்திரன் சந்திக்கிறான். அப்போது அவர் "புறம்போக்கில் வசிக்கிறவங்க கொஞ்சம் கொஞ்சமாய் நம்ம இடத்தையும் ஆக்கிரமிப்பு செய்கிறங்கண்ணு சொன்னாங்களே வாஸ்தவம் தானா?"[35] என்கிறார். மேலும், "உம் எப்பவும் ஒரு கண் இருக்கட்டும் யமகாதகப் பேர்வழிங்க கொஞ்சம் அசந்து போனா கொஞ்சம் கொஞ்சமாய் நம்ம ஸைட்டை முழுவதையும் விழுங்கி விடுவாங்க"[36] என்றும் கூறுகிறார். இங்கு மேலதிகாரியா இருக்கும் இவர் ஒரு துணை மின் நிலையம் உருவாகும் இடத்தை ஒருமுறை பார்வையிட்டு இருந்தால் நலமாக இருந்திருக்கும். இவர் அவ்விடத்திற்கு செல்லாமலும் அங்குள்ள சிக்கல்களை உணராமலும் வெறும் கட்டளையிடக்கூடிய மேலதிகாரியாகவே திகழ்கிறார். இதுபோலவே ' மின் உலகம்' நாவலில் வருகின்ற செயற்பொறியாளர் ராஜசேகரனுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்கிறார். "ரமாதேவி கேல்ஸ் ஹைஸ்கூல் முன் வழியாக அண்டர்க்ரௌவுண்டு கேபிள் போடுவது உன் செக்ஷனில் இருந்து தானே..? ஆமா சார்... நாங்க தான்..."[37] என்கிறான். " அந்த ரோடு பூரா தோண்டிப்போட்டு ரொம்ப நாளாகிவிட்டது எதுக்கும் இன்னிக்கே குழியை கம்ளிட்டா மூடி விட அரேஞ்சு பண்ணிவிடு"[38] என்கிறார்.

"செங்கலுக்கும், மணலுக்கும் உடனடியாகப் பணம் தருதல் வேண்டும். இல்லையெனில் உடனடியாகத் தரமாட்டார்கள்."[39] என்கிறான் ராஜசேகரன். "உடனடியாகப் பணம் தர இயலாது. அதற்குரிய ஏற்பாட்டினைச் செய்துவிடு என்கிறார்"[40] செயற்பொறியாளர் இந்தக் கட்டளையை நேரடியாக அழைத்துக் கூறாமல் தொலைபேசியின் மூலமாகவே கட்டளையிடுகிறார். இவர் வேலை நடைபெறுமிடத்திற்கு நேரடியாகச் சென்று பார்வையிடாமல் அங்குள்ள

இடர்ப்பாடுகளை உணராமல் கட்டளையிடுவது மேலதிகாரியின் குறைபாட்டினைச் சுட்டுவதாக அமைகிறது.

**இடமாற்றமும், மேலதிகாரிகளின் செயல்களும்**

மேலதிகாரிகள்," தங்களின் கீழ் பணிபுரிபவர்கள் தங்கள் சொற்படி கேட்க வேண்டும்; இல்லையெனில் அவர்களை வேறு இடத்திற்க மாற்ற வேண்டும் என்று முயற்சி செய்பவர்களாக சித்தரிக்கப்பட்டுள்ளனர். 'வட்டத்தின் வெளியே' நாவலில் வரும் செயல் இயக்குநர் பிலிபோஸ் இதற்குச் சான்றாகின்றனர். இவரின் கீழ் வேலை பார்ப்பவர் சின்னச்சாமி. இவர் மகாபலிக் கரையில் வேலை பார்ப்பவர் ஆனால் வெளியூரிலிருந்து வேலைக்கு வருகிறார். பல காரணங்களால் காலையில் பத்தரை மணியளவில் அலுவலகத்திற்கு வரவேண்டிய நிலை ஏற்படுகிறது. இவ்வாறு காலதாமதமாக வருகின்றபோது வருகைப் பதிவில் கோடு இழுத்து விடுகிறார். ஒரு நாள் சின்னச்சாமி காலதாமதமாக வருகிறார். அன்றும் மேலதிகாரி பழைய முறையைக் கையாள்கிறார்." சார்... நீங்க ஒரு ஸேடிஸ்ட், இது சரியல்ல நானும் உங்களைப் போல் ஒரு கெஜட்டட் ஆபிஸர்"[41] என்கிறார் சின்னச்சாமி. அதன் பிறகு சின்னச்சாமி மேலதிகாரியைப் போய்ப் பார்ப்பதில்லை இந்தக் காரணத்தால் சின்னச்சாமியை வேறு இடத்திற்கு மாற்றி விடுகிறார் என்பதைச் சின்னச்சாமியின் கூற்று உணர்த்துகிறது.

ஜெயக்குமாரை இடமாற்றம் செய்யும் போது தலைமை இயக்குநர் எஸ்.பி. மாரார் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை. ஜெயக்குமார் தன் சொந்த ஊரான பள்ளிகொண்டபுரத்தில் வேலை பார்க்கிறான், அவனை மகாபலிக்கரைக்கு மாற்றி விடுகின்றனர். அந்தக் கடிதத்தை எடுத்துக்கொண்டு தலைமை இயக்குநர் எஸ். பி மாராரைச் சந்திக்கிறான் ஜெயக்குமார், "எனக்கு டிரான்ஸ்பர் ஆகியிருக்குங்க ஆனா

என்னைவிட ஸீனியர் ஆனவங்களின் டிரான்ஸ்பர் ஆர்டர் கேன்சல் செய்யப்பட்டிருக்கிறது"[42]

"ஆமா நானும் கவனிச்சேன், அவங்க ப்ரொட்டக்ட் ஆட்களாம். இப்போ உன்னை இங்கிருந்து டிரான்ஸ்பர் பண்ணினால் இங்கே ஒர்க் சபர் ஆகும். உனக்கும் ப்ரொட்டக்ஷன் கொடுக்கணும் அப்படிண்ணு எனக்கு சொல்லத் தெரியாமலா....! அவுங்க பெயரை டிரான்ஸ்பர் ஆர்டரில் சேர்த்ததுக்கு நாலுநாளா எனக்கு இங்கே உட்கார்ந்திருக்க முடியல்லே ஹைலெவலில் இருந்து அப்படியொரு ப்ரஷர்....."[43] என்று எஸ்.பி மாரார் பதில் கூறுகிறார். சூழ்நிலைகளின் அழுத்தத்தில் தலைமை இயக்குநர் இவ்வாறு நடந்து கொண்டார் என்று கருத வாய்ப்பிருந்தாலும், உண்மை அதுவல்ல என்பதையும் அவர் தம் சொந்த விருப்பு வெறுப்புடன்தான் மாறுதல்களைச் செய்கிறார் என்பதையும் உணர்த்துகிறது. அக்கூற்று வருமாறு,

"உனக்குத்தான் தெரியுமே நான் பிரின்ஸிப்பில் விட்டு விலகி ஒண்ணும் செய்ய மாட்டேன்னு, அதனால் தான் கிருஷ்ண குமாரியைக் கூட ஆற்றூருக்கு டிரான்ஸ்பர் பண்ணப் போறேன்"[44] என்கிறார். இக்கூற்றுதான் அவர் ஒரு நேர்மையற்றவர் என்பதற்குச் சான்றாகிறது. ஜெயக்குமார் புனல்புரம், தைவிளை, சவக்கை இப்படிச் சில இடங்களுக்காவது கொஞ்சகாலம் மாற்றலாகிச் சென்றிருக்கிறான். ஆனால் கிருஷ்ணகுமாரி இதுவரை இந்த அலுவலகத்தை விட்டு வெளியேறாதவள். அவளை இருபது மைல் தொலைவில் இருக்கும் ஆற்றூருக்கு மாற்றிவிட்டு ஜெயக்குமாரை நூறு மைல் தொலைவில் மாற்றலாக்கி இருக்கிறார். இச்செயல் இவரின் நேர்மையற்ற செயலைக் காட்டுகிறது.

இதனால்தான் 'வட்டத்தின் வெளியே' நாவலை விமர்சனம் செய்த மா.தட்சணாமூர்த்தி "அரசாங்க ஊழியர்கள் மனிதத் தன்மையே அற்ற யந்திரங்கள்.. அந்த யந்திரத் தன்மைக்குச் சரியான எடுத்துக்காட்டு பிலிப்போஸ் எஷ்.பி.மாரார் போன்றவர்கள்"[45] என்று கூறுவது எஸ்.பி மாராரின் நிலையை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

ஓர் அலுவலகத்தில் மேலதிகாரி தானே ஊழலில் ஈடுபடுவது" பைல்கள்" நாவல்களில் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்நாவலில் வருகின்ற மேலதிகாரியான சந்திரசேகரன் ஊழல் புரிவாராகக் காட்டப்படுகிறார். எனவே தான் கெ.வி.சந்திரசேகரனை "நேர்மைக்கு நெஞ்சு காட்டாது ஊழலே நிறைந்த பெரிய அதிகாரி..."[46] என்று விமர்சிக்கிறார் குருநாதன். குமாஸ்தா ரவீந்திரன் அலுவலகத்தில் நுழைந்தவுடன் தன் மேலதிகாரி சந்திரசேகரனின் அறையில் நுழைகிறான். அங்கு ஜே அன்ட் ஜே கம்பெனி நிர்வாகி ஷாகுல் ஹமீத் அமர்ந்திருக்கிறார்

"அந்த டெண்டர் டேபுலேஷன் என்ன ஆச்சு?"

"தீர்ந்தாச்சு, அதற்கான சப்மிஷன் தான் எழுதிக் கொண்டிருக்கிறேன்

"ஜான்சன் இண்டஸ்ட்ரீஸ்"

"அடுத்தது?"

"இன்டர் நேஷனல் என்டர்பிரைசஸ்"

"சரி, சரி ஜே அண்டு ஜே கம்பெனி எத்தனாவதாக நிற்கிறது

"அதுதான் ஹையஸ்ட் ஆபர்...."

"ஒண்ணு செய்! ஜே அண்டு ஜே கம்பெனி நம் ராஜ்யத்தைச் சேர்ந்தது. அதனால் நம் நாட்டில் தொழில் அபிவிருத்தி அடைய அவர்களுக்கு ஆர்டர் பிளெஸ் செய்வதுதான் உத்தமம் என்று சப்மிஷனில் எழுதிவிடு;

"எஸ் சார் ஆனால் இரண்டாவதாக ஸ்தானத்தில் நிற்கும் இண்டர்நேஷனல் எண்டர்பிரைசஸ் நம் ராஜ்யத்தைச் சேர்ந்ததல்லவா!"

போன கான்ட்ராக்டில் சப்ளை செய்தவைகள் மிகவும் திருப்திகரமாக இருந்தன என்று காரணம் சொல்லி ஜே அண்டு ஜே கம்பெனிக்கே 'ரெகமெண்ட்' பண்ணி சப்மிஷன் எழுதிக் கொண்டு வா"[47] என்கிறார். ஜே அண்டு ஜே ஹையஸ்ட் ஆபர் என்று தெரிந்தும் அதற்கே சலுகை காட்டுகிறார் என்றால் அது ஊழல் செய்கிற நிலையைக் காட்டுகிறது.

'பள்ளிக்கொண்டபுரம்' நாவலில் வைரவன் பிள்ளை முதலாளியின் மகன் கோபலன்பிள்ளை லாட்டரி இலாகாவில் மேலதிகாரியாகப் பணியாற்றுகிறார். "வெளிமாகாணங்களில் லாட்டரி ஏஜெண்டுகளை நியமித்த வகையில் அவர் மீது லஞ்ச ஊழல் கேஸாம்"[48] வழக்கு பதிவாகியிருக்கிறது. இதனால் அவர் பதவி உயர்வும் பாதிக்கப்படுகிறது. மேலதிகாரியின் ஊழல் புரியும் நிலையினை நாவலிலிருந்து அறிய முடிகிறது.

**சமூகத்தில் உயர் அதிகாரிகள் மனிதாபிமான மற்ற செயல்களைச் செய்தல்**

'உறவுகள்' நாவலில் வரும் ராஜகோபாலன் தன் தந்தை உடல் நலமில்லாமல் இருந்ததால் பதினொரு நாட்கள் விடுமுறைக்குப் பிறகு தன் அலுவலகத்திற்கு வருகிறான். தன் மேலதிகாரியான செயற்பொறியாளர் முகுந்தன்நாயரைப் பார்க்கச் செல்லுகிறான். இவனைக் கண்டதும் " என்ன ராஜகோபால் ஆபீஸ் ஞாபகம் வந்ததா?

பத்து நாளா உன்னை பற்றித் துப்பே இல்லையே........" என்றார் ஒரு விஷமச் சிரிப்புடன்"[49]

"நான் லீவ் லெட்டர் அனுப்பியிருந்தேனே சார்... என் அப்பாவுக்குத் திடீரென்று ஹார்ட் அட்டாக் அதனால் தான் என்கிறான். இவன் இவ்வாறு கூறும்போது அவர் முகத்தில் எந்தச் சலனமும் தோன்றவில்லை. இங்கு இவன் தந்தையின் உடல்நிலை பற்றி ஏதாவது கேட்டிருக்கலாம். கேட்கவில்லை. முடிவில் இவர் "உனக்கு டிரான்ஸ்பர் வாங்கிக் கொண்டு இனியும் பழையபடி சொந்த ஊருக்குத் திரும்பி போகனும்... இல்லையா?."[50] என்று இவனைக் கேலி செய்கிறார். இது அலுவலக உயர் அதிகாரிகளின் மனிதாபிமான மற்ற செயலுக்குச் சான்றாக நீல பத்மநாபனால் படைத்துக் காட்டப்படுகிறது.

மின்சார வாரியத்திலேயே பணி புரியும் ஓர் அதிகாரி சில சூழல்களைப் பற்றி புரிந்து கொள்ளாமல் தன் கீழ் வேலை பார்ப்பவனை அவனுடைய மேலதிகாரியிடம் புகார் செய்யும் நிலை நீல.பத்மநாபனின் நாவல்களில் காணப்படுகிறது.

'மின் உலகம்' நாவலில் வரும் சங்கரராமன் இதற்கு எடுத்துக் காட்டாக உள்ளார். புத்தன் காடு செக்ஷன், ராஜசேகரன் பொறுப்பில் இருக்கிறது. திடீரென்று 'கரெண்ட்கட்' ஆகி விடுகிறது. அதில் சங்கரராமன் வீடும் ஒன்று அவர் இவனுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்கிறார்.

ராஜசேகரனுக்கும் சங்கரராமனுக்கும் இடையே நடக்கும் தொலைபேசி உரையாடல் இங்கு நோக்கத் தக்கது.

"சே என்ன இழவா இருக்கும். இங்கே என் ஹௌசில் லைட் இல்லையே சார்... அடுத்தாத்தில் எல்லாம் லைட் இருக்கே" என்கிறார். இந்த உரையாடலில் தொடர்ந்து நடைபெறுகிறது.

முடிவில் ராஜசேகரன் "இங்கே நாங்க எல்லோரும் ஆபீஸில் இருட்டில்தான் உட்கார்ந்திருக்கோம்....."

"ஓகோ.. அப்படித் திமிரா பேசுறே... இல்லையா? அப்படிண்ணா எக்ஸிகூட்டிவ் எஞ்சினியர்கிட்டே புகார் பண்ணாமல் வழியில்லே"[51] என்று கூறி புகாரும் செய்து விடுகிறார். இங்கு மின்சாரத்துறையில் பணிபுரியும் உயர் அதிகாரிக்கு நிலையைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் கூட இல்லாமல் இருக்கும் குறை சித்தரிக்கப்படுகிறது.

நேரடியாக வேலையை வாங்காமல் மற்றொருவரைப் பற்றிக் குறை கூறி ஒருவரைப் புகழ்ந்து பேசி வேலை வாங்கும் பண்புகள் சில அரசு அதிகாரிகளிடம் காணப்படும்.

இதற்கு எடுத்துக் காட்டாக 'வட்டத்தின் வெளியே' நாவலில் வரும் செயல் இயக்குநர் பிலிப்போஸ் எடுத்துக் காட்டாக அமைகிறார்.

அவர் ஜெயக்குமாரிடம் "என்ன ஜெயக்குமார், மெட்டிரியல்ஸ் லிப்டிங் எல்லாம் எப்படியிருக்குது? ஸ்டோர் கீப்பர் தான் ஆக்ஷன் எடுக்கணும். ஆனாலும் நீ கூட ஃபாலோ அப் பண்ணாட்டி ஒண்ணும் நடக்காது உன்ப்ரிடிஸிசர் சின்ன சாமிக்கு இம்மாதிரி விஷயங்களில் ஒண்ணும் அக்கறை இருக்கவில்லை"[52] என்று கூறும் கூற்று ஒருவரை மட்டம் தட்டிச் பேசி இன்னொருவரிடம் வேலை வாங்கும் திறமையை உணர்த்துகிறது.

**பிரித்தாளும் மனப்பான்மை**

ஒரே நிலையிலுள்ள இரண்டு ஊழியர்களிடம் ஒருவரைப் பற்றி, மற்றொருவரிடம் குறை கூறுவது, இருவரையும் பிரித்து ஆட்சி செய்யும் அதிகாரவர்க்க மனப்பான்மையாகும். இந்நிலையை, 'அனுபவங்கள்' நாவலில் வரும் செயற்பொறியாளர் சிவராமன் நாயர் சந்திரனைப்பற்றி அவனுடன் பணிபுரியும் மணியிடம் அவர் குறை கூறுகிறார்.

"இதெல்லாம் மேலதிகாரிகளின் கோணல் தந்திரங்கள் அவ்வளவுதான்! என்னைப்பற்றி குறைவா உங்கக்கிட்டச் சொல்லி உங்களைத் தன்வயப்படுத்திக் கொள்வது, உங்களைப்பற்றி எங்கிட்ட குறைவாகச் சொல்லி என்னைப்பற்றி அவருக்கு பெரிய அபிப்ராயம் இருப்பதா ஒரு பொய் உணர்வை என்னிடம் ஏற்படுத்துவது இதையெல்லாம் போகப் போக நீங்க புரிஞ் சுக்குவீங்க... இதில் நாமொ கவலைப்பட ஒண்ணும் இல்லை"[53]... என்ற மணியின் கூற்று மேல்தட்டு அதிகாரிகளின் பிரித்தாலும் திறனை விமரிசிப்பதாக நாவலில் இடம் பெறுகிறது.

நீல. பத்மநாபன் அரசு அலுவலக உறவுகள் தொடர்பாக எழுதிய நாவல்களில் வரும் தலைமை மாந்தர்கள் அனைவரும் இடைநிலை ஊழியர்களாகவே இருக்கின்றனர். இவர்களை மையமாக வைத்துதான் கதை நிகழ்ச்சிகள் பின்னப்படுகின்றன.

நாவல்களில் வருகின்ற இடைநிலை ஊழியர்களை பின்வருமாறு பகுத்துக்கூறுகிறார் ஆசிரியர், பொறுப்புள்ள ஊழியர்கள் பொறுப்பற்ற ஊழியர்கள். இதில் பொறுப்புள்ள ஊழியர்கள் நாவலில் வருகின்ற தலைமை மாந்தர்கள் அனைவரும் பொறுப்புள்ள ஊழியர்களாகவே படைக்கப்பட்டுள்ளனர்.

ஃபைல்கள், நாவலில் வரும் ரவீந்திரன் உறவுகள் நாவலில் வரும் ராஜகோபாலன் 'சமரில்' வரும் அசோகன்,' அனுபவங்களில் வரும் சந்திரன் 'மின் உலகத்தில்' வரும் ராஜசேகரன், வட்டத்தின் வெளியே' யில் வரும் ஜெயக்குமார் இதற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றனர். கடமை தவறாத கண்ணியம் மிக்க ஊழியர்களாக இந்நாவல்களில் கதைத் தலைமை மாந்தர்கள் படைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்களின் பொறுப்புடைமை இயல்புகளை ஆசிரியர் 'அனுபவங்கள்' நாவலில் வரும் சந்திரன் மூலமும், 'வட்டத்தின் வெளியே' நாவலில் வரும் ஜெயக்குமாரின் மூலமும் அறியமுடிகிறது.

'அனுபவங்கள்' நாவலில் வரும் சந்திரன் உதவிப் பொறியாளராகப் பதவி உயர்வு பெற்றுப் பள்ளிகொண்டபுரத்திலிருந்து புனல்புரத்திற்குப் மாற்றலாகி வருகிறான். வந்தவுடன் பொறுப்பை ஏற்றுக் கொள்கின்ற போது ஒரு பொறுப்புள்ள ஊழியனாகச் சந்திரன் செயல்படுகிறான். சந்திரன் வருவதற்கு முன்பு அந்த இடத்தில் பணிபுரிந்தவர் கோஷி ஆவார். சந்திரன் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் தாளில் கையொப்பம் இட்டவுடன், தான் மாற்றப்பட்ட இடத்திற்குச் செல்ல வேண்டும் என்கிறார்.

"என்ன! இவ்வளவு சீக்கிரமா நீங்க போயிட்டா எப்படி? புளிமுக்கில் உள்ள நம்ம ஸப்ஸ்டேஷன் ஸைட்டைக்கூட வந்து நீங்க காட்டித் தர வேண்டாமா? செய்ய வேண்டிய முக்கிய வொர்க்குகளைப் பற்றி எனக்குச் சொல்லித்தர வேண்டாமா? எனக்கான டிரான்ஸ்மிஷன் வொர்க்கில் முன் அனுபவம் இல்லை..."[54] என்று சந்திரன்கேட்கிறான். இங்குப் பொறுப்பை எடுத்தவுடன் தான் செய்யவேண்டிய பணி பற்றி இதுவரை செய்திருக்கும் நிலை பற்றி இவன் கேட்பது ஒரு பொறுப்புள்ள ஊழியன் செய்யக்கூடிய செயலாக அமைகின்றது.

'வட்டத்தின் வெளியே' நாவலில் வரும் ஜெயக்குமார் பள்ளி கொண்டபுரத்திலிருந்து மாற்றலாகி மகாபலி கரைக்கு வருகின்றான், வந்தவுடன் அவ்விடத்தின் முன்னால் பணியிலிருந்த சின்னசாமி "சார், இந்த மெட்டீரியல் லிஸ்டில் டோக்கன் சார்ஜில் சார் கையொப்பம் போட்டுத் தந்தால் நான் போகலாமுன்னு இருக்கேன்..."[55] என்கிறான். அதற்கு ஜெயக்குமார் " என்ன சின்னச்சாமி டிரான்ஸ்பர் சார்ஜ் பேப்பரில் எல்லாம் நான் கையொப்பம் போட்டாச்சே, மெட்டீரியல்ஸ் பர்னிச்சர் எல்லாம் என்னென்ன இருக்கு, கண்ணை மூடிக்கிட்டுக் கையொப்பம் போடச் சொன்னா எப்படி?"[56] என்று கூறிவிட்டுச் பொறியாளர் பிலிப்போஸிடம் ஆலோசனை செய்த பிறகு பொறுப்பேற்றுக் கொள்ளும் தாள்களில் கையொப்பம் இடுகிறான். இதுவரை இந்த அலுவலகத்தில் நடைபெற்று வந்த முறைகளை இவனும் மேற்கொண்டிருக்கலாம். எவ்வாறு எனில் சின்னச்சாமி தனக்கு முன்பு இருந்த மணியிடம் எதுவும் கேட்காமல் கையொப்பமிடுகிறான். தான் பொறுப்பேற்ற போது ஜெயக்குமாரும் இது போன்ற நிலையை மேற்கொள்ளாததற்குக் காரணம் தான் பொறுப்புள்ள ஊழியன் என்ற உயர்வு இருப்பதால் தான் ஆகும்.

பொறுப்பை ஏற்ற பின்னர் இடமாற்றலாகி, பொறுப்பினை ஏற்ற பின்னரோ அல்லது தன் மேலதிகாரி, பொறுப்புக்களைக் கொடுக்கின்ற நிலையிலோ, அரசு ஊழியர்களில் சிலர் பொறுப்பள்ள ஊழியர்களாகச் செயல்படுவதுண்டு.

'அனுபவங்கள்' நாவலில் வரும் சந்திரன் 'மின் உலகம்' நாவலில் வரும் ராஜசேகரன் 'வட்டத்தின் வெளியே' நாவலில் வரும் ஜெயக்குமார் இத்தகைய அரசு அலுவலர்கட்கு எடுத்துக்காட்டாகப் படைக்கப்பட்டிருக்கின்றனர்.

'அனுபவங்கள்' நாவலில் வரும் சந்திரன் பொறுப்பு ஏற்ற உடனே நடுமண் என்ற இடத்தில் உள்ள துணை மின்நிலையம் அமைக்கும் இடத்தைப் பார்வையிடச் செல்கிறான். இது அலுவலகத்தில் அமர்ந்து பார்க்க வேண்டிய வேலை அல்ல களப் பணியில் ஈடுபட வேண்டிய வேலை. பொறுப்பேற்ற உடனே செல்லாமல் அடுத்த நான் கூடச் சென்றிருக்கலாம் ஆனால், அவன் பொறுப்புள்ள ஊழியன் என்பதால் பொறுப்பேற்ற உடனே சென்று விடுகிறான். அந்த அலுவலகத்தில் இதைத் தலைமைக் குமாஸ்தா தோமஸ் " நடு மண்ணுக்குப் போயிருந்தீங்களா சார் சாரும் என்னைப் போலத்தான் வொர்கில் ரொம்ப ஸின்ஸியர் போலிருக்குது"[57] என்று கூறும் சந்திரனின் பொறுப்புணர்வுக்குச் சான்றாகிறது.

'வட்டத்தின் வெளியே' நாவலில் வரும் ஜெயக்குமாரிடம் அவனுடைய மேலதிகாரி பிலிப்போஸ் தன் பொறுப்புகளை ஒப்படைக்கிறார். அதாவது ஹைதராபாத்தில் நிர்வாகப் பயிற்சி முகாம் நடைபெறுகிறது. தான் இருபத்திநான்கு நாட்கள் அங்கு இருக்க வேண்டும் என்பதால் தன்னுடைய பொறுப்பை இவனிடம் ஒப்படைக்கிறார். அந்த மாதச் சம்பளம், பென்சன் மற்றும் பேமெண்ட்ஸ் எல்லாவற்றையும் அவன் கொடுக்க வேண்டும். செக்புக், இம்ப்ரஸ்ட் ரூபாய், திறவல்கொத்து எல்லாவற்றையும் இவனிடம் தந்து விடுகிறார்.

"கட்டு கட்டாய் சம்பளப் பில்கள் செக்புக்குகள் அக்கவுண்ட் லெட்ஜர்கள் இவை தவிர வழக்கமான ரூட்டின் பேப்பர்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கையொப்பமிடுகிறான்"[58] என்று ஆசிரியர் கூறுவதின் மூலம் உணர்ந்து கொள்ளலாம். காலை மாலை நேர ஓய்வு கூடக் கிட்டுவதில்லை. இவன் பார்ப்பதைப்போல இவன் மேலதிகாரி பார்த்திருப்பாரா என்பது ஐயமே! அதோடு மட்டுமல்லாமல் பொறுப்பேற்ற சில நாட்களுக்குள் காவல்துறை அமைச்சர் மேத்யூஸ் இறந்துவிடுகிறார். அவருடைய

இறுதி ஊர்வலத்திற்குச் செய்ய வேண்டிய சில பொறுப்புகள் இவனிடம் கொடுக்கப்படுகின்றன. சிங்கனூர் அலுவலகத்தில் பணிபுரியும் செயல் இயக்குநர் ராதா கிருஷ்ணன், பாவல்லம் கிளையில் பணிபுரியும் செயல் இயக்குநர் நம்பியார், ஜெயக்குமார் ஆகிய மூவரும் இணைந்து இயக்குநர் வர்கீஸ் வீட்டிற்குச் சென்று நிலைமைகளை எடுத்துரைக்கின்றனர். பின்னர் இயக்குநர் வர்கீஸ் ஆலோசனைப்படி காவல்துறை அமைச்சர் இறுதி ஊர்வலத்தில் நிறைவேற்ற வேண்டிய பணியை மேற்கொள்கிறான்.

இருபத்திநான்கு நாட்கள் நிர்வாகப் பயிற்சியினை முடித்த பிறகு பிலிப் போஸ் தன் அலுவலகத்திற்கு வந்து பார்வையிடுகிறார். " மேஜை மீது கண்ணோட்டமிட்ட பிலிப் போஸ் சாரின் முகத்தில் ஒரு திருப்தி இவன் பெண்டிங் பேப்பர் எதுவும் அவரைச் சிரமப்படுத்த அங்கே வைத்திருக்கவில்லை"[59] இந்த மூன்று நிலைகளிலும் ஜெயக்குமாரின் பொறுப்பான நிலை சுட்டிக் காட்டப்படுகிறது.

**கடமை தவறாத அலுவலராக இருத்தல்**

தன் கடமையில் தவறாதவராக இருப்பது பொறுப்புள்ள அரசு ஊழியர்களின் இயல்புகளுள் அடிப்படையானதாகும். நீல பத்மநாபனின் நாவல்களில் கதைத் தலைமை மாந்தர்கள் இத்தகைய கடமையுணர்வு மிகுந்தவர்களாகப் படைக்கப் பட்டிருக்கின்றனர். ஃபைல்களில் வரும் ரவீந்திரன் இத்தகைய கதை மாந்தராகப் படைக்கிறார். "எது எப்படியானாலும், குமஸ்தா வேலையில் நான் சேர்ந்த நாளிலிருந்து இன்று வரை கிடைக்கும் கடிதங்கள் அனைத்துக்கும் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க தவறியதே இல்லை சோம்பி கிடப்பது என்னால் ஆகாத ஒன்று"[60] என்று ரவீந்திரன் கூற்று வழி இதனைப் படைத்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

**மக்களுடன் உறவு கொள்ளும் நிலை**

பொது மக்களுக்கு ஏற்படுகின்ற சிக்கல்களைத் தீர்த்து வைக்க வேண்டிய பொறுப்பு ஓர் அரசு அலுவலர்க்கு உண்டு. அதனை அவர் எப்படிச் செய்ய வேண்டும் என்பதற்கு 'மின் உலகம்' நாவலில் வரும் ராஜசேகரன் எடுத்துக்காட்டாய் திகழ்கிறான். மக்களுக்குப் பயன்படுகின்ற மின்சார உலகத்தில் இளநிலைப் பொறியாளராக அவன் பணியாற்றுகிறான். ராஜசேகரனிடம் மக்கள் கொண்டு வருகின்ற சிக்கல்கள், அவர்கள் நடந்து கொள்கின்ற முறை, அதற்கேற்ப அவன் நடந்து கொள்கின்ற விதம் இங்கு விளக்கப்படுகிறது. 'மின் உலகம்' நாவலில் தான் அரசு ஊழியர்களுக்கும் மக்களுக்கும் உள்ள உறவுகள் மிகுதியாகப் பேசப்படுகிறது. மின்சார அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்களுக்கு மக்களிடமிருந்து எத்தகைய சிக்கல்கள் எல்லாம் வருகின்றன என்பதை முழு அளவில் ஓர் எடுத்துக்காட்டின் மூலம் காணலாம். காலை அலுவலகத்திற்கு ராஜசேகரன் கிளம்புகின்ற போது தொலைபேசி ஒலிக்கிறது. எடுத்ததும் ஒரு பெண் குரல் முழங்குகிறது.

" ஜீனியர் இன்ஜினியரா?"

" ஆமா..."

" இது ரேணுகா முசுகர்ஜி கன்ஸ்யூமர் நம்பர் போர்டின் செவன்டின்..?". "நாங்க எலக்ட்ரிஸிட்டி பில்லுக்கு பணம் அடைச்சுட்டோம், ஆனால் பணம் அடைக்கலேன்னு டிஸ்கனெக்ஷன் செய்ய உங்க ஆளுங்க இங்கே வந்துருக்காங்க..."

" சரி அங்கே நிற்கிற லைன்மேன்கிட்டே போனைக் கொடுங்க...

" சற்று நேர மௌனம்"

"சார் இது தேவசகாயம்" சம்பாஷணையின் மொழி மாறுகிறதுமாறுகிறது.

"உம்... என்ன ?".

"இல்லை சார், அவுங்க பணம் அடைச்ச ரஸீதைக் காட்டுறாங்க... ஆனா டிஸ்கனெக்ஷன் லிஸ்டில் இவுங்க என்னையும் காஷியர் எழுதித் தந்திருக்காரு...." "இல்ல, மணி ஆர்டர் ரஸீது சார்..." "சரி எதுக்கும் இப்போ டிஸ்கனெக்ஷன் செய்ய வேண்டாம், அவுங்க கையில் போனைக் கொடு..." "சரி சார்..." போன் கை மாறுகிறது. மொழியும் மாறுகிறது. " நீங்க ரூபாய் யாருக்கு எம்.ஓ. செய்தீங்க?". " உங்களுக்குத்தான்" அதுதான் தப்பு. டிபுடி சீப் அக்கௌண்டண்டுக்கத்தான் மணி ஆர்டர் செய்யலாம் அதுவும் லாஸ்ட் மோமண்டில் நீங்க பணத்தை எம்.ஓ செய்யக்கூடாது. அவர் எங்களுக்கு அறிவிக்க அவகாசம் இருக்கனும்..." "அதுக்கு லாஸ்ட் மோமன்டில் தானே டிஸ்கனெக்ஷன் நோட்டில் எங்க கைக்கு கிடைக்குது" " அப்போ கவுண்டரில் கொண்டு வந்த ரூபாய் அடச்சிருக்கனும் இல்லாட்டி எனக்கு செக் அனுப்பியிருக்கலாம்". "அதெல்லாம் தெரியாது நாங்க ரூபாய் அடைச்சிட்டோம்" "ஆனா அனுப்ப வேண்டிய ஆளுக்கு அனுப்பவில்லை, மணியார்டர் எங்க ஆபீஸிலிருந்து ரிப்யூஸ் உங்களுக்கே திரும்ப வரும்". "நீங்களும் உங்க ரூலும்..! ரூபாய் அடைச்சு டிஸ்கனெக்ஷனா?"[61]

மக்கள் அலுவலகச் சட்டம் தெரியாமல் செய்து விடுகின்ற தவறும் அதற்கு அரசு ஊழியர் தருகின்ற பொறுப்பான பதில்களும்இம்மேற்கோளில் இடம்பெறுகின்றன. மக்கள் எப்படி இருக்கிறார்கள். எப்படி இருக்கக்கூடாது என்பதற்கு ரேணுகா முகர்ஜியும், அரசு அதிகாரி எப்படி இருக்கிறார், எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ராஜசேகரனும் எடுத்துக் காட்டுகளாக அமைகின்றனர்.

அலுவலகத்திற்கு வந்து பணியைப் பார்க்கிறான் ராஜசேகரன் வரிசையில் நின்று பணம் கட்ட முடியாத பெரியவர் இவனிடம் பணம் கட்டச் சொல்லி விட்டு மாலையில் வந்து வாங்கிக் கொள்வதாகச் சொல்கிறார். அவர் நிலையைப் பார்த்து இரங்கி மாலையில் வரச் சொல்லுகிறார். வாமனபுரம் வார்டு கவுன்சிலர் செல்லப்பன் நாயர் வருகிறார். தன் வார்டில் டியூப்லைட் போடவில்லை என்கிறார். மாநகராட்சி அனுமதியைப் பெற்று வாருங்கள் பிறகு போடுகிறோம் என்று கூறி ராஜசேகரன் அவரை அனுப்பி வைக்கிறான். பணம் கட்ட வந்தவருக்கும், பணம் வாங்கும் அலுவலகக் காசாளருக்கும் சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது. இவன் அழைத்து விவரம் கேட்கிறான், "பணம் கட்ட வந்தவர் கையிலிருக்கும் ரஸீதில் பன்னிரண்டுரூபாய் நாற்பது பைசா என்று இருக்கிறது. ஆனால் அலுவலக கணக்கில் பதினைந்து ரூபாய் எழுபது பைசா என இருக்கிறது. ராஜசேகரன் அவரை அழைத்துத் தன் முன்னால் அமரச் சொல்லித் தன் அலுவலகத் தொடர்பாக ஏற்பட்ட தவறைக் கூறி அவரைப் பணத்தைக் கட்ட வைக்கிறான்"[62] அம்பானூரில் "பதினேழாம் நம்பர் கம்பத்தில் ஒருவர் எருதினை இரவில் அதில் கட்டி வைத்திருக்கிறார். காலையில் அது இறந்து விட்டது அதற்கு நஷ்ட ஈடுகோரி மூன்று மாதத்திற்கு முன் விண்ணப்பித்திருந்தார். இன்று அது தொடர்பாக விசாரிக்க ராஜசேகரனைச் சந்திக்கிறார். ஸ்டே கம்பியில் லீக்கேஜ் இல்லாத நிலையில் என்னால் நஷ்ட ஈடு தொகைக்குச் சிபாரிசுசெய்ய முடியாது என்கிறான். சற்று நேரம் ராஜசேகரனுடன் வாதாடி விட்டு அவர் சென்று விடுகிறார். 'வட்டத்தின் வெளியே' நாவலில் ஆலங்குளத்தில் நடைபெறும் 'டிடிஸி' கூட்டம் பற்றி நாவலில் ஆறு பக்கங்கள் விரிவாகப் பேசப்படுகின்றது. இதில் மாவட்டம் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி, நகரசபை உறுப்பினர்கள், தலைவர், இவர்கள் எல்லாம் ஆட்சியாளர் முன்னிலையில் அரசு ஊழியர்கள் சண்டைப்பிடித்து வேடிக்கை பார்க்கின்றனர். இந்த நிகழ்ச்சியின் போது அலுவலக

ஊழியர்கள் சமாளிக்கின்ற நிலை பற்றிக் கூறப்படுகின்றன. குளத்தை மூடாத நிலை, பேருந்து வழித்தடம் பற்றிய செய்தி பிச்சைக்காரர்களுடைய தொந்தரவு, பள்ளி பற்றிய செய்திகள், புயல் தடுப்பைப் பற்றிய செய்தி, நீர்ப்பாசன ஏற்பாடுகள் பற்றிய செய்தி முதலியன விவாவதத்தில் இடம் பெறுகின்றன.

**உதவி புரியும் மனப்பான்மை**

அரசு ஊழியர்கள் இடமாற்றலாகி வந்திருக்கும் ஊழியர்களின் நிலை கண்டு அவர்களுக்குத் தம்மால் முடிந்தளவு உதவிபுரியும் தன்மையுடையவர்களாக இருப்பது உண்டு. இந்நிலைக்கு எடுத்துக் காட்டாக 'வட்டத்தின் வெளியே' நாவலில் வரும் மாணி எடுத்துக் காட்டாக அமைதின்றான் ஜெயக்குமார் பொறுப்பேற்றவுடன் மாணி அவனைச் சந்திக்கிறான். தங்கும் விவபரம் அறிந்து கொண்ட பின் “சாருக்கு அங்கே படுக்கக் கட்டில் கிடைக்குது வேணு முன்னா தாரேன்”[63] என்று கூறிக் கட்டிலை அனுப்பி வைக்கிறான். இங்கு ஊழியருக்கு ஊழியர் ஏற்படும் உறவையும் உதவி புரியும் மனப்பான்மையையும் காணப்படுவதை நீல பத்மநாபன் காட்டுகிறார்.

அலுவலக ஊழியர்களில் சிலர் தங்கள் கடமைகளை மறந்து பொறுப்பின்றிச் செயல்படுத்துவதுமுண்டு 'அனுபவங்கள்' நாவலின் தலைமை மாந்தரான சந்திரன் ஜெயக்குமார் முதலியோர் பொறுப்புள்ள ஊழியர்களாகப் பதவி வகித்த அதே இடத்தில் அதற்கு முன்னால் இருந்த ஊழியர்கள் பொறுப்பற்ற நிலையில் இருந்ததை நாவலில் காண முடிகிறது. சந்திரன் பொறுப்பேற்றதற்கு முன்பு அவ்விடத்திலிருந்தவர் கோஷி, தன்னுடைய பொறுப்புகளைச் சந்திரனிடம் ஒப்படைக்கும் போது வேலையைப்பற்றி ஒன்றும் கூறாமல் உடனே சென்று விட எண்ணுவது பொறுப்பற்ற நிலையைக் காட்டுவதாக அமைகிறது. தலைமைக் குமஸ்தா தோமஸ், சந்திரனிடம் "சாருக்கு முன்னாலியிருந்த அஸிஸ்டன்ட் என்ஜினியர் கோஷி ஒரு நேரமும் ஆபீஸிலும்

இருக்கமாட்டார். ஒர்க்ஸ்பாட்டுக்கும் போக மாட்டார் மாசத்தில் முக்கால் நாளும் தொலைலிலுள்ள அவர் சொந்த ஊர் சிங்கனூரில் தான் இருப்பார்"[64] என்ற கூற்று கோஷியின் பண்புகளை அறிந்து கொள்ள முடிகிறது.

'வட்டத்தின் வெளியே' நாவலில் வரும் சின்னச்சாமி மகாபலிக்கரையில் வேலை பார்த்தாலும் இருப்பது 'திருவில்லை' என்ற ஊரில் அங்கிருந்து அலுவலகத்திற்கு வரும் பொழுது காலை பத்தரை மணியாகி விடும். பொறுப்பற்ற தன்மையினால் தான் அவர் கால தாமதமாக வருகிறான். அதோடு மட்டுமல்லாமால் ஜெயக்குமார் பொறுப்பை ஏற்றுக் கொள்கிற பொழுது சரிபார்த்து விட்டுத்தான் கையொப்பம் இடுவேன் என்கிறான். அதற்குச் சின்னச்சாமி "எனக்கு முன்னாலிருந்த மாணி எங்கிட்ட ஹேண்ட் ஓவர் செஞ்சதை எல்லாம் இப்போ நான் உன்கிட்ட ஓவர் செய்யாட்டி"[65] என்று தன் நிலையை விளக்கிக் கூறுகிறான். இங்கு ஜெயக்குமார் செய்வதைப் போன்ற ஒரு செயலைச் சின்னச்சாமி மாணியிடம் செய்திருப்பாரேயானால் அவர் ஒரு பொறுப்புள்ள ஊழியராகி இருப்பான். அவ்வாறு செயல்படாத நிலை அவன் ஒரு பொறுப்பற்ற ஊழியனாகித் திகழக் காரணமாகிறது.

**ஊழலுக்குத் துணை நிற்பவர்கள்**

மேலதிகாரிகளின் அடக்கியாளும் செயலுக்கு உட்பட்டிருக்கும் இடைநிலை ஊழியர்கள், நிர்பந்தத்தின் காரணமாக மேலதிகாரிகளின் தவறுகளுக்கு உடந்தையாக இருப்பதும் உண்டு. ஊழலில் தான் நேரடியாகப் பங்கு பெறுதல், ஊழலில் பங்குதாரராக இல்லாமல் அதற்குத் துணைப்புரிதல் என்ற இரண்டு நிலைகளை இங்குக் காணலாம். ஊழலில் நேரடியாகப் பங்குபெற்ற நிலையைப் பற்றிப் பள்ளிக்கொண்டபுரம் நாவலில் வரும் ராமபத்திரன் மூலம் அறிந்துக் கொள்ளலாம். திவான் பேஸ்கராக இருந்த மகாதேவ ஐயரின் மகன் ராமபத்திரன். "பொது மராமத்து

இலாக்காவில் பொறியாளராக வேலை பார்ப்பவன். இவர் ஒரு பெரிய ஊழல் வழக்கில் பிரதிவாதியாகி அலுவலகத்திலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டு விடுகிறான். பிறகு தன் செல்வாக்கால் வழக்கில் போதிய தடயங்கள் இல்லை என்ற நிலையை உருவாக்கிக் கட்டாய ஓய்வு ஊதியத்தோடு பணியிலிருந்து விடுபடுகிறான்"[66].

மேலதிகாரி செய்யும் ஊழலுக்கு அவன் கீழ் வேலை பார்க்கின்ற காரணத்தால் அதற்க்கு உடந்தையாக இருக்கும் நிலையைப் ஃபைல்கல் நாவலில் வரும் ரவீந்திரன் தன் மேலதிகாரியான கெ.வி. சந்திரசேகரன் புரிகின்ற ஊழலுக்கு துணை நிற்கிறான். அதற்கு இவனுடைய ஆங்கில மொழிப்புலமை துணை நிற்கிறது. இந்நிலையில் ரவீந்திரன் தான் ஊழலுக்குத் துணை நின்ற நிலையை எண்ணி பார்க்கும் போது "அவருடைய நேரடிப் பொறுப்பில் கண்காணிப்பில் இருக்கும் ஊழல் மலிந்த சகலமான ஃபைல்கல் பாவ பாரத்தையும் நான் ஒருவனாக நின்று சுமக்க வேண்டியிருக்கும் பரிதாபம்"[67] என்று ரவீந்திரன் தன் நிலையை எண்ணி வருந்துகிறான். தன் மேலதிகாரியான சந்திரசேகரின் ஊழலுக்குத் துணை நின்ற நிலையில் கூறும் கூற்றாக இது அமைகிறது.

**சுயநலமிக்கவர்களாக இருத்தல்**

அலுவலக ஊழியர்களில் சிலர் தங்கள் நலத்தை முன்னிட்டுப் பிறருக்கு உதவி புரியாத சுயநல மிக்கவராய்த் திகழ்வதுண்டு.

'வட்டத்தின் வெளியே'நாவலில் வரும் ஜெயக்குமார் இடமாற்றலாகி மகாபலி கரைக்கு வருகிறான். தன் அலுவலகத்தில் பணிபுரியும் ஜேம்ஸ் விடுதியில் சில நாட்கள் தங்குகிறான். அந்த அறை ஜெயக்குமாருக்கும் வசதி உடையதாக அமையவில்லை. எனவே மனம் வருந்துகிறான். இந்நிலையில் தன் கீழ் வேலை பார்க்கும் கிருஷ்ணன்

போற்றி இடைநிலை ஊழியரான சுகுமாரனிடம் இவனை அழைத்துச் செல்கிறான். கிருஷ்ணன் போற்றி தன் பேச்சை ஆரம்பிக்கிறான்.

சுகுமாரன் வீடு இங்கிருந்து எட்டு மைல் தொலைவில் கொல்லத்தில் இருக்கிறது. தினம் தினம் ஊருக்குச் சென்று விட்டு அலுவலகத்திற்கு வருகிறான், இருந்தாலும் அரசு அலுவலர் விடுதியைத் தன் கைவசம் வைத்திருக்கிறான். அதை ஜெயக்குமார் பயன்படுத்திக் கொள்ள கிருஷ்ணன் போற்றி அனுமதி கேட்கிறான். சுகுமாரன் தர மறுக்கிறான்.

“சே..சே இப்படியும் உண்டா மனுசுங்க வைக்கோல் போர் நாய் பரவாயில்லையே..”[68] என்று கிருஷ்ணன் போற்றி தூற்றும் அளவிற்குச் சுகுமாரனின் சுயநலம் அமைந்திருக்கிறது.

“சமர்” நாவல் முழுக்க முழுக்க அரசு ஊழியர்களின் போராட்டத்தை அதுவும் இடைநிலை ஊழியரின் போராட்டத்தைக் கூறுவதாக அமைந்திருக்கிறது. மின் பொறியியல் இஞ்சினியர், மின் பொறியியல் பட்டதாரி இஞ்சினியர், டிப்ளமோ பட்டம் பெற்றவர்களை விட அதிகமான சலுகைகள் வேண்டி அறுபத்தி ஆறு நாட்கள் வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளும் இடைநிலை ஊழியர்களின் செயல்பாடுகள் இந்நாவலில் பேசப்படுகின்றன. அதை ஆசிரியர் பின்வரும் உரையாடல் மூலம் வெளிப்படுத்துகிறார்.

வேலை நிறுத்தத்தைப் பற்றி ஒரே பதவியில் இருக்கும் அசோகனும் ரவியும் உரையாடுகின்ற நிலையைக் கீழே காணலாம்;

“நம்ம டிமான்டில் அந்த அட்வான்ஸ் இன்கிரிமெண்டு விவகாரம் மட்டும் வேண்டாம இருந்தது”

“என்ன அசோகன் அப்படிச் சொல்லிட்டே! என்ஜினியரிங் காலேஜில் நாலு வருஷம் நாம் எதுக்கு மொட்டை போட்டோம்? வெறும் ஸ்க்ஸ்த் பாஸாகி எங்கோ போய் சர்டிபிகேட் கோர்ஸில் ஒரு பேப்பர் பாஸாகி விட்டு நம்மைப் போல் சம்பளம் வாங்கினால் அது என்ன நியாயம்?

“நாம் அனாவசியமாக பி.எஸ்ஸிக்கு ரெண்டு வருஷம் செலவிட்டோம். பொறியியல் பட்டத்துக்காக நாலு வருஷம் படிச்சோம். அதெல்லாம் சரி ரவி, ஆனால் ஒரே வேலைக்கு ஒரே சம்பளம் என்ற பட்டதாரி அல்லாத ஜீனியர் என்ஜீனியர்களின் வாதமும் தப்பென்று எப்படிச் சொல்ல முடியும்? நமக்கு பட்டம் இருக்குதென்றால் அவுங்களுக்கு நம்மகிட்டே இல்லாத அனுபவம் இருக்கு”

“ஜெனரேட்டிங் ஸ்டேஷன் ஸப்டேஷன்…இப்படி டெக்னிக்கல் ஸ்கில் அதிகமாகத் தேவைப்படும் இடங்களில் இந்த அண்டர் கிராஜுவேட் ஜீனியர் என்ஜினியர்களை அவர்கள் வயசை மட்டும் கணக்கிலெடுத்துக் கொண்டு போட முடியுமா? போட்டா உருப்படுமா?”

“உருப்படுமுண்ணு தான் அவுங்க சொல்றாங்க…நமக்கு அவுங்களுக்கு எக்ஸ்பீரியன்ஸ் இருப்பதா சொல்றாங்க…”[69] இவ்வாறு ஒரு ஊழியர்களுக்கிடையே வேலை நிறுத்தம் பற்றிய மாறுபாடான கருத்துக்களை நாவலாசிரியர் ’சமர்’நாவலில் காட்டுகிறார். ஊழியர்களுக்கும் தொழிற்சங்கத்துக்கும் உள்ள பிரச்சனைகள், அரசு ஊழியர்களை கட்டிக் காக்கும் அமைப்பாகத் தொழிற்சங்கம் இயங்குகிறது. ஊழியர்கள் எல்லாப் பிரிவினரிடத்தும் இந்தச் தொழிற்சங்கம் இருக்கிறது. இரண்டு விதமான அமைப்புகள் இந்த தொழிற்சங்கத்திற்கு உள்ளன. மேலும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் எல்லாம் எதிர்க்கட்சித் தொழிற்சங்கங்களாகக் கருதப்பட்டன.

“ஒர்க்கர்ஸ் யூனியன், எக்ஸிகூட்டிங் எம்ப்ளாய் யூனியன் என்ற இரண்டு சங்கங்கள் காட்டப்படுகின்றன. சுமை தூக்கும் தொழிலாளர்கள், என்.எம்.ஆர் தொழிலாளர்கள் முதலியோரும் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்ட நிகழ்ச்சி”[70] ‘சமர்’நாவலில் கூறப்படுகிறது.

தொழிற்சங்கத் தலைவர்களின் செயல்பாடுகள் ’சமர்’நாவலிலும் ‘மின் உலகம்’ நாவலிலும் பேசப்படுகின்றன. ‘சமர்’ நாவலில் போராட்டம் தொடங்கும் போது தொழிற்சங்கத் தலைவர் பேசும் பேச்சும் வேலை நிறுத்தம் தோல்வியடைந்த போது பேசும் பேச்சும் விளக்கமாகக் கூறப்படுகின்றன. வேலை நிறுத்தம் தொடங்கும்போது தொழிற்சங்கத் தலைவர் தோழர் ராமகிருஷ்ணன் பின்வருமாறு பேசுகிறார்.

“ஜீனியர் எஞ்சீனியர் தொழிலாளர்களே? நீங்கள் மனம் தளரக்கூடாது.... இந்தச் ‘சமர்’என்றாயினும் உங்கள் வெற்றியில் தான் முடியும். நாம் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், ஆபிஸர்கள் முதலிய ஆதிக்க மனோபாவம் உங்களில் சிலரிடமிருந்து இன்னும் நீங்கவில்லை என்பதை நான் கவனித்தேன், எந்த சங்கோஜமும் இன்றி ஆணவத்துடன் முஷ்டி சுருட்டி அழுத்தம் திருத்தமாக உணர்ச்சிக் கொந்தளிப்புடன் தார்மீக ரோஷத்துடன் நீங்கள் கோஷம் எழுப்ப வேண்டும், அது இந்த பிற்போக்கான மானேஜ்மென்டின் செவிப்பறையில் போய் முழங்க வேண்டும்...பிறகு அவர்கள் தானாகக் கீழிறங்கி வருவார்கள்”[71] என்றும் வேலைநிறுத்தம் தோல்வியுற்று வேலைக்குத் திரும்பச் செல்ல வேண்டும் போது “இதனால் நீங்க யாரும் மனம் சோர்வடையத் தேவையில்லை தொழிலாளி சமரின் மேல் மானேஜ்மென்டு பிரயோகிக்கும் கடைசி சதி ஆயுதம் தான் இந்தக் கட்டாய தீர்ப்பு. நிர்பந்த லேபர் பிரச்சினைகளை விட்டு விட்டு, தொழிலாளிகளின் அரசாங்கம் தான் தங்களுடையது என்று இனி எந்தக் கட்சியும் வீம்படிக்க முடியாது, வோட்டர்களை அணுக முடியாது.

அதனால் நீங்கள் எல்லோரும் நாளைக்கு வேலையில் திரும்ப பிரவேசிப்பதுதான் நல்லது"[72]

இந்த இரண்டு விதமான பேச்சிலிருந்து தொழிற்சங்கத் தலைவருக்கும், தொழிலாளர்களுக்கும் உள்ள உறவும், அவரது பொறுப்பும் கடமையும் எவ்வாறு உள்ளன என்பதனையும் அதை எவ்வாறு செயல்படுத்துகிறார் என்பதையும் அறிய முடிகிறது.

நீல பத்மநாபன் நாவல்களில் பெண் ஊழியர்களின் நிலைமையைப்பற்றி கூறும்போது பெண்கள் வேலை பார்க்கும் நிலை கூறப்படுகிறது. பெண் ஊழியர்கள் நாவல்களில் மதிப்பு மிகுந்தவர்களாகக் காட்டப்படவில்லை. குறைவுடையவர்களாகவே காட்டப்படுகின்றன. 'பைல்கள்', 'உறவுகள்', 'சமர்', 'அனுபவங்கள்', 'மின் உலகம்', 'வட்டத்தின் வெளியே' ஆகிய நாவல்களில் பெண் ஊழியர்கள் இடம் பெறுகின்றனர். கடமைகளை ஒழுங்காகச் செய்யாத நிலைக்கு 'மின்உலகம்' நாவலில் வரும் ஹேமா எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறாள். மின்சார அலுவலகத்தில் ஹேமா காசாளராக வேலை பார்க்கிறாள். பணம் கட்ட வந்த ஒருவனின் ரஸீதில் பன்னிரண்டு ரூபாய் நாற்பது காசு என்று இருக்கிறது. இவளிடம் உள்ளதில் பதினைந்து ரூபாய் எழுபது காசு என்று இருக்கிறது. இத்தவறுக்குக் காரணம் ஹேமா, இது பற்றி ஜூனியர் எஞ்சினியர் ராஜசேகரன் பேசும்போது "இன்வாயிஸும் ரெஸிப்டும் டிடிசீப் அக்கவுண்டன்டிடமிருந்து உன் கைக்கு வரும்போது நீ சரியா ஸார்ட் பண்ணவில்லை..! இப்படி ஏதாவது தப்பு இருந்திருந்தால், உடனேயே அவருக்கு அந்த இன்வாயிஸை செர்வ் பண்ணக் கொடுப்பதினால் தானே இந்தத் தகராறு? உம் சரி.. நீ போய் காஷ் கலெக்ஷனைப்பாரு"...[73] என்று சொல்லப்படுகின்ற நிலையில் இவளுடைய தவறுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

பெரும்பாலும் இவர்கள் வேலை பார்க்கும் செய்திகளைவிடப் பாலியியல் உறவு தொடர்பான செய்திகளையே அதிகம் பேசுகின்றனர். “மின் உலகம்” நாவலில் வருகின்ற ஹேமா வேலை பார்க்கும் நிலையைவிட அவளுடைய அழகு மிகுதியாகப் பேசப்படுகிறது. காலை மேக்கப்பின் பௌடரும், மையும் வழுவழுப்பான புதிய சாரியும், சோளியும் எல்லாம் சேர்ந்து அவளிடம் ஒரு அலாதிக் கவர்ச்சியை வாரி இறைத்திருப்பது தெரிகிறது.”[74] என்று அவளது அழகு பேசப்படுகிறது.

பாலியியல் தொடர்பாகப் பேசப்படுகின்ற மூவர் ‘சமர்’ நாவலில் வரும் ரேவதி, துளசி, ‘அனுபவங்கள்’ நாவலில் வரும் விஜயா, வேலை நிறுத்தம் நடைபெறுவதை அறிந்த ரேவதி அசோகனிடம் “நாளைக்குக் கோஷம் போடுவீங்களா” என்கிறாள். “கோஷம் போடாமல் வழி, அழுத குழந்தைகளுக்குத் தானே பால்” என்கிறான் அசோகன். “சார் ரேவதி அழும் குழந்தைக்குக் கூட பால் கொடுப்பதில்லை…பாவம் இங்கே ஆபிஸில் அல்லவா இருக்கிறா…!”[75] என்ற ஓவர்ஸியர் மாணி கூறுகிறார். இங்கு ஆண்களிடத்திலும் வேலை பார்க்கும் ஒரு பெண்ணுக்கு ஏற்படக் கூடிய இக்கட்டான நிலையும், ஆண்களுடைய இழி நிலையும் சுட்டிக் காட்டப்படுகின்றன.

'அனுபவங்கள்' நாவலில் வரும் விஜயா தலைமைக் குமஸ்தா தோமஸால் தவறாகப் பேசப்படுகிறாள். இவள் வேலை பார்ப்பது புனல்புரத்தில், அவள் இருப்பது பத்து மைல் தொலைவில் உள்ள பண்டாரக் கரையில். ஒரு வயதுகூட ஆகாத குழந்தை. எனவே மாலையில் அலுவலகத்தைவிட்டுச் சில நாட்களில் சிக்கிரமே சென்று விடுவாள். இதை வைத்துக் கொண்டு தோமஸ் அன்று இடமாற்றலாகிப் பணியில் அமர்ந்திருக்கும் சந்திரனிடம் “முன்னாலிருந்த எ.இ அவளுக்கு ரொம்பச் சலுகை கொடுத்திருந்தார். அவருக்கும், இவளுக்கும்…”[76] என்று தவறாக அவளைப் பற்றி பேசுகிறான்.

'சமர்' நாவலில் வரும் துளசி பாலியல் தொடர்பான தவறான உறவு செய்பவளாகக் காட்டப்படுகிறாள். “அவள் ஜவுளி மொத்த வியாபாரம் செய்யும் ஒரு சேட்டின் நிரந்தர ஆசை நாயகி”[77] என்று கூறப்படுகிறாள். அவளுடன் பணியாற்றும் ரவி அவளை அடைந்து விட்ட செய்தி நாவலில் இடம்பெறுகிறது. “நேற்றிரவு துளசி எனக்குக் கிடைத்தாள்.”[78]

கீழ் நிலை ஊழியர்களின் செயல்கள் நாவல்களில் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. அடிப்படையில் இவர்கள் ஒருவரை ஒருவர் குறை கூறுபவர்களாகவும், தனி மனித ஒழுக்கமின்மையும், கடமைகளை ஒழுங்காகச் செய்யாமலும். மேலும் கீழ்நிலை ஊழியர்களிடம் பெரும் குறையாகக் காணப்படுவது. 'உறவுகள்', ‘அனுபவங்கள்’, ‘வட்டத்தின் வெளியே' போன்ற புதினங்கள் வாயிலாக இந்நிலை பரவலாகப் பேசப்படுகிறது.

'உறவுகள்' நாவலில் தன் தந்தையின் உடல்நிலை காரணமாக விடுப்பு எடுத்தபின் அலுவலகத்திற்கு வருகிறான் ராஜகோபாலன், அவன் அலுவலகத்திற்கு வந்த பின் தன் மேலதிகாரியைப் பார்த்து விட்டுத் தன் இருப்பிடத்திற்குத் திரும்புகிறான். வந்து அமர்ந்தவுடன் “இங்கு யாரும் சரியா ஆபீஸுக்கு வருவதில்லை, சார், நான் சொன்னால் கேட்பதும் இல்லை”[79] என்று மற்ற ஊழியர்கள் பற்றிக் குறை கூறுகிற நிலையினை கீழ்நிலை ஊழியர் ஒருவரின் மூலம் அறியமுடிகிறது.

'அனுபவங்கள்' நாவலில் தலைமை குமஸ்தா தோமஸ் கீழ் நிலை ஊழியர்களைப் பற்றிக் குறை கூறுகிறான். தட்டச்சாளர் விஜயாவைப் பற்றி ‘ஓவர் டைம் அலவன்ஸ்' கேட்பாள், கொடுக்கக் கூடாது என்று குறை கூறுகிறான்.

**கடமைகளை ஒழுங்காகச் செய்யாமை**

கடமைகளை ஒழுங்காகச் செய்யாதவர்களாக ‘அனுபவங்கள்’ நாவலில் வரும் ஓவர்சீயர், கிருஷ்ணன் நாயர், ராஜப்பன், பெர்ணான்டஸ் முதலியோர் வருகின்றனர். சந்திரன் செயற் பொறியாளரைப் பார்க்கக் கிளம்புகிறான். 'சார் வீட்டுக்குப் போகலாமுன்னு இருக்கேன்' என்று தலையைச் சொரிந்து கொண்டு கிருஷ்ணன் நாயர் கேட்கிறான். சரி சொல்லுங்கள்' என்று சந்திரன் கூறுகிற போது கீழ்நிலை ஊழியர்களான ராஜப்பன், பெர்னாண்டஸ் ஆகியோர் அறையின் உள்ளே நுழைகிறார்கள். “அதுக்கில்லை சார் நாங்க எல்லோரும் வெளியூரைச் சேர்ந்தவங்க…

இந்த ஊரு விலைவாசிக்கு இங்கே குடும்பத்தைக் கூட்டிக் கொண்டு வந்து குடித்தனம் போட முடியாது… இப்பொ இங்கே பெரிசா வேலையொண்ணும் தொடங்கவும் இல்லை… அதனாலே… வாரத்தில் நாங்க மூணுபேரில் யாராவது ஒருவன் தான் இங்கே நிற்பது வழக்கம்..”[80] என்று பதில் கூறுகின்றனர். அவர்கள் கூறுகின்ற பதில்கள் மூலம் கடமைகளை ஒழுங்காகச் செய்ய மறுக்கின்ற கீழ்நிலை ஊழியர்களின் நிலையினை அறிய முடிகிறது.

**சலுகைகளை எதிர்பார்த்தல்**

கீழ்நிலை ஊழியர்களிடம் உள்ள மற்றொரு குறை எப்போதும் சலுகைகளை எதிர்பார்த்தல் ஆகும். இவர்கள் வேலை செய்து கொண்டிருந்தாலும் தங்களுக்கு வேண்டிய சலுகைகளைக் கூறி அதைப் பெற விரும்புபவர்களாகத் திகழ்கின்றனர் இதற்கு ‘வட்டத்தின் வெளியே' நாவலில் வரும் ராமகிருஷ்ணபிள்ளை எடுத்துக் காட்டாகத் திகழ்கிறான்.

“சார் எனக்காக ஈ.டி. கிட்டே பேசனும், என் பையனுக்கு பள்ளிகொண்டபுரத்தில் ஒரு வேலைக்கு ட்ரை பண்ணிக் கொண்டிருக்கேன். அடிக்கடி அஃபிஷிலா போக முன்னாலிருந்த ஈ.டி மார்கள் எல்லாம் சம்மதிச்சிருக்கிறாங்க.. சார் எனக்காக பிலிப்போஸ் சார்கிட்டே சொல்லனும்…”[81] என்று கேட்டுக்கொள்கிறான். இக்கூற்று சலுகைகளை வேண்டி நிற்கும் கீழ்நிலை ஊழியர்களின் இயல்பை விளக்குவதாக அமைகின்றது.

**தனிமனித ஒழுக்கமின்மை**

கீழ்நிலை ஊழியர்கள் அலுவலகத்திற்கு வருகிற போதும் ஒழுக்கமின்மை உடையவராகக் காட்டப்படுகின்றனர். இவர்கள் மின் உலகத்தில் வருகின்ற இன்வாய்ஸ் சர்வர் குட்டன் நாயர், ‘வட்டத்தின் வெளியே' நாவலில் வரும் ஓட்டுநர் நாகப்பன் இவர்கள் இருவரும் மது அருந்துபவர்களாக நாவலில் காட்டப்படுகின்றனர் நாகப்பன் குடித்திருக்கும் செய்தி மட்டுமே பேசப்படுகிறது. ஆனால் குட்டன் நாயர், குடித்துவிட்டுச் சண்டை செய்யும் நிலை காட்டப்படுகின்றது.

'மின் உலகம்' நாவலில் ராஜசேகரன் அலுவலகத்தில் இருக்கும் போது குட்டன் நாயர் இவனிடம் வருகிறான். அவன் வருகின்ற பொழுதே மது அருந்திவிட்டு வருகிறான் என்பதைத் தெரிந்து கொள்கிறான் ராஜசேகரன் “சார்…சார்…நா நாளைக்கு தொட்டு காஷ்வல் லீவு… நாலு நாள் கழிச்சுத் தான் வருவேன். அதுக்குப் பொறவுதான் இன்வாய்ஸ் கொடுக்க என்னால முடியும்..”[82] என்று கூறுகிறான். ராஜசேகரன் அதட்டல் செய்து இன்வாய்ஸை கையில் எடுக்க வைக்கிறான். ஓவர்சீயர் மத்தாயும், பியூன் காசிமும் அவனை இழுத்துக் கொண்டு செல்கிறார்கள்.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் இடம் பெறாமல் வழக்கம் போல் "டிரைவர் நாகப்பனிடமிருந்து சாராய நெடி"[83] வருகின்ற செய்தி மட்டும் இடம் பெறுகின்றது. இவனைப் பற்றி மேலதிகாரி மாணி சொல்லும் போது "அவன் காலம்பர எந்திரிச்ச முகம் கழுவதே கள்ளுத் தண்ணியில் தான்"[84] என்கிறார்.

இவ்வாறு ஆசிரியர் எழுதிய பதினேழு நாவல்களுள் 'பள்ளிகொண்டபுரம்', 'ஃபைல்கள்', 'உறவுகள்', 'சமர்', 'அனுபவங்கள்', 'மின்உலகம்', 'வட்டத்தின் வெளியே' ஆகிய ஏழு நாவல்கள் அரசு அலுவலகத்தைப் பற்றிப் பேசுகின்றன. இதில் 'பள்ளி கொண்டபுரம்', 'உறவுகள்' தவிர பிற ஐந்து நாவல்களும் அலுவலக உலகத்தைக் களமாக்கிப் படைக்கப்பட்டவையாகும். வேறு எந்த எழுத்தாளரும் கையாளாத வகையில் அலுவலகத்தின் சூழல்களை ஆசிரியர் தம் நாவல்களில் அதிக அளவில் கையாண்டுள்ளார்.

மேல்நிலை ஊழியர்கள், தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு தங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்களை அடக்கி ஆள்வதை ஃபைல்கள், 'விட்டத்தின் வெளியே ','மின் உலகம் ','அனுபவங்கள்' நாவல்களின் வாயிலாக அறிய முடிகிறது. நீல பத்மநாபன் அரசு அலுவலக உறவுகள் தொடர்பாக எழுதிய நாவல்களில் வரும் தலைமை மாந்தர்கள் அனைவரும் இடைநிலைஊழியர்களாகவே காணப்படுகின்றனர். பெண்ஊழியர்கள், நாவல்களில் மதிப்பு மிகுந்தவர்களாகவே காட்டப்படாமல் குறைவுடையவர்களாகவே சித்தரிக்கப்பட்டுள்ளனர். கீழ் நிலை ஊழியர்கள் ஒருவரையொருவர் குறை கூறுபவர்களாக சலுகைகள் எதிர்பார்ப்பவர்களாக, கடமையிலிருந்து தவறுபவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

“இலையுதிர் காலம்” நாவலில் முதியோர் பிரச்சினைகளையும், மேலும் சமூகத்தில் முதியோர்களுக்கு நாம் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும் என்பதையும், இறுதியில் ‘தலைமுறைகள்’ நாவலில் சமூகத்தில் பெண்களுக்கு ஏற்படும் திருமண சிக்கலையும் எடுத்துக்காட்டியுள்ளார். இந்நாவலில் வட்டார வழக்கு மொழிநடையாக மாற்றப்பட்டு மண்ணின் மனம் மாறாமல் கதைக் கருவோடுக் குழைந்துள்ளது. ஒரு நாவலில் இருந்து பொதுவாக சமூக செய்திகளை மட்டும் வெறுமனே தனித்து சொல்லிவிட முடியாது. அவை கதை அமைப்பில் பாத்திரம் உருவாக்கத்தில் உரையாடலில் நிகழ்ச்சிகளோடு ஒருங்கிணைந்த பின்னணி வருணனையில் கதைக் கூறலின் நேரடி எடுத்துரைப்பில் என்றவாறு பல பின்னணிகளோடு பிணைந்திருக்க காணப்படுகிறது.

இவ்வாறு நீல பத்மநாபன் புதினங்கள் நடப்பியல் தன்மை மாறாமல் படம் பிடித்துக் காட்டியுள்ளார். மேலும் தலைமுறைகள் என்னும் நாவலின் மனம் மாற்றத்தினை விரும்பும் புதிய சமூகத்தின் பிரதிநிதிகளாகவே, திரவியும், குற்றாலமும் படைக்கப்பட்டிருக்கிறார்கள். புதியதொரு சமூகத்தினை மாற்றி அமைக்கும் மகத்தான பணியில் ஒவ்வொரு படைப்புக் கலைஞனுக்கும் பங்கு உண்டு என்பதனை நீல பத்மநாபன் தன்னுடைய படைப்புக்கள் வாயிலாக நிரூபித்துக் காட்டியுள்ளார்.

**அடிக்குறிப்புக்கள்**

1.பி.வெ.சுசீலா, தமிழ் நாவல்களில் மனித உறவுகள், ப.40

2. செல்வராசன் மா, கந்தகமும் சந்தனமும் தமிழாய்வுத் தொகுதி-2, ப.2

3. பேரா.சு. சண்முகசுந்தரம், நீல பத்மநாபம், ப.18

4. டாக்டர் நா. நளினி தேவி, ராஜம் கிருஷ்ணன் புதினங்களின் சமுதாய மாற்றம்

5. முனைவர் அ. குணசேகரன, தமிழ் நாவல்களில் குடும்பச் சிந்தனைகள, ப.14

6. நீல பத்மநாபன், இலைஉதிர் காலம், ப.4

7. நீல பத்மநாபன், தலைமுறைகள், ப.150

8. நீல பத்மநாபன், பகவதி கோயில் தெரு, ப.89

9. மேலது, ப.88

10. நீல பத்மநாபன், இலைஉதிர் காலம், ப.53

11. கலைக்களஞ்சியம் தொகுதி4, ப.477

12. நா.பிச்சமுத்து, திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும்,ப.213

13. பாஸ்கர் கிஸ்பர்ட், சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள், ப.69

14. இரா. மோகன், மு.வ.வின் நாவல்கள் முன்னுரையிலிருந்து

15. பாக்கியமுத்து, தி. விடுதலைக்குப் பின் தமிழ் நாவல்கள், ப.42

16. புறம், ப.187

17. புறம், ப.182

18.அ. தட்சணாமூர்த்தி, சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள், பக்-193,194

19. நீல பத்மநாபன், தலைமுறைகள், ப.309

20. மேலது, ப.309

21. அகிலன், கதைக்கலை, ப.7

22.வெ. சாமிநாதன், நீல பத்மநாபனின் நாவல்களில் வண்ணங்கள், ப.7

23. குமரித்துறைவன், படைப்பாளிகள் சந்திப்பு சதங்கை ப.46

24. நீல. பத்மநாபன் போதையில் கரைந்தவர்கள், ப.32

25.நா. வானமாமலை, இக்கால இலக்கியம், ப.297

26. தாமரைக்கண்ணன், பகவதி கோயில் தெரு, புத்தக விமர்சனம், தினமலர், ப.5

27. நீல. பத்மநாபன், ஃபைல்கள், பகவதி கோயில் தெரு, ப.80

28. மேலது, ப.85

29. நீல.பத்மநாபன் வட்டத்தின் வெளியே, ப.24

30.மேலது, ப.85

31.மேலது, ப.39

32.மேலது, ப.73

33.மேலது, ப.74

34. நீல.பத்மநாபன், மின் உலகம்,ப.46

35. நீல.பத்மநாபன், “அனுபவங்கள்”யாத்திரை, அனுபவங்கள்,சமர், ப.65

36.மேலது, ப.66

37. நீல. பத்மநாபன், மின் உலகம்,ப.18

38.மேலது, ப.18

39.மேலது, ப.19

40.மேலது,

41. நீல. பத்மநாபன், வட்டாரத்தின் வெளியே, ப.16

42.மேலது, ப. 37

43.மேலது

44.மேலது, ப.38

45.மா. தட்சிணாமூர்த்தி “வட்டாரத்தின் வெளியே”புத்தக விமர்சனம்

46. குருநாதன், பகவதி கோயில் தெரு, ப.24

47. நீல. பத்மநாபன், ஃபைல்கள், பகவதி கோயில் தெரு, ப.81

48. நீல.பத்மநாபன், பள்ளி கொண்ட புரம், ப.131

49. நீல. பத்மநாபன், உறவுகள் ப.367

50.மேலது, ப.368

51. நீல பத்மநாபன், மின் உலகம், ப.90

52. நீல.பத்மநாபன், வட்டத்தின் வெளியே,ப. 59

53. நீல.பத்மநாபன், அனுபவங்கள் யாத்திரை அனுபவங்கள், சமர், ப.115

54.மேலது, பக்-14,15

55. நீல.பத்மநாபன், வட்டத்தின் வெளியே,ப.14

56.மேலது, பக்-14,15

57.நீல.பத்மநாபன்,”அனுபவங்கள்”யாத்திரை, அனுபவங்கள், சமர்,ப.60

58. நீல. பத்மநாபன், வட்டத்தின் வெளியே, ப.133,134

59.மேலது, ப.171

60. நீல பத்மநாபன், ஃபைல்கள், பகவதி கோயில் தெரு, ப.35

61. நீல பத்மநாபன், மின் உலகம், பக்.35,36

62.மேலது, ப.54

63. நீல. பத்மநாபன், வட்டத்தின் வெளியே, ப.21

64. நீல. பத்மநாபன்,” அனுபவங்கள்”, யாத்திரை, அனுபவங்கள், சமர், ப.60

65. நீல. பத்மநாபன், வட்டத்தின் வெளியே, ப.15

66. நீல.பத்மநாபன், பள்ளிகொண்டபுரம்,ப.110

67. நீல.பதபத்மநாபன்,ஃபையில்கள்,பகவதி கோயில் தெரு,ப.92

68. நீல. பத்மநாபன், வட்டத்தின் வெளியே, ப.42

69. நீல.பத்மநாபன்,"சமர்" யாத்திரை, அனுபவங்கள், சமர்,ப.7,8

70.மேலது, ப.3

71.மேலது, ப.14

72.மேலது, ப.33

73. நீல.பத்மநாபன், மின் உலகம்,ப.58

74.மேலது, பக்-52,53

75. நீல.பத்மநாபன்," சமர்"யாத்திரை,அனுபவங்கள் சமர்,ப.4

76. நீல.பத்மநாபன், அனுபவங்கள்,யாத்திரை, அனுபவங்கள், சமர்,ப.61

77.நீல.பத்மநாபன்,"சமர்",யாத்திரை,அனுபவங்கள்,சமர்,ப.11

78.மேலது, ப.37

79. நீல.பத்மநாபன், உறவுகள்,ப.368

80. நீல. பத்மநாபன்,அனுபவங்கள், யாத்திரை, சமர்,ப.63

81. நீல.பத்மநாபன், வட்டத்தின் வெளியே,ப.70

82. நீல.பத்மநாபன், மின் உலகம்,ப.60

83. நீல.பத்மநாபன், வட்டத்தின் வெளியே,ப.164

84.மேலது, ப.83

# இயல் - 2

# நீல பத்மநாபன் புதினங்களில் குடும்பச் சிக்கல்கள்

# இயல் 2

## நீல பத்மநாபன் நாவல்களில் குடும்பச் சிக்கல்கள்

**அறிமுகம்**

மதம், மொழி, இனம், நாடு, பண்பாடு பழக்க வழக்கங்கள் என பல்வேறு பிரிவினைகள் சமூகத்தில் இருப்பினும் குடும்பம் என்னும் ஒற்றைச் சொல்லுக்குள் அனைவரையும் ஒன்றிணைக்கின்றது.

மனித உறவு முறைகளில் இணக்கமும் பிணக்கமும் தோன்றியும் மறைந்தும் இன்பமும் துன்பமும் ஒன்றாகவே பிறக்கின்றன.

மனித மனதில் தோன்றக்கூடிய குண இயல்புகளின் உணர்வில் உருவாகும் மாற்றங்கள் பல்வேறு சிக்கல்களை உருவாக்குகின்றன.

**குடும்பம் விளக்கம்**

"குடும்பம் என்ற சொல்லிற்கு 'உறவு' என்றும், ஒரு குடியில் உள்ளார், மனைவி, வீடு என்றும் அகரமுதலிகள் பொருளுரைக்கின்றன."[1]

குடும்பத்திற்கு வெளியே காணும் மனிதர்களோடு ஏற்படக்கூடிய உறவுமுறைகள் சமுதாயத் தொடர்பாகிறது. மனிதர்கள் தங்களுடைய குடும்ப உறுப்பினர்களோடு கொள்ளும் உறவு குடும்ப அமைப்பாகிறது. எனவேதான் "குடும்பம் என்பது எல்லா சமுதாயங்களிலும் உள்ள அடிப்படையான அமைப்பு, சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளுக்கும் குடும்பம் அடிப்படையானது. சமுதாய நடவடிக்கைகளுக்கு சட்டதிட்டங்களை ஏற்படுத்தி அவைகளைப் பின்பற்றச் செய்கின்றது குடும்பமே"[2] என்ற நிலை சமுதாயத்திற்கும், குடும்பத்திற்கும் உள்ள உறவை தெளிவுப்படுத்துகிறது.

தமிழ் நாவல்கள் குடும்பச் சித்தரிப்புகளை மிகுதியாகக் கொண்டிருந்ததால் நாவல்களை வகைப்படுத்துவோர் குடும்ப நாவல் என்ற தனியொரு வகையினைச் சுட்டுகின்றனர்.

'குடும்பம்' நாவலுக்கு ஏற்ற கருவாக விளங்குவதால் நாவலில் குடும்பப் பதிவுகள் மிகுதியாக இடம் பெற்றன. தமிழின் முதல் நாவலான வேதநாயகரின் பிரதாப முதலியார் சரித்திரம் முன்னுதாரணமாகும். அடுத்தகட்டமாக, ராஜம் அய்யர், அ. மாதவைய்யா போன்றோரின் நாவல்களில் குடும்பம் சார்ந்த நாவல்கள் சிறப்பு பெற்றன. ஒரு நூற்றாண்டைக் கடந்த வரலாற்று வளர்ச்சியில் குடும்ப அமைப்புக் குறித்த பதிவுகளைக் கொண்டுள்ள நாவல்கள் பெரும்பாலும் காலச்சூழலுக்கு ஏற்ற காரணிகளோடும் பின்னணிகளோடும் தமிழர்தம் குடும்பம் வாழ்வியலை உலகுக்குக் காட்டுவனாக விளங்குகின்றன.

குடும்பம் என்ற வடிவமே உலகச் சமூகமாக இயங்குகிறது. குடும்ப அமைப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டக் காலம் சங்க காலமாகும். தொன்மைக்காலத்திலேயே மேம்பட்ட குடும்ப அமைப்பை உருவாக்கி இருந்த தமிழ்ப் பண்பாட்டின் செழுமை, சங்க இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுகிறது.

நீல. பத்மநாபனுடைய பெரும்பாலான நாவல்களிலும் குடும்பச் சிக்கல்களைப் பற்றி பேசுகின்றன. கணவன் மனைவி உறவில் பழங்கால பண்பாட்டின் எச்சங்களைக் காண முடிகின்றது. தாயுடன் மகன் கொண்டிருக்கின்ற உறவைப் பற்றியும் எடுத்துரைக்கவில்லை. மாமனார் மருமகன் உறவினை இனிய உறவாக ஆசிரியர் காட்டவில்லை. தந்தை மகன் உறவு முறையினை புனிதமாகவே அவருடைய நாவல்களில் படைத்துள்ளார்.

சமூகம் மற்றும் பொருளாதார அளவில் மிகவும் அடிப்படையான அலகு குடும்பம். குறிப்பாகக் குடும்பம் என்பது திருமணத்தின் மூலம் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே நிலையான நெருக்கமான இணைப்பினால், அவிழ்க்க முடியாதபடி பிணைக்கப்பட்ட ஒன்றாக இருக்கின்றது. அவர்களுடைய உறவுகளை ஒரு குறிப்பிட்ட திட்டவட்டமான வழியில் ஒழுங்குபடுத்துகின்றது. இப்பிணைப்பு இருவருக்கும் இடையே ஒரு விதமான ஈடுபாட்டையும் பொதுநல உணர்வினையும் கணவன் மனைவி என்ற ஆத்மீக இரத்த உறவையுமே முதன்மையாக அமைக்கின்றன.

குடும்ப உறுப்பினர்களிடையே காணப்படுகின்ற நெருக்கமும் பாசமும் சமூக உறவு முறைகளில் இணைவினை ஏற்படுத்த தூண்டுகோலாக குடும்பம் அமைகின்றன. குடும்பம் நிறுவன மதிப்பிலும் சமூக வாழ்க்கையிலும் செலுத்தும் ஆதிக்கத்திலும் தனக்கு நிகராக எந்தக் குழுவையும் நிறுவனத்தையும் பெறாது சிறப்புற்று விளங்குவதனை நீல. பத்மநாபனின் நாவல்களில் வெளிப்படுகின்றன.

நீல. பத்மநாபனின் புதினங்களில் குடும்பம் என்கிற கட்டமைப்பும், குடும்ப உறுப்பினர்களின் செயல்பாடுகளையும், குடும்பம் சமூகத்தால் எவ்வாறு பாதிக்கப்படுகிறது? குடும்ப உறுப்பினர்களிடையே ஏற்படும் ஒற்றுமை, வேற்றுமைகள், உறவுகளின் நிலைப்பாடு, வேற்றுமைகள் உறவுகளின் நிலைப்பாடு, அவர்களின் வாழ்வின் அகம், புறம், ஆகியவற்றை ஆய்வதாக நீல. பத்மநாபனின் குடும்பச் சிக்கல்கள் ஆராய்கின்றது.

**குடும்பம் வரையறை**

குடும்பம் சமுதாய அமைப்பின் உயிர்நாடியாக விளங்குகின்றது. சமூக அமைப்பில் தொன்மையான வடிவம் குடும்பமே ஆகும். இக்குடும்பத்திலிருந்தே

சமுதாயத்தின் இயக்கம் தொடர்கின்றன. பல குடும்பங்களின் இணைப்பு சமூகமாகும். சமுதாயத்தின் ஒட்டுமொத்த அமைப்பிற்கு குடும்ப அமைப்பே மூல அலகாகத் திகழ்கின்றது.

ஆண், பெண் தங்களுடைய வாழ்க்கையைத் தொடங்குவதும் அவர்களுக்கு உதவியாக சுற்றமும், நட்பும், பிற உறவினர்களும் இயங்குவதுமான ஒரு அமைப்பு நிலையே குடும்பம். இவ்வமைப்பு சமூகத்தோடு தனி மனிதனின் ஆசைகளை, தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டே தோன்றியிருக்கும்.

"குடும்பம் என்ற சொல்லுக்கு உறவு, குலம், குடி இனத்தார், ஒரு குடியில் உள்ளார், மனைவி, வீடு, சம்சாரம், உறவினர்"[3] என அகராதி பொருளுரைக்கின்றது. மனிதர்களுக்கு பாதுகாப்பையும், நம்பிக்கையையும் வெவ்வேறு பழக்க வழக்கங்களைக் கொண்ட ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து தங்களுக்கான பொதுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்வது குடும்பத்தின் மூலம் சாத்தியப்படுகின்றது. ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதும் குழந்தைகளை சமூகத்திற்கு உற்றவர்களாக மாற்றுவதும் பரம்பரையாக குடும்பத்தின் பெருமைகளுக்கு கேடு விளைவிக்காமலும், மேலும் பெருமைச் சேர்ப்பதும் குடும்பத்தின் பணிகளாகக் கூறலாம்.

"பலர் கூட்டமாகச் சேர்ந்து வாழும் சமுதாய இயல்பு மனிதனுக்கு மட்டுமே உரியதன்று. மனிதனின் நேர் மூதாதையர்களான மேல்நிலை உயர் பாலூட்டிகளிடமும் (higher primates) இப்பண்பு சற்றுக் குறைவாகக் காணப்படுகிறது. கூட்டமாகச் சேர்ந்து வாழ வேண்டுமென்ற எண்ணம் வாழ்வின் அடிப்படைத் தேவைகளைத் தன்னந்தனியாக ஈட்டமுடியாது என்ற நிலை ஏற்பட்டபோது தோன்றியது இக்கூட்டம் என்னும் அமைப்பில் மக்கள் பலவகைத் தேவைகளை ஏற்படுத்திக் கொண்டனர்.

அவற்றுள் தன் இனத்தை நிலை நிறுத்த இனப்பெருக்கம் செய்ய முற்பட்டமை முதல் வகைப் பிணைப்பிற்கு வழிகோலியது. திருமணத்தால் உண்டான குழந்தை புதிய உறுப்பினராகக் குடும்பத்தில் சேர்ந்தால் அது மூன்றாவது வகையான பிணைப்பிற்கு வழிகோலியது. குடும்ப உறுப்பினர்கள் பொருள் ஈட்டும் பொருட்டு மற்றவர்களோடு தொடர்பு கொண்டமை பிற பிணைப்புகளுக்கு வழிகோலியது. இவ்வனைத்துப் பிணைப்புகளும் ஒன்றிணைந்து 'உறவு முறை' என்னும் அமைப்பாக மக்களிடம் செயல்படுகிறது. ஆக, உறவின் தொடக்கம் ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து குடும்பமாக வாழ முற்படும்போதே தொடங்குகிறது என்று உறவின் தொடக்கம் பற்றி மொழிகிறார் பக்தவச்சல பாரதி."[4]

**சமூகத்தில் குடும்பத்தின் பங்கு**

"சங்க இலக்கியத்தில் முதல்நிலை உறவினர்களை இனங்கான முடிகிறது. இரண்டாம் நிலை உறவினர்கள் மிகச் சிலரே காணப்படுகின்றனர். தாத்தா, பாட்டி, பேரன், பேத்தி, அம்மா, அப்பா ஆகியோருடன் வாழக்கூடிய விரிந்த குடும்ப அமைப்பு சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. தாத்தா, பாட்டி, பேரன், பேத்தி ஆகிய உறவுப் பெயர்களைச் சங்க இலக்கியங்களை மிகுதியாகக் காண முடியவில்லை. தலைவன் தலைவி இருவரும் உடன் போய் கணவன் மனைவியாக இணைந்து கணவனின் தந்தையகத்தில் வாழும் நேர்வழி முதல்நிலை உறவினர்களுக்கு எவ்வாறெல்லாம் முதல்நிலை உறவினர்களாக அமைவார்களோ அவர்களே இரண்டாம் நிலை உறவினர்கள் விரிந்த குடும்ப அமைப்புப் பரவலாகக் காணப்படுகிறது. இவர்கள் குழந்தைகளைப் பெற்று வாழும் முழுத்தனிக் குடும்ப அமைப்பும் பரவலாக காணப்படுகிறது. அயலகத்தில் வாழும் இவர்களைச் செவிலித்தாய் சென்று பார்த்து வந்து நற்றாய்க்கு உரைக்கும் குறிப்புகள் உள்ளன."[5]

குடும்பம் சமுதாயத்தின் இன்றியமையாத உறுப்பாக விளங்குவதற்குப் பின்வரும் காரணங்கள் அமைகின்றன. இல்லையெனில், தாய் தந்தையரைத் தவிர வேறு எந்த நிறுவனத்தாலும் அன்பு ஆதரவினையும் முழுமையாகக் கொடுக்க இயலாது.

"நன்னடத்தை, நற்குணம் இவற்றைப் பெறக் குடும்ப என்றும் நிறுவனம் உதவுகிறது. இல்லையேல் மனிதன் ஓரளவிற்கு விலங்குகளைப் போல் வாழத் துவங்க நேரிடும்."[6]

**குடும்ப அமைப்பு முறை**

குடும்பம் என்ற அமைப்பு நீல. பத்மநாபன் புதினங்களில் இன்றியமையாப் பங்கு வகிக்கிறது. நீல. பத்மநாபன் தம் புதினங்களின் வாயிலாக தனி மனிதனையும் குடும்பத்தையும் பாதிக்கும் கூறுகள், பெண்ணின் அகச்சிக்கல்கள், தலைமுறையாகத் தொடரும் உறவுகள் குடும்பத்தில் பெண் எதிர்கொள்ளும் பொருளாதாரச் சிக்கல்கள், ஆண் எதிர்கொள்ளும் சிக்கல்கள், குடும்ப வாழ்வும் தொழிலும் சமூகப் பாகுபாடும், பொருளாதார பின்னடைவும் போன்ற பலவிதமான சிக்கல்களைப் பற்றி அவர் எடுத்துரைக்கின்றது.

**கணவன் மனைவி உறவு**

ஆயிரமாயிரம் சிக்கல்களை உள்ளீடாகக் கொண்டு புற்றீசலாகப் புறப்படும் உறவு கணவன் மனைவி உறவாகும். மனைவி என்பவள் சில ஒழுக்கங்களையும், கணவனும் சில ஒழுக்கங்களையும், கொண்டிருக்க வேண்டும் என்னும் மனநிலையை மையக்கருசிக்கலின் களமாகிறது. "கணவன் மனைவி இருவரும் ஒருவரையொருவர் சரிவர உணராமலையே இல்வாழ்வு சீர்கெடக் காரணம்"[7] என்பர். ஒருவரோடு ஒருவர் இணைவதும், பிரிவதும் அவரவர் வழியின் மூலம் உருவாகிறது. அவரவரின்

எண்ணங்கள், செயல்கள், ஆசைகள், சினம் முதலியன காரணனிகளாய் அமைகின்றன. இவ்வுறவு நிலை சிக்கலுக்கான நிலை, சிக்கல் இல்லாத நிலையென இரண்டாகப் பகுத்துக் காணலாம்.

சிக்கலுக்கான நிலை என்னும் பகுப்பு முறை நீல. பத்மநாபனின் நாவல்களில் பெரும்பாலும் காணப்படுகின்றது. நீல. பத்மநாபன் புதினங்கள் வாயிலாக சிக்கல் இல்லாத கணவன் - மனைவி உறவே இல்லை. நீண்ட ஆண்டுகள் உடன்வாழ்வதாலும் குறிப்பிட்ட வயதிற்கு மேல் இவ்வுறவு தொடங்குவதாலும், மனம், பொருளாதாரம், கல்வி, அறிவு இவற்றிடையே வேறுபாடுகள் இருப்பதாலும் சிக்கல்கள் உருவாகின்றன. கணவன் - மனைவி உறவில் தங்களது குடும்ப அக அமைப்பிற்குள்ளே அடங்கி விடுமானால், சிக்கல்களால் பிளவேற்பட வழி இல்லை. இங்குச் சிக்கல்களால் கணவன் மனைவி உறவுகளில் விரிசல் ஏற்படாமல் காக்கப்படுகின்றன. இருவரும் இறுதிவரை பிரியாமல் வாழ்க்கையை நடத்துவது முக்கியக் கூறாகும். ‘தலைமுறைகள்’ நாவலில் வரும் குட்டியம்மை - நாகருப்பிள்ளை, சரளா, ‘மின் உலகம்’ நாவலில் வரும் ராஜசேகரன் மாலதி, முறிவுகளில் வரும் விசுவம் - விசாலம், ‘பகவதிகோயில் தெரு’ நாவலில் வரும் ரங்கன்- முத்தம்மாள் போன்றவர்கள் குடும்ப சிக்கல்களால் பிளவின்மை அமைப்பிற்குள் வருபவர்களாவர். கணவன் மனைவி இருவரும் வெவ்வேறான சிக்கல்களால் பாதிக்கப்பட்டவர்கள், இருப்பினும், ஒருவரை விட்டு ஒருவர் விலகாமல் இணைந்தே வாழ்கிறார்கள். இவர்களது பிரச்சனைகளைத் ‘தலைமுறைகள்’ புதினம் வாயிலாக நீல. பத்மநாபன் வெளிக்காட்டுகிறார்.

**பொருளாதாரச் சிக்கல்கள்**

‘குடும்பம்’ என்ற வண்டி நன்கு ஓடப் ‘பணம்’ என்ற அச்சாணி தேவைப்படுகிறது. ‘தலைமுறைகள்’ என்ற நாவலில் துணைமாந்தராக வரும் நாகருப்பிள்ளை

குட்டியம்மையின் குடும்பம் இதற்குச் சான்றாகிறது. இவர்களது முதல் மகள் உண்ணாமலையால் எவ்விதச் சிக்கலும் இல்லை. இரண்டாவது மகள் நாகம்மைக்கு ஆடம்பரமாகத் திருமணம் முடித்தும் பொய்யான காரணங்களால் பிறந்த வீட்டிற்கு திரும்பி வந்து விடுகிறாள்.

தம் மகள் வாழாமல் நிற்கும் நிலை சிக்கலின் களமாகக் கருதப்பட்டாலும் பெருமளவில் சிக்கலாக மாற்றம் பெறவில்லை. அவளது திருமணத்தை முன்னிட்டு பொருளாதார நிலை சீர்குலைவு சிக்கலின் நிலைப்பாடாகிறது. தன் மகன் திரவியை அழைத்து அடைக்கோழி ஆறுமுகத்திடம் தன் நிலத்தில் விதைப்பதற்காக நாற்று வாங்கி வரச் சொல்லி அனுப்புகிறார். அப்பொழுது அவரது குட்டியம்மை தன்மகள் உண்ணாமலையின் குழந்தைக்கு ஒரு வருடம் ஆகிவிட்டதால், அவனுக்குச் செய்ய வேண்டிய முறைகளைக் கூறுகிறாள். இதற்கு பொருளாதாரத்தை மையமாக வைத்துச் சிக்கல் எழுந்து சண்டையில் முடிந்து பின் கூடவைக்கிறது. “ஒரு வயசு தெகையிதுனாலே புள்ளைக் கழுத்துக்குச் செயினோ, இடுப்புக்கு அரைஞானமோ நாம செய்து போட வேண்டாமா? இங்கேயிருந்து போணுமின்னா எனக்கு உடுக்க நல்ல கண்டாங்கி கூட இல்லை- எல்லாம் பீத்தை……! கிளாத்தாட்டு ஒண்ணுங்கூட என்கிட்ட இல்ல”[8] என்று குட்டியம்மை கூறுகிறாள். நாகருப்பிள்ளை தனது பொருளாதார நெருக்கடிகளை எடுத்துக் கூறி மனைவியின் கருத்துக்களை மனைவியினுடைய உறவினர்களின் உதவி தனக்கு இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி பேசுகிறார். “ஒனக்கதள்ளை தகப்பன் தம்பி ஒருத்தராவது இங்கே எனக்கு சாகாயத்துக்குண்டா? எல்லாத்துக்கும் நா ஒருத்தன் தானே சம்பாதிக்கணும்…? சொம்மெடுத்த மொதலா இங்கே கெடக்க வாரிக்கோரி செலவாக்க?”[9] என்ற சொற்றொடர் கணவன் மனைவி இருவருக்கும் இடையே சண்டை ஏற்பட காரணமாகின்றது.

‘தலைமுறைகள்’ என்னும் நாவலில் கணவன் மனைவி இருவருமிடையே பொருளாதாரச் சிக்கல் பிளவு ஏற்பட நிலைக்கலமாக அமைகின்றது. பொருளாதார நிலை அதன் மூலமாக உருவாகிய சண்டை என்றாலும் இரு விதமான நிலைகளை நுட்பமாக ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார். அவை ஒன்று கணவனிடம் எவை, எப்போது, எப்படிக் கேட்பது என்பதை உணராத மனைவியின் அறியாமை; மற்றொன்று கணவன் தன் குறைகளை மறந்து மனைவி வீட்டாரை மையப்படுத்தி ஏற்றிக் கூறும் நிலையானது குடும்பச் சண்டை உச்சகட்டம் அடைவதற்கு ஆயுதங்களாக அமைகின்றன. குட்டியம்மை நாற்றைக் கடன் வாங்கி வரச் சொல்லும் நிலையில் செலவினங்களைக் கூறாமல் இருந்திருக்கலாம். நாகருப்பிள்ளை தம் வருமானத்தைப் பெருக்க வழியில்லாமல் தந்தை, உடன்பிறப்புகள், உதவி புரியும் தன்னுடைய மன எண்ணத்தினை கூறி இருக்க வேண்டாம். மனைவியின் அறியாமை கணவனின் மற்றொரு தன்மைக்குக் காரணமாகி விடுகிறது.

**உறவு முறைகளில் எழும் சிக்கல்**

மனைவியினுடைய தாய், தந்தை, உடன்பிறப்பு இவர்களில் ஒருவரோ அல்லது அனைவருமே குடும்பத்தில் சிக்கல்களைத் தோற்றுவிக்கிறார்கள். இச்சிக்கல் கணவன் மனைவியினுடைய சச்சரவு எழக் காரணமாக அமைகின்றன. இவ்வாறாக எழும் சிக்கல்கள் மனைவி இல்லத்தோரால் உருவாகும் சிக்கல்களாகும். நீல. பத்மநாபன் நாவல்களில் சித்தரிக்கப்படும் தனிக் குடும்பங்களில் பெரும்பாலும் மாமனார் மூலமாகவே கணவன் மனைவி இருவருக்கும் இடையில் சிக்கல் உருவாகிறது. இவ்வுருவாக்கம் கணவன் மனைவியினுடைய உள்ள அன்பை வெகுவாகப் பாதிக்கின்றது. நீல. பத்மநாபனின் ‘உறவுகள்’ நாவலில் வரும் ராஜகோபாலன் சரளா இதற்குத் தக்க சான்றுகளாவர். இவர்களது திருமணம் உறுதி செய்யும் விழாவில் தம்

மகளுக்குச் சீதனமாக வீடும் நிலமும் தருவதாக உறுதி அளிக்கின்றார். மாமனார் டி.ஏ.விக்னேஸ்வரன் பிள்ளை, வீடு தருவதில் மருமகன் ஏமாற்றப்படுகிறான். இதுவே சிக்கலுக்குக் காரணமாக அமைகின்றன. சிக்கல் தீர்த்து சுமூகமாய்த் திரும்பும் வேளையில் தம் புதுமனை புகுவிழாவிற்கு, சரளாவின் பெற்றோர், அண்ணன் குடும்பம், தங்கைகள் குடும்பத்தினர் அனைவரையும் நேரடியாக சென்று அழைத்தும் அவர்கள் எவரும் விழாவிற்கு வரவில்லை. சரளா அவர்களை அழைக்கச் செல்கிறாள் முகூர்த்த நேரம் முடிந்து விடுகிறது. இவ்வேளையில் தம் மனதை ராஜகோபாலன் பக்குவப்படுத்திக் கொள்கிறான். எனினும் சரளாவின் தங்கையின் கணவன் விழாவிற்கு வந்தும் உணவு உண்ணாமல் செல்லுதல், அவர் மன வருத்தத்தினை ஏற்படுத்துகின்றது. மருத்துவமனைக்குப் போக வேண்டும் என மாமனார் மறுமொழி உரைக்கிறார். ராஜகோபாலன் தன்னை மதிக்காதவர்களைத் தானும் மதிப்பதில்லை என்ற முடிவிற்கு வருகிறான். இந்நிலையில் சரளாவை அவளது குடும்பத்தை சேர்ந்தவர்களுடன் அவள் சந்திப்பதற்குத் தடை விதிக்கின்றான். தடையை மீறி ஒரு நாள் தன் அம்மாவை பார்க்கச் சென்று விடுகிறாள். இங்கு மறுபடியும் சிக்கல் உருவாகின்றது.

ராஜகோபாலன் சரளா வாழ்வில் மூன்று முறை சிக்கலுக்கு காரணமாக அமைகின்றன. மூன்று சிக்கல்களிலும் பின்னணியாகத் திகழ்பவர் சரளாவின் குடும்பத்தார்களே ஆவர். வரதட்சணை சிக்கல், புதுமனை புகு விழாவில் எழுந்தச் சிக்கல், இரண்டு நாவலின் நிகழ்ச்சிகளாகவே அமைந்து சற்று விளக்கமாகக் கூறப்படுகிறது. ராஜகோபாலன் - சரளா தொடர்பான சண்டைகள் குறைவாகவும், மாமனருடன் சண்டையிடுவதுதான் அதிகமாக காட்டப்பட்டுள்ளது. மூன்றாவதாக வரும் சிக்கலில் சரளா தன் கணவரிடம் சொல்லாமல் அம்மாவை பார்க்கச் செல்லும் நிலை தான் இவர்களது மன வாழ்வில் கடுமையான சூழலை தோற்றுவிக்கிறது.

இருவரும் சண்டையிடுகின்ற சூழல்தான் நாவலில் அதிக அளவில் இடம் பெறுகிறது. நாவலில் இதுவரை வருகின்ற ராஜகோபாலன் வேறு என்பதை உணர வைக்கும் இடமாக இக்களம் அமைகிறது.

சரளா இவனிடம் "என் அம்மாவைப் போய்ப் பார்த்து ரொம்ப நாளாச்சு போய் பார்த்துவிட்டு வரட்டுமா?"[10] என்று கேட்கிறாள். அதற்கு ராஜகோபாலன் "நீ அங்கே போனால் குழந்தைகள் படிக்க மாட்டாங்க... அடுத்த வாரம் ஆகட்டும்"[11] என்று கூறிவிட்டு புனல்புரத்துக்குச் சென்று விடுகிறான். அலுவலகத்தில் சென்று வேலை பார்க்கிற போது நாம் சொல்லையும் மீறி சரளா அவள் அம்மாவை பார்க்க சென்றிருப்பாளோ என மனதில் சந்தேகம் தோன்ற விடுமுறை எழுதி வைத்துவிட்டு வீட்டிற்கு வருகிறான். சரளா வீட்டில் இல்லை அவள் யாரிடமும் சொல்லாமல் அவளா அம்மாவைப் பார்க்கச் சென்று விடுகிறாள். சரளா அம்மாவை பார்த்துவிட்டு வீட்டிற்கு வந்தவுடன் வேலைக்காரி தங்கம்மாவின் மூலம் கணவன் வந்ததை அறிகிறாள். பூட்டியிருக்கும் கதவை திறக்கச் சொல்லுகிறாள். பிறகு பின்வருமாறு அவர்கள் சண்டை நடைபெறுகிறது.

"கதவை திறக்கச் சொல்ல உனக்கு வெட்கமில்லே.... எவனைப் பார்க்கப் போயிருந்தே?"

"நான் காலம்பர சொன்னேன் எங்க வீட்டுக்கு போகணும்னு"

நீ போகட்டுமான்னு கேட்டதுக்கு குழந்தைகள் பரிச்சை முடிஞ்சு போனா போதுமான அல்லவா நான் சொன்னேன்.

அம்மா என்னைப் பார்க்கணுமுன்னு வீட்டுக்கு வரச் சொல்லி அனுப்பி இருக்கிறாள். அதுதான் போனேன்"[12] என்கிறாள் சரளா.

குற்றம் செய்ததுமில்லே உனக்கா இப்போ ஆங்காரம் அம்மா வீட்டுக்குப் போனேன்னா அதை தங்கம்மாவிடமும் குழந்தைகளிடமும் சொல்லிவிட்டு போனால் என்ன! ஏன் இப்படி கள்ளக்களவில் போகணும்....?"[13] என்கிறார் ராஜகோபாலன்.

"நான் தங்கம்மாவிடம் சொல்லிவிட்டுத்தான் போனேன், எல்லோரையும் போல் அம்மாவைப் பார்க்க அடிக்கடி நான் போய்கிட்டா இருக்கேன்"[14] என்று சரளா கூறியவுடன் ராஜகோபாலன் தம் தமைக்கைகளை இவள் ஊடகமாக தாக்குகிறாள் என்பதை அறிந்து அவள் மேல் பாய்கிறான். என்னைக் கொல்லுங்கோ கொல்லுங்கோ .... என்று சரளா பாய்ந்து வருகிறாள்.

ராஜகோபாலன் சரளாவை அடிக்கிறான். பின்னால் தாலியை அறுத்து மணலில் வீசி எறிகின்றான்.

இந்நிலையில் சரளா "இனி உங்க அம்மாக்காரி கிட்டயே போய் சேர்ந்திடுங்க"[15] என்கிறாள். "அதற்கு ராஜகோபாலன் என் அம்மாவை இங்கே இழக்காதே என்று கூறி மறுபடியும் கையை தூக்குகிறார். அவள் நீங்க கட்டிய தாலியை அறுத்தெரிஞ்சாச்சு. இனி உங்களுக்கு என்னை தொட உரிமை கிடையாது"[16] என்கிறாள்.

பிறகு சரளா தன் தந்தையை அழைத்துக் கொண்டு வருகிறாள். மாமனார் மருமகனுடன் சண்டையிழுக்கிறார். இருவருக்கும் இடையில் நடக்கும் நீண்ட வாக்குவாதம் நாவலில் காட்டப்படுகிறது.

சண்டை வேறொரு பாதையை நோக்கிச் செல்கிறது. அது தொடர்ந்திருக்குமானால் நிலைமை வேறுவிதமான முடிவைப் பெற்றிருக்க முடியும். அப்படி நிகழ்ந்து விடாதபடி தடுத்தது சரளாவின் தலைவலியே. சரளாவிற்கு சண்டையுடன் வந்த தலைவலி மூச்சுப்பேச்சு இல்லாமல் செய்து விடுகிறது.

ராஜகோபாலன் அவனது மாமனார் இருவரும் சரளாவை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்கின்றார். மருத்துவமனையில் இருந்து உடல்நிலைத் தேறி திரும்பி வந்த பிறகு நாலு பவுன் கூட இன்னும் நாலு பவுன் சேர்த்து எட்டு பவுன் தாலி வாங்கிக்கிறான் ராஜகோபாலன்.

'உறவுகள்' நாவலில் நிகழ்வு மட்டுமே அதிகம் விளக்கப்பட்டிருக்கிறது. நாவலை படித்துக் கொண்டு வருகின்ற வாசகனுக்கு ராஜகோபாலனை மாறுபட்ட குணநிலையைக் கண்ட அவனை தவறாக எண்ண வழிவகை செய்கின்றது.

"இவ்வளவு குரூரமான ஒரு ஆற்றலுடன் ஒரு பாத்திரம் சட்டை உரிக்கப்படவில்லை."[17] என்று ராஜகோபாலனை நகுலன் விமர்சிக்கிறார். இதனை அடிப்படையாக வைத்துக் கொண்டு "மனைவியின் தாலியை அருத்தெறிந்து மனிதாபிமானமே இல்லாத முறையில் அவரை தகாத வார்த்தைகளில் ஏசுகின்ற குரூரத்தனம் அந்த பாத்திரத்திற்கு மித மிஞ்சி தாக்கப்படுகிறது"[18] என்கிறார் கல்பனாதாசன். ஆனால் 'உறவுகள்' நாவலை விமர்சனம் செய்யும் தி.க. சிவசங்கரன் "இதை குரூரமான ஆற்றல் என்று கூறுவது தவறு சத்தியத்தின் ஆற்றல் என்று கூறுவதே பொருந்தும்"[19] என்கிறார். சற்று ஆழமாக பார்க்கின்ற பொழுது மனைவியின் தேவையற்ற பொய், அதன் மூலம் அவள் நடந்து கொள்கின்ற விதம், இவனை இந்நிலையை அடையச் செய்கிறது என்பதை உணர வைக்கிறது. தாம் புதுமனை புகுவிழாவில் சரளாவின் அழைப்பால் வந்த அவள் தங்கையின் கணவன் சிவராமன் விழாவில் கலந்து கொள்ளாமல் சென்றதற்காக சிவராமனின் மகன் பிறந்தநாள் விழாவிற்கு ராஜகோபாலன் செல்லவில்லை. ஆனால் மனைவி சரளாவை அனுப்புகிறான். சிவராமன் அவமானப்படுத்திய நிலையிலும் சரளாவிற்குத் தடை

விதிக்காத இவன் கொதித்து எழுகிறான் என்றால் தனக்குத் தெரியாமல் நடந்த செயலை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

சரளா உண்மையைக் கூறி மன்னிப்புக் கேட்டிருப்பாளாயின் சச்சரவு வலுவடையாமல் இருந்திருக்கலாம். சரளாவின் பொறுப்பற்ற செயலும் குதர்க்கமான பேச்சும் சிக்கல் தலைதூக்க காரணமாகின்றன.

ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போகாத தன்மை சிறு நெருப்பையும் ஊதி ஊதிப் பெரிதாக்கிய தன்மை பேசத் தெரியாமல் பெற்றவர் அதனை மேலும் வளர்க்கும் தன்மை அறிவின் துணையில்லாமல் உணர்வின் துணையைக் கைக்கொண்ட நிலைமை போன்ற கூறுகளை நீல. பத்மநாபன் நாவலில் காணமுடிகிறது.

**உடல்நிலை பாதிப்பால் வரும் சிக்கல்கள்**

கணவன் அல்லது மனைவி உடல்நிலைப் பாதிக்கப்படுவதன் மூலமாக எழும் சிக்கல் மணவாழ்வில் பெரிய சிக்கலாக கருதப்பட்டாலும் இருவரில் ஒருவரின் தியாக மனப்பான்மையினால் சச்சரவு சுமூகமாகின்றது.

'உறவுகள்' நாவலில் வரும் கணேசன் - இந்திரா, 'பகவதிகோயில் தெரு' நாவலில் வரும் ரங்கன் முத்தம்மாள், 'பள்ளிகொண்ட புரம்' நாவலில் வரும் மகாதேவய்யர் குடும்பம், வைரவன் பிள்ளையின் மகன் மருமகன் ஆகியோர் எடுத்துக்காட்டுகளாக அமைகின்றனர்.

'உறவுகள்' நாவலில் வரும் கணேசன் சிறுநீரகக் (கிட்னி) கோளாறினால் பாதிக்கப்பட்டவன். 'பகவதிகோயில் தெரு' நாவலில் முத்தம்மாள் மனநோயால்

பாதிக்கப்பட்டவள். கணேசன் உடல் நிலையைக் காரணம் காட்டி அவனது மனைவி இந்திரா அவனை விட்டுப் பிரிந்து விடவில்லை.

மனைவியின் உடல்நிலையைக் காரணம் கூறி ரங்கன் அவளை விட்டு பிரிந்து விடவில்லை. பள்ளிக்கொண்டபுரம் நாவலில் மகாதேவய்யர் தனது மனைவி மூளைக் கோளாறு நோயுற்று இருந்தாலும் அவளுடன் அன்பாக குடும்பம் நடத்துகிறான். கோபாலப்பிள்ளை குடிகாரனாக இருந்தாலும் அவன் மனைவி அவனை விட்டுப் பிரியவில்லை. கணவன் மனைவி உறவு புனிதம் என்று இருசாரரும் கருதி விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையினால் ஏற்றுக்கொண்டு பிளவு இல்லாமல் வாழ வேண்டும் என்பதனை நீல. பத்மநாபன் நாவலின் வாயிலாக அறிய முடிகின்றது.

'உறவுகள்' நாவலில் வரும் கணேசன் இரயில்வேயில் குமஸ்தாவாகப் பணிபுரிகின்றான். அவன் முப்பத்தைந்து வயது வரை திருமணம் செய்து கொள்ளவில்லை. பிறகு தன்னுடன் பணிபுரியும் இந்திராவைக் காதல் திருமணம் புரிந்து கொள்கிறான். கணேசனுக்கு முன்பே சிறுநீரகத்தில் கோளாறு. அவன் இந்திராவிடம் இதை நேரடியாக வெளியிடாமல் ஒரு கடிதத்தின் மூலம் தன் நோயை அவளுக்கு எழுதி தன் நண்பனிடம் கொடுத்து அனுப்புகிறான். அதைப் படித்துப் பார்த்த நண்பன் பத்து வருஷம் முந்தித்தானே. இப்போது இல்லையே? என்று கடிதத்தை கிழித்து விடுகிறான். திருமணம் நடைபெறுகின்றது. திருமணம் நடந்த இரண்டாவது நாளில் நோய் முற்றுப் போக கணேசன் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறான். அன்றிலிருந்து இந்திரா அலுவலகத்திற்கு விடுமுறை எடுத்துக்கொண்டு பத்து, பன்னிரெண்டு மாதமாக இராப்பகலாய் அவனுக்கு உதவி புரிந்து வருகிறாள். இரண்டே இரண்டு நாள் புதுமண வாழ்வு மற்றபடி இவனுக்கும் அவளுக்கும் எந்த உறவும் இல்லை. இளம் வயதுடைய அவள் உறவைத் துண்டித்து விட்டு வேறொரு உறவினைப் புதுப்பித்து இருக்கலாம்.

அவளுடைய சமூகம் அதை அங்கீகரிக்கும். ஆனால் இந்திரா அவ்வாறு செய்ய முற்படவில்லை. கணவன் மனைவி உறவினைப் புனிதமெனக் கருதி அவள் கொடுக்கும் மதிப்பும் மரியாதையையும் போற்றத்தக்கதாய் நாவலில் அமைந்திருக்கின்றன.

'பகவதிகோயில் தெரு' நாவலில் முத்தம்மாவிற்குத் திருமணம் ஆகி பத்து வருடமாகியும் குழந்தைகள் இல்லை. ஒரு நாள் தெருவில் தலைமுடியினை விற்றுக் கொண்டு வருகின்றான். முத்தம்மாளுக்கு கூந்தல் இல்லாத காரணத்தால் ஆசையுடன் சவுரியை வாங்கித் தலையில் வைத்துக் கட்டிக் கொள்கிறாள். அதன் பிறகு அவள் வீட்டை திறந்து போட்டுவிட்டு சீவி சிங்காரித்துச் சுடுகாட்டுப் பக்கம் போய் விடுகிறாள். மற்றவர்கள் மூலமாக இதை அறிந்த ரங்கன் அவளை மீட்டுக் கொண்டு வருகிறான். முத்தம்மாள் அமாவாசை பௌர்ணமி நாளில் சத்தம் போட்டுச் சிரிக்கிறாள். மனநிலை பாதிக்கப்பட்டவளாகக் காட்சியளிக்கிறாள். இந்நாவலில் மனநிலைப் பாதிப்பே சிக்கலாகிறது. சிக்கல் உருவானாலும் அதைத் தீர்ப்பதற்குரிய வழிமுறைகளை ரங்கன் நாடுகிறானே தவிர அவளை விலக்கி விட்டு வேறொரு பெண்ணுடன் அவன் வாழ விரும்பவில்லை. மனைவியின் உடல் நலமின்மையைக் காரணம் கூறி ரங்கன் வேறொரு திருமணம் செய்து கொண்டால் சமூகம் அதை அங்கீகரிக்கும். ஆனால் ரங்கன் வாழ விரும்பவில்லை. அவனுக்கு மன அமைதி இல்லை என்ற போதும் கொஞ்ச நாளாக அவள் அவனைப் படுத்துகிற பாடு சொல்ல முடியாத வகையில் அமைந்திருந்தாலும் துண்டை உதறி தோளில் போடுவதைப் போலச் சிக்கலை உதறி வாழ்கிறான்.

அவளுக்காக பூஜை, மந்திரம் எல்லாம் செய்து பார்க்கிறான். பகவதிகோயில் அம்மாள் பூசாரி, போற்றி, மந்திரம் உச்சரித்த ஒரு தாயத்தை பகவதிஅம்மன் சந்நிதியில் வைத்திருந்து நாற்பத்தியொரு நாள் பூஜை கழித்து அதைக் கட்ட வேண்டுமெனச்

சொல்லுகிறார். ரங்கன் அதற்குரிய ஏற்பாடுகளையும் செய்கிறான். அத்துடன் அவன் விட்டுவிடாமல் பகவதீஸ்வரனிடம் மனநிலை மருத்துவர் பவித்திரனிடம் இவளைக் காட்ட முயற்சி செய்கிறான்.

குழந்தையில்லை, மனநிலை பாதிக்கப்பட்டவள் என்ற குறைகளுக்காக முத்தம்மாளை ரங்கன் மணவிலக்குச் செய்திருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யாமல் அவளது நோயை குணப்படுத்தும் வழிகளை அவள் நலம் பெறும் வழிமுறைகளைத் தேடிப் பார்க்க முயலும் நிலை கணவன் மனைவி உறவு தூய்மையான ஒன்று என்பதைப் புலப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

'பள்ளிகொண்டபுரம்' நாவலில் வரும் மகாதேவைய்யர் என்கின்ற சிறு கதாபாத்திரம் தன் மனைவியுடன் இரண்டு குழந்தைகள் பெறும் வரை இல்லறம் சிறப்புடன் வாழ்வதாக குறிப்பிடப்படுகிறது. அதே மனையாட்டிக்கு மூளைக் கோளாறு நோய் வந்த பின்பு கூட அவர் மனைவியை தள்ளி வைக்கவில்லை. பின்பும் இரண்டு குழந்தைகள் பிறந்துள்ளன. அந்த அளவிற்கு அவர்களுக்குள் குடும்ப உறவு வலிமை பெற்று இருக்கிறது என்பதை ஆசிரியர் காட்டுகிறார்.

வைரவன் பிள்ளையின் மகன் கோபாலபிள்ளை குடிகாரன். கணவன் குடித்துவிட்டு வாந்தி எடுக்க தன் கணவனின் முதுகைத் தடவிக் கொடுக்கிறாள். அவனை அரவணைத்து அழைத்துச் செல்லுகிறாள். கணவன் தவறு செய்தாலும் பெரிதுபடுத்தாது பொறுமையுடன் ஏற்றுக் கொள்ளும் பண்பு மனைவியுடன் உள்ளத்தைக் காண்கிறோம். கணவன்-மனைவி உறவு புனிதமானது என்பதை புலப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

**பாலுணர்வால் வரும் சிக்கல்**

கணவன் மனைவி உறவில் மனம் என்பது முக்கியப் பங்கினை வகித்தாலும் பாலியல் உறவு ஓர் இன்றியமையாத இடத்தைப் பிடித்து விடுகிறது. மனம் என்பது மேலோட்டமாகவும் பாலுறவு ஆழமான உணர்வாக பிணைக்கப்பட்டுள்ளது. கணவன் மனைவி பிரிவுக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாய் பாலுறவுத் திகழ்கிறது. பாலுறவில் சிக்கல் ஏற்பட்ட போதும் கணவன்-மனைவி உறவினை முறிவுக்குக் கொண்டு வராமல் உணர்வின் வழிச் செல்லாமல் அதைத் தடுத்து நிறுத்தி அடக்கி ஆள்வது குடும்பக் கட்டுக்கோப்பு குறையாமல் நிலைத்து நிற்க உதவுகிறது. 'முறிவுகள்' நாவலில் வரும் விசுவம் – விசாலம், 'உறவுகள்' நாவலில் வரும் சங்கரன் - பிரேமா சான்றாகின்றனர்.

'முறிவுகள்' நாவலில் விசுவம் - விசாலாட்சி உறவில் பாலுணர்வு சிக்கலாக அமைவதும், பின்பு சிக்கலுக்குத் தீர்வாகும் நிலையும் சுட்டப்படுகிறது. விசுவம் தன் மனைவி விசாலத்தின் உறவினர்களால் வெறுப்படைகிறான். மாமனார், மாமியார், மைத்துனன், அவன் மனைவி, மனைவியின் தங்கை, அவளது கணவன் என்னும் உறவுகளினால் வெறுப்புக்கு உள்ளாகின்றான். இவற்றின் விளைவு விவாகரத்து வரை செல்லும் மனநிலைக்குத் துணிகின்றார். அவன் மனைவி இல்லாமல் அவனால் வாழ முடியாத என்ற நிலை பாலுணர்வால் ஏற்படுகிறது. "என் தாம்பத்திய வாழ்க்கையின் தோல்வியின் அடிப்படை காரணமே இதுதானோன்னு எனக்கு பயமாயிருக்கு, சந்தோஷமோ, சங்கடமோ மிதமிஞ்சி வரும்போது அதற்கு என்னிடம் இருக்கும். "ஒரே ஒரு வடிகால் இந்த செக்ஸிண்ணு தோணுது. வேறு எந்த போதைப் பொருளையும் சிகரெட், லிக்கர், டீ உட்பட்ட உபயோகித்ததில்லை. இதற்கு சமுதாயம் அங்கீகாரம் தந்திருக்கும் பொண்டாட்டி என்பவளை தவிர வேறு யாரையும் என்னால் நாட முடியாது "[20] என்ற விசுவத்தின் எண்ணம் மனநிலை பாலுணர்வில் கொண்டிருக்கும் உறுதியை

படம்பிடித்துக் காட்டுகிறது. மதிப்புகளும், மரியாதைகளும் அவளால் குறைக்கப்படுகின்றன என்றும் விசுவம் முழுமையாக இந்த பாலுணர்வில் சிக்கல் ஏற்படாதிருந்தால் தான் இவ்வாறு பாதிக்கப்படாமல் இருந்திருக்கும் நிலையை "செக்ஸ் உணர்வை என்னால் அடக்கி நிறுத்த முடிந்திருந்தால், நான் இத்தனைக்கு மதிப்பிழந்து சீரழிந்து போயிருக்கமாட்டேனோ அப்படின்னு எனக்குள்ள இப்போதெல்லாம் ஒரு உறுத்தல்"[21] என அவன் கூறுவதின் மூலம் உணர்ந்து கொள்ள முடியும்.

"விசாலமோ அவ வீட்டுக்காரங்களோ என்னதான் எனக்கு பிடிக்காத காரியங்களைச் செய்தாலும் என் மூளையுடன் உடம்பும் ஒத்துழைப்பதில்லை. எங்களுக்குள் எவ்வளவு பெரிய சண்டை நடந்தாலும் ஒரு வார காலத்துக்கு மேல் என்னால் வர்மம் பாராட்டிக் கொண்டிருக்க முடியாது. இந்த ஒரு வார காலம் எனக்கு ஆபீஸ் வேலையில் நாட்டமில்லை, நண்பர்களுடன் பேசப் பிடிக்கவில்லை, சின்னச் சின்னக் காரியங்களுக்குக் கூட எரிஞ்சு விழத்தோணும் கடைசியில் தெரிந்துகொள்ள நானே தோற்றுப் போவேன். எப்போதும்! விசாலம் அலட்டிக்க மாட்டாள்...அழுத்தம்"[22] என கூறும் விசுவத்தின் கூற்றின் மூலம் எவ்வளவு துன்பங்கள் வந்தாலும் அதற்கு அவன் வடிகாலாய்ப் பயன்படுத்துவது பாலுறவு என்பதையும், மனைவியிடம் தவிர வேறு எவரிடமிருந்தும் பெறவில்லை என்பதையும் நாவலில் பத்மநாபன் சித்தரிக்கிறார்.

'உறவுகள்' நாவலில் வரும் சங்கரன் மனைவி பிரேமா மாதவிடாய் கோளாறு நோய்க்கு ஆளாகிறாள். சங்கரன் வீட்டில் உள்ள வேலைகளைத் தானே செய்கிறான். கதை நிகழும் காலத்தில் மூன்று நாளைக்கு முன் மாதவிடாய் கோளாறினால் அவதியுறுகிறாள். சங்கரன் வீட்டை முழுவதும் தூய்மைப்படுத்தி விட்டு மனைவியை மருத்துவமனையில் சேர்கிறான். சங்கரன் தன் மனைவி பிரேமாவுடன் உடலுறவு கொண்டு ஒரு வருடத்திற்கு மேல் ஆகிறது

இதற்கு மாதவிடாய் கோளாறின் காரணமாக உடலுறவு கொண்டு ஒரு வருடத்திற்கு மேலாகிறது இதற்கு மாதவிடாய் கோளாறின் காரணமாக உடலுறவு கொள்ள இயலாத நிலையாகிய பாலுறவே சிக்கலாகிறது. இவற்றைக் காரணம் காட்டி வேறு பல முறைகளைக் கையாளாமல் மனைவிக்கு பணிவிடை செய்கிறான். மனைவி சந்தேகப்பட்டாலும் முறை தவறிய வேறு வழிகளில் பாலுணர்வைத் தணிக்க முற்படாமல் அந்த நினைவையே தனதுள்ளேயே அடக்கி விடுகின்றான். கணவன் மனைவி மனதில் பூதகரமாக உறங்கிக் கிடக்கும் பாலுணர்வு முறைப்படி தீர்க்கப்படவில்லை என்றால் அதன் விளைவுகள் பல விபரீதங்களை ஏற்படுத்திவிடுகின்றன. அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டு விடாமல் சங்கரன் தன் மனதை பக்குவப்படுத்திக் கணவன் - மனைவி உடல் சம்பந்தப்பட்டது மட்டுமல்ல மனம் தொடர்பானதும் என்பதைச் சமுதாயத்திற்கு உணர்த்தி விடுகிறான். விசுவம் வாழ்வின் பாலுணர்வு வடிகால் இன்றியமையாத இடத்தை வகிக்கிறது. ஆனால் பாலுறவு வடிகால் சங்கரன் வாழ்வில் மிகச் சாதாரணமான இடத்தைப் பெறுவதாக நாவலாசிரியர் கூறுகிறார். முரண்பட்ட இரண்டு அமைப்பைக் காட்டி பாலுணர்வுச் சிக்கல்கள் குடும்ப உறவில் எங்கனம் இவர்களைப் பாதிக்கிறது என்பதை ஆசிரியர் காட்டுகிறார்.

**சிக்கல்களால் பிளவுடைமை**

கணவன் மனைவி உறவில் தலை தூக்கி நிற்கும் சிக்கல்களை மனதில் கொண்டு உணர்வுகளின் வழிநின்று கணவனோ மனைவியோ ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து வாழ்வது சிக்கல்களால் பிளவு ஏற்படுதல் என்ற வகையில் இங்கு விளக்கப்படுகிறது. வீட்டின் அகப்புறத்தில் நிற்க வேண்டிய சிக்கலை, அடக்கி வாசிக்கப்பட வேண்டியவற்றைப் பெரிதுபடுத்தி வீட்டின் புறத்திலேயே வெட்ட வெளிச்சமாக்கி விடுவது சிக்கல்களால் பிளவு ஏற்படும் தலைமைக் கூறுகளில் ஒன்றாகிறது.

நீல. பத்மநாபன் நாவல்களில் தலைமுறைகளில் வரும் சிவானந்த பெருமாள், நாகம்மை, பாப்பாத்தி - கண்ணுப்பிள்ளை, கோலப்பன் தாயிச் சித்தி, பள்ளிகொண்டபுரத்தில் வரும் அனந்தன்நாயர் - கார்த்தியாயினி, குஞ்சுலெஷ்மி - சங்குன்னிநாயர் போன்றவர்கள் பாலுணர்வுச் சிக்கல்களால் பிளவுபடுகின்ற குடும்ப அமைப்பினை உடையவர்களாகக் காட்டப்படுகின்றனர்.

தங்களது சுயநலத்தைப் பெரிதாகக் கொண்டு மற்றவர்களைப் பற்றி எந்தவிதக் கவலையும் இல்லாமல் உணர்வின் வழிச் செல்லுகின்றவர்களாகத் திகழ்கின்றனர். இவர்கள் சமுதாயம் விதித்திருக்கும் சட்டதிட்டங்களையும் பொறுப்புகளையும் மதிக்காமல் பழைய மரபுகளை உடைத்து எரிந்து விட்டுப் புதிய மரபிற்குத் தவறாக வித்திடும் வழித் தோன்றவர்களாகின்றனர். குடும்ப அமைப்புகள் சிதைவதற்குப் பின்வரும் காரணங்கள் நாவல்களில் புதைந்துள்ளன.

1. தன் குறையினை மறைத்து பிறர் மேல் ஏற்றுக் கூறுதல்.
2. உடல்நலத்தைக் காரணம் காட்டும் இயல்பு
3. பொருளாதார நிலை
4. பாலுணர்வை மையப்படுத்தும் நிலை
5. நகரவாழ்வில் பற்றுதலினால் ஏற்படும் நிலை
6. இருதாரர் மணம்

**தன் குறையினை மறைத்துப் பிறர் மேல் ஏற்றிக் கூறுதல்**

கணவன் அல்லது மனைவி தங்களுக்குள் இருக்கும் உடற் குறைபாடுகளை மற்றவர் மேல் ஏற்றித் தன் குறைபாடு வெளியில் தெரியாத வண்ணம் அமைத்துக் கொள்ளும் இயல்பு சிலரிடம் காணப்படும். கணவன் தனக்குள்ள உடற்குறையை

மனைவி மீது ஏற்றிக் கூறிச் சமூகத்தை நம்ப வைத்து அவளை விட்டு பிரியும் நிலைக்குத் தலைமுறைகளில் வரும் சிவானந்த பெருமாள் தக்க சான்றாக அமைகிறான்.

சிவானந்த பெருமாள், நாகருப்பிள்ளையின் இரண்டாவது மகளான நாகம்மையைத் திருமணம் செய்து கொள்கிறான். திருமணம் முடிந்த ஆறு மாதத்திற்குள்ளாகவே அவளைப் பிறந்த வீட்டிற்கு அனுப்பி விடுகிறான். இதற்கான காரணத்தை அவரிடம் கேட்கின்ற பொழுது "பொண்டாட்டியல்லவாண்ணு பாக்கேன். அவ வந்து….. வந்து…. வெளிலெப் பார்க்க பொம்பளையா இருந்தாலும்…. இருந்தாலும்"[23] என்றும் அதெல்லாம் என்னத்துக்கு….? ஒங்களுக்கு என்னை விசுவாசம் இல்லாட்டெ சந்தெலெ இருந்து ஒரு லேடி டாக்டரை கூப்பிட்டு பரிசோதிச்சுப் பாருங்களேன்…… சப்பட்டை ஆகுதேன்…..ஆனா ஒண்ணு! அதை மட்டும் சொல்லீரேன்…. அவளுக்குக் கல்யாணம் செய்து வச்சதே பாவம்"[24] என்றும் கூறி சமூக பஞ்சாயத்தார் முன்னால் நாகம்மையைக் குழந்தை பெறத் தகுதியற்றவள் என்று குற்றம் சாட்டி அவளை விலக்கி வைக்கிறான். இங்கு உண்மையில் நாகம்மை குழந்தை பெறத் தகுதியற்றவள் அல்ல சிவானந்த பெருமாள் தான் தகுதியற்றவன். ஆண்மையற்ற தன் குறைபாட்டை வெளிக்காட்டாமல் தன் குறைபாட்டைக் குறையற்ற நாகம்மையின் மீது ஏற்றி திருமண முறிவு பெறுகிறான். கதையில் இவன் ஆண்மையற்றவன் என்று இரண்டு வழிகளில் நாவலில் உறுதி செய்யப்படுகிறது. ஒன்று அவன் இரண்டாவதாகத் திருமணம் செய்து கொண்ட வடிவின் மூலமாக, மற்றொன்று மருத்துவப் பரிசோதனையின் மூலம் நாகம்மை குறையற்றவள் என்பதை அறியும்போதும் ஆகும். ஏக்கிமாடன் பிள்ளையின் மகள் வடிவு தன் கணவன் சிவானந்த பெருமாள் ஆண்மையற்றவன் என்பதை அறிகிறாள். தன்னைப் பற்றிய இரகசியத்தை வடிவு உணர்ந்து கொண்டதைக் கணவன் சிவானந்த பெருமாளும் உணர்ந்து கொள்கிறான்.

தலைமை மாந்தரான திரவியம் தமக்கை நாகம்மையைப் பெண் மருத்துவர் ரோசம்மை மோஸஸிடம் அழைத்துச் சென்று மருத்துவ பரிசோதனை செய்கிறான். பரிசோதனையில் நாகம்மை குறையற்றவள் என்பது உறுதி செய்யப்படுகின்றது. இவ்விரு காரணங்கள் மூலம் சிவானந்த பெருமாளின் குறைபாடு நமக்குப் புலப்படுகிறது. இங்கு சிவானந்த பெருமாள் தன் சுயநலத்தால் தன்னுடைய குறைபாடுகளை மறைத்துத் தன் மனைவி நாகம்மையின் மீது பழி சுமத்துவதும் சிக்கலின் உச்சகட்டமாகிறது. இதற்குச் சமூகம் ஒரு காரணமாகின்றது. நாகம்மையின் குடும்பமோ சமூக பஞ்சாயத்தார் நாகம்மையை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தியிருந்தால் இங்கு மணவிலக்கு நடைபெற்றிருக்காது. ஆணின் தன்குறை உணரா அறிவின்மையே சமூகத்தின் அங்கீகாரமாகி ஒரு பெண்ணின் வாழ்வை உருக்குலைக்கிறது.

**உடல் நலத்தைக் காரணம் காட்டும் இயல்பு**

குடும்ப உறவில் கணவனுக்கு வந்த நோயினை காரணம் காட்டி அவனை விட்டுப் பிரிந்து வாழ்கின்ற மனைவியை நீல. பத்மநாபனின் நாவல்களில் காண முடிகிறது. ‘தலைமுறைகள்’ நாவலில் வரும் பாப்பாத்தி - கண்ணுப்பிள்ளை குடும்பம் இத்தகைய சிக்கலுக்கு உள்ளாகின்றனர். பாப்பாத்தியின் தன் கணவன் கண்ணுப்பிள்ளைக்குத் தொழுநோய் ஏற்படுகிறது. தொட்டாரை ஒட்டிக் கொள்ளும் வியாதி என்று பாப்பாத்தி வீட்டிலேயே அவரை வைத்திருக்க முடியாமல் வெளியே அனுப்பிவிடுகிறாள். வேற்றுச்சாதிக்காரியான கணவனை விட்டுப் பிரிந்த கிருஷ்ணாகாரிச்சி என்பவள் கண்ணுப்பிள்ளையைத் தன்னுடன் வைத்துக் காப்பாற்றுகிறாள். கண்ணுப்பிள்ளையின் சொத்துக்கள் முழுவதையும் காப்பாற்றி தன் மகன் சிவானந்த பெருமாளுடன் ஆண்டு அனுபவித்து வருகிறாள். இங்கு கணவனின்

உடல் நலமின்மை குடும்பத்தில் சிக்கலாகிறது. கணவன் உடல் நலம் பெறுவதற்கான வழிமுறைகளை ஆராயாமல் சுயநல நோக்கத்தோடு எங்கே இந்த நோய் தன்னையும் ஒட்டிக் கொள்ளுமோ? எனப் பயந்து கணவனை மனைவி விரட்டி விடுகிறாள். பாப்பாத்தி நினைத்திருந்தால் கிருஷ்ணாகாரிச்சி போல் கண்ணுப்பிள்ளையுடன் வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவள் வாழவில்லை. கணவனை விரட்டிய பின் எந்த ஒரு சூழலிலும் கணவனை அவள் பார்க்கவே இல்லை. இவர்கள் இருவருக்கும் பிறந்த சிவானந்த பெருமாளின் திருமணத்தின் போது கூடத் தந்தை என்ற நிலையில் கண்ணுப்பிள்ளை அழைக்கப்படவே இல்லை.

தொழுநோய் சற்றுக் கடினப்பட்டாவது தீர்க்க வேண்டிய சிக்கல் தான் சிக்கலை முளையிலேயே கிள்ளி எறிந்து விட்டிருக்கலாம். அவ்வாறில்லாமல் சிக்கலே முக்கிய இடமாக உருவாக்கப்பட்டு மணவாழ்வில் பிளவினை உண்டாக்கி விடுகிறது.

**பொருளாதார நிலை**

குடும்ப உறவில் கணவன் - மனைவி வாழ்க்கை மிக இணக்கமுடன் நடைபெறப் பொருளாதாரம் ஒன்று இன்றியமையாத பங்கினை வகிக்கிறது. பொருளாதாரச் சீர்குலைவு கணவன் மனைவியிடையே உரசலை ஏற்படுத்தி விரிசலுக்கு வழிவகுக்கிறது. பெண்ணின் உள்ளம் பேராசைகள் நிறைவேற பணம் ஒரு காரணியாக அமைகிறது. எனவே தன் குடும்ப அமைப்பை விட பொருளாதாரத்தில் உயர்ந்த குடும்ப அமைப்பில் வாழ எண்ணுவது பெண்ணின் இயற்கைக் குணமாகிறது. ஆசையை நிறைவேற்றும் நினைப்பில் தடையேதும் இல்லையே தவிர, அதைச் செயலாக்கும் முறைகேட்டிற்குத் தடைகள் உண்டு. அவ்வாறு முறைகேடான செயல் வடிவம் நடைமுறைப்படுத்தப்பட்டால் குடும்பம் என்ற உறவு கேள்விக்குரிய பொருளாகித் தன் கட்டுக்கோப்பிலிருந்து உருமாறி சீரழிந்து விடும். இச்சீரழிவை உணர்த்துவது

‘பள்ளிகொண்டபுரம்’ நாவலில் வரும் அனந்தன்நாயர் கார்த்தியாயினி. கார்த்தியாயின் அனந்தன் நாயரின் மனைவி. அனந்தன் நாயர் அரண்மனையில் வேலை பார்க்கும் ஒரு குமஸ்தா. ஆறாட்டு நாள் விழாவில் தாசில்தார் விக்ரமன் தம்பி கார்த்தியாயினியைப் பார்த்து விடுகிறான். பிறகு கார்த்தியாயினியை மையமாக வைத்துக்கொண்டு அனந்தன் நாயிருக்கு பதவி உயர்வு தந்து வீட்டிற்கு அடிக்கடி வருகிறான். கார்த்தியாயினிக்கும் அனந்தன்நாயருக்கும் சண்டை வளர்த்துக் கொண்டே செல்கிறது. ஒருநாள் கார்த்தியாயினி விக்ரமன் தம்பியுடன் ஓடிப் போய்விடுகிறாள். அனந்தன்நாயர் இறப்பது வரை ஏகாந்தமான வாழ்க்கை வாழ்கிற கார்த்தியாயினியின் துரோகத்தை எண்ணி குமுறி மனம் நொந்து வாழ்கிறார். இங்கு சிக்கலாக வீற்றிருப்பது எது என்ற கேள்வி எழுகிறது. கதையை மேலோட்டமாக வாசிக்கின்ற பொழுது பாலுணர்வே சிக்கலாகத் தோன்றுகிறது. கதையை நன்கு ஊன்றி படிக்கின்ற போது ஆழமான சிக்கல் பொருளாதாரமே என எண்ணத் தோன்றுகிறது. அனந்தன்நாயரின் தாழ்வு மனப்பான்மையும் ஒரு துணைக் காரணமாக அமைகிறது. கார்த்தியாயினி தன்னை விட்டு விட்டு விக்ரமன் தம்பியுடன் எதற்காக ஓடினாள் என்பதை அனந்தன் நாயரால் உணர முடியவில்லை.

எனவேதான் அவளின் ஓடிப்போன நிலை குறித்து சிந்திக்கும்போது அவள் ஓடிப்போனது உடலின் தேவைக்கா, இல்லை வாழ்க்கையின் செழிப்பான வசதிகளை எண்ணியா, பணம், பதவி, மதிப்பு, ஆள் பலம் என்று ஒன்றும் தோன்றாத தெளிவில்லாத தம் நிலை குறித்து எண்ணிப் பார்க்கத் தோன்றுகின்றது. ஆனால் படிக்கின்ற வாசகனுக்கு பொருளாதாரத்தினால் வரும் அந்தஸ்து ஆடம்பரம் ஆள்பலம் இவற்றை முன்னிட்டுத் தான் கார்த்தியாயினி சென்றிருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது. ஆறாட்டு விழாவில் தான் விக்ரமன் தம்பியை கார்த்தியாயினி

முதன்முதலாகப் பார்க்கிறாள். கழுத்தில் முத்துமாலையும் இடுப்பில் பட்டு வேஷ்டியுமாக மகாராஜாவுடன் விக்ரமன் தம்பி நடந்து வந்து கொண்டிருக்கிறான். அவன் ஆடம்பரத்தையும் பணத்தின் செழிப்பையும் கண்ட அவள் அவனைப் பார்க்கிறாள் என்பதை ஊகித்து அறிய முடிகிறது. ஏனெனில் அவனை சந்திப்பதற்காக கார்த்தியாயினி வேறு எந்த வழியிலும் முயற்சி செய்யாமல் ஏழ்மையில் இருக்கும் ஒருவன் பணக்கார நிலைமையைக் கண்டு மயங்குவது உலகியல் நடைமுறை. அவள் அவனை பார்த்திருக்க வேண்டுமென்றே தோன்றுகிறது. விக்ரமன் தம்பி அனந்தன் நாயருக்குப் பதவி உயர்வு கொடுத்துவிட்டு அவரின் வீட்டிற்கு வருகிறான். அனந்தன்நாயரின் அழைப்பின் பேரில் கார்த்தியாயினி விக்கிரமன் தம்பிக்கு மோர் கொண்டு வந்து தருகிறாள். தந்துவிட்டு விக்ரமனைப் பார்க்காமலேயே உள்ளே செல்ல முற்படுகிறாள். ஆனால் விக்ரமன் தம்பி அவள் கையிலிருக்கும் குழந்தை பிரபாகரனைக் காரணம் கூறி மறுபடியும் உள்ளே செல்ல விடாமல் தடுத்து நிறுத்துகிறான். அப்பொழுதும் அவள் மனம் மாறவில்லை. தான் ஒரு குழந்தைக்குத் தாய் என்பதை அவனுக்கு உணர்த்துவதாகத்தான் குழந்தையோடு வந்ததாக அனந்தன் நாயரிடம் கூறுகிறாள். மீண்டும் அனந்தநாயருக்கு விக்ரமன் தம்பி மூலம் பதவி உயர்வு கிடைக்கின்றது. விக்ரமன் தம்பி வலுக்கட்டாயமாக தன் வீட்டிற்கு விருந்துண்ண அனந்தன் நாயர் குடும்பத்தை அழைக்கிறான். அங்கு தான் கார்த்தியாயினியின் மனம் திசை திரும்புகிறது. “அந்த மாளிகையைக் கண்டதும் கார்த்தியாயினி முகத்தில் தென்பட்ட பிரமிப்பு சற்று நேரத்தில் தன்னையும் பற்றிக் கொண்டது.

“விஸ்தாரமான அலங்கார அறைகள் கொண்ட மூன்று மாடிகள், நிலமெங்கனும் அழகான ரத்தினக் கம்பளம், கதவு ஜன்னல்களுக்குப் பட்டாடைகள், உத்திரங்களில் ஜிலுஜிலுவென்று தொங்கிக் கொண்டிருக்கும் சரவிலக்குகள், பூக்கள், மண்டி நின்ற

பூங்கா", "இரவில் வீட்டுக்குத் திரும்பும் போது எல்லோருக்கும் தனித்தனியாக வெள்ளித் தாம்பளத்தில் பரிசுப் பொருட்கள் வேறு", "விடை பெற்றுக் கொண்டு தம்பியின் காரிலேயே வீடு திரும்பியதும் டிரைவர் வீட்டுக்குள் கொண்டு வந்து வைத்து விட்டுச் சென்ற தாம்பளங்களில் இருந்த பட்டுச்சேலை, ஜரிகை வேஷ்டி, முத்திரை பவுன் நாணயங்கள் முதலியவற்றைக் கண்டபோது, மூர்ச்சை போட்டு விடும் நிலைமை வந்துவிட்டது தனக்கு"[25] என்று விக்ரமன் தம்பி இல்லத்திற்கு சென்ற காட்சிகளை அனந்தன் நாயரே நினைவு கூறுகிறார். ஆடம்பரத்திற்கு கார்த்தியாயினியின் மனம் மாறுகிறது. மேலும் "கார்த்தியாயினியின் தோழி சுகுதகுமாரியின் இன்றைய கோலாகல வாழ்வும் அவள் போய் சேர்ந்திருக்கும் பெரிய இடமும் கார்த்தியாயினியைக் கடுமையாய்ப் பாதித்திருக்க வேண்டும். அடிக்கடி அவள் வார்த்தைகள் இதைத் தன்னிடம் தெரிவித்துக் கொண்டிருந்தன. ஆனால் அதற்காகத் தன்னால் என்ன செய்ய முடியும்"[26] என்று அனந்தன்நாயர் கூற்றின் மூலம் மண வாழ்வின் பிளவுக்குப் பொருளாதார நிலையே காரணமாய் அமைகிறது என்பதை உணர முடிகிறது.

பாலுணர்வை மையமாக வைத்து அனந்தன் நாயருக்கும் கார்த்தியாயினிக்கும் நடைபெறும் போர்க்களத்தில் கார்த்தியாயினியே ஒவ்வொரு இரவிலும் தனது வாதத்திறமையினை முன்வைக்கின்றாள். எனவே உடலுறவில் ஏற்பட்ட பாலுணர்வினால் அவள் சென்றிருக்கக்கூடும் என்ற ஐயம் எழுகின்றது. இது காரணமில்லை என்பதை அனந்தன்நாயரை விட்டு ஓடிப்போன ஐந்து ஆண்டுகளுக்குப் பின்பு கார்த்தியாயினி அனந்தன்நாயரைப் பார்த்து உரையாடுகிறாள். அப்பொழுது "விக்ரமன் தம்பியின் வற்புறுத்தலால் அவனது நண்பனிடமும் தன்னைப் பறிகொடுத்த நிலையை எண்ணிக் கதறி அழுகிறாள்"[27] என்ற நிலையைப் பார்க்கின்ற பொழுது

அனந்தன் நாயரை விட்டு கார்த்தியாயினி பிரிந்ததற்கும் பாலுணர்வு காரணமில்லை என்பதை உணர முடிகிறது.

**பாலுணர்வை மையப்படுத்தும் நிலை**

உடல் தேவைகளால் எழுகின்ற பாலுணர்வுச் சிக்கல்கள் மனைவியைக் கணவரிடமிருந்து பிரித்து விடுவதற்குக் காரணமாய் அமைகிறது. 'பள்ளிகொண்டபுரம்' நாவலில் வரும் தலைமைமாந்தரான அனந்த நாயரின் அத்தை குஞ்சுலெஷ்மி, சங்குண்ணிநாயரின் வாழ்வில் ஏற்படும் விரிசல் பாலுணர்வின் அடிப்படையிலேயே தோன்றுகிறது. தடுமாறி விழுந்ததில் குஞ்சுலெஷ்சுமியின் காலில் முறிவு ஏற்படுவதைக் குணமாக்க வந்த வைத்தியனான ஆணதுண்டி வருமானி கொச்சுகிருஷ்ண கர்த்தாவின் மீது குஞ்சுலெஷ்சுமிக்கு ஈடுபாடு ஏற்பட்டு கொச்சு கிருஷ்ணகர்த்தாவுடன் தான் வாழ்வேன் என்று கூறிச் சென்று விடுகிறாள். அங்கு "குஞ்சுலெஷ்சுமி அம்மாவியைக் கூட சரியாகச் சொல்லப்போனால் குறை கூற முடியுமென்று தோன்றவில்லை. உலகத்திற்கெல்லாம் சங்குண்ணி அம்மாவன் ஆணழகனாக இருந்திருக்கலாம். அம்மாவிற்காக உயிரையே விடத் துணிந்தவனாகவும் அவர் இருந்திருக்கலாம். ஆனால் குஞ்சுலெஷ்சுமி அம்மாவிற்கு அவரிடம் திருப்தி ஏற்படவில்லையோ என்னமோ? யார் கண்டார்கள் அதன்கூட, குழந்தைகள் வேறு இல்லையே…."[28] என்ற அனந்தன் நாயரின் கூற்றும் தான் அவள் சென்றிருக்கக் கூடும் என்பதற்கு வலுவாகின்றது. "அவன் எங்கே தடவினானோ எப்படித் தடவினானோ"[29] என்று அனந்தன் நாயரின் அம்மாவின் கூற்று வாயிலாகவும் "உங்ககிட்டெ எனக்கு எந்த வெறுப்பும் இல்லை, ஆனா…..கார்த்தா இல்லாமெ எனக்கு ஜீவிக்க முடியாது"[30] என்று குஞ்சுலெஷ்மி கூற்றும் பாலுணர்வு நிலையினைப் புலப்படுத்துவதாக அமைகிறது.

**நகர வாழ்வின் மாறுதலினால் ஏற்படும் நிலை**

நகர வாழ்வினையே பெரிதாக எண்ணி தன்னுடைய கிராமத்திற்குச் செல்லாமல், இருப்பதும், குடும்பத்தில் பல சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. 'தலைமுறைகள்' நாவலில் வரும் கோலப்பன் மனைவி கூனாங்காணி, பொணமு ஆச்சி ஆகியோரின் மகள் தாயி இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக திகழ்கிறாள்.

இவளது கணவன் கோலப்பன் நாட்டு மருந்துக்கடையில் வியாபாரம் செய்கிறான் ஊதியம் கொடுப்பதில் ஏற்பட்ட சண்டையால் கோலப்பன்தன் கணக்கு பிள்ளையை வெளியேற்றுகிறான். கணக்குப்பிள்ளை ஆண்டனுப்பிள்ளை விற்பனை வரி அலுவலகம் சென்று கோலப்பனின் 'ஊழலை வெளிப்படுத்துகிறான்' அவர்கள் பரிசோதனை செய்கின்றனர். கடையையும் வீட்டையும் விற்று விற்பனை வரி அலுவலகத்திற்கு நஷ்டஈடு கட்டுகிறான். எனவே கோலப்பன் தன் பூர்வீக ஊரான திருவாங்கோட்டுக்கே செல்ல எண்ணுகிறான் ஆனால் அவன் மனைவி "நீங்க கடையையெல்லாம் வித்து காசு மாறுவதெல்லாம் சரி அந்தப் பட்டிக்காட்டு ஊருக்கு நா இல்லை"[31] என்று கூறி வர மறுத்து விடுகிறாள். கோலப்பன் அவளை வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்ல முற்படுகிறான் தாயி தன் தாய்வீட்டிற்குச் சென்று விடுகிறாள். கோலப்பன் அழைப்பதும் தாயி மறுப்பதும் வழக்கமாகிவிடுகிறது. இவற்றின் பின் விளைவு கோலப்பன்குடிகாரனாகி விடுகின்றான். கோலப்பன் தாயி இருவரின் அலட்சியப் போக்கு குடும்பச் சிக்கலின் மூலதனமாகிறது. சொத்துக்கள் முழுமையும் கரைந்தவுடன் கோலப்பன் வருமானத்திற்கு வழியின்றி சொந்த ஊர் செல்ல எண்ணுகிறான். அவன் மனைவி தாயே இதற்கு ஒத்துழைப்புத் தந்திருந்தால் குடும்பம் என்ற உறவில் பிளவு ஏற்பட்டு இருக்காது.

நகரம், கிராமம் என்ற பாகுபாட்டுணர்வு கிராம வாழ்வில் வெறுப்பு, நகர வாழ்வில் வெறுப்பு, நகர வாழ்வில் விருப்பம் ஆகியவற்றின் காரணமாகக் குடும்ப உறவு சிதைவது ‘தலைமுறைகள்’ காட்டடப்பட்டிருக்கின்றது.

**இருதாரமணம்**

‘தலைமுறைகள்’ நாவலில் வரும் கூனாங்காணி பாட்டையாவின் குடும்ப உறவுச் சிக்கலுக்கு இருதார மணம் காரணமாவதை நாவலாசிரியர் சுட்டிக்காட்டுகிறார். கூணங்காணி மூக்காண்டிச் செட்டியாரின் ஒரே மகன், முதலில் பொணமுவைத் திருமணம் செய்து கொள்கிறார். பத்து வருடமாகியும் குழந்தை இல்லாததால் அணஞ்சியை திருமணம் புரிந்து கொள்கிறார். பிறகு இரு மனைவியருக்கும் குழந்தைகள் பிறக்கின்றன. தன் வாழ்வின் இறுதிக்கட்டத்தில் குடும்பம் சரியில்லாத காரணத்தால் தனிமையிலேயே வாழ்கிறார். இங்கே இருதார மனமே குடும்ப உறவுக்குச் சிக்கலாகிறது. நாவலில் கூனாங்காணியைத் தன் மனைவியுடன் சண்டையிடும் நிலைமையில் தான் ஆசிரியர் அறிமுகப்படுத்துகிறார். ஒரு மனைவியோடு வாழும் நிலையில் மற்றொரு மனைவிக்குச் சிக்கல் உருவாகக் காரணமாக அமைகிறது. “எனக்கு பண்டுவம் பாக்கூதுக்கண்ணு இங்கே ஒரு உருவமும் நிக்காண்டாம்.... மனுஷனை நிம்மதியா விட்டுட்டு நேரத்தே காலத்தே எல்லோரும் போயி தொலைஞ்சிட்டா போரும் ...”[32] என்று தன்னுடைய இரண்டு குடும்பங்கள் சண்டையிடுகின்ற பொழுது கூனாங்காணி இவ்வாறு கூறுகிறார். இவற்றிலிருந்து கூனாங்காணி வெறுப்பின் உச்சத்திற்கு சென்ற நிலையக் காண முடிகிறது.

பணம் என்ற ஒன்றே குடும்ப உறவை பிளவுபடாமல் வைத்திருக்கிறது. சொத்துக்கள் இரு மனைவியருக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் பங்கீடு செய்த பின் எவரும் கூனாங்காணிப்பாட்டையாவுடன் வாழவில்லை. சொத்துப் பங்கீடு என்பதே

சிக்கலின் முடிவாகி குடும்ப உறவை முறித்து விடுகிறது. சமூகத்தில் குடும்ப உறவில் பணத்தின் ஆதிக்கத்தை ஆசிரியர் இதன் மூலம் காட்டுகின்றார்.

**சிக்கல் இல்லாத நிலை**

கணவன் - மனைவி என்ற உறவு புனிதமாக்கப்பட்டுச் சிக்கல்கள் எதுவும் எழாமல் திறம்பட அமைய அன்பு பெரிய மூலதனமாகிறது. இத்தகைய ஒருநிலையினை 'தலைமுறைகள்' நாவலில் வரும் உண்ணாமலை- தவசிப்பிள்ளை, சுப்புப்பிள்ளைபாட்டன் நாகம்மை ஆச்சி, 'உதயதாரகை' நாவலில் அருள்தாஸ் பிரின்ஸட்டு, துணைப் பாத்திரமான வையாபுரி தாத்தா, இலட்சுமி பாட்டி இவர்களின் மூலமாக நீல. பத்மநாபன் குடும்ப உறவின் மகத்துவத்தை சித்தரிக்கிறார்.

குடும்பத்தில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் மறு வினாடியே, மறைவதற்குக் காரணமான அன்பு அமைகிறது. உண்ணாமலை - தவசிப்பிள்ளை குடும்ப வாழ்வில் காணலாம். "தவசிப்பிள்ளை அத்தான் தான் எவ்வளவு நல்லவரு நல்ல சுபாவம் என்றும் உண்ணாமலை அக்கா வீட்டிலெ பேருக்குக் கூட ஒரு சண்டை இல்லை"[33] என்றும் இடம்பெறுகின்ற திரவியின் கூற்றுக்களின் வழி தவசிப்பிள்ளையின் நற்பண்புகளையும் அதனால் இல்லறம் செம்மையாக அமைவதையும் நாவலில் நீல. பத்மநாபன் படைத்துக் காட்டுகிறார்.

உண்ணாமலை பேறுகாலத்திற்காகப் பிறந்த வீட்டுக்கு அழைத்து செல்வதைக்கண்ட தவசிப்பிள்ளையின் கண்கள் கலங்குகிறது. "முகம் அம்புட்டும் செம்பருத்திப்பூ மாதிரி செக்கச் செவந்து போய் இருந்தது - நாலஞ்சு நாளிலை உங்க வீட்டுக்கு வருவேன் என்னா! அக்காட்டையும் சொல்லிரு"[34] என்று திரவியிடம் தவசிப்பிள்ளை கூறும் கூற்று அவன் மனைவி மீது வைத்திருக்கும் அன்பின் ஆழத்தை

உணர்த்துகிறது. திரவி கூறுவதைப் போல பேருக்குக் கூட ஒரு சண்டை வராத குடும்பமாகவே நாவலில் காட்டப்படுகிறது.

‘தலைமுறைகள்’ நாவலில் தலைமைப் பாத்திரமான திரவியின் அம்மா வழி தாத்தா, சுப்புப்பிள்ளை பாட்டாவும் - நாகம்மை ஆச்சியும் வயது முதிர்ந்த போதும் மனமொத்த தம்பதியினராய் காட்சியளிக்கிறார்கள். “நாகம்மை ஸ்டிராங்கா போட்டு, சுடச்சுட கொண்டு வந்து தரும் ஒரு கப் டீயை வாங்கி ராத்திரியில் குடிச்சுட்டுப் படுத்தால் தான் எனக்கு சொப்பனம் காணாமல் சுகமான தூக்கம் வரும்”[35]. அவர்களின் அன்பை இக்கூற்று வெளிக்காட்டுகின்றது.

‘உதயதாரகை’ நாவலில் அருள்தாசு பிரின்ஸட்டு தம்பதியினரில் பிரின்ஸட்டு கணவனிடத்தில் மிகுந்த பக்தி கொண்டவளாக காட்டப்படுகிறது. கணவனை தெய்வ நிலையில் பார்க்கும் மனைவியாக ஆசிரியர் காட்டுகிறார். அதனால் குடும்பத்தில் விரிசலோ போட்டியோ பொறாமையோ காணப்படவில்லை.

“நான் என்ன இவள் எஜமானா? எதுக்கு இந்தக் கண்மூடித்தனமான பக்தி? என்னைப் பார்த்து காரசாரமாய் ரெண்டு வார்த்தை பேசினால் இவளுக்கென்ன?.... எனக்காக பாததூளியாகி வானத்திலும் பறக்க இவள் தயாராக இருக்கிறாள்”[36]. இவ்வாறு அருள்தாஸின் நினைவு நிகழ்ச்சியாக நாவலில் சுட்டப்படுகிறது.

நாவலின் துணைப் பாத்திரமான எழுபது வயது நிரம்பிய வையாபுரித் தாத்தா இலட்சுமிப்பாட்டி இருவரும் தங்களுடைய வயது முதிர்ந்த காலத்திலும் இனிய இல்லறம் நடத்தியதாக குறிப்பு வருகிறது. இலட்சுமிப்பாட்டி வையாபுரி தாத்தாவிற்கு திருமணமான நாளிலிருந்து நன்கு பணிவிடை செய்ததாக ஆசிரியர் கூறியிருப்பதும்,

மூத்த தலைமுறையினரிடையே காணப்படும் குடும்ப உறவின் வலிமையை வெளிக்காட்டப்படுகிறது.

விலை மதிப்பில்லாத அன்பு, குடும்ப உறவை பக்குவப்படுத்தி வாழ்வின் இன்பங்களை முழுமையாக ஒரு சேர நகர வைக்கிறது என்பதை ஆசிரியர் நாவல்களில் வெளிப்படுத்திக்காட்டுகிறார்.

**தந்தை மகன் உறவு**

குடும்ப உறவுகள் ஒவ்வொன்றும் அதன் பிடிப்பினையும் ஆழத்தையும் வைத்துப் புனிதமாகக் கருதப்படுகிறது. அத்தகைய ஒரு புனித உறவு தான் தந்தை - தனயன் உறவு ஒருவன் மீது ஒருவர் செலுத்தும் உறவின் புனிதம் என்பது அன்பினால் தோன்றும் செயல்பாடுகளை கணக்கிட்டு அமைகின்றன. சிலருக்கு அவ்வளவு புனிதமாகவும் வேறு சிலருக்கு உறவு நேர்மாறாகவும் காட்சியளிக்கின்ற நிலை ஏற்படுகிறது.

புனிதம், புனிதமற்றது என்பது அன்பினைக் காட்டும் இருவரிடையே காணப்படும் குணம், பண்பு, கொள்கை, பண்பாடு, அறிவு, பேச்சு, செய்கை முதலியவற்றைக் கொண்டு உருவாகும் உறவை வைத்து அளவீடு செய்யப்படுகின்றன.

நீல. பத்மநாபன் தந்தை - தனயன் உறவைப் புனித உறவாகக் கருதுகின்றார். “அந்த உறவின் ஆழத்தை தேடித்தான் ‘உறவுகள்’ நாவலை உருவாக்குகின்றார்”[37] எனவேதான் இவரது நாவல்களில் வரும் தலைமை மாந்தர்கள் அனைவரும் தந்தை என்ற உறவைப் புனிதமெனக் கருதும் நிலையில் படைக்கப்பட்டுள்ளனர். மகனுக்குத் தாய்மீதும், மகளுக்குத் தந்தை மீதும் அதிக அன்பு தோன்றும் என்பது உளவியல் கொள்கைக்கு மாறாக, தந்தை - தனையன் கையாளுகிறார். அவர் அடிமனதில் பதிந்து

விட்ட புனித உறவை சிந்தாமல் சிதறாமல் குறையாமல் முழுமையாகத் தன் நாவலில் உலா வர விட்டிருக்கிறார்.

தன் நாவல்களில் வரும் தலைமை மாந்தர்களான திரவி, அனந்தன் நாயர், ஜெயக்குமார், அசோகன், சந்திரன், ரவீந்திரன், ராஜசேகரன் அவர்களுடைய தந்தைமார்கள் துணைமாந்தர்களான மூக்காண்டி கூனாங்காணி அவரது மகன்கள், சுப்புப்பிள்ளை, சிவானந்த பெருமாள், அனந்தன் நாயர், பிரபாகரன், ராமநாதன் தந்தை ஜம்புலிங்கம், சண்முகம், சிவராஜ பிள்ளை, பசுபதி, தியாகு - தந்தை, போன்றவர்களைத் தந்தை - தனயன் உறவுக்குச் சான்றாக அமைக்கின்றனர்.

இந்த உறவு இரண்டு வகையில் அமைகின்றது

1. புனிதத் தன்மை

2.புனிதமற்ற தன்மை

**புனிதத் தன்மை**

நீல. பத்மநாபனின் நாவல்களில் வரும் தலைமை மாந்தர்கள் தங்களின் தந்தை உறவை புனிதமாகவே கருதுகின்றனர். இவ்வுறவு புனித மற்றது என்பதைத் தலைமை மாந்தர் வாயிலாக ஆசிரியர் படைத்துக் காட்டவில்லை. தந்தையின் ஆளுமைக்கு ஆட்பட்டு அவர் சொல்லுக்குக் கட்டுப்பட்டு மிகுதியான அன்பை ஒரு சேர இருவரும் பங்கிட்டு வாழ்வதுதான் புனித உறவாக கருதப்படுகிறது. புனிதமென எண்ணுகிற வகையில் நீல.பத்மநாபன் நாவல்களில் இவ்வுறவு அமைவதற்கான காரணங்கள் கீழ்க்காணுமாறு அமைகின்றன.

1. தந்தையின் ஆளுமை

2. தந்தையின் அளவில்லா அன்பு

3. தந்தையின் குண இயல்பு

4. தந்தையின் பண்பாடுமிக்க நிலை

5. தந்தையின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தல்

குழந்தை வயதிலும், பருவ வயதிலும், திருமணமான பின்பும் நிலைத்து தன்னளவில் மாறாமல் உறவு நிற்கிறது மேற்கண்ட உறவு முறைகள். பிரித்து எடுக்கும் சூழலில் இல்லாமல் ஒன்றிலிருந்து ஒன்று நீங்கா வண்ணம் நீல. பத்மநாபன் நாவல்களில் காணப்படுகின்றன. எனவே தனித்தனிக் கூறாக இவ்வுறவு நிலைகள் ஆராயப்படாமல் அனைத்தும் ஒரு சேரச் சுருக்காமல் இங்கு ஆராயப்படுகிறது. சான்றாக 'உறவுகள்' நாவலில் வரும் தலைமை மாந்தர் ராஜகோபாலன் மேலே குறிப்பிட்ட ஐந்து உட்பிரிவுகளால் முழுமையாக ஆளப்படுகின்ற நிலையில் படைக்கப்பட்டிருக்கிறான். எனவே ராஜகோபாலன் தந்தை மீது வைத்த அன்பு இங்கு விரிவாக ஆராயப்படும். மற்றவர்கள் தலைமை மாந்தர்கள் தாங்கள் தந்தையுடன் கொண்ட அன்பு சுருக்கமாகவும் ஆராயப்படுகின்றது. ஏனெனில் உறவுகள் நாவலின் மையக்கருவே தந்தை - தனயன் புனித உறவைப் போற்றுவதாகும்.

"உறவுகள் ராஜகோபாலுக்கு மையம் மட்டுமல்ல ஒரே உறவு அப்பா மட்டும்தான்"[38] என்றும் உறவின் உன்னதம் வாசகனை வலிவுடன் தாக்குவது தந்தை - தனயன் என்ற இரு பாத்திரங்களின் பிசிறற்ற வார்ப்பினாலயே"[39] என்றும் 'உறவுகள்' நாவலைத் திறனாய்ந்த வா.மூர்த்தியின் கருத்து நாவலின் மையக்கருவிற்கு இன்றியமையாதாகின்றது.

ராஜகோபாலன் மின் அலுலகத்தில் வேலை பார்க்கின்றான். சொந்த ஊரான பள்ளிகொண்ட புரத்திலிருந்து புனல்புரத்திற்கு மாற்றப்படுகிறான். புனல்புரத்தில் வேலை பார்க்கிறான். ராஜகோபாலனின் தந்தை பரமேஸ்வரன் பிள்ளை இருதய நோயினால் பள்ளிகொண்டபுரத்திலுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறார். தம்பியின் கடிதத்தின் மூலம் மூத்தவன் ராஜகோபாலனுக்குத் தகவல் அறிவிக்கப்படுகிறது. ராஜகோபாலன் பதினாறு நாட்கள் தந்தையுடன் மருத்துவமனையில் இருக்கிறான். முடிவில் தந்தை இறந்து விடுகிறார். தந்தையைப் பற்றிய தன் நினைவின் முழுச்சுமையோடு வருகிறான் ராஜகோபாலன். அவன் நினைவுகளின் வழியாக வெளிவரும் தந்தையைப் பற்றிய செய்திகள் புனித உறவிற்கு ஏற்ற களமாக அமைகின்றன.

“படியப்படிய பின்னால் சீவி வைத்திருக்கும் தலைமையிர், அதன் கீழ் விஸ்தாரமான நெற்றி..., எழுந்து நிற்கும் மூக்கு, சந்தன நிறம் யோகப்பியாசம் முதலிய உடற்பயிற்சியால் பண்படுத்தப்பட்ட ஐந்தரை அடி சரீரம்”[40] என்று ராஜகோபாலன் தன் தந்தையின் உருவ ஆளுமையில் கரைந்த உருகுவதை ஆசிரியர் காட்டுகிறார். தந்தையை பார்க்க மருத்துவமனைக்குச் சென்ற ராஜகோபாலனைப் பார்த்தவுடன் பரமேஸ்வரன் பிள்ளை முகத்தில் புன்னகை பூக்கின்றது. உடல் சரியில்லாத நிலையிலும் தன் மனைவியிடம் மகனைச் சுட்டிக்காட்டி “அவன் புனல்புரத்திலிருந்து நேரா வந்திருக்கான். ஒண்ணும் குடிச்சிருக்க மாட்டான்....”[41] என்ற அவர் கூற்று தன் மகன் மீது அவர் வைத்திருக்கும் அன்பிற்குச் சான்றாகிறது. ராஜகோபாலனின் தாய் “உன்னை பார்த்த பிறகுதான் அப்பாவின் முகத்தில் ஒரு நிம்மதி தெரியுது....”[42] என்று கூறுகிறாள் எந்தச் சூழலிலும் மகன் மீது வைத்திருக்கும் அன்பு குறைபடவில்லை என்பதைப் பரமேஸ்வரன் பிள்ளை உடல் நலமில்லாமல் இருக்கும்போதும் உணர்ந்து

கொள்ள முடிகிறது. தன் வேதனைகளையெல்லாம் மறந்து அன்பு என்ற ஒன்றை மட்டும் பரிசாக வழங்குவதென்றால் புனித உறவின் நிலை பல அடுக்குகளைக் கொண்டு காட்சியளிக்கிறது. தந்தையின் செயல், பேச்சு, அவரின் குண இயல்பை வெளிக்காட்டும் அவருடைய செயலும் பேச்சும் பண்பட்ட செயலைச் சுட்டிக்காட்டுகிறது. “எந்த விதத்திலும் யாரையும் புண்படுத்தாமல் மிகுந்த கவனத்துடன் வார்த்தைகளைத் தேடி எடுத்து பொறுமையுடன் ஸ்பஷ்டமான குரலில் உதிர்க்கும் நேர்த்தி....”[43] என ராஜகோபாலன் நினைவுகளின் வழி அவனது பேச்சு அவரது நற்பண்பின் வெளிப்பாடாக அமைவதையும், அதுவே ராஜகோபாலனை அவர்பால் ஈர்த்து வைத்திருந்தது என்பதையும் உணர முடிகிறது.

“ராஜகோபாலனின் தந்தை அவரின் மாமனாரிடம் நடந்து கொள்ளும் முறை, உற்றார் உறவினருடன் நடந்து கொள்ளும் முறை வறுமையிலும் செம்மையாகத் திகழும் பண்பு நோக்கத்தை நிறைவேற்று உறுதிப்பாடு, உண்ணும் முறை, நடக்கும் நிலை தன்னைப் புண்படுத்தியவர்களை மறந்து மதிக்கும் நிலை தந்தையின் செயல்பாடுகள் அனைத்தும் ராஜகோபாலனை ஆளுமை செய்கின்றன. அவன் பார்வையில் அப்பா ஒரு லட்சியப் புருஷன் அவருடைய தோற்றம், நடை, குளிப்பது, உறங்கும் போதும் குறட்டை விடுவது கூட அவனுக்கு அற்புதமானவை....”[44] என்று ராஜகோபாலனின் நிலையை விளக்குகிறார்.

ராஜகோபாலனின் திருமண ஏற்பாட்டில் பரமேஸ்வரன் பிள்ளை பண்பாடு மிகுந்தவராக நடந்து கொள்வது நாவலில் காட்டப்படுகின்றது. ராஜகோபாலலின் தாய்மாமன் சண்முகம் தன்மகள் ரமாவை இவனுக்கு வரன் கேட்டு வந்தார்கள். பரமேஸ்வரன்பிள்ளை தானே முடிவு செய்து அவர்களிடம் கூறியிருக்கலாம். ஆனால் தன் மகன் ராஜகோபாலனிடம் வந்து அடக்கமான குரலில் ரமாவுக்கு உன் ஜாதகத்தை

கேட்டு வந்திருக்காங்க கொடுக்கட்டுமாடா….?"[45] என்று கேட்கிறார். இந்தப் பண்பாடு மிக்க நிலை அவனை அவரது நெருக்கத்தின் பிடிக்குள் அடங்கி விடுகிறது. "அப்பா தன்னிடம் நடந்து கொண்டது போல் பெருந்தன்மையுடன் தன் மகனிடம் தன்னால் நடக்க முடியுமா?.."[46] என்று ராஜகோபாலன் நினைக்கின்ற அளவிற்கு அவன் தந்தையின் பெருந்தன்மை அமைந்திருக்கின்றது.

ராஜகோபாலன் மாமனாரும் மனைவியும் செய்த துரோகத்தினால் மனைவி சரளாவைப் பிறந்த வீட்டிற்கு அனுப்பி விட்டு அவன் விடுதியில் தங்கி இருக்கின்றான். இவளது தந்தை இவனை வீட்டிற்கு அழைக்கிறார். வீட்டிற்கு வர மறுத்து விடுகிறான். தான் வராமல் இருந்ததால் தான் தன் மாமனார் தனக்குத் தர வேண்டிய வரதட்சணையைச் சரியாகத் தருவார் என்று கூறி அது நிறைவேற தான் இங்கிருக்க வேண்டுமென்று ராஜகோபாலன் கூறுகின்றான். பரமேஸ்வரன் பிள்ளையும் அவன் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் சென்று விடுகிறார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் தன் தந்தையை பார்க்க ராஜகோபாலன் பேருந்தில் செல்கிறான். இன்னும் ஒரு மணி நேரத்தில் தன் தந்தையை பார்க்கப் போகிறோம் என்ற சூழலில் அவனது மனம் "இந்த கணத்தில் அப்பா மட்டுமே சாசுவத சத்தியமாய் தனக்குத் தோன்றும் காரணமென்ன? அவரை மீறி வேறெதையும் சிந்திக்க முடியாத அளவுக்கு தன்னை அவர் பாதித்திருக்கிறார் என்று அர்த்தமா? எல்லா அப்பா மகன் உறவுகளிலும் இப்படித்தானா?"[47] என்றும் அப்பா மட்டும் தன் மீது இவ்வளவு தூரத்துக்கு அன்பு வைக்காதிருந்தால் இப்படி அப்பாவுக்காக தன் மனம் கிடந்து அல்லல் பட்டிருக்குமா? ஒரு சிறு கறை கூட இல்லாத பாச உறவினால் அப்பா என்றதுமே தன் இதயம் நெகழ்ந்து போய்விடுகிறது!"[48] என்றும் எண்ணுகிறது.

ராஜகோபாலன் மருத்துவமனைக்குச் சென்று தன் தந்தையைப் பார்க்கிறான். தன் தந்தையின் உடல்நிலை இவனைக் கவலை அடையச் செய்கிறது. தன் வீட்டிற்கு வருகிறான் இரவு ஒரு மணியளவிலும் தூக்கம் வராமல் விழித்துக் கொண்டிருப்பதனைக் கண்ட ராஜகோபாலனின் மனைவி சரளா அவனின் தலையை தன் மடிமீது வைத்து ஆறுதல் கூறுகிறார். இவையனைத்தும் அனைத்தும் அவனின் மன அமைதிக்கு வழிவகை செய்யவில்லை. இந்நிலையில்

"அப்பா, அப்பா

இவன் அந்தரங்கத்தின் ஆழத்திலிருந்து ஒரு குரல் மேலெழும்பி வந்து கேட்கையில் ராஜகோபாலனின் விழிகள் அவனையறியாமல் நிறைந்து வழியத் தொடங்கின"[49] என்று ராஜகோபாலனின் நிலையை ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

"தனது ஏனைய உறவுகளில் அப்பா என்றும் பந்தத்தின் ஸ்தானம் எங்கே இங்கே இருக்கிறது?"[50] என்று கேள்வி கேட்டு "அப்பா தவிர வேறு வெளியுலகத் தொடர்புகள் உறவுகள் ஒன்றிலுமே தன் சிரத்தையை ஒருமுகப்படுத்த முடியவில்லையே"[51] என ராஜகோபாலன் மனம் வருந்துகின்றான்.

"தந்தை - தனயன் உறவு வெறும் பழக்க தோஷத்தால் விளையும் ஒரு சாதாரணச் சொந்தம் தானா? உறவை உதறி மீளுவது என்பது சாத்தியமாகக் கூடியதுதானா? எந்தத் தணிக்கையும் இன்றி தணிச்சையாய்ப் பூத்துக் குலுங்கும் அப்பாவின் புத்திர பாசம்"[52] எனத் தந்தை மீது வைத்திருக்கும் உறவு நிலையை அவனது மனம் எண்ணுகிறது.

ராஜகோபாலன் தன் தந்தை மீது வைத்திருக்கும் அன்பின் வெளிப்பாட்டை நினைவு கூறுதல் மூலம் வெளிப்படுத்துவதாக நீல.பத்மநாபனின் 'உறவுகள்' என்னும்

நாவல் அமைந்திருக்கின்றது. ராஜகோபாலன் தன் தந்தை மீது வைத்திருந்த அன்பின் வெளிப்பாட்டை மேற்கூறியவாறு பல்வேறு சூழ்நிலைகளில் வெளிப்படுத்துகிறான். இதற்கு அவனது தந்தையின் உயர்தரமான பண்புகள் அமைகின்றன நாவல் முழுமையும் உறவின் (தந்தை தனயன்) புனிதத் தன்மையை எடுத்துச் சொல்வதாகவே அமைந்திருக்கிறது. உறவுகள் நாவலைத் திறனாய்ந்த சண்முக சுப்பையா "ஒரு தனிப்பட்ட மனிதனின் பலதரப்பட்ட உறவுகள் ஒரு புனிதமான உறவை மையமாகக் கொண்டு சூரிய மண்டலம் போல் நம் முன் இயங்கும் பொழுது ஆச்சரியப்படாமலிருக்க முடியாது"[53] என்று வியந்து போற்றுகிறார்.

'சமர்' நாவலில் வரும் அசோகனின் தந்தை ஒரு சிறிய நிகழ்ச்சியிலேயே தான் வருகிறார் என்றாலும் உறவின் புனித நிலை தொடுவதாக அமைந்திருக்கிறது. மின் பொறியியல் பட்டதாரி பொறியாளர்கள், டிப்ளமோ பட்டம் பெற்றவர்களை விட அதிகமான சலுகைகள் வேண்டி அறுபத்து ஆறு நாட்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களைக் காவலர்கள் கைது செய்கின்றனர். கைது செய்யப்பட்டவர்கள் ஜாமீனில் வெளியில் வருகிறார்கள். மற்றவர்களையெல்லாம் வெளியில் அழைத்துச் செல்ல அவரவர்கள் குடும்பத்தார்கள் வந்திருக்கின்றனர். ஆனால், அசோகன், ரகு இருவரின் குடும்பத்தாரிலிருந்து எவரும் வரவில்லை. அப்பொழுதுதான் அசோகன் தன்னை யாரும் அழைத்துச் செல்ல வரவில்லையென்று எண்ணுகிற போது தந்தையைப் பற்றி "பாவம் அப்பா வேலையிலிருந்து கடைப்பூட்டி வீடு செல்லும் போதே மணி பன்னிரெண்டுக்கும் மேலாகிவிடும் உடம்பில் நோய் வேறு! அவரை எப்படிக் குறை கூற முடியும்!"[54] என தானாகவே சமாதானம் அடைகிறான். அசோகன் வீட்டிற்குத் திரும்பி நடக்கையில் அப்பா கவலையுடன் அவன் வீட்டு நடையில் நின்றவாறு வழியிலேயே பார்த்துக்

கொண்டு நிற்கிறார் என்பதை அசோகன் தூரத்திலேயே கவனித்து விடுகிறான். இவனை கண்டவுடன் அப்பாவின் முகத்தில் ஒரு நிம்மதிப் பெரும் மூச்சினைக் காண்கிறான்.

“டேய் - வந்தையாடா போலீஸ் ஸ்டேஷனில் உன்னை ஒன்னும் செய்யவில்லையே?”[55] நீ உள்ளே போடா போய் ஈர உடையை மாற்றி விட்டு என்னவாது சாப்பிட்டுவிட்டு படுடா இன்னைக்கி காலையிலிருந்து ஒண்ணும் சாப்பிட்டிருக்க மாட்டே”[56] என்று அசோகனின் தந்தை பரிவுடன் கூறுவதிலிருந்து தந்தை - தனயன் உறவின் உண்மையான பொருளை எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

அசோகனின் தந்தை கடையைப் பூட்டிவிட்டு பன்னிரெண்டு மணிக்கு மேல் வந்து மூன்று மணி வரை குளிரில் தன் மகனின் வருகைக்காகக் காத்திருப்பதாக ஆசிரியர் படைத்துக் காட்டுகிறார். அசோகன் சிறு வயதுடையவன் அல்லன். நான்கு குழந்தைகளின் தகப்பன். இருந்தபோதிலும் நோய்வாய்ப்பட்ட அவனது தந்தை தள்ளாடும் வயதிலும் மகனைக் காண வேண்டுமென்று தனது மகனுக்காக வீட்டில் காத்திருப்பது உறவின் உன்னத நிலையைக் காட்டுவதாக அமைகிறது.

‘அனுபவங்கள்’ நாவலில் வரும் சந்திரனின் கதையில் சிறிய நிகழ்விலேயே தான் பங்கெடுக்கிறார். சிறிய நிகழ்வில் பங்கெடுத்தாலும் மனதை உருகி விடும் ஆழமான அன்பை வெளிப்படுத்துபவராகப் படைக்கப்பட்டுள்ளார். பள்ளிகொண்ட புரத்திலிருந்து துணைபொறியாளராகப் பதவி உயர்வு பெற்று டிரான்ஸ்மிஷன் கன்ஷ்ட்ரக்ஷன் வேலைக்காக புனல்புரத்தில் பொறுப்பேற்கச் சந்திரன் வருகிறான். அவனுடன் அவன் தந்தையும் வருகிறார் பேருந்து புனல்புரத்தில் நிற்கிறது கன்னி காட்டுக்கு அதே பஸ்ஸில் போக வேண்டிய தந்தை கீழே இறங்கி இப்படி ஏறிப்போ

அந்தப் பக்கம் தான் ஊர் எனத் தன் மகனுக்கு வழிகாட்டுகிறார். நாளை வந்து உன்னைப் பார்க்கிறேன் என்று தந்தையின் சொல்லிற்க்கு சந்திரன் வேண்டாம் கடிதம் எழுதுகிறேன் எனக் கூறி விடுகிறான்.

“அவன் நடந்த பிறகும் அவர் அங்கேயே நின்றவாரு அவனையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. தனக்கு வயது முப்பத்தி மூன்று ஆகிவிட்டது. இருந்தும் அப்பாவுக்கு இப்போதும் பயம் தான் பிறந்த ஊரை விட்டுத் தான் அதிகமாக வெளியே போய் அறிந்ததில்லை. எனவேதான் இங்கே வேலை உயர்வுடன் இடமாற்றலாகி விட்டதும் கன்னிக்காட்டில் நாளை போனால் போதுமாக இருந்த தடி ஏலத்தை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு இன்று தன்னுடன் வந்திருக்கிறார். அவனுக்குத் திடீரென்று கண்கள் நிறைந்து விட்டன இப்படியொரு பாசமா?”[55] மகன் மீது தந்தை வைத்திருக்கும் பாசம் அதை மகன் உணர்ந்து கொள்ளும் நேர்த்தி என தந்தை மகன் உறவு நிலையினைப் பற்றி நீல. பத்மநாபன் தன்னுடைய நாவலின் வாயிலாக எடுத்தாளுகின்றார். தன் மகனை வழி அனுப்பத் தந்தை வருவதும் எவ்வளவு வயதானாலும் அன்பின் உறவு மாறாதது என்பதை உணர்த்துகிறது.

‘மின் உலகம்’ நாவலில் வரும் ராஜசேகரனின் தந்தை நாவலில் சிறிய இடத்தினைப் பெற்றிருந்தாலும் மதிப்பு உடையவராகவே காட்சியளிக்கிறார். மின் உலகத்தில் பணியாற்றும் ராஜசேகரனின் ஒருநாள் வாழ்வு நாவலின் மையக் கதையாகிறது. இயந்திரக் கதியில் அலுவலகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் அவன் அலுவலக வேலை முடிந்து விட்டு இரவு பத்து மணிக்கு வீட்டிற்கு வருகிறான். குளித்துவிட்டு இரவு உணவை உண்ணுகிறான். அப்பொழுது கடையில் வேலை பார்க்கும் இவனது தந்தை அவன் வீட்டின் கதவை தட்டுகிறார். கதவை திறந்து விட்டுத் தன் தந்தையை அவன் வரவேற்கிறான். தந்தை மகன் நிலையைப் பார்த்து வருந்தி “உம்

என்னடா இது.....எங்க கடை பரவாயில்லை போலிருக்கே ஞாயிற்றுக்கிழமை ஒரு நாளாவது விடுமுறை உண்டுமே.... உனக்கானால் அன்னைக்கும் தலை கொள்ளாத வேலை"[57] என்று வருந்திக் கூறுகிறார். "நான் வேணுமுன்னாஅப்பா இப்படி நேரம் கழிஞ்சு வாறேன்"[58]

ராஜசேகரன் வருந்த "அதில்லையடா ஆபிஸ் காரியமும் பார்க்கனும்.....வீட்டு விஷயத்தையும் கவனிக்கனும்"[59] என்றெல்லாம் ஆறுதல் தரும் தொனியில் அவன் தந்தை பேசுகிறார்.

அறுபது வயதுக்குப் பின்னும் வேலை பார்த்துவிட்டு பிறகு தனிக் குடித்தனம் செய்யும் மகனைப் பார்த்து ஆறுதல் கூறுகிறார். குடும்ப உறவில் தந்தை தன் மகன் மீது வைத்திருக்கும் அன்பின் நிலைப்பாட்டினை இந்நிலை எடுத்துச் சொல்வதாக அமைந்திருக்கிறது.

மகன் பாபுவிடமிருந்து கல்லூரிக் கல்விச் சுற்றுலா போவதற்காகப் பணம் வேண்டுமென்று எழுதிய அவன் கடிதச் செய்தியையும், கடை வழக்குச் செய்திகளையும் கூறிச் செலவினங்களைத் தந்தை ராஜசேகரனிடம் கூறுகிறார். தன்னிடம் பணம்தான் கேட்க வந்துள்ளார் என்று ராஜசேகரன் தவறாகப் புரிந்து கொண்டு தன் தம்பி கோபாலனிடம் கேட்க தந்தைக்குக் கோபம் வருகிறது.

"நான் இப்போ ரூபாய்க்கு வேண்டி இதை உங்கிட்ட வந்து சொல்லலேடா பெரியவன் நீ! விஷயங்களை எல்லாம் அறிஞ்சிருக்கணுமுல்ல அதனாலே தான் சொன்னேனே பண கஷ்டம் என்னோடு நிக்கட்டும்"[60] எனக் கூறி மனபாரத்துடன் கவலை தோய்ந்த முகத்தோடு இறங்கிச் செல்கிறார். ராஜசேகரன் மனம் முழுவதும் இரணங்களாய் மாறி வலி எடுக்கிறது. மற்ற எல்லா நாவல்களிலும் தலைமை மாந்தரின்

தந்தை மகனிடம் அன்பை மட்டுமே வைத்திருப்பதை அறிய முடிகிறது. இங்கு தான் தந்தையின் கோபத்தை பார்க்க முடிகிறது. குடும்ப உறவில் தந்தை - தனயன் உறவு புனிதமாக காட்டப்பட்டிருந்தாலும் மகன் தேவையில்லாமல் தந்தையை வருத்தமடையச் செய்கிறான். அதற்காக மகனுடன் வருந்துகின்ற நிலையை ஆசிரியர் சுட்டுக்காட்டுகிறார்.

ஒருவரை ஒருவர் முழுமையாகப் புரிந்து கொள்வதிலும் விட்டுக் கொடுப்பதிலும் தான் உறவின் நெருக்கம் இருக்கிறது.

**புனிதமற்ற தன்மை**

குடும்ப உறவில் கருத்து முரண்பாடுகளும் தங்களது கொள்கைகளும் உறவில் விரிசலை உருவாக்க காரணமாக அமைகின்றன. அன்பு என்பதை இரு சாராரும் பகிர்ந்து கொள்ளாத நிலையும், பேச்சும் செயல்பாடும் இரண்டும் இரு பக்கங்களிலும் அதன் வழி உணரப்படாத நிலையும் சுயநலத்தின் குறுக்கீடும் புனிதமற்ற உறவாகத் தந்தை - தனயன் உறவு உருவாகக் காரணங்களாக அமைகின்றன. தந்தை மகன் உறவுகளும் நீல. பத்மநாபன் நாவல்களில் காண நேர்கின்றன.

நீல. பத்மநாபன் நாவல்களில் துணை மாந்தர்களாக வரும் மூக்காண்டி, கூனாங்காணி அவரது மகன்கள், அனந்தநாயர், பிரபாகரன், ராமநாதன், தந்தை சிவராஜ பிள்ளை, பசுபதி போன்றவர்கள் இவ்வகையைச் சேர்ந்தவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். இவர்களது உறவு புனிதமற்ற தன்மையாவதற்கான காரணங்களை கீழே காணலாம்.

1.பாலுணர்வினால்

2.நல்ல தன்மை இழந்ததனால்

3.சுயநலத்தினால்

4.தவறான செய்கையினால்

இக்காரணங்களால் தான் தந்தையின் அன்புக் கட்டுக்குள் மகன் வராமல் அவரிடம் இருந்து விலகி தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்வதும் அதன் மூலமாக தந்தை - தனயன் உறவு சீர்கேடு ஏற்படுகின்றது.

**மகனுடைய பாலுணர்வினால் ஏற்படும் சிக்கல்கள்**

கூனாங்காணி மூக்காண்டிச் செட்டியாரின் ஒரே மகன், மூக்காண்டிச் செட்டியார் பெயராலும், புகழாலும், பணத்தாலும் செல்வாக்கு மிகுந்தவராகக் கருதப்படுகிறார். பண்பட்ட குடும்பத்தில் பிறந்த கூனாங்காணி தன் நிலையைத் தலைகீழாகத் தன் பாலுணர்வின் விளைவால் மாற்றிக் கொள்கிறான். கூனாங்காணி மூக்காண்டிச் செட்டி தவமிருந்து பெற்ற பிள்ளை என்பதனால் அவனைச் செல்லமாக வளர்க்கிறார். பதினெட்டு வயதான பின்பும் தன்னுடைய குடும்ப சூழ்நிலையை உணராமல் இரண்டு பாலியல் தவறுகளைக் கூனாங்காணி செய்கிறான். ஒன்று தன் தங்கை உண்ணாமலைக்குக் கல்வி கற்பிக்க வரும் ஏலி ஆசிரியையுடன் கள்ளத்தொடர்பு புரிகிறார். மற்றொன்று தன் தோட்டத்தில் வேலை பார்க்கும் பாட்டக்காரன் பாச்சப்பிள்ளையின் மகளோடு தொடர்பு கொண்டு ஒரு குழந்தைக்குத் தந்தையாகிறான். முதல் தவறில் ஏலி வீட்டுக்கு வராமல் தடுத்து நிறுத்துவதால் விளைவுகள் விபரீதமாகவில்லை. இரண்டாவது தவறு, ஊர் முழுவதும் அறிந்தும் எவர் சொல்லியும் கேட்காமல் பாசப்பிள்ளையின் மகள் அம்முக்குட்டியுடன் வாழ்ந்ததால் மூக்காண்டிச் செட்டியார் அவமானம் தாங்காமல் இறந்து விடுகிறார்.

இங்கு தந்தை தனயன் உறவின் விரிசலுக்கு மகனின் பாலுணர்வே முழுமையான பங்கினை வகுக்கிறது. தந்தைக்குக் கட்டுப்படாமல் கூனாங்காணி தானாக திரிய பாலுணர்வே காரணமாகிறது. கூனாங்காணி தன் தந்தையின் அறிவுரைப்படி நடந்திருந்தால் தந்தை மனமொடிந்து இறந்திருக்க மாட்டார். தந்தையின் பேச்சுக்கும் மதிப்பிற்கும் தான் கட்டுப்படவேண்டுமென்ற எண்ணம் மகனிடம் இல்லாமையே தந்தை தனயனின் உறவு விரிசல் அடையக் காரணமாய் அமைந்து விடுகிறது.

நற்குணங்களும், தீய குணங்களும் எல்லா மனிதரிடையேயும் விரவியே கிடக்கின்றன. ஆனால் மனிதருக்கு மனிதர் அளவு வேறுபடுகிறது. சிலருக்கு குழந்தைகள் எல்லாம் நல்லவர்களாகவே அமைகின்றனர். வளர்கின்ற அல்லது நடந்து கொள்கின்ற விதத்தில் தான் அவர்களின் தன்மை மாறுகின்றது. தீய குணங்களினால் தந்தையின் உறவைத் துண்டித்து விடுகின்ற நிலையினைக் கூனாங்காணியின் மகன்கள் மூலம் நாவலாசிரியர் விவரிக்கின்றார்.

கூனாங்காணிக்குப் பொணமு, அனஞ்சப் பிள்ளை என இரண்டு மனைவியர். இருவருக்கும் அவர் வழியில் மாலுப்பிள்ளை, பிச்சைப்பிள்ளை, ஆண்டிப்பிள்ளை என்ற மூன்று மகன்கள் உண்டு. “பேருக்கு மட்டும் தான் மூணு மகன்களும். இடம் கொடுத்துக் கொடுத்து இப்ப மூணு பேரும் கழுவாய் போனாங்க”[61] என்று உண்ணாமலை ஆச்சியின் கூற்று “புள்ளைகளுக்கு கூடெ சில சமயம் சண்டை நடப்பதைக் கேட்டா தகப்பனுக்கு மேலே மகன் இப்போ கையை வச்சிருவாண்ணு தோணும் அப்படி புள்ளைகளுக்கு சத்தம் தான் எட்டு வீடு கேட்க ஓங்கி நிக்கும்”[62] என்ற திரவியின் கூற்றும், கூனாங்காணி தன் மகன்களிடம் கொண்ட உறவு நிலையை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. தனது இறுதி காலத்தில் கூனாங்காணி இவற்றுக்கெல்லாம் காரணம் தான் என்று பொருளில் தன் தங்கையிடம்,

“உம் தகப்பன் சின்னப் பிராயத்திலே சப்பட்டையா நடந்திருந்தால் அந்தப் பாட்டை தன்னைச் சொல்லி மகன் அறியப்படாது ஆமா அறிஞ்சா இப்படித்தான்....ஹூம்..”[63] என்று அவர் கூறிய கூற்று குடும்ப உறவின் நிலை புனிதமற்று போவதற்கான காரணங்களைக் கூறுகின்றது.

தந்தையின் அன்பு நிலையை விட அவர் சேமித்து வைத்திருக்கும் பொருளாதார வாழ்வினையே மகன்களால் பிரதானமாகக் கருதப்படுகின்ற நிலை காணப்படுகின்றது.

கூனாங்காணியின் மகன்கள் மூவரும் தன் தந்தையின் அன்பினை முழுமையாக உணர்ந்திருப்பார்களெனில் தம் தந்தையுடன் சண்டையிட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள் இங்கு குடும்ப உறவில் விரிசல் அடைவதற்கு தந்தையின் குணங்களே காரணமாக அமைகின்றன.

சுயநலத்தினால்மகன் தன் வாழ்வை நன்றாக அமைத்துக் கொள்ள வேண்டுமென்ற சுயநலத்தினால் தன் தந்தையின் தியாக உணர்வை மதிக்காமல் நடந்து குடும்ப உறவைப் புனிதமற்றதாக மாற்றுவதை பள்ளிகொண்டபுரத்தில் வரும் துணை மாந்தரான பிரபாகரன் மூலம் புரிந்து கொள்ளலாம். அனந்தன் நாயரின் மனைவி கார்த்தியாயினி குழந்தைகளையும் இவரையும் விட்டுவிட்டு விக்ரமன் தம்பியுடன் ஓடி விடுகிறாள். அன்றிலிருந்து அனந்தநாயர் ஏறத்தாழ பதினைந்து வருடங்களாகக் குழந்தைகளின் அன்பு நலனை முன்னிட்டு மறுமணம் செய்து கொள்ளாமல் வாழ்கிறார். இவர்களுக்காகவே வாழ்கின்ற தியாக வாழ்வை உணராமல் அவரது மகன் பிரபாகரன் தந்தையை எதிர்த்து நிற்கிறான். பொருளாதாரத்தில் உயர்ந்து நிற்கின்ற சிறுவயதில் தங்களை எல்லாம் விட்டுவிட்டு இன்னொருவனிடம் ஓடிப்போன தாய் கார்த்தியாயினியுடன் வாழ விரும்புகிறான். இங்கு சுயநலமே தந்தை தனையன் உறவை

விரிசலாக்குகிறது. அனந்தன்நாயரின் மகன் பிரபாகரன் தந்தையின் தியாக உணர்வை மறந்து தாயுடன் வாழத் திட்டமிடுகிறான். தன் தாய் செய்த தவறைக் கூட நியாயப்படுத்திப் பேசுகிறான்.

“போதின உலக அனுபவம் இல்லாத பேதையான அவங்க மனசைப் புரிஞ்சுக்க இவரால் முடியவில்லை”[64] என்றும் “அவுங்க தேர்ந்தெடுத்த வழி எவ்வளவு உயர்ந்தது”[65] என்றும் “அம்மா முதல் மாப்பிள்ளையின் கூட வசிப்பது என்பதும், ரெண்டாவது மாப்பிள்ளையின் கூட வசிப்பது என்பதும் எல்லாம் எனக்கு ஒண்ணுதான்…”[66] என்று தன் தந்தையின் எதிரில் தாய் செய்த தவறைத் தவறில்லை என்று நியாயப்படுத்தி பேசுகின்ற பேச்சுக்கு அனந்தநாயருடைய பொருளாதார வாழ்வு அடித்தளமாக அமைகின்றது.

பிரபாகரன் படிக்கின்ற காலத்தில் அவனுக்குக் கார்த்தியாயினி செய்த பண உதவி வேலை வாங்கித் தர ஏற்பாடு செய்த நிலை பணக்கார இடத்தில் திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்தல் போன்றவற்றால் பிரபாகரன் தன் தாயுடன் வாழ விரும்புகின்றான். அவனது சுயநல நிலை தெளிவாக உணர்த்தப்படுகின்றது. தந்தையின் தியாக உணர்வை மதிக்காவிட்டாலும் பரவாயில்லை ஆனால் அவரைப் பற்றி இவன் தந்தை தங்களுக்காக மறுமணம் செய்து கொள்ளாத நிலையை இழிவாக பேசுகின்றான்.

பள்ளிகொண்டபுரம் நாவலைத் திறனாய்வு செய்த தி. ஜானகிராமன் “இக்காலத்தில் பிள்ளைகள் தகப்பனாரை இப்படியும் பேசுவார்கள் என்றும் தெரிந்து கொண்டேன்”[67] என்கின்றார். பகட்டுக்கும், பதவிக்கும், ஆசைப்படுகிறவனாக மகன் இருப்பதால் தந்தை மகன் உறவு புனிதத் தன்மையிலிருந்து குறைந்து விடுகிறது.

**தாய் மகள் உறவு**

எல்லாப் பற்றுக்களையும் ஒருவன் களைத்து விட்டாலும் தாய் மீது வைக்கும் பற்றினை நீக்க இயலாது என்பது உலக நடைமுறை போற்றுதற்குரிய நினைக்க நினைக்க நெஞ்சையும் உணர உணர உணர்வையும் ஆளுகின்ற உறவு, தாயின் உறவு, தாயுடன் மகன் கொண்டிருக்கின்ற உறவை முழுமையான அளவில் ஆசிரியர் எங்கும் விளக்கமுற எடுத்துரைக்கவில்லை.

தாயின் அன்பினையும் உணர்வினையும் ஊடாடி நிற்கும் கதாபாத்திரத்தை ஆசிரியர் படைத்துக் காட்டவில்லை. தந்தையின் உறவிற்குக் கொடுத்த முக்கியத்துவத்தைத் தாயின் உறவிற்கு ஆசிரியர் வழங்கவில்லை. ஆனால் தாயுடன் உறவை முறித்துக் கொள்ளும் மகள் பாத்திரத்தைக் கதைக்கேற்ப ஆசிரியர் எடுத்துக்காட்டியிருக்கிறார். பள்ளிகொண்டபுரத்தில் வரும் துணை மாந்தரான கார்த்தியாயினி - மாதவி இதற்குச் சான்றாகத் திகழ்கின்றனர். அனந்தன் நாயர் கார்த்தியாயினியின் மகள், மாதவி கணவன், மகன், மகள் இவர்களை விட்டுவிட்டு வேறொருவருடன் சென்று வாழ்க்கையை நடத்தும் தன் தாய் கார்த்தியாயினியுடன் மாதவி எந்தச் சூழலிலும் உறவைப் புதுப்பித்துக் கொள்ளவில்லை. உறவை முறித்துக் கொண்டு விடுகிறாள்.

உறவின் முறிவுக்குத் தாய் தன் தந்தையை விட்டுவிட்டு வேறொருவருடன் வாழ்வதே காரணமாக அமைகிறது. இதுவே இவளை, "மகள் மாதவி வெறுக்கக் காரணமாக அமைவதை "வெளியுலகத்திலிருந்து நான் அறிஞ்சிக்கிட்ட விவரங்களும் தாய்ப் பாசத்தை இழப்பும் என பிஞ்சு மனசில் அம்மா மீது ஒரு வெறுப்பையும் ஆத்திரத்தையும் உண்டாக்கி விட்டிருந்தன"[68] என்று மாதவி கூறுவதன் மூலம் தாய்ப்பாசம் கிடைக்கப்பெறாமையும் தாயானவள் தன்னைப் பலமுறை நாடி வந்த

போதும் உறவை ஏற்றுக்கொள்ள இயலாத மனநிலையை மகளுக்கு உண்டாகிவிட்டன. இதனை "இன்னொருத்தனுக்கு சமூக அந்தஸ்தில் மயங்கிய நீங்க அவன் கூட கள்ளக்களவில் ஓடி வரத்தான் எங்களை மூணு பேரையும் தூண்ணு உதறி தள்ளினீங்க!"[69] என்ற மாதவியின் கூற்றின் மூலம் உணர்ந்துக் கொள்ள முடிகின்றது. நீல. பத்மநாபன் கார்த்தியாயினி தன் மகள் மாதவியுடன் உரையாடுகின்ற பொழுது நான் உங்களையெல்லாம் கூடக் கூட்டிக்கிட்டு வராதது தப்புண்ணா சொல்றே என்று அவள் கேட்கின்ற பொழுது, அதற்கு "அப்படிச் செஞ்சிருந்தால் இதுக்குள்ளே என்னைக்கோ நாக்கைப் பிடுங்கிக்கிட்டு நான் செத்திருப்பேன்"[70] எனக் கூறுகிறார். கார்த்தியாயினி தன் கணவர் அனந்தன் நாயரை விடுத்து விக்ரமன் தம்பியுடன் சென்றுவிட்டதால் மாதவிக்குத் தாயின் அன்பு கிடைக்கப்பெறாததால், மாதவி மனவருத்தத்திற்கு உள்ளாகின்றாள். கார்த்தியாயினி தானே முன்வந்து மாதவியிடம் தன் உறவைப் புதுப்பித்துக் கொள்ள விரும்பும் போது அவ்வுறவினை மாதவி விரும்பாமல் ஒதுக்கித் தள்ளுகிறாள்.

மாதவியின் அண்ணன் பிரபாகரனுக்கு அவன் தாய் செய்த செயல் தவறாகத் தெரியவில்லை. ஆனால் மாதவிக்குத் தன்னுடைய தாய் செய்த செயலினை விரும்பவில்லை என்று கூறலாம்.

**பாட்டி பேரன் உறவு நிலை**

தலைமுறை இடைவெளியிருந்தும் 'அன்பு' என்ற ஒன்று இருவரையும் நெருங்கி உறவாட வைக்கிறது. தன்னுடைய கணவன் பெயரைப் பேரனுக்கு இடுவதால் பாட்டிக்குப் பேரன் மீது அதிகமான அன்பு தோன்றுகிறது. தன்னுடைய சின்னச் சின்ன ஆசைகளை எல்லாம் பாட்டி நிறைவேற்றி வைப்பதால் பேரனுக்கு பாட்டியின் மீது அன்பு தோன்றுகிறது. உறவின் ஆழம் பன்மடங்காகிறது.

நீல.பத்மநாபனின்‘தலைமுறைகள்’ நாவலில் வரும் உண்ணாமலை திரவி ‘உறவுகள்’ நாவலில் வரும் சிவகாமி ராஜகோபாலன் பாட்டி பேரன் உறவிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் திகழ்கின்றனர். தன்னுடைய பாட்டி பழங்கதைகளைக் கூறுவதாலும் தன்னிடம் மிகுதியான அன்பு காட்டுவதனாலும் பேரன் பாட்டி உறவு முறை மேலும் வலுப்பெறுகின்றன.

**பழங்கதைகளைக் கூறுதல்**

கதை சொல்வதன் மூலமே பாட்டியின் உறவு பேரனுக்குத் தொடக்கமாக அமைகிறது. பாட்டி பேரனிடம் அவனது குடும்பக்கதை, குலக்கதை, புராணக்கதை என பல வகையான கதைகளை பேரனுக்கு கூறுகின்றார்.

‘தலைமுறைகள்’ நாவலில் இரணியில் செட்டிமாரின் பழங்கதை, புராணக்கதை, தன் குடும்பத்தின் கதையில் வருகின்ற துணை மாதிரியின் கதைகள் முதலியவற்றை பாட்டியின் மூலமாகத்தான் திரவி அறிந்து கொள்கின்றான்.

“ஆச்சியிடமிருந்து தன் இளம் வயதிலேயே தனக்குக் கிடைத்த பொது அறிவு எவ்வளவு! “அருமை அருமையான கதைகள், ஊர் உலகைப் பற்றிய குடும்பத்தைப் பற்றிய, நிஜ சம்பவச் செய்திகள் எத்தனை எத்தனை!”[71] என்று திரவி கூறுவதில் இருந்து கதை நிகழ்ச்சிகளைப் பாட்டி அவனுக்கு எப்படி எல்லாம் சொல்லி இருக்கின்றாள் என்பதை அறிய முடிகிறது.

‘உறவுகள்’ நாவலில் வரும் சிவகாமி பாட்டி, பேரன் ராஜகோபாலுக்கு அவன் தந்தை, தாத்தா முதலிய மூதாதையர்கள் பட்ட துன்பங்கள், வாழ்ந்த முதலியவற்றையெல்லாம் பேரனுக்கு கதையின் மூலம் உணர்த்துகின்றாள்.

“தான் பிறக்கும் முன், பிறந்தும் அறிவு வரும் முன் நிகழ்ந்த அப்பாவின் அப்பா ராஜகோபாலப் பிள்ளை, தாத்தா சம்பந்தப்பட்ட சமாச்சாரங்கள், தன் அப்பாவை பற்றிய தகவல்கள் இவையெல்லாம் அனேகமாய் இந்த சிவகாமி பாட்டி வழியாக தனக்குக் கிடைத்த கேள்வி ஞானம் தானே”[72] என்று ராஜகோபாலன் எண்ணிப் பார்ப்பதன் மூலம் பாட்டி பேரன் சமூக உறவின் தொடக்கநிலை கதைக் கூற்றின் மூலமே தொடங்கி வளர்கின்ற நிலையை அறிய முடிகிறது.

**தன்னிடம் அதிகமான அன்பைக் காட்டுதல்**

பாட்டியின் அன்பு எல்லா பேரன்களிடமும் இருந்தாலும் குறிப்பிட்ட ஒரு பேரனிடம் மட்டுமே மொத்தமாக சிலச் சமயங்களில் குவிந்து விடுகிறது. தன் கணவன் பெயரை வைத்திருப்பதாலோ மூத்த பேரன் என்ற நிலையினாலோ, பாட்டி அதிக அளவில் பாசத்தை வெளிக்காட்டுகிறாள். ‘தலைமுறைகள்’ நாவலில் திரவி தன் மீது ஆச்சி அன்பு வைத்த மூன்று நிகழ்ச்சிகளை நினைவுகூர்ந்து பார்க்கின்றான். திரவிக்கு ஒரு சின்ன மூக்கடைப்பு வந்துவிட்டதால் அதிலிருந்து அவன் குணமாகி எழுந்து, நடமாடுவது வரைக்கும், ஊன் உறக்கம் இல்லாமல் அவன் அருகிலேயே உட்கார்ந்து கொள்ளும் ஆச்சி, ஒரு நாள் நடுராத்திரி எல்லோரும் உறங்கிக் கிடக்கையில் வெந்நீர் அடுப்பிலிருந்து வீடு தீப்பற்றிக் கொள்ளும் போது தொட்டியிலிருந்து தன்னை மட்டும் தூக்கிக்கொண்டு ஓட முடியாமல் ஓடும் ஆச்சி, திரவிக்கு ஏழு வயதாகும் பொழுது அவன் பள்ளிக்கூடத்துக்கும் தக்கலைப்பள்ளிக்கும் இடையில் நடந்த பேட்மிட்டன் விளையாட்டு முற்றிலும் அடிதடியான பொழுது செய்தி அறிந்த ஆச்சி உடுத்தியிருந்த கரிச்சேலையோடு தூக்க முடியாத யானைக்காலையும் தூக்கிக்கொண்டு பேரனை காப்பாற்ற பள்ளிக்கூடத்திற்கு விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்த ஆச்சி என்ற மூன்று நிலைகளும் பாட்டி பேரன் மீது வைத்த அன்பு நிலைக்கு சான்றுகள் ஆகின்றன.

‘உறவுகள்’ நாவலில் வரும் சிவகாமிப் பாட்டியும் ராஜகோபாலன் மீது உயிரையே வைத்திருக்கிறாள் “தன் மீது எந்த சுயநலமும் இன்றி அன்பு வைத்த ஜீவன் …” தன் “சுபாவ உருவாகுதலில் இந்தப் பாட்டி வகித்த முக்கியமான பங்கு..”[73] என்று சிவகாமிப் பாட்டி இறக்கும் தருவாயில் ராஜகோபாலன் நினைக்கின்ற நினைவலைகள் பாட்டி பேரன் மீது வைத்திருக்கும் அளவற்ற அன்பிற்குச் சான்று காட்டிச் செல்கின்றன.

**உடன்பிறப்பினர் உறவு**

அண்ணன் - தம்பி, அக்காள் - தம்பி, அண்ணன் - தங்கை ஆகிய உடன்பிறப்பு உறவுகள் எல்லாம் செழித்தோங்கி வளர்கின்ற நிலையும் சில பட்டுப் போகின்ற நிலை நடைமுறை வாழ்வில் காணக்கூடியவனாகும். உடன் பிறந்தோர் நெருங்கி வாழ்வதும் பிரிந்து வாழ்வதுமான நிலை சமூகத்தில் காணப்படுகிறது. திருமணத்திற்கு முன்பு நெருங்கிய நிலையில் இருக்கும் உடன் பிறந்தோர் தங்களுடைய திருமணத்திற்குப் பின் விலகி இருக்கும் நிலையும் சமூக அமைப்பில் காணப்படுகின்றன.

ஒரே தாயின் வயிற்றில் பிறந்தாலும், இவ்வுறவு இருவரின் மன மாறுபாடுகளாலும், குண வேறுபாடுகளாலும், காலச்சூழலும் மாறும் என்பதை உணர்ந்து செயல்படுகின்ற பொழுதுதான் உடன் பிறந்தோர் உறவு ஒரு வலுவான உறவாக திகழ முடியும்.

‘தலைமுறைகள்’ நாவலில் வரும் நாகம்மை மகப்பேற்றுக்கு தகுதியற்றவள் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கணவனால் அவளது பிறந்த வீட்டிற்கு அனுப்பப்படுகிறாள். மருத்துவ பரிசோதனைக்கு நாகம்மை உட்படுத்தப்படவில்லை. நாகம்மையின் மீது மற்றவர்கள் காட்டும் பரிவுணர்ச்சியை போல் உடன் பிறந்தவர்கள் திரவியிடம் காட்டி இருந்தால் வலுப்பெற்ற உறவாக அமைந்திருக்காது. திரவியின் உடன் பிறந்தவர்கள்

மகப்பேற்றுக்குத் தகுதியற்றவள் என்பதை மருத்துவப் பரிசோதனை மூலம் உறுதி செய்ய வேண்டாம் என எண்ணுகின்றான். தன் குடும்ப மரபுகளிலிருந்து மீறி நாகம்மையை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துகிறாள். அவள் குழந்தைப்பேற்றிற்குத் தகுதியானவள் என்பதை அறிகிறான். நாகம்மையின் கணவன் சிவானந்தபெருமாளிடம் தன் உடன் பிறந்தவள் மருத்துவப் பரிசோதனை செய்த நிலையைக் கூறி அவள் குற்றமற்றவள் என உணர்த்துகிறான். நாகம்மையை மனைவியாக ஏற்றுக் கொள்ளும்படி சிவானந்தப் பெருமாளிடம் வாதாடுகிறான். சிவானந்த பெருமாள் ஏற்றுக்கொள்ளாத சூழலில் தன் விளையாட்டுத் தோழன் குற்றாலத்திற்கு மறுமணம் முடித்து வைக்க முயல்கிறான். தன் வீட்டினர் முதலில் எதிர்ப்பு தெரிவித்த போதும் முடிவில் சம்மதம் கொள்ள வைக்கிறான். மூன்று கட்ட நிலையில் அவன் ஈடுபட்ட நிலை உறவின் வலுவூட்டுதலுக்குத் துணை நிற்கிறது. நாகம்மை பிறந்த வீட்டிற்குக் கணவனால் அனுப்பி வைக்கப்படுகின்ற நிலைக்கு மூத்த தலைமுறையைச் சேர்ந்த ஆச்சி கடவுள் மீது பழி போடுகிறாள். இரண்டாவது தலைமுறையைச் சேர்ந்தவர்கள் மௌனம் சாதிக்கிறார்கள். மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்த திரவி தன்னை ஒரு நிலைப்படுத்தித் தான் புதிய தலைமுறையைச் சேர்ந்தவன் என்பதை நினைவிற் கொண்டு மாற்று வழிகாண முயற்சியில் ஈடுபடுகிறான். இங்குதான் உறவின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் தோன்றி உறவினை வழிப்படுத்துகின்றன.

கூனாங்காணியின் சொத்தினை மையமாக வைத்து அவரது இரு மனைவியரும் மகன்களும் கைவிட்டு விட்டுச் சென்ற நிலையில் கைகொடுக்க எண்ணுகிறாள் அவரது தமக்கை உண்ணாமலை, உடன் பிறந்தவன் துன்பப்படுகின்ற பொழுது அதைத் தீர்க்கும் வகையில் அவரது இரண்டாவது மனைவி அணஞ்சிக்கு நல்ல அறிவுரைகள்

கூறி அவருடன் இருக்க வைக்க முயல்கின்றான். சொத்துப் பங்கீட்டின் போது இரு மனைவியரும் அவர்கள் வழி மகன்களும் சண்டையிட்டு கூனாங்காணியைத் தனிமைப்படுத்தி விடுகின்றனர். இந்நிலையில் தமக்கை உண்ணாமலை கூனாங்காணியின் மனைவி அணஞ்சியோடு மோதுகிறாள். அம்முயற்சியும் பயனளிக்காத சூழலில் தன் உடன் பிறந்தவரான கூனாங்காணியைத் தன் வீட்டிலேயே தன்னுடன் இருக்க வற்புறுத்துகிறாள்.

வந்த உறவும், தோன்றிய உறவும் தவிக்க விட்ட நிலையில், உடன்பிறந்த உறவு உதவி கரம் நீட்டுவது உறவின் வலிமையை விளக்கிக் காட்டுகிறது.

**வலுவில்லாத உறவு**

ஒருவரை ஒருவர் குறை கூறியும் ஒருவர் வாழ்வில் ஒருவர் தலையிடாமலும் ஏதோ கடமையாகச் செயல்படுவதும் மேலோட்டமாக உறவை வளர்த்துக் கொள்வதும் வலுவில்லாத உறவாகும். பள்ளிகொண்டபுரம் நாவலில் வரும் மாதவி, பிரபாகரன், அனந்தன் நாயர், நாராயண பிள்ளை, பகவதிகோயில் தெரு, நாவலில் வரும் சாம்பவசிவம், வைத்தியநாதன் வலுவில்லாத உறவிற்குச் சான்றாகின்றனர்.

பள்ளிகொண்டபுரத்தில் வரும் தலைமை மாந்தரான அனந்தநாயரின் உடன் பிறந்தவர்களான நாராயணப்பிள்ளை, மதுசூதனன், கல்யாணி ஆகிய மூவரும் வலுவில்லாத உடன் பிறந்தார் உறவுக்குச் சான்றாய்த் திகழ்கின்றனர். வாழ்வில் ஏதோ ஒரு முறை சந்தித்தவர் அடுத்த முறை சந்தித்தால் என்ன நிலையில் உறவு நிலை நிற்கமோ அவ்வகையான ஒரு நிலைதான் இங்கும் காணப்படுகிறது. ஒருவரையொருவர் சந்திக்காததாலும் ஒவ்வொருவரும் அவரவர் போக்கின் பிடித் தத்தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டதாலும் உறவில் ஒரு நெருக்கம் ஏற்படவில்லை.

அனந்தன் நாயருடைய மகன் பிரபாகரன், மகள் மாதவி, அண்ணன் தங்கையினுடைய உறவு கருத்து முரண்பாடுகளாக வலுவில்லாத உறவாக அமைந்து விடுகிறது. தாய் கார்த்தியாயினி தங்களை விட்டு வேறொருவருடன் ஓடிப்போனதற்குத் தந்தையின் அலட்சியத் தன்மையே காரணம் என பிரபாகரன் குற்றம் சாட்டுகின்றான். ஆனால் மாதவி தாய் செல்வாக்கான வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு வேறொருளுடன் ஓடிப்போனாள் என்ற குற்றச்சாட்டைக் கூறுகிறாள். தாய் ஓடிப்போன பிறகு தந்தை பதினைந்து வருடங்களாகத் தங்கள் நலனை முன்னிட்டு மறுமணம் செய்து கொள்ளாமல் மாதவி தியாக வாழ்க்கை வாழ்வதாகப் பூரித்து பெருமை அடைகிறாள். ஆனால் பிரபாகரன் தன் தந்தையின் தியாகத்தைத் போற்றாமல் அலட்சியப்படுத்தி அதனை கேலிக்குரிய பொருளாக்கி விடுகிறான். அண்ணன் தங்கை இருவரும் எதிர் திசையில் நிற்பதால் தந்தையின் பின்னால் மாதவியும் தாயும் பின்னால் பிரபாகரனும் நின்று ஒருவரோடு ஒருவர் எதிர் அணியில் நிற்பதால் உடன்பிறந்தவர் உறவு வலுவில்லாமல் அமைந்துவிடுகிறது.

**மாமனார் மருமகன் உறவு**

திருமணத்திற்கு முன்பு வரை மனைவி குறித்துப் பயம் கொள்வதைப் போலவே அவர்கள் குடும்பம் குறித்தும் மிகுந்த எதிர்பார்ப்பும் பயமும் கலந்த ஒரு தன்மை நினைவில் நிற்கக்கூடும். இவையும் மாமனார் குறித்து மிகுந்த எதிர்பார்ப்பு தோன்றும். மாமனார் மருமகன் உறவில் மாமனாரின் அன்பும் பண்பும் பெருந்தன்மையும் தன்னை மருமகனாக ஏற்றுக்கொண்டு பழக வேண்டும் என்ற எண்ணமும் மருமகனுக்கு இருக்கும். தன் மாப்பிள்ளையை கைவிட்டு விட்டு தன் குடும்பத்தில் இருப்பது போலவே தன் குடும்பத்தில் மருமகன் கலந்து பழகிச் செயல் புரிய வேண்டும் என்ற எண்ணம்

மாமனாருக்குத் தோன்றும். இத்தன்மையைச் சிலர் பெற்றும் சிலர் பெறாமலும் இருக்கும் மரபினை உலகியலில் காணமுடிகின்றது.

நீல.பத்மநாபன் நாவல்களில் மாமனார் மருமகன் உறவைப் பெரும்பாலும் இனிய உறவாகக் காட்டவில்லை. கசப்பும், வெறுப்பும் விரவிக் கிடைக்கின்ற உறவாகத்தான் நீல.பத்மநாபனின் நாவலில் உறவினைக் காட்டுகிறார்.

நீல.பத்மநாபனின் நாவல்களில் வரும் தலைமை மாந்தர்களான ராஜசேகரன், விசுவம், அசோகன் முதலியோரும், துணைமாந்தரான சேஷன் ஆகியவர்களும் அவர்களது மாமனார்களுக்கும் காணப்படுகின்ற உறவு, பாராட்டத்தக்கதாய் நாவல்களில் அமைந்திருக்கவில்லை. மருமகனால் பாதிக்கப்படுகின்ற மாமனார் நாகருப்பிள்ளையை தலைமுறைகள் நாவலில் காணலாம்.

மருமகன் மாமனார் உறவும் புனித உறவுதான் என்பதை ‘தலைமுறை’ நாவலில் வரும் தவசிப்பிள்ளை, நாகருப்பிள்ளை வாயிலாக அறிய முடிகிறது. மாமனார் மருமகன் உறவின் நிலைகளை ஆசிரியர் நீல. பத்மநாபன் தன் நாவலில் படைத்துக் காட்டுகிறார். மூன்று வகையரை வேறுபட்ட நிலைகளுக்கான காரணங்களை கீழே பகுத்துக் காணலாம்.

**வெறுப்பு சார்ந்த சார்பு நிலை**

மகளோடு நன்கு வாழவேண்டும் என்ற எண்ணமின்றி கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றாமல் தானே தடைக்கல்லாக இருக்கின்ற மாமனார் நிலையினை ராஜகோபாலன், ராஜசேகரன், விசுவம் அசோகன் ஆகிய கதை மாந்தர்களின் மாமனார்களாகப் படைக்கப்பட்ட கதை மாந்தர்களின் மூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது. வரதட்சணையே உறவு முறிவுக்கு மூலக்காரணமாகிறது. மாமனாரின்

பொறுப்பற்ற பேச்சாலும், பொறுப்பற்ற செயலாலும் உறவு முறியும் நிலை முறையே அசோகன், சேஷன் வாழ்விலும் காணலாம். முடிவுக்கு மூன்று காரணிகள் காரணங்களாக அமைகின்றன.

1. வாக்குறுதியை நிறைவேற்றாமை

2.பொறுப்பற்ற முறையில் பேசுதல்

3. பொறுப்பற்ற செயலை மேற்கொள்ளுதல்

மாமனார் மருமகன் உரையாடல்களைக் காண்கின்ற பொழுது மாமனாரின் பேச்சு தேவையற்றதாகத் தோன்றுகிறது. நல்ல மழையில் நனைந்து வந்துள்ளான் அசோகன். போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வேறு வந்திருக்கிறான். மணி இரவு மூன்று மணி. இந்த சூழ்நிலையைக் கவனித்து அவனுக்கு எரிச்சல் மூட்டுவது என்பது உறவை முறித்துக் கொள்ள வைக்கின்ற நிலையைத் தோற்றுவிக்கிறது. உறவின் முடிச்சுகள் தேவையற்ற பேச்சினால் அவிழத் தொடங்குகின்றன. மாமனாரின் பொறுப்பற்ற பேச்சே உறவின் விரிசலுக்குக் காரணமாய் அமைகிறது.

**பொறுப்பற்ற செயலை மேற்கொள்ளுதல்**

‘பகவதிகோயில் தெரு’ நாவலில் வரும் துணைமாந்தரான சாம்பசிவம் தன் பொறுப்பற்ற செயலால் மருமகன் சேஷன் உறவை முறிக்கும் வழியை நாடுகிறார்.

சேஷன் எந்த விதமான வம்பு தும்புகளுக்கும் போகிறவன் இல்லை. தானுண்டு தன் காரியம் உண்டு என்று இருக்கின்றவன். எப்பொழுதும் முகத்தில் நிறைந்திருக்கும் புன்னகை சாம்பசிவத்தின் மகள் மல்லிகாவை மணந்த பின் அவன் வாழ்க்கை அடியோடு மாறிவிட்டது. எப்பொழுது பார்த்தாலும் ஏதாவது காரணம் சொல்லிக்

கொண்டு மாமனாரும் மாமியாரும் அவன் வீட்டில் போய் ஏதாவது குறைகளைச் சொல்லி சேஷனிடம் ஊதிக்கொண்டே இருப்பார்கள் என்ற செய்தியை தலைமை மாந்தரான பகவதி மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

சேஷன் பகவதிக்கு பூஜை செய்ய ஆசைப்படுகிறான். தங்கள் குடும்பம் மட்டும் போதும் என்கிறான் ஆனால் மனைவி மாலதி இருவர் பெற்றோர்களையும் அழைக்க வேண்டும் எனக் கூற மனைவியின் சொல்படி அழைக்கப்படுகிறார்கள். சேஷன் தாய் பூஜையில் கலந்து கொள்கிறார். ஆனால் மாலதியின் பெற்றோர் யாரும் வரவில்லை. இதுவே மாமனார் மருமகன் உறவில் விரிசலை ஏற்படுத்துகிறது.

பொறுப்பற்ற மாமனாரின் செயல் பழித்துரைக்கத் தக்கதாய் அமைகிறது. சேஷன் மனைவி, குழந்தைகள் எல்லாவற்றையும் சேஷனுக்கு எதிராகத் திருப்பிவிட முயல்கின்ற செயல்கள் முடிவுக்கு வழிவகுக்கின்றன. வாழ்க்கை நலம் வேண்டித்தான் பூஜை நடத்தப்படுகிறது. ஆயிரம் மனக்கசப்புகள் இருந்தாலும் மகள் வாழ்வு நன்றாக இருக்க வேண்டும் என்று எண்ணாமல் பூஜையில் கலந்து கொள்ளாத பொறுப்பற்ற செயலாக அமைகிறது. “என் சாவுக்குக் காரணம் என் அருமார்ந்த மாமியாரும் மாமனாரும் என்று சூஸைட் நோட் எழுதி வைச்சிட்டு கொஞ்சம் தூக்க மாத்திரைகளை சாப்பிட்டு விட்டால் என்னான்னு கூட இப்போதெல்லாம் தோணுது”[74] என்ற சேஷன் வருந்துகின்ற அளவுக்கு கொடுமை உடையதாக உறவு அமைந்திருக்கிறது.

**மருமகனால் பாதிக்கப்படும் மாமனார்**

மருமகனால் பாதிக்கப்படும் மாமனார் நிலையை ‘தலைமுறைகள்’ நாவலில் வரும் நாகருப்பிள்ளை சிவானந்த பெருமாள் வழி காண்கிறோம். நாகருப்பிள்ளையின் இரண்டாவது மகள் நாகம்மையை திருமணம் செய்து கொள்ளும் சிவானந்த பெருமாள்

ஆறு மாதம் கழித்து அவளைப் பிள்ளைப் பேற்றுத் தகுதியற்றவள் என்னும் காரணத்தினால் பிறந்த வீட்டிற்கு அனுப்பி விடுகிறான். மாமனார் நல்லவராக இருந்தும் மருமகன் இழிச்செயலால் உறவு முறிந்துவிடுகிறது.

மாமனார் மருமகன் உறவு அன்பினால் பிணைக்கப்படுகின்ற நிலையினைத் தவசிப்பிள்ளை நாகருப்பிள்ளையின் மூலம் நாம் காண்கிறோம். எவ்விதமான குற்றம் குறைகள் கூறாமல் செயல்களின் பெருந்தன்மைகள் மூலம் இவ்வுறவும் புனித உறவே என்ற கூறும் வண்ணம் தவசிப்பிள்ளை செயல்படுகிறார். தன் மாமனாரின் துன்பத்தைத் துடைக்க வேண்டித்தானே சிவானந்தப் பெருமாளைக் கண்டு நாகம்மையை ஏற்றுக் கொள்ளச் செய்கிறார்.

**முடிவுரை**

நீல.பத்மநாபன் தன் நாவல்களில் கணவன் மனைவி, மகன் - தந்தை, தாய்- மகள், பாட்டி - பேரன், உடன்பிறப்புகள் மாமனார் - மருமகன் போன்ற பலவிதமான உறவு நிலைகளை எடுத்துக்காட்டுகிறார்.

சிக்கல்களால் பிளவின்மை, சிக்கல்களால் பிளவுடைமை, சிக்கலில்லாத நிலை என்ற நிலைகளைக் கணவன் - உறவில் வெளிப்படுத்துகிறார்.பொருளாதாரம், உடல்நிலை, பாலுணர்வு முதலியனவற்றில் இடர்பாடுகள் ஏற்பட்டாலும் கணவன் மனைவி உறவு இணைந்திருக்கும் நிலையையும், இணையாமல் இருக்கும் நிலையையும் காட்டுகின்றார்.

மகன் - தந்தை உறவினை ஆசிரியர் மிகப் புனித உறவாகப் படைத்துக் காட்டுகிறார். இது ஆசிரியர் அவரது தந்தை இருவருக்கும் சிறுவயது முதல் ஏற்பட்ட பாசப்பிணைப்பின் உளவியல் தாக்கமாகக் கூட இருக்கலாம். இதற்கு மாறாக புனிதமற்றத் தன்மையை உடைய நிலையினையும் எடுத்துக்காட்டுகிறார்.

தாய் - மகள் உறவினைச் சுமுகமான அமைப்பாக ஆசிரியர் காட்டிச் செல்லவில்லை. பேரனுக்குப் பழங்கதைகளைக் கூறுகின்ற நிலையை மையமாக வைத்து பாட்டி - பேரன் உறவையும் இரணியில் செட்டிமார்களின் இன வரலாற்றையும், மூத்த தலைமுறையினரின் கடந்த கால வரலாற்றையும் பேரனுக்குப் பாட்டி கூறுகின்ற முறையில் நாவலில் உறவு நிலை அமைந்திருக்கிறது.

உடன் பிறந்தோரின் உறவினை வலுப்பெற்ற நிலை, வலுவடையாத நிலை என்ற இரண்டு நிலைகளில் படைத்துக் காட்டுகிறார். வலுவடையாத உறவிற்குத் தலை மாந்தரின் தனிமை உணர்வே காரணமாய் அமைகின்றது.

மாமனார் - மருமகன் உறவினை கசப்பும், வெறுப்பம் விரவிக்கிடக்கின்ற உறவாகத்தான் தம் நாவலை படைத்துக் காட்டுகிறார்.

குடும்பம் எனும் அமைப்பில் இருந்து மனித சமூகம் எனும் பரந்த அமைப்பு வரை விரிவு பெறுகிறது. ஆதலின் குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது. வாழும் காலம் முழுவதும் தொடர்ந்து வேறு எந்த நிறுவனமும் மனிதனை சமூக வையப்படுத்தும் பணியைச் செய்ததில்லை எனக் கூறலாம்.

நம்மைச் சுற்றி மனிதர்கள் நல்லுறவுகள் இருந்தால் தான் வாழ்வின் அனைத்து சிக்கல்களையும் நம்மால் எளிதாக கையாள முடியும். வாழ்க்கை எப்போதும் நேர்கோடாக இருப்பதில்லை என்பதனை, ஆசிரியர் தன்னுடைய படைப்புகள் வழியாக குடும்ப சுமையின் அடிப்படைத் தேவை ஆழமான புரிதல் தான் என்பதை உணர்ந்து செயல்படுதல் நன்று என தன்னுடைய நாவல்களின் வாயிலாக படைத்துக் காட்டுகிறார்.

**அடிக்குறிப்புகள்**

1. ஆறு.இராமநாதன், நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், ப.57

2. கலைக்களஞ்சியம், தொகுதி 4, ப.8

3. தமிழ் அகராதி, ப.349

4. பக்தவச்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.418

5. செல்வராசு. நா, பண்டைத் தமிழர் திருமண வாழ்க்கை, ப.93

6. கல்பகம், இரா சமூகவியல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், ப.57

7. கோ.வே. கீதா தமிழ் நாவல்கள் ஓர் அறிமுகம், ப.205

8. நீல பத்மநாபன், தலைமுறைகள், ப. 222

9. மேலது ப.223

10. நீல பத்மநாபன், உறவுகள், ப.79

11. மேலது, ப.379

12. மேலது, ப.390

13. மேலது, ப.391,

14. மேலது,ப.392 ,

15. மேலது, ப.393,

16. மேலது, ப.393

17. நகுலன், நீல பத்மநாபனின் புதிய நாவல், உறவுகள் ஒரு கருத்தரங்கு, சதங்கை பிப்ரவரி 1976, ப.16

18. கல்பனாதாசன், உறவுகள், கண்ணதாசன், மே 1977

19. தி.க. சிவசங்கரன் நீலபத்மநாபனின் உறவுகள் பற்றி என் கருத்துக்கள் புதிய வானம், ஜூலை 1976, ப.4

20. நீல பத்மநாபன், முறிவுகள் போதையில் கரைந்தவர்கள், ப.213

21. மேலது, ப.214

22. மேலது, பக்.214,215

23. நீல. பத்மநாபன் தலைமுறைகள், ப.108

24. மேலது, ப.109

25. நீல பத்மநாபன், பள்ளி கொண்டபுரம், பக்.274- 275

26. மேலது, ப.276

27. மேலது, ப.335

28. மேலது, பக். 54, 55

29. மேலது, ப.170

30. மேலது, ப.174

31. நீல பத்மநாபன், தலைமுறைகள், ப.282

32. மேலது, ப.163

33. மேலது, ப.42

34. மேலது, ப.171

35. மேலது, ப.296

36. நீல.பத்பநாபன், உதயதாரகை, ப.58

37. நீல பத்மநாபன், உறவுகள், முன்னுரை, ப.7

38. வ.மூர்த்தி, நீல. பத்மநாபனின் உறவுகள், கணையாழி பிப்ரவரி 1978, ப.28

39. மேலது, ப.23

40. மேலது, ப.21

41. மேலது, ப.55

42. மேலது, ப.56

43. மேலது, ப.22

44. செ.ஜேசுதாசன், நீல.பத்மநாபனின் புதிய நாவல், உறவுகள் ஒரு கருத்தரங்கு, சதங்கை பிப்ரவரி 1976, ப.16

45. நீல பத்மநாபன், உறவுகள், ப.284

46. மேலது, ப.285

47. மேலது, ப.42

48. மேலது, ப.43

49. மேலது, ப.66

50. மேலது, ப.179

51. மேலது, ப.239

52. மேலது, ப.258

53. சண்முக சுப்பையா, நீல. பத்மநாபனின் புதிய நாவல் உறவுகள் கருத்தரங்கு உறவுகள், சதங்கை, பிப்ரவரி 1976, ப.19

54. நீல. பத்மநாபன், சமர், யாத்திரை அனுபவங்கள், ப.29

55. மேலது, ப.30

56. மேலது, ப.31

57. மேலது, ப.39

58. நீல பத்மநாபன், மின் உலகம், ப.115

59. மேலது, ப.116

60. மேலது, ப.115

61. மேலது, ப.119

62. நீல. பத்மநாபன், தலைமுறைகள், ப.137

63. மேலது, ப.141

64. மேலது, ப.142

65. நீல. பத்மநாபன், பள்ளி கொண்டபுரம், ப.313

66. மேலது, ப.314

67. மேலது, ப.317

68. தி. ஜானகிராமன், நீல பத்மநாபனின் பள்ளி கொண்டபுரம், கணையாழி, மார்ச், 1971

69. நீல. பத்மநாபன், பள்ளிகொண்ட புரம், ப.294

70. மேலது, ப.299

71. மேலது, ப.31

72. நீல. பத்மநாபன், தலைமுறைகள், ப.379

73. நீல பத்மநாபன், உறவுகள், ப.25

74. நீல பத்மநாபன், பகவதி கோயில் தெரு, ப.246

# இயல் - 3

# நீல பத்மநாபன் புதினங்களில் பண்பாட்டுக்கூறுகள்

# இயல் 3

## நீல. பத்மநாபன் புதினங்களில் பண்பாட்டுக் கூறுகள்

சமூகங்களில் காணப்படும் மனிதனின் நடத்தைகளும் நெறிமுறைகளும் பண்பாடு என்று அழைக்கப்படுகிறது. மனிதன் சமூகத்தின் ஒரு அங்கம். மனிதன் பேசும் மொழி, அணியும் ஆடை, உண்ணும் உணவு, வாழும் முறை, செய்யும் பணி, எண்ணங்கள் ஆகியவை சமூகத்தின் பண்பாட்டை வெளிப்படுத்துவதாக காணப்படுகின்றன.

பண்பாடு என்பது விழுமிய பண்புகளால் நிரம்பப் பெற்று குடும்பத்தாருடனும், உலகத்தாருடனும் பொருந்தி அன்புற்று வாழும் மனப்பக்குவத்தைக் குறிக்கின்றது. ஒரு உறவின் தொடக்கம் ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து குடும்பமாக வாழ முற்படும்போது தொடங்குகிறது. பண்பாடு என்பது பொதுவாக மனித செயல்பாட்டுக் கோலங்களையும், அத்தகைய செயல்பாடுகளுக்குச் சிறப்பு தன்மைகளையும், முக்கியத்துவத்தையும் கொடுக்கும் குறியீட்டு அமைப்புகளையும் குறிக்கின்றது.

பண்பாடு என்ற பொருளில் சால்பு, சான்றாண்மை, குணநலம் முதலிய பல சொற்கள் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. உலக நடைமுறைக்கு ஏற்றாற்போல் ஒத்து நடப்பதே பண்பாடு என்று சங்கப் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

### தமிழ் இலக்கியங்கள் கூறும் பண்பாடு

“பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்”[1] என்னும் கலித்தொகை பாடல் வரி பண்பாட்டினைப் புரிந்து கொள்ள முடிகின்றது. மனிதர்களின் ஐம்புலன்களையும் மனதையும் சீலம், நெறி, ஒழுக்கம் முதலிய உணர்வுகளால் உழுது பண்படுத்தி

நல்வாழ்க்கைக்கு உரியதாக செய்யும் முயற்சியைப் பண்பாடு எனலாம். பண்பாடு பற்றிய கருத்துக்கள் “திருக்குறளில்” ‘பெருமை’ என்ற அதிகாரத்தில்

“பணியுமாம் என்றும் பெருமை சிறுமை

அணியுமாம் தன்னை வியந்து”[2]

“அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்

குற்றமே கூறி விடும்”[3]

என்று பணிவுடைமையையும், பிறர் குற்றம் காணாமலும் சிறந்த பண்பாடாக குறிப்பிடப்பட்டுள்ளன.

‘சான்றாண்மை’ - என்ற அதிகாரம் முழுமையும் மாந்தரின் பண்பாட்டை விழித்துரைப்பது அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்தும் பொருந்தியவரே சான்றோர்! அவர்களே பண்பாட்டாளர் எனப்படுகின்றனர். திருக்குறளில் பண்புடைமை என்ற அதிகாரம் முழுமையும் பண்பாட்டின் விளக்கமாகவே உள்ளன.

ஒருவனுக்கு அறிவுடைமை தேவையானதுதான் பண்பாடு அமையவில்லை என்றால் அறிவினால் பயனில்லை. அறிவை விட பண்பாட்டிற்கு திருவள்ளுவர் முதன்மை தந்துள்ளமை இதன் மூலம் அறியலாம். படிக்காத பாமரர்கள் கூட பண்பாடு படைத்தவர்களாக விளங்குகின்றனர். பண்பாடு இல்லாத வறிய அறிவினரை மரம் என்று வள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

“அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்

மக்கட்பண் பில்லா தவர்”[4]

மக்களாக இருந்தும் மக்களுக்கு உரிய பண்புகளை பெறாதவர்களை உயர்திணையாய் கருதாமல் அஃறிணையாகவே தொல்காப்பியரும் கருதினார். பண்பாடு படைத்த மாந்தரையே மக்கட் பண்புடையார் என்று மதித்துள்ளார். மனப்பக்குவம் பல நிலைகளில் பண்பாடாக வெளிப்படுகின்றது. பொறுமை, சால்பு, விட்டுக்கொடுத்தல், புறங்கூறாமை, தற்சார்பு, பெருமிதம் கொள்ளாமல் என்ற பல வடிவங்களில் ஒருவரின் பண்பாடு புலப்படுகின்றது. இத்தகைய பண்பாடு வாய்ந்த நல்லோர் நட்பினையே நாலடியார் சான்று பரிந்துரைக்கின்றது.

**தமிழர் பண்பாடு**

தமிழர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பண்பாட்டிலும், நாகரிகத்திலும் உலகிலுள்ள மற்ற இனத்தவர்களையும் விடமுழு வளர்ச்சி அடைந்தனர் என்பதை பல சான்றுகள் ஆதாரங்களாக விளக்குகின்றன.

மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழர்கள் மனித வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்து வாழ்ந்தவர்கள் ஆவர். தமிழ் மொழி தோன்றிய காலம் முதல் மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், வாழ்வியல் முறைகள், அரசு, ஆட்சிமுறை, போர், வீரம், காதல் போன்றவை வெளிப்படுத்தி நிற்கின்றது. பாவாணர் கூறுவது போல, பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம், நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை, முன்னது ‘அகக்கூறு’ பின்னது ‘புறக்கூறு’ நாகரிகம் சேர்ந்த பண்பாடும் உண்டு. நாகரிகம் இல்லாத பண்பாடும் உண்டு. தமிழர் பண்பாடு இவ்விரண்டிலும் மேம்பட்டவைகளாகத் திகழ்கின்றன. தமிழர் வாழ்வை அகவாழ்வு, புறவாழ்வு என இரண்டாக இலக்கணம் வகுத்து வாழ்ந்தமை பண்பாட்டின் சிகரமாகக் கருதப்படுகிறது. தான் தோன்றிய கால மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், வாழ்க்கை

முறை, அரசு, அமைச்சர், ஆட்சிமுறை, போர், வீரம், காதல் போன்றவற்றை நமக்கு வெளிக்காட்டுகின்றன.

தமிழர் பண்பாடு பல காலமாக மேம்படுத்தப்பட்ட அம்சங்களைக் குறித்து நின்றாலும், தொடர் மாற்றத்துக்கு உட்பட்டு நிற்கும் இயங்கியல் பண்பாடே தமிழர் பண்பாட்டின் அமைப்பொழுங்கானது. அடிப்படையில் இரண்டு அம்சங்களைக் கொண்டதாகும். ஒன்று அதனளவில் சார்புடையது, மற்றொன்று உலகளாவிய அமைப்பியல்புகளோடு பொருந்தக்கூடியது. தமிழ்ப் பண்பாட்டின் உருவகத்தைத் தரக்கூடிய புறக்கூறுகள் பண்பாடு சார்ந்தும் அவற்றின் அகக்கூறுகள் உலகளாவிய அமைப்புகளோடு ஒத்திசைவு பெறுவதும் இதன் உட்பொருளாகும்.

பண்டைய தமிழர்களின் வீரத்தைத் தொல்காப்பியப் புறத்திணை இயல் எடுத்துக் கூறுகின்றது. பெரும்பாலும் தற்காப்பு முறையில் தான் போர்கள் நடைபெற்றது. தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்ற நால்வகைப்படைகளும் போரில் ஈடுபடுத்தப்பட்டன. வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை என்ற நான்கு புறத்திணை பகுதிகளிலும் தமிழர்களின் போர் முறைகள் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன.

வீரர் அல்லாதவர்கள், புறங்காட்ட ஓடுவார், புண்பட்டார், முதியோர், இளையோர், இவர்கள் மீது படைக்கலம் செலுத்தலாகாது என்பதும் புறநானூற்றால் அறிய முடிகிறது.

மனித இனம் எப்படி வாழ வேண்டும் என்பதனைவிட எப்படி வாழக்கூடாது என்று வாழ்வியலைக் கற்றுக் கொடுத்த தமிழரின் பண்பாட்டு அடிச்சுவடுகள் இன்றும் உலகம் முழுவதிலும் தடம் பதித்து இருக்கிறது என்றால் உயர்ந்த சிந்தனைகளையும்,

உயர்வான எண்ணங்களையும் சமூகம் என்னும் மணற்பரப்பில் விதைத்துச் சென்றிருக்கிறது என்று கூறலாம். பண்பட்ட மண்ணில்தான் செடிகளும், கொடிகளும் துளிர்விடும் என்பது போன்று சமூகம் பண்பட வேண்டும் என்றால் நல்ல பண்பாடு இருக்க வேண்டும் என்பதனை தமிழினம் இத்தரணிக்கும் கற்றுக் கொடுத்து இருக்கிறது.

நாடாண்ட மன்னன் முதல் குடிசையில் வாழும் சாதாரண குடிமகன் வரை குலம் காக்கும் பண்பாட்டை கட்டிக்காத்து பார்போற்ற வாழ்ந்த இனம் தமிழினம். வரலாற்றுப் பதிவு இலக்கியங்கள், தொடங்கி இன்றைய இணையம் வரைக்கும் தமிழரின் பண்பாடும் பதிவுகள் தன்னைக் காட்சிப்படுத்தி நிற்கிறது. நாகரீகம் என்ற பெயரில் தலைமுறை கடந்துவிட்டாலும் தமிழரின் பண்பாட்டு எச்சங்கள் வாழ்வியலின் ஒவ்வொரு தளத்திலும் பின்தொடர்ந்து வருகிறது.

நீல. பத்மநாபன் புதினங்களில் எவ்வாறெல்லாம் பண்பாட்டுக் கூறுகள் வெளிப்படுத்தப்படுகின்றன என்பதை அவருடைய படைப்புகள் மூலமாக வெளிப்படுத்தின்றனர். தலைமுறைகள், பள்ளிக்கொண்டபுரம், உதயத்தாரகை, நேற்றுவந்தவன் போன்ற நீல. பத்மநாபனின் புதினங்களின் வாயிலாக பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்தும் விதத்தினைப் பற்றி இவ்வியல் ஆராய்கின்றது.

**நீல. பத்மநாபன் நாவல்களில் பண்பாடும் மொழியும்**

சிறுபான்மையினரான செட்டிமார்கள், பெரும்பான்மையினரான கேரளா சமூகத்தில் திட்டுத்திட்டான தீவுகளாக வாழுகின்றனர். நீல. பத்மநாபன் கையாளும் தமிழ்ச் சொல்லாட்சியும் அத்தகையது. செட்டியார் சமூகத்தின் கொச்சைத் தமிழ் எத்தனையோ தலைமுறைகளுக்கு முன் இடம் பெயர்ந்து தொடர்பற்று தனித்து வாழும் நிர்பந்தத்தால், தனி வளர்ச்சி பெற்று, தனித்து, மாறுபட்ட செட்டியாரின் கொச்சை

மொழியாகும். மேலும் கேரள சமூக சமுத்திரத்தின் இடையில் தீவாக வாழும் நிர்ப்பந்தத்தால் மலையாள மொழியின் பாதிப்பையும் தான் மேற்கொண்ட கொச்சை மொழி, ஒருபுறம் தமிழும் மலையாளமும் கலந்தும், மற்றொரு புறம் இரண்டுமே அற்ற ஒரு விசேஷ ரகமான கொச்சை மொழி ஆரம்பத்தில் சிறிது சிரமம் தந்தாலும் படிக்கப்படிக்க நம்முடன் அன்னியோன்ய உறவுகொண்டு விடுகிறது. தமிழ் மொழிக்கு மாத்திரமல்ல தமிழ் இலக்கியத்திற்கும் நாவல் சமூகத்தையே அதன் முழுமையில் நம்பிக்கைகள், சடங்குகள், விளையாட்டுகள், பேசும் மொழி, வாழும் சூழ்நிலை, காலம், வாழ்க்கை நோக்கு, பாதிப்புகள், பலவீனங்கள் ஆகிய எல்லாம் அடங்கிய முழுமையில், ஒரு சமூக இயல் நிபுணனின் பார்வை ஆழத்தில், மனித இயல் நிபுணனின் பார்வை விஸ்தாரத்தில், மன இயல் நிபுணனின் பார்வை ஆழத்தில், மனித இயல் நிபுணனின் பார்வை அக்கறையில், கலைஞனின் பார்வை தனி விசேஷத்தில் பலபரிமாணங்களில் நமக்கு பண்பாட்டுக் கூறுகளை அறிமுகப்படுத்துகிறது.

குமரி மாவட்டத்தில் வாழும் குடிப்பெயர், சமூகமான இரணியல் செட்டியார், அவர்களின் வாழ்க்கைமுறை சடங்கு சம்பிரதாயங்களை திரவி என்ற ஒரு கதாபாத்திரத்தைச் சுற்றியே ஆசிரியர் நகர்த்தியிருக்கிறார். மிதமான மலையாள வாசத்தோடு அப்பேச்சு வழக்குதான் என்ன அழகு…..!

நாவல், கட்டுரை இவைகளுக்கு விதிக்கப்பட்ட மொழிநடையை மாற்றி வட்டார வழக்கில் அளித்திருப்பது கதைக்குத் தூண்களாக அமைகின்றன.

**சடங்குகளும் நம்பிக்கைகளும்**

வழிபாடு மற்றும் வாழ்வியல் நிகழ்ச்சிகளில் மரபு வழியாகக் கடைபிடிக்கப் பெரும் நிகழ்வுகளை அல்லது செயல்பாடுகளைச் சடங்குகள் என்று அழைக்கிறோம்.

சடங்குகளுக்கு அடிப்படையாக விளங்குவது நம்பிக்கையேயாகும். இவற்றினைச் செய்தால் நன்மை விளையும் என்றோ, இதனைச் செய்யாவிட்டால் தீமை விளையும் என்றோ, மக்கள் கருதும் நிலையில் உருப்பெற்றதே சடங்குகள் ஆகும். வாழ்வின் அனைத்துக் கூறுகளிலும் சடங்குகள் இடம் பெற்றுள்ளன.

“சடங்கென்பது நிர்ணயிக்கப்பட்ட விரிவான நடத்தைகளின் வடிவமாகும். இது தனிமனிதனின் சுயமான ஆக்கமாகவோ, பண்பாட்டினுடைய தனிச்சிறப்புக் கூறுகளாகவோ அமையும். பண்பாட்டின் ஏனைய அம்சங்கள் இன்றிச் சடங்குகளிலே வெவ்வேறு நாகரீகங்களின் நம்பிக்கைகளும், இலட்சியங்களும் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றன.”[5] என்று ரூத் பெனிடிக்ட் கூறியதாக சு.சக்திவேல் நாட்டுப்புற இயல் ஆய்வு என்னும் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

புனித பொருட்களின் முன்னாள் மனிதன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் எனக் கூறும் ஒழுக்க விதிகளே சடங்குகள் என்று டூர்கைம் எனும் சமூகவியல் பேரறிஞர் கூறியதாக சு.சக்திவேல் நாட்டுப்புற இயல் ஆய்வு என்னும் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய சடங்குகள் சங்ககாலத்திலும் வழக்கிலிருந்துள்ளன. இச்சடங்குகளை மங்கல நிகழ்வான திருமணத்தின்போதும், அமங்கலமான இறப்பின் போதும் பண்டையத் தமிழர் செயல்படுத்தியுள்ளனர்.

இன்றும் வழக்கில் திருமணம், குழந்தைபேறு வளைகாப்பு, பூப்புனித நீராட்டு, இறை வழிபாட்டு சடங்கு போன்ற சடங்குகள் மங்கல- சடங்குகளாகவும், இறப்பு சடங்கு போன்றவை நடைபெறுகிறது. தொன்றுதொட்டு நம் சமூகத்தில் நீல. பத்மநாபன் படைப்புகளிலும் சடங்குகளை காண முடிகிறது. (தலைமுறைகள்).

**இறப்புச் சடங்குகள்**

இறப்புச் சடங்கு செய்வதில் குலம் சார்ந்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறையில் செய்வார்கள். அவ்வகையில் நீல. பத்மநாபன் படைப்புகளில் பெரும்பாலும் செட்டியார் சமூக மக்களின் (தலைமுறைகள்) வாழ்வியல் சார்ந்தப் பதிவுகளாக இருப்பதால் குறிப்பிட்ட சாதியை சார்ந்தவர்கள் இறப்புச் சடங்கு செய்பவர்களாக இருக்கின்றார்கள்.

சங்க இலக்கியத்தில் இறப்பு பற்றிய செய்திகள் அதிகமாகக் காணப்படுகின்றன. அவற்றைக் கொண்டு பாடைக்கட்டல், உடலை எரித்தல், தாழியில் புதைத்தல், வாளால் கீறிப் புதைத்தல், மாரடித்துப் புலம்புதல், சப்பறை முழங்கல் போன்ற பழக்கவழக்கங்கள் அன்றையக்காலத்தில் இருந்துள்ளதை அறிய முடிகிறது.

**பழக்க வழக்கங்கள்**

பண்பாட்டுக் கூறுகளுள் பழக்கவழக்கம் என்பது வாழ்வியலை பிரதிபலிக்கும் பாங்குடையது. பழக்கவழக்கம் என்பது வட்டாரத் தன்மையுடையது. ஒரு குடும்பம் அல்லது குழு அல்லது தனிமனிதர் ஆகியோருக்கு உரியதாய் மரபு சார்ந்தும் புதுமை மிக்கதுமாய் மாறி மாறி வரும் தன்மையுடையது. மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், தனக்குரிய வாழ்வியல் முறைக்கு கட்டுப்பட்டு நடக்கவும், மக்களிடம் உள்ள உறவு முறைகளைப் பலப்படுத்தவும், முன்னேற்றங்கள் மதிக்கவும் பழக்கவழக்கங்கள் தோன்றின என்றே கூறலாம்.

**பழக்கம் - வழக்கம் சொற்றொடர் விளக்கம்**

பழக்கம் என்ற சொல் 'பழகுதல'; அல்லது 'பயிற்சியாதல்; என்றப் பொருளில் பண்டைய தமிழிலக்கியங்களில் பயின்று வந்துள்ளது. குறிப்பாக புறநானூற்றில்

"கேடல் மாத்திரை அல்லது யாவதும்

காண்டல் இல்லாது யாண்டு பல கழிய

வலுவின்று பழகிய கிழமையர் ஆயினும்"[6]

"நல்ல பழக்கங்களை அமைத்துக் கொள்ளக் குழந்தை பருவமே ஏற்றது" என்பது உளவியலாளரின் கூற்று."[7] நல்லப் பழக்கங்களை பெற்றோர்கள், ஆசிரியர்கள் போதிக்கின்ற அறிவுரையும், கல்வியும் தான் எதிர்காலத்தை ஒரு சிறந்த நன்னடத்தை உள்ளனவாக உருவாக்கிக் காட்டும் என்ற கருத்தை இலக்கியம் வலியுறுத்துகின்றன.

"தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்"[8]

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?"[9]

என்ற பழமொழி இதற்குச் சான்றாக அமைகின்றன.

**பழக்க வழக்கங்கள்**

'பழக்கம'; என்ற இச்சொல் பொருள் நிலையில் தனிமனிதனின் நடத்தைச் செயல் முறையினை உணர்த்துவதாக அமைகிறது. 'வழக்கம'; என்ற சொல் வழி வழியாகப் பின்பற்றுதல் அல்லது வழங்கி வருதல் என்ற வழக்கத்தின் அடிப்படையிலே இலக்கண நூல்களில் பயின்று வந்துள்ளது. இதனைத் தொல்காப்பியர்,

"முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை"[10] எனக் குறிப்பிடுகிறார். சங்க இலக்கியங்களில் ஒன்றான பரிபாடலில் வழக்கம் என்ற சொல் 'வழங்கி வருதல்' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**சமூகமும் மொழியும்**

தன் சிந்தனையாற்றலை எழுத்தாளர்கள் கையாள்வதற்கு மொழிநடைத் துணைபுரிகிறது. அவர்கள் கையாளும் மொழிநடைக்கு ஏற்ப படைப்புகளும் உயிரோட்டம் பெறுகின்றன. வட்டாரப் புதினங்கள் ஏனைய புதினங்களில் இருந்து தம்மை வேறுபடுத்திக் காட்டும் தம்மை உடையன. புதிய தரிசனங்கள், சாய்வு நாற்காலி, இலை உதிர் காலம் ஆகிய நீல. பத்மநாபனின் புதினங்களில் வட்டார வழக்கும் மொழிநடையும் கையாளப்பட்டுள்ளது. வட்டார வழக்கு மொழிநடையில் அமைந்துள்ள புதினங்கள் படித்து இன்புறத்தக்கதாக இருக்கிறது. மொழியினைக் கருவியாக கொண்டு படைக்கப் பெறுகின்ற கலை இலக்கியமாகும். இலக்கியத்தின் மூலம் படைப்பாளியின் உயர்வுகளை இனங்கண்டு கொள்ள உதவும் வகையில் அமைவது நடையாகும்.

இலக்கிய உலகில் அதிகமாகப் பயின்று வரும் ஒரு சொல் நடை. ‘நடை’ என்பதற்கு இலக்கண இலக்கிய நூல்கள் பல பொருள்களைத் தருகின்றன. ‘நடை’ என்ற சொல்லுக்கு நிகரான ஆங்கிலச் சொல் ஸ்டைல் (Style) என்பதாகும். இது ஸ்டைல்ஸ் (Stylus) என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்ததாகும். சினஸ்டி செண்டி (Genusdicendi) என்ற சொல் இலக்கிய நடையை குறிப்பதாக இருந்தும் ஸ்டிலஸ் என்ற சொல்லே காலச்சுழற்சியின் விளைவாகப் படைப்பாளியின் நடையைக் குறிப்பதாக அமைகிறது”[11]

“நடைக்கு கூத்து, செலவு, செல்வம், தொடர்பு, நடத்தை, பழக்கம், முறைவழக்கம், வழி, வாயிற்கடவை என்றெல்லாம் பொருள் கூறுகிறது. இராமசாமி நாயுடு தமிழ்ப் பெயராகராதி பலவற்றையும் கூறினாலும் அவற்றுள் ‘தொடர்பு’ என்பது மட்டுமே நடைக்கு பொருந்துவதாக அமைகிறது”[12]. படைப்பாளர் ஒரு படைப்பை தனக்கே உரிய மொழி நடையில் கையாள்வது சிறப்பாகும்.

**வட்டார வழக்கு மொழிநடை**

"படைப்பாளி குறிப்பிட்ட வட்டாரப் பகுதியையே தனது களமாகத் தேர்வு செய்து, அப்பகுதியின் இன, வர்க்கப் போராட்டங்களை, வரலாற்றை, சிக்கல்களை எடுத்துக் காட்டுவதுண்டு. குறிப்பிட்ட பகுதியின் களத்தின் நாடோடிச் செய்திகளை, வாழ்க்கை அமைப்பை, அவ்வட்டாரத்திற்கே உரிய மொழியின் உதவியுடன் காட்டுவதுண்டு. இப்படைப்பாளிகளை வட்டார நாவலாசிரியர்கள் என்றும் அவர்களின் படைப்புகளை வட்டார நாவல்கள் என்று குறிப்பர்."[13]

தமிழ் பண்பாட்டு வரலாறு என்ற நூலில் செ.வைத்தியலிங்கம் எழுதியிருப்பதன் மூலம் வட்டாரப் புதினங்களின் கதைக்களமாக தேர்வு செய்யப்படும் இடமும் பயன்படுத்துகின்ற மொழிநடையும், அவ்வட்டாரம் குறித்த கலாச்சாரப் பண்பாட்டுக் கூறுகளையும் பழக்கவழக்கங்களையும் உள்ளடக்கி உருவாக்கப்படும் என்பதை அறியலாம்.

வட்டார வழக்குச் சொற்கள் பண்பாட்டை, கலாச்சாரத்தை அடையாளப்படுத்துகிறது. அதன் வழியாக அவர்களின் பழக்கவழக்கங்களை, வாழ்க்கை முறையினை, வழிபாட்டு முறையினை, நிலத்தை, நிலம் சார்ந்த வாழ்க்கை முறையினை நம்மால் அறிந்து கொள்ள முடியும்.

**வட்டார மொழியின் தனித்தன்மை**

வட்டார வழக்கு என்பது வெறும் சொல் மட்டுமல்ல, வாக்கியம் மட்டுமல்ல, மொழியில் ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவத்தினை அடையாளப்படுத்துகின்றது. வட்டார வழக்குச் சொல்லுக்கென்றுத் தனித்த அழகும், அர்த்தச் செறிவும் உள்ளன.

ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களின் வாழ்க்கை முறையை வட்டார வழக்குப் புதினங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். தெளிவான எல்லைகளை உள்ளடக்கிய பகுதிதான் வட்டாரம். ஒவ்வொரு வட்டாரமும் அப்பகுதி மக்களின் வாழ்க்கைப் பண்புகளின் அடிப்படையில் பகுக்கப்படுகின்றன.

**வாய்மொழி கதை இலக்கியம், செட்டியார் பரம்பரை**

**குலமரபு**

தலைமுறைகள் நாவலில் இரணியல் மூக்காண்டிச் செட்டியார் பரம்பரையைப் பற்றியதுதான் என்றாலும், திரவி தனக்கு விவரம் தெரிந்த நாள் முதல்தான் கதை சொல்லுகிறான். ஆசிரியர் கூற்றுப்படி 15 வயது முதல் 25 வயது வரை திரவி தன் குடும்பத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைச் சொல்லிக்கொண்டு போகிறான். இந்நாவலில் எழுபது ஆண்டு அளவுக்கான தலைமுறைக் கதைகள் வந்துவிடுகின்றன. கதை என்னவோ சாதாரணமானதுதான். ஆனால் நாவல்……? இரணியல் செட்டிமார்களுக்கு ஒரு வரலாறு உண்டு. ஆதியில் அவர்களும் காவிரிப்பூம்பட்டினத்தில் (நகரத்தார்போல) இருந்தவர்கள்.

தங்கள் குலப்பெண் ஒருத்தி மேல் ஒரு துளுக்க ராஜா அழகுக்காக ஆசைப்பட்ட விபரீதத்துக்கு அஞ்சிக் கோபல்ல கிராமத்து நாயக்கமார் தெலுங்கு நாட்டை விட்டுப் புறப்பட்டதாகக் கி.ராஜநாராயணன் ‘கோபல்ல கிராமத்தில’; குறிப்பிடுவதைப் போல், திரவியின் மூதாதையரான செட்டியார் குருவரின் பெண்கள் இருவர், கடுகு போன்ற பவளத்தில் நூல் கோத்த அறிவுக்காக அவர்கள் இருவரையும் கட்டிக் கொள்ள காவிரிப்பூம்பட்டினத்து ராஜா ஒருவன் ஆசைப்பட்டதாகவும், அவற்றால் விளைந்த அவலத்தை ஒட்டி அங்கிருந்து செட்டிமார்கள் புறப்பட்டதாகவும், அப்படிப் புறப்பட்டு

வந்த செட்டிமார்கள் வெவ்வேறு இடங்களில் குடியேறியதாகவும், இரணியல் செட்டிமார்களின் பூர்வீக வரலாற்றை உண்ணாமலை ஆச்சி வாயிலாக நீல. பத்மநாபன் குறிப்பிடுகிறார்.

பின் இரணியல், பளவடை, பத்மநாபபுரம், பறக்கை, மிடாலம், குளச்சல், திருவாங்கூர் ஆகிய ஏழு ஊர்களில் அவர்கள் குடியேறினர் என்றும் ஓடுப்பறை அம்மன் தான் அவர்கள் குலதெய்வம் என்றும் குறிப்பிடுகிறார்.

இரணியல் செட்டிமார்களுடன் நாடாரும் நாயரும் கூடக் கலந்துறவாடுவதும் தலைமுறைகளில் காணக்கிடக்கிறது. இரணியல் செட்டிமார் தமிழரேயாயினும் கேரளத்தை ஒட்டியிருப்பதால் அவர்கள் கோடித்துணி உடுத்தி ஓணம் பண்டிகையைக் கொண்டாடி மகிழும் ஒட்டுறவையும் காணமுடிகிறது.

**நீல. பத்மநாபனின் பள்ளிகொண்டபுரம் நாவலில் நகர வர்ணனை**

பள்ளிகொண்டபுரத்தில் நடுநாயகமாக அமைந்துள்ள பத்மநாபசுவாமி கோவில், பழங்காவடி மைதானம், அங்குப் பிரியப்பட்ட நாட்டுக்காரே என்று அன்றாடம் அழைத்துக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகள், கோட்டை, கோவில் ஊட்டுப்புரை (மடைப்பள்ளி), முன்பு கழுவப் பயன்பட்டு இன்று பாசிப் படிந்து போய்க் கிடக்கும் பாத்திரக்குளம், போலீஸ் அவுட் போஸ்ட், பத்மநாப தாஸனான மகாராஜா, மேத்தமணி, தீர்த்த குளம், தலபுராணம், ஆலயத்தின் மையத்திலுள்ள ஒற்றைக்கல் மண்டபம், ஏகந்தமயமான கோவில் பிரகாரம், நெய் விளக்குகள், பிரம்மாண்டமாக நிற்கும் அனுமான் விக்ரகத்தில் வெண்ணையின் மினுமினுப்பு, கல்லில் வடிக்கப்பட்டிருக்கும் ஒரு காரிகையின் பிறந்த மேனித் திருக்காவியம், பத்திர தீப மண்டபம், ஸ்ரீ கோவில் (கர்ப்பக்கிருகம்), சீவேலி மண்டபம், கிருஷ்ணன் கோவில்,

தெற்குத் தெரு அக்கிரகாரம் தெற்குக் கொட்டாரம் மதிற்சுவர், சோற்றுப்புரைச் சந்து, படிஞாறே நடை, வேலையிலிருந்து நீக்கப்பட்ட கோவில் ஊழியர்களைத் திருப்பி எடு என்கிற கோஷம் முழங்க நடக்கும் சத்யாக்கிரகம், மாவேலியாரில் உள்ள பிரதான அரண்மனை, அங்கும் மன்னருக்குப் பென்ஷன் குறைக்கப்பட்டதால் ஆட்குறைப்புக்குள்ளான அரண்மனை ஊழியர்களின் சத்தியாகிரகம், வடக்கு நடை, குலசேகர மண்டபம், ஸ்ரீபலி மண்டபம், சாஸ்தா கோவில், அன்ன கணபதி, சரியாக ஏழே முக்கால் மணிக்குக் கோவிலுக்கு விஜயம் செய்யும் மகாராஜா, கிழக்கே கோட்டை, சாலை பஜார், ஞானானந்த சுவாமிகளின் ஆசிரமம், சட்டம்பி சுவாமிகளின் சமாதி, தரவாட்டு நாயர்கள், பிராமணர்கள், ஈழவர்கள், கிருஸ்தவர்கள் உயர் கலப்புகள், கீழ்மட்டக் கலப்புக்கள், பெருந்தான்னி வீதி - அவற்றின் இரு பக்கமும் பூட்டிக் கிடக்கும் பழைய தம்பிராட்டிமார்களின் அரண்மனைகள், தொழிற்சங்கத் தலைவர்கள், எம்.எல்.ஏக்கள், மந்திரிமார்கள் - அவர்கள் கலியாணங்கள் - விவாகரத்துக்கள், வைரவம் பிள்ளை முதலாளி கடை, சர்க்கரை கோட்டா, புட் இன்ஸ்பெக்டர் விஜயம், ஆடிட்டர் கைமண், வழுதக்காடு, டி.பி.ஐ.ஆபிஸ், சர்வே ஆபீஸ், ஆர்.டி.ஓ ஆபீஸ், ரேடியோ ஸ்டேஷன், ரொட்டிக்கடை முக்கு, டவுன்ஹால் பஸ்நிறுத்தம், யுனிவர்சிட்டி, காலேஜ், செக்ரடரியேட், சத்தியாக்கிரக கேட், புளிமூடு பஸ் ஸ்டாப், ஹிந்து மத கிரந்தசாலை, கிழக்கே கோட்டை பஸ் நிலையம், நக்ஸலைட் மாணவன், நிஷ்களங்கன் நாடார், பப்பு பிள்ளை கடை, சாமத்து ரோகியான ஆனைத் தூண்டிவர் - மாணிக் கொச்சு கிருஷ்ணகர்த்தா, தனி அறையில் வைத்து நடந்த அவனுடைய வர்மப்பிடி வைத்தியத்துக்குப் பிறகு கணவனை பந்தம் ஒழிப்பித்துவிட்டு, அவனுடனே வாழப் போய்விட்ட துணிச்சல் காரியான குஞ்சுலட்சுமி அம்மாவி, பால்யவேதாந்தி பாஸ்கரன் நாயரின் கடற்கரை வட்டமேஜை மகாநாடு, இப்படி இன்னும் ஏராளம் ஏராளமாக

விரிகிறது பள்ளிகொண்டபுரம். இந்த அஸ்திவாரத்தின் மேல்தான் அனந்தன் நாயரின் கதைகள் நாவலாகப் படைக்கப்பட்டு இருக்கின்றன.

ஒரு படைப்பை மேலோட்டமாக கதைக்காகப் படைப்பதும் உண்டு. படிப்பினைகளுக்காகப் படைப்பதும் உண்டு. இலட்சியங்களுக்காகப் படைப்பதும் உண்டு. மண்ணின் மகத்துவத்தை வெளிப்படுத்த என்றே படைப்பதும் உண்டு. இவ்வரிசையில் தகழியின் 'செம்மீன்' கேரளக் கடற்கரையில் மீனவர்கள் வாழும் கடலின் மகத்துவத்தை வெளிப்படுத்த என்றே தனித்துவத்துடன் படைக்கப்பட்டது போல பள்ளிகொண்டபுரமும் திருவனந்தபுரத்தின் மண்ணின் மகத்துவத்தை வெளிப்படுத்துவதையே மூல இயல்பாக உள்ளடக்கி வெளி வந்திருக்கிறது. இந்நோக்கத்தில் நீல. பத்மநாபன் தன்னுடைய நாவல்களில் அற்புதமான வெற்றியைச் சாதித்திருக்கிறார்.

முதற்கண் நாவலின் மையப்பாத்திரமான அனந்தன் நாயரின் கதை எவ்வாறு பண்பாட்டுக்கூறுகளை உள்ளடக்கி இருக்கிறது என்பதை நாவலில் கூறப்படுவதை காணலாம்.

அனந்தன் நாயர் பத்மநாபசுவாமி ஆலயத்திற்குள் நுழைகின்ற பொழுதே ஆலயத்தின் நிர்வாக அலுவலகம் அவர் கண்களில் படுகின்றது. அதைக் கண்டவுடன் அவருக்குத் தாம் அரண்மனையில் பணிபுரிந்தமை நினைவுக்கு வருகின்றது. அதனைக் கடந்து உள்ளேச் செல்கின்ற போது, "மஞ்சள் விளக்கொளியில் மங்களாய்த் தெரியும் கன்னங்கரிய ஒரு ஆள் உயரச் சிற்பம்,"[14] கண்களில் படுகிறது. அதனைக் கண்டவுடன் தம் மனைவியாக இருந்து ஓடிப்போன கார்த்தியாயினி நினைவுக்கு வருகிறாள்."[15]. அதனைத் தொடர்ந்து அவர்கள் இருவரது மணவாழ்க்கையின் இன்ப நினைவுகள்

அனந்தன் நாயரின் எண்ணத்தில் அலைமோதுகின்றன பத்ரதீப மண்டபத்தைக் காணும் போது, குழந்தைப்பேறு பற்றிய மக்கள் நம்பிக்கையும் குழந்தைப் பேற்றுக்கான நற்சகுனத்தைக் கண்டதும் கார்த்தியாயினி அடைந்த மகிழ்ச்சியும் அனந்தன் நாயரின் நினைவுக்கு வருகின்றன.

**திருவிதாங்கூர் மன்னர்கள்**

திருவிதாங்கூர் நாட்டை ஆண்டு வந்த மன்னர்களின் பரம்பரை பற்றிய செய்திகளும் இந்நாவலில் மேற்காட்டிய முறைப்படிதான் கூறப்படுகின்றன. ஜனநாயக சமூக அமைப்பில் முடிமன்னர்கள் தங்கள் செல்வாக்கினை இழந்து ஓய்வூதியம் பெறும் நிலைக்குத் தள்ளப்பட்ட நிகழ்ச்சி நாவலில் விரித்துரைக்கப்படுகின்றது. மன்னர்களின் கடந்த காலச் சிறப்பும் இன்றைய நிலையும் நாவலில் தொடர்ச்சியாக ஒரே இடத்தில் கூறப்படவில்லை. ஏனைய நிகழ்ச்சிகளைக் கூறுவதைப் போன்றே இவற்றையும், நாவலில் பல்வேறு இடங்களில் ஆசிரியர் கூறுகிறார்.

மன்னர் பரம்பரை பற்றிய முழுமையான செய்திகள் அனைத்தும் கூறப்படவில்லை. சில செய்திகள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டு கூறப்படுகின்றன. ‘பள்ளிகொண்டபுரம்’ நாவலின் நோக்கம், ஒரு நகரத்தைப் பற்றிய செய்திகளைப் பதிவு செய்வது தான் என்பது முன்னர் குறிப்பிடப்பட்டிருந்தது. நீல. பத்மநாபனின் மனதைப் பாதித்து, உணர்வுகளைத் தூண்டிய கூறுகள் இந்நாவலில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. கடந்த காலத்தில் நடைமுறையிலிருந்த சில சிறந்த கூறுகள் இன்று இல்லாமையினால் ஏற்படுகின்ற வெறுமையைச் சித்தரிப்பதற்கு மன்னர் பரம்பரைச் செய்திகள் சிலவற்றை நீல. பத்மநாபன் தேர்ந்தெடுத்துக் கூறுகிறார். நாவலில் அனந்தன் நாயர் ஆலயத்தின் ஒரு பகுதியில் இருக்கும் நாடக அரங்கினைக் கடந்து செல்கிறார். அதைக் கண்டவுடன் அனந்தன் நாயர் மனதில் பழைய காலத்தில்

நடைபெற்ற நாடகங்கள், மகாராஜாவின் பிறந்த நாளன்று மக்களுக்கு அன்பளிப்பாக கிடைக்கும் 'செர்வாணி' ரூபாய் முதலியவை நினைவுக்கு வருகின்றன. மன்னர் பரம்பரையினரின் சிறப்புக்குரிய பல செயல்கள் அனந்தன் நாயரின் எண்ணவோட்டத்தின் மூலம் கூறப்படுகின்றன."[16]

திருவிதாங்கூர் மன்னர் பரம்பரையனரைப் பற்றிய செய்திகள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. எனினும் நாவலாசிரியர் அவை அனைத்தையும் இங்கு கூறாமல் சிலவற்றை மட்டுமே கூறுகிறார். பழமையின் அழகினைப் போற்றுவது நாவலாசிரியரின் நோக்கமாகக் காணப்படுவதால் அதற்கேற்ற வகையில் செய்திகள் தெரிவு செய்யப்பட்டு கூறப்படுகின்றன.

**அனந்த பத்மநாப சுவாமி ஆலயம்**

அனந்த பத்மநாப சுவாமியின் ஆலயத்தைப் பற்றியும் செய்திகள் கூறப்படுகின்றன. ஆலயத்தின் மேத்த மணியின் அமைப்பு, பத்ரதீப மண்டபம், கோயில் மைதானம், பத்ம தீர்த்தக் குளம் போன்ற பல இடங்களை பற்றிய செய்திகள் நாவலில் பல்வேறு இடங்களைப் பற்றிய செய்திகள் நாவலில் பல்வேறிடங்களில் கூறப்படுகின்றன. இவ்விடங்களைப் பற்றிய செய்திகள் வெறும் விவரங்களாக மட்டும் கூறப்படாமல், கால மாற்றங்களையும், அதன் விளைவுகளையும் உணர்த்தும் வகையில் கூறப்படுகின்றன. சான்றாக நாவலில் அனந்தன் நாயர், கோயிலில் ஊட்டுப்புரையினைக் காண்கிறார். உடனே அவர் மனதில் பழைய காலத்து ஊட்டுப்புரை நிழலாடுகின்றது. "இங்கே கிடைக்கும் இரு நேரப் பந்திச் சாப்பாட்டை நம்பி ஒரு காலத்தில் எத்தனை எத்தனையோ பிராமணக் குடும்பங்கள் வாழ்ந்தன"[17] என்று பழைய காலத்துச் சிறப்பை எண்ணுகிறார். அதனைத் தொடர்ந்து "ஊட்டுப்புரைச் சாப்பாடு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து இப்போது அடியோடு நின்று விட்டது"[18]

என்ற நினைவும் அவருக்கு ஏற்படுகின்றது. சான்றுக்காக எடுத்துக்காட்டப்பட்ட இப்பகுதியைப் போன்று நாவலில் பல இடங்களில் கோயிலைப் பற்றியும் ஊரைப் பற்றியும் பல விவரங்கள் கூறப்படுகின்றன.

**திருவனந்தபுரம் நகரத்து மனிதர்கள்**

திருவனந்தபுரம் நகரில் வாழ்ந்த தளவாய் வேலுத்தம்பி, திவான் டி.ஆர்.பார்த்தசாரதி ஐயங்கார், சென்ட்ரல் செல்லம்மா போன்றவர்களைப் பற்றியும் நிகழ்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் வைரவன்பிள்ளை முதலாளி, மகாதேவய்யர், கேசவன்தம்பி, பழனியாண்டி செட்டியார், பிஷாரடி தோமஸ், பப்படக்கடை பப்புபிள்ளை. வருமானவரி அதிகாரி இந்துசூடன் நாயர், தியாகராஜன் என்ற தந்த வேலைக் கலைஞன் போன்ற பலர் இந்நாவலில் காட்டப்படுகின்றனர். திருவனந்தபுரம் நகரில் பல்வேறு சமூகப் படிநிலைகளில் வாழ்கின்ற மனிதர்களைப் பற்றிய வகை மாதிரிகள் (Types) என்று கூறத்தக்க முறையில் படைக்கப்பட்டு இருக்கின்றன. இந்த வகை மாதிரிக் கதை மாந்தர்கள் நாவலின் மையக் கதையமைப்புடன் தொடர்பில்லாதவர்கள், எனினும் இக்கதை மாந்தர்கள் படைக்கப்பட்டிருப்பது நாவலுக்கு ஒரு முழுமையைத் தருகின்றது. கதையுடன் தொடர்பின்றியும் அதே வேளையில் நாவலின் முழு அமைப்பினின்று பிரிக்க இயலாதவாறும் இவர்கள் படைக்கப்பட்டுள்ளனர். கதைமாந்தர்களை இரண்டு வகையாகக் காணமுடிகின்றது.

1. வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி கண்டவர்கள்.

2. வாழ்க்கைச் சூறாவளியில் சிக்கி அலைகழிக்கப்பட்டவர்கள்.

பள்ளிக்கொண்டபுரம் நாவலில் தலைமைமாந்தரான அனந்தன் நாயர் வாழ்க்கைப் போராட்டத்தில் பற்றுக்கோடின்றி அலைக்கழிக்கப்பட்டவர். எனவே

அனந்தன் நாயரின் மனவுலகத்தில் இவ்விரு வகை மனிதர்களும் முறையே எதிர்மறை முகத்தானும் உடன்பாட்டு முகத்தானும் அவருடன் இணைவு காண்கின்றனர். நாவலைப் படிக்கும் வாசகர் பரிவுக்குரிய அனந்தன் நாயரின் சிந்தனை ஓட்டத்தடத்திலேயே சென்று இக்கதை மாந்தர்களை இனங்கண்டு கொள்வதால் இவர்கள் நாவலின் அனுபவ உலகினின்று பிரிக்க முடியாத வகையில் இணைந்திருக்கின்றனர். பழனியாண்டி செட்டியார், பப்படக்கடை பப்புபிள்ளை முதலியவர்களைக் காணும் போது, அனந்தன் நாயர் ஒருவகை ஆற்றாமை உணர்வுடன் அவர்களுடைய நற்பேறுகளையும் இயல்புகளையும் அலசிப் பார்க்கிறார். நாவல் அனந்தன் நாயரின் எண்ணவோட்டத்தின் வாயிலாகவே கூறப்படுவதால் வாசகருக்கும் அனந்தன் நாயருடன் ஏனைய கதை மாந்தர்களை ஒப்பிடத் தோன்றுகின்றது. அது மட்டுமல்லாமல் அனந்தன் நாயர் தனிமையில் தம் வாழ்க்கையின் லாப நட்டங்களைக் கணக்கிட்டுப் பார்க்கிறார். “ஐம்பது வருஷ என் வாழ்க்கை……! இதில் என் லாபமென்னா? நஷ்டமென்னா?... பாலன்ஸ் ஷீட் ஒண்ணு தயாரிச்சால் அதில் என்ன மிஞ்சும்?”[19] என்று அவர் தமது வாழ்க்கையைப் பற்றிக் கணக்கிடுகிறார். பள்ளிகொண்டபுரம் நாவலில் வரும் ஏனையக் கதைமாந்தர்கள் நகரத்தில் வாழும் மனிதர்கள் - நாவலின் பிரிக்கவியலாத கூறுகளாகத் திகழ்கின்றனர்.

“சிங்க விநாயக தேவஸ்தானத்துப் பிள்ளையார் கோயில் நிர்மால்யப் பூஜையின் தீபாராதனையில் எழும்பிய மணியோசைச் சிதறல்கள் மார்கழி மாத வைகறைக் குளிரின் ஊடே கன்னங்கரு இருளில் பிரவகித்துக் கிழக்கு நோக்கி நின்ற கோவிலைச் சாஷ்டாங்கமாக விழுந்து, வணங்கி, கிழக்கு மேற்கில் கிடந்த நெடுந்தெரு முனையில் சென்று சேருகையில், ஆன்மீகத்தின் அடக்கத்தொனி மட்டுமே மிஞ்சியிருந்தது என்று தெருமுனையில் வடக்குப் பார்த்து ஒரு சின்னப்பழங்கால வீடு, காலப் பழக்கத்தினால்

கறுத்துச் செல்லரித்துவிட்ட ஒற்றை வெளிக்கதவு, உள்ளே கதவைத் தாண்டி வெளிமுற்றத்திற்குப் போகும் வழியாக இரு பக்கங்களிலும் படிப்புரை, அதாவது ஒட்டுத்திண்ணை, இடப்புறம் ஒரு ஒட்டுத்திண்ணை. வலப்புறம் சாணி மெழுகி விஸ்தாரமாகக் கிடந்த ஒரு வெளித்திண்ணை. அதில் ஒருக்களித்துப் படுத்திருந்த உண்ணாமலை ஆச்சி, கோவில் மணியோசையின் அடக்க அரவத்தில் வழக்கம் போல் விழித்துக் கொண்டு ஆண்டவனே.....எம்பெருமானே.....சிங்கவிநாயகா..... என்றெல்லாம் தன் சோம்பல் முறிப்பு அடுக்கடுக்கான கொட்டாவி இவைகளின் கூடச் சொல்லிவிட்டு எழுந்து இரண்டு கால்களையும் தரையில் நீட்டிக்கொண்டு உட்கார்ந்து கொண்டாள்"[20]. இவ்வாறு ஆசிரியர் நாவலின் தொடக்கம் கதாநாயகியை நமக்கு அறிமுகப்படுத்துகிறார்.

**பண்பாட்டின் ஆற்றல் வாய்ந்த உத்தி**

குடும்பத்தின் பழமையான பெருமைகளைக் குறித்து தனது கண்ணோட்டத்தில் பாட்டி கதை சொல்வது, இயற்கையான உத்தியாக இருக்க வேண்டும். மிகுதியான நாவலாசிரியர்கள் மிகவும் வலுவாகப் பயன்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் எப்படியோ அவை உண்மையில் ஏற்பட்ட விஷயம் என்பதாக உணரப்படவில்லை. பாட்டியிடமிருந்து கடந்தகாலக் கதைகளைக் உள்வாங்கி மனத்தில் பதிய வைக்கும் உத்தியைக் கொண்டது தலைமுறைகள் நாவல்தான்.

**வட்டார மொழிநடை**

வட்டார மொழிநடையை பண்பாட்டுக் கூறுகளாக பதிவு செய்துள்ளார். "ரொம்ப ரொம்ப பளைய காலத்திலே இங்கேயிருந்து ரொம்ப வடக்கே காவிரிப்பூம்பட்டிணமுன்னு ஒரு பட்டணம்! அங்கே ஒரே ஒரு ராசா ராச்சியம் ஆண்டு

வந்தாரு.....அப்படியிருக்கையிலே ஒரு நாளைக்கு இந்த ராசாவுக்கு ஒரு அசலூரு ராசாகிட்டேயிருந்து வெலைமதிக்க முடியாத கொஞ்சம் பவிளங்க கிடச்சுது"[21] என்ற பாட்டி சொல்ல ஆரம்பிக்கிறாள். இவ்வாறு ஆச்சியின் கதைகளில் மிகுந்த மகிழ்ச்சி காண்கிறான் திரவி. நாவலில் அவளது செல்வாக்கு மிகுந்து காணப்படுகிறது. உலகத்தைப் பற்றி அறிவு திரவிக்கு சிறிது சிறிதாகப் புலனாகக் காரணம் பாட்டியுடன் அவன் பேசும் உரையாடல்களாகும்.

**பழங்கதைகள் - விடுகதைகள்**

**ஆச்சியின் கதை கூறும் உத்தி**

"ஏதோ ஒரு கிழவியின் மகன் ஒரு தவளையை அருமையாகப் பிடிச்சுகிட்டு வந்து, தன் மெத்தையில் கிடத்திக்கொண்ட பிறகு, காலம்பரெ வேலைக்காரி குப்பச்சி, தெரியாமல் தவளையை விரட்டியடிச்சு விட்டதில் விசனப்பட்டு உண்ணாமலை உறங்காமல் கிடந்த அருமை மகனைக் காப்பாற்ற கிழவி தவளையிடம் போய்

"உண்ணுவாரில்லே..... உறங்குவாரில்லே.....
ஒரு கெட்டு வெத்திலை திம்பாரில்லே.....
சாந்து சந்தம் பூசுவாரில்லே.....
தலைக்குத் தப்பளம் போடுவாரில்லே.......

என்று ராகம் போட்டு மன்றாடி கூப்பிட அவமானப்பட்டுப் போன தவளை,

சீற்றாற்றங்கரையிலே....... நான்
சிறு பந்தடிக் கையிலே......
வாரி எடுத்தாரே
மடிமேலெ வச்சாரரெ.....
குப்பச்சிக் கையாலெ

குட்டுப்பட வச்சாரே

நா வரமாட்டேன்….

என்று பிகு பண்ணிய கதையையோ மாமியார் வீட்டுக்குப் பெண்டாட்டிகூடே விருந்து வந்து புதுமாப்பிள்ளை வந்த இடத்தில் யாரிடமும் முகம் கொடுத்தப் பேசாமல் முகத்தை உம்முண்ணு வச்சுக் கொண்டிருப்பதைக் கண்டு பயந்து, பரிதவித்துப் போய் எல்லோரும் காரணம் கேட்க, கடைசியில் பொண்டாட்டியிடம் ‘வளீலெ நடந்ததை ஏன் குட்டி இங்கே எல்லாருட்டையும் சொல்லல்லேன்னு அவன் எரிஞ்சுவிழ, ரொம்ப நேரம் ஆலோசிச்சு கடைசியில் விஷயம் ஞாபகம் வந்து பொண்டாட்டிக்காரி, ‘நானும் அவியாளும் வந்தூட்டிருந்தோம். வளீலெ ஒரு வெள்ளப்பாச்சா வந்து குறுக்கிட்டு நா பயந்து அவிய மேலெ விழ, அவிய பயந்து எம் மேலெ விழ கடேசீலே அரிவாளை எடுத்து அவிய வீச, வெள்ளப் பாச்சா துண்டு ரண்டா விழுந்துதுன்னு தன் மாப்பிள்ளையின் வீர தீர பராக்கிரம செயலை எல்லோரிடமும் அறிவிக்க, அவன் கோப சமனம் அடைஞ்ச கதையையோ,

“அக்காணி குடிச்சிடுவான்

அழகா நடந்திருவான்

பாயாசம் குடிக்கமாட்டான்

படுக்காளி பித்தக்காடி

என்று படுக்காளியின் கதையையோ, சுவாரஸ்யமாக அனுபவிச்சுச் சொல்லுவான். இந்தக் கதைகளை எல்லாம் காக்காத் தொள்ளாயிரம் மட்டம் திரவி கேட்டிருக்கிறான்”[22]

திரவி என்ற பதின்ம வயது பையன் இருபது வயதிற்குள்ளாக அவனுக்கு ஏற்படும் அனுபவங்களைப்பற்றி இந்நாவல் எழுத்தாளுகின்றது. சிறு வயது முதல் அயல் வீட்டாரின் கதைகளை எல்லாம் உண்ணாமலை ஆச்சியிடம் கதையாய் கேட்டுத்

தெரிந்து கொண்டிருக்கும் திரவி இருபது வயதில் இவ்வளவு பக்குவத்திற்குக் காரணம் உண்ணாமலை ஆச்சியிடமிருந்து அனுபவப் பாடத்தைக் கேட்டதே என நினைக்கிறேன் என புதினத்தின் வழி பதிவு செய்துள்ளார்.

**நம்பிக்கையின் தோற்றம்**

ஆதிமனிதன் தன்னால் கட்டுப்படுத்த முடியாத இயற்கையின் சீற்றங்களை கண்டு அச்சப்படும் போது தன்னை மீறிய சக்தி ஒன்று உலகில் உண்டு என்று நம்பிக்கை அவனுக்குள் தோன்றியிருக்க வேண்டும். இயற்கையை தெய்வமாக வழிபட ஆரம்பித்திருக்கிறான். நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐம்பூதங்களையும் வழிபட தொடங்கியது இறைவழிபாட்டின் தொடக்கமாகும். மனிதனின் வாழ்வின் நம்பிக்கையாகவும் நம்பிக்கையின் பிறப்பாகவும் இருந்திருக்கிறது.

“நம்பிக்கைகள் பெரும்பாலும் அச்ச உணர்வின் அடிப்படையாகத் தோன்றியதாகக் காட்சியளித்தாலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராத பொழுதும், மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத பொழுதும் மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன.”[23]

ஒரு சமூகத்தின் பண்பாடு, சடங்குகள், பழக்கவழக்கங்கள், தனித்தன்மை அனைத்துமே நம்பிக்கை என்ற தாயின் வயிற்றுக் குழந்தைகளாகவே திகழ்கின்றன. இயற்கையாக மனிதனிடம் பிறக்கும் நம்பிக்கையே அவனுக்குச் சோதனைகளை தாங்கிக் கொள்ளும் மனவலிமையைக் கொடுக்கின்றது. மனிதன் இயற்கையோடியைந்த வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த ஆதி காலத்திலேயே நம்பிக்கைகளும் தோன்ற ஆரம்பித்துவிட்டன.

“நாட்டுப்புறவியல் கூறுகளில் முக்கியமான பங்கைப் பெறுவது மக்களின் மனதில் ஊறிக்கிடக்கும் நம்பிக்கைகள் வாழ்வில் தமக்கு ஏற்படும் பல்வேறு அனுபவங்களினால், இவற்றைச் செய்தல் தகும், இவற்றைச் செய்தல் தகாது என்று பல காலத்திற்கு முன்னர் பிரித்து வைத்து செய்திகள் எல்லாம் காலப்போக்கில் காரணம் அறியாமலே நம்பிக்கைகளாகவும், பழக்கவழக்கங்களாகவும் மாறுகின்றன.”[24]

**சடங்கு முறைகள்**

“தலைமுறைகள்” நாவலில் வரும் சடங்கு முறைகளில் குழந்தை பிறந்து நடத்தும் சடங்கு. “குழந்தை பிறந்து நாப்பத்தியொண்ணு நாள் ஆண்ணைக்குத்தான் திகைகிறது …… அன்னைக்குத்தான் பெற்றவள் வெளியே வெட்டத்தில் இறங்கலாமாம்! அதனால் உண்ணாமலை அக்கா குளத்தில் போய் குளிச்சுவிட்டு ஈரச்சேலையோடும் இடுப்பில் குடமும் தண்ணியுமாகவும் வந்து தெரு நடையில் நின்னாள், நாகு அக்கா, புள்ளையக் கொண்டு கையில் கொடுத்தாள், அம்மை ஒரு கொள்ளிக் கம்பை அடுப்பிலிருந்து எடுத்துக்கிட்டு வந்து உண்ணாமலை அக்காளையும் பிள்ளையையும் மூணுமட்டம் சுற்றி, “கொள்ளியும் தீயும் ஒனக்கு புள்ளையும் தள்ளையும் எனக்கு” ண்ணு முணுமுணுத்தவாறு கொள்ளியை வீசியெறிந்து திருஷ்டி கழிச்சாள்”[25] என்று ஆசிரியர் குழந்தைப் பிறப்பு சடங்கு முறைகளை பதிவு செய்துள்ளார்.

**கதைப்பாடல்களும் குழந்தைப்பாடல்களும்**

“இங்கூ இங்கூண்ணு சொல்லீ

ஈத்தாந் தோப்புக்குப் போயீ

ஆக்கூ ஆக்கூண்ணு சொல்

அம்மான் வீட்டுக்குப் போயீ

சொல்லி வளர்ந்த கிளியோ”

என்று பாடுகையில், ஆச்சி தன்னையும் இப்படித்தான் பாட்டு பாடி, அங்க சேஷ்டைகள் செய்து அமர்க்களமாக வளர்த்திருப்பாள் என்று நினைக்கையில் திரவியின் அந்தரங்க மனம் சொல்லத் தெரியாத கிளுகிளுப்பில் துவண்டு போய்விடும்.

புள்ளை விக்கினால் அது வயிறு பெரிசாகத்தான்....... புள்ளை சர்த்திச்சால் (வாந்தியெடுத்தல்) உடன் ஆச்சி மொழிவாள்; “சர்த்திக்கும் புள்ளை வர்த்திக்கும்” அதாவது வாந்தியெடுக்கும் புள்ளைதான் வளருமுண்ணு!

இப்படி எதுக்கெடுத்தாலும் வழிவழியாக வாழையடி வாழையாக வரும் வியாக்கியான விளக்கங்கள் ஆச்சியிடம் எந்த நேரமும் ரெடி ஸ்டாக்”[26] என்று ஆசிரியர் வெளிப்படுத்தும் பொழுது குழந்தைப் பாடல்களும் அதன் பண்பாட்டு விளக்கங்களும் எவ்வளவு அழகாக ஆசிரியர் உண்ணாமலை ஆச்சியின் மூலம் பதிவு செய்துள்ளார்.

**சிறுமியர்கள் விளையாட்டு**

‘தலைமுறைகள்’ நாவலில் வரும் சிறுவர் சிறுமியர்கள் விளையாடும் விளையாட்டுக்களில் ‘களச்சி விளையாட்டு’ என்பது முதன்மையானதாகும்.

“திரவி முடுக்குத் தெருவில் நுழைந்தபோது, நாலைந்து சின்னக் குட்டிகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். சிறுமியர்கள் பலவிதமான விளையாட்டுகளை விளையாடினார்கள். அதில் ஒன்று களச்சி விளையாட்டு, ஏழு களச்சிகளை (காய்களை) கீழே பரப்பிப் போடுவதுக்கிடையில், ஒன்றை மட்டும் கையில் வைத்துக்கொண்டு அதை மேலே போட்டு, கீழே வரும் அந்தக் களச்சியைப் பிடிப்பதுக்குள்ளே, கீழே பரப்பியிருக்கும் களச்சிகளை

“ரெண்டு

ஈரிரெண்டு

மாயச் செண்டு

மல்லிகைப்பூச் செண்டு”

என்று ஒரு பிரத்தேக சுகமான ராகத்தில் பாடியவாறு இரண்டு இரண்டாக எடுத்தது. அடுத்தது,

“மூணு

முக்கட்டும் தக்கட்டும்

முருதங்கா பதிநெட்டும்”

என்று பாடி மும்மூணா எடுப்பதுக்கிடையில் கையிலிருந்து களச்சி சிதறிப் போனதால் மற்றவள் தொடங்கினாள்.

“பத்துள்ள என் தம்பி

பணமுள்ள என் தம்பி

காசுள்ள என் தம்பி

கணக்குப்பிள்ளை உன் தம்பி”

என்று பத்து விளையாடிவிட்டு ‘அலுங்காமெ குலுங்காமே’ என்று பாவாடை ஆடத் தொடங்கிவிட்டது”[27] என்ற பாடல் வரிகள் மூலம் சிறுமியர்கள் பலவிதமான பாரம்பரிய விளையாட்டுக்களை விளையாடினார்கள் என்பதை ஆசிரியர் ‘தலைமுறை’ நாவலின் வாயிலாக பதிவு செய்துள்ளார். மேலும் ஆசிரியர் இறப்புச் சடங்குகள் எவ்வாறு தலைமுறைகள் நாவலில் பதிவு செய்துள்ளார் என்பதை அடுத்த ஒரு செய்தியின் மூலம் விளக்கம் தருகிறார்.

**இறப்புச் சடங்குகள்**

"திரவி ஆச்சியின் பக்கத்தில் போய் மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டு, ஆச்சீ… ….. ஆச்சீ….."என்று திரவி கூப்பிட்ட போது, ஆச்சி பேரனை இன்னாரென்று புரிந்து கொண்டாள்.

முகத்தில் அமைதியின் லேசான ஒரு கதிர் சிறிது நேரம் கிர்கிர் என்று இழுத்தபடி சுவாசம் விட்டுக் கொண்டிருந்தாள். "எட்டீ…..அந்த ராமாயணத்தை எடுத்து படிட்டீ!" கிண்ணத்தில் கொஞ்சம் பால் கொண்டு வந்ததை அப்பா ஒரு சிறு வெள்ளைத் துணையில் முக்கி, ஆச்சியின் வாயில் துளித்துளியாகப் பிழிந்து விட்டார். பால் கடைவாயில் வழிந்தது. பாலையும் யாரோ கொண்டு வந்த திருப்பதி தீர்த்தத்தையும் எல்லோரும் மாறி மாறி ஆச்சியின் உலர்ந்த உதடுகளின் இடையில் சொட்டுச் சொட்டாக விட்டார்கள். பாலும் தீர்த்தமும் கீழே வழிந்தது. திறந்திருந்த விழிகள் திறந்தபடி அப்படியே நிலைகுத்திப் போய்விட்டன. சற்று நேரத்தில் ஆச்சியின் அசைவுகள் ஒடங்கி விட்டன. பழைய தலைமுறையின் ஒரு பழுத்த இலை உதிர்ந்து விழுந்துவிட்டது. பக்ஷியில்லா ஒரு வெறுங்கூடு மட்டும் அங்கே மிஞ்சியது……"[28] என்ற செய்தியின் மூலம் நீல. பத்மநாபன் படைப்புகளில் பெரும்பாலும் செட்டியார் சமூக மக்களைப் பற்றி தன்னுடைய எழுத்துக்களில் ஆட்கொண்டுள்ளார். செட்டியார் குலத்தில் ஒரு உயிர் பிறந்து விட்டால், அக்கணம் முதல் சடங்குகளும், சம்பிரதாயங்களும், பழக்கவழக்கங்களும் தொடங்கி விடுவதை தலைமுறைகளின் புதினம் வழியாக ஆசிரியர் வெளிக்காட்டுகிறார்.

**ஒப்பாரிப் பாடல்**

ஆச்சி இறந்த நாள் முதல் பதினாறுநாளாவது நாள் வரை வீட்டில் விதம் விதமான ஒப்பாரிப் பாடல்கள் முழங்கத் தொடங்கிவிட்டன. அதிகாலையின் மோன அமைதியில், தலையை அவிழ்த்துப் போட்டுக் கொண்டு உருக்கமாய் நீட்டி நீட்டி ஒரு பிரத்தேகத் தாளலயத்தில் ஒருத்தி பாடினாள்.

“பொன்தேர் கெட்ட பொழுது விடியுமின்னு,

என்னைப் பெத்த அம்மா……

பூந்தேர் கெட்டி புறப்பட்டார் சீக்கிரமாய்

தங்கத்தேர் கெட்ட தாமசங்கள் ஆகுமின்னு

என்னைப் பெத்த அம்மா…….

தனித்தேர் கெட்டி புறப்பட்டார்.. சீக்கிரமாய்

வெள்ளித்தேர் கெட்ட வெகுநேரம் ஆகுமின்னு

வெறுந்தேர் கெட்டி புறப்பட்டார்… சீக்கிரமாய்

தங்கத்தேர் கெட்டித் தனியாய் போகையிலே

தர்மருடை அம்மா செத்தாள்,

தங்கத்தேர் போகுதென்பார்,

பொன்தேர் கெட்டிப் புதுசாப் போகையிலே

புத்திரருடை அம்மா செத்தாள்

பொன்தேர் போகுதென்பார்…..

வெள்ளித்தேர் கெட்டி வித விதமாய் போகையிலே

வீமருடைய அம்மா செத்தாள்…..

வெள்ளித்தேர் போகுதென்பார்……

இப்படி எத்தனை எத்தனையோ ஒப்பாரிப்பாட்டுக்கள்…… இந்தப் பாடல்கள் எல்லாம் எங்கேதான் ஒளிந்து கிடந்தனவோ?

பதினாறு அன்னைக்குக் கல்லெடுப்பு அடியந்திரம்.. கல்யாணத்திற்கு ஊரழைப்பது போல் ஊரழைக்கப்பட்டது. வீடு குலுங்கத் திங்கு திங்கென்று குதிச்சவாறு புதுவிதமாகப் பாடும் சத்தம் கேட்டு, திரவி திடுக்கிட்டு விழித்தான். டபார் டபார் என்று மார்பில் அடித்துக்காட்ட, அதையே, ஏனையோர்களும் பின்பற்றி, அந்த அடிக்கும் குதிப்புக்கும் தகுந்த தாளலயத்தோடு விமரிசையாச் சேர்ந்து பாடினார்கள்.

"அம்மாடி…… அம்மாடி…..
தாயாரே…… தாயாரே……..
அம்மாடி…….. தாயாரே…..
மாமாங்கம்…… மாமாங்கம்…..
உங்க வாசலெல்லாம் மாமாங்கம்…….
கோட்டாத்துக் கப்பாலே
கொழுந்துப் பூ விக்கிதென்பார்
கொழுந்துப் பூ வாங்கித்தர
குணமுடையோர் இங்கே உண்டும்
காப்பு கெட்டி மாரடிக்க
கண்ணுமக இங்கே உண்டும்
பட்டுடுத்து மாரடிக்க
பாஞ்சாலி இங்கே உண்டும்
சந்தனக்கட்டை வெட்டி
சரியாக கோப் பொதுக்கி

கடைக் கோப் பொறுக்கி

கண்ணு மகன் இங்கே உண்டும்

கொள்ளி வச்சு குடமுடைக்க

குணமுடையோர் இங்கே உண்டும்

கல்லாலே கோட்டைக்கெட்டி

கரும்பையும் நட்டு வச்சு

கால் கோட்டை உடைஞ்ச உடன்

கரும்பும் வாடுதிங்கே....!

அம்மாடி தாயாரே ...

அன்புள்ள மாதாவே

அம்மாடி...... அம்மாடி..... அம்மாடி

தாயாரே..... தாயாரே....... தாயாரே

வைகுண்டம் ...... வைகுண்டம்....... வைகுண்டம்

சிவலோகம்...... சிவலோகம்..... சிவலோகம்....

திருப்பதி...... திருப்பதி......திருப்பதி

சேர்ந்தீரோ....... சேர்ந்தீரோ....... சேர்ந்தீரோ”[29]

இவ்வாறு ஆச்சியின் மரணம் சடங்குகள் மற்றும் ஒப்பாரிப் பாடல்களும் நடந்து முடிந்துவிட்டன.

செட்டியார் சமூகத்தின் கல்யாணம் முதல் இழவு வரையில் அனைத்து சீர்வரிசைகள் சம்பிரதாய முறைகள் அனைத்தும் விளக்கப்பட்டிருக்கிறது. சிறிய அளவிலான மலையாள வாசத்துடன் கூடிய பேச்சு வழக்கை நேரில் கண்முன் விரியும் கீழ்த்தெருவும் புத்தன் தெருவும் எதிரில் கூனாங்காணிபாட்டா வீடும் நாகரம்மன்

சாமியின் ஓடும்புறை விழாவும் பெரிய கொழுக்கட்டை சுடுவதும் தங்கம்மை, தாயம்மை குலம் காத்த கதையும், கதையின் போக்கில் நிறையச் செய்திகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் அனைத்தும் கண்முன்னே விரிக்கின்றன.

இறுதியில் உண்ணாமலை ஆச்சியின் மரணச்சடங்குகள் பார்த்து திரவி அயர்ந்து போய் காசு செலவில்லாமல் செத்து விடுவது கூட அந்த சமூகத்தில் எளிதல்ல என்று நினைப்பது.... இறப்பின் பிறகு மேற்கொள்ளக்கூடிய சடங்குகளையும் ஆசிரியர் பத்து பக்கங்கள் வரை கொண்டு செல்லும் அளவு நமக்கு புதினத்தின் (தலைமுறைகள்) வாயிலாக பதிவு செய்துள்ளார்.

நீல.பத்மநாபன் நாவல்களில் "பண்பாட்டுக் கூறுகள்" என்னும் இயலில் காதல் உறவுகளைப் பற்றி பார்ப்போம்.

சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் வகையில் புனைக் கதைகள் படைப்போர் தமது படைப்புகளில் மனித உறவுகளைக் காட்டத் தவறுவதில்லை. மனித உறவுகளில் பண்பாட்டின் அடையாளமாக காதல் உறவும் ஒன்றாகும். "காதல் என்ற சொல்லை முறையாகப் பயன்படுத்தினால் அது ஆண் பெண் இருபாலரிடையே தோன்றும் ஏதாவது உறவையோ அல்லது ஒவ்வொரு உறவினையோ குறிக்காது. மிக்க மனவெழுச்சி ஊட்டுவதுடன், மன உறவும். உடல் உறவும் கொள்ளும் ஒன்றையே அது குறிக்கின்றது"[30] என்பார் ரஸ்ஸல். "நேர் எதிரான இணைகள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுது அவர்களிடையே எழும் ஒரு பொறியே காதலாகும். இருவரிடையே எழும் உணர்ச்சிகளின் உச்சநிலையையே நாம் காதல் என்கிறோம்"[31]. என்பார் உளவியலாளர்.

சங்க இலக்கியங்கள் “செம்புலப் பெயல் நீர்ப்போல அன்புடை நெஞ்சம் கலப்பதையே காதல்” என்றும், காலங்கள் மாறினாலும் காதல் எனும் உணர்வு மாறுவதில்லை, ஆனால் உணர்வு வெளிப்பாடுகளின் தன்மைகளில் காலச் சூழலுக்கேற்ப மாற்றங்கள் காணப்படுகின்றன.

நீல.பத்மநாபனின் உலகம் பொதுவாக ஆண்களை மையப்படுத்தியதாகும். மின் உலகம், ஃபைல்கள் போன்றவற்றில் பெண்களே இல்லை. சமரில் கதாநாயகனின் ஒரே குறிக்கோளான துளசிவாசகர் முன் வரவேயில்லை. சில நாவல்களில் மட்டுமே காதல் உறவைக் காண முடிகிறது. நீல. பத்மநாபனின் நாவல்களில் காணப்படும் காதல் உறவைப் பற்றி பார்ப்போம்.

**பள்ளிகொண்டபுரத்தில் காதல் உறவுகள்**

**கலப்புக் காதல் உறவுகள்**

ஒத்த செல்வ நிலையிலோ அன்றி வேறுபட்ட செல்வ நிலையிலோ இருப்பவர் காதல் கொள்ளும் பொழுது காதலுக்கு இடையூறு ஏற்படவில்லை. ஏனெனில் அனைவரும் ஒரே இனம், மொழி, நாட்டைச் சேர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். காதலிப்பவர்கள் வெவ்வேறு இனத்தையோ, மொழியையோ, நாட்டையோ சேர்ந்தவர்களாயிருப்பின் காதல் கொண்டவர்களின் உள்ளம் உறுதியாக இல்லாவிடின் காதல் நிறைவேறாமலே போய்விடும். சாதியாலும், மொழியாலும், நாட்டாலும் வேறுபட்டவர்கள் கொள்ளும் காதலான கலப்புக் காதல். வாழ்க்கையில் வெற்றி பெறுவதும் உண்டு. நிறைவேறாமலே போவதும் உண்டு. இவ்விரு வகைச் சிக்கல்களையும் ‘பள்ளிகொண்டபுரம்’ நாவலில் ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**மாதவி - தர்மபாலனின் காதல்**

பள்ளிகொண்டபுரம் நாவலின் தலைமைப் பாத்திரமான அனந்தன் நாயரின் மகள் மாதவி, புதிய தலைமுறையைச் சேர்ந்தவளாக இருந்தும் பழமையின் சிதைவிற்குள் உட்பட்டு நடப்பின் பாங்கோடு திகழ்கிறாள். ஈழவனான தர்மபாலனைக் காதலிக்கின்ற பொழுது தன் தந்தை சம்மதித்தால் தான் திருமணம் செய்து கொள்வேன் என்று கூறிவிடுகிறாள்.

மாதவியின் உயிர் தோழியான விலாசினியின் அண்ணன் தான் தர்மபாலன். விக்ரமன் தம்பியுடன் ஓடிப்போன தனது தாயுடன், விவாதத்தில் ஈடுபட்ட பின்னர் தர்மபாலன் நடந்து கொண்டவிதம், விலாசினி இறக்கின்ற பொழுது தன் அண்ணனை எண்ணிக் கலங்கிய நிலை போன்ற படிப்படியான நிலையில்தான் இவளது காதல் அரும்புகிறது. விலாசினி இறக்கும் தறுவாயில் அவளுக்கும், இவளுக்கும் இடையில் எந்த வார்த்தைகளும் இல்லாமல் மௌனமாய் ஓர் ஒப்பந்தம் கைமாறி புனிதமான காதலாகத் திசை திரும்புகிறது. மாதவி - தர்மபாலன் இருவருக்குமிடையில் சாதி வேறுபாடுகளைக் கடந்த காதல் நடப்பியலுக்கும் உகந்த வகையில் படிப்படியாகத் தோன்றி வளர்கிறது.

அண்ணனின் நிலை கண்டு வருந்தும் விலாசினி, “அப்படி சாகப்போகும் அவளுக்கும் சாகாமல் நின்னுகிட்டிருந்த எனக்கும் இல்லாமல், எந்த வார்த்தைகளும் இல்லாமல் மௌனமாய் ஒரு ஒப்பந்தம் கைமாறப்பட்டதாக உள்ள ஒரு புனித உணர்வுடன் நான் அங்கிருந்து விடை பெற்றுக் கொண்டு திரும்பினேன்.”32 என்று கூறுகிறாள்.

**தாயின் எதிர்ப்பு**

"தாய் கார்த்தியாயினி உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்ற பாகுபாட்டில் மகளின் காதலை அங்கீகரிக்கவில்லை. "வேறொண்ணுமில்லை, உனக்கும் தர்மபாலனுக்கும் இடையில் என்னவோ சிநேகமுன்னும் நீ அவனைத் தான் கட்டிக்கப் போறதாகவும் ஒரு வதந்தி என் செவியிலும் விழுந்தது. வாஸ்தவம் தானா? என்னதான் ஆனாலும் அவன் ஒரு ஈழவனல்லவா!"[33] என்று கூறி காதலை தாய் எதிர்க்கிறாள்.

**தந்தையின் எதிர்ப்பு**

தந்தை அனந்தன்நாயர் தன் மகள் ஈழவப் பையனிடம் பழகுவதை வெறுக்கிறார். இங்கு சாதி, காதல் உறவுக்குத் தடையாக இருக்கிறது. "என்னதான் வந்து விட்டாலும் தான் ஒரு தறவாட்டு நாயரல்லவா…..! கொஞ்ச வருஷங்களுக்கு முன் வரையிலும் மார்பு மறைக்கக்கூட உரிமையில்லாதிருந்த ஒரு ஈழவத்திக்குத் தெங்கேறி கள்ளு சேத்தும் ஒரு ஈழவனில் பிறந்த ஒருத்தன், தன் மகளிடம் நெருங்குவதா?"[34] அனந்தன் நாயர், தன்னைத் தானே சமாதானம் செய்து கொள்கிறார். தான் உயர்ந்த சாதி கலப்பு மணம் புரிந்தாலும் அவள் தன்னை விட்டு விட்டு விக்ரமன் தம்பியிடம் சென்று விட்டதை எண்ணிப் பார்க்கிறார். "கலப்பில் பிறந்த ஒருத்தியைத் தானே குடும்ப மகிமையில் பெரிய மதிப்பு வைத்திருந்த தன் அப்பாவே தன் கையில் பிடித்துத் தந்தார்! தானும், தட்டாமல் அவளைத் தானே மாலையிட்டு மணவாட்டியாக ஏற்றுக்கொண்டோம்! அப்போது கலப்பைப் பற்றிக் கவலைப்படாத வெட்கப்படாத தனக்கு, தன் மகளின் காரியம் வரும்போது மட்டும் வெட்கப்பட என்ன யோக்கியதை இருக்கிறது? இருக்கிறது! அது மேல் கலப்பு. கார்த்தியாயினி ஒரு பிராமணனுக்கு ஒரு நாயர் அச்சியிடம் பிறந்தவள். ஒரு நாயர் பெண்ணை ஒரு ஈழவப் பையனுக்குப் பிடித்துக் கொடுப்பது என்பது அந்த ஈழவனைப் பொறுத்தவரையில் மேல் கலப்பாக இருக்கலாம்!

ஆனால் நாயரைப் பொருத்தவரையில் கீழ் கலப்பல்லவா!"[35] என அனந்தன் நாயர் நினைத்துப் பார்க்கிறார்.

**சகோதரன் எதிர்ப்பு தெரிவித்தல்**

அண்ணன் பிரபாகரன் நாயருக்கு, தங்கை மாதவிக் குட்டியின் காதல் உறவில் விருப்பம் இல்லை. தாழ்ந்த சாதியான, தர்மபாலனின் வீட்டிற்குத் தங்கை போனது கண்டிக்கத்தக்கது என கருதுகிறான்.

"ஒரு கொட்டிக்க வீட்டுக்கு வயசு வந்த நாயர் பொண்ணு நீ ரெண்டு தடவை போயிருப்பதாகச் சொல்லும்போது உனக்கு அவமானமா இல்லையா?"[35] என்று அவன் கேட்டதைக் காணலாம்.

**சித்தப்பா வரவேற்பு**

அனந்தன் நாயரின் சகோதரர் மதுசூதனன் நாயர் அரசியல், ஜாதி மட்டுமின்றி கலப்புத் திருமண சங்கத் தலைவராக இருப்பதாலும் இவர்களின் காதல் உறவை ஆதரிக்கிறார். இத்திருமணத்தின் மூலம் மாதவிக் குட்டிக்கு நல்ல எதிர்காலம் இருக்குமென அனந்தன்நாயாரிடம் எடுத்துரைக்கிறார்.

"சேட்டா…..நீ நல்லா ஆலோசிச்சு முடிவு சொன்னா போதும். ஆனா…. மாதவிக்குட்டிக்கு அம்மாவால் நம்ம குடும்பத்துக்கு நேர்ந்துவிட்ட களங்கத்தினால் மட்டுமில்லே மாதவிக்குட்டிக்கு நல்ல வருங்காலத்துக்காகவும் தான் நான் சொல்லுதேன் இதை நாம் தவற விட்டிறக்கூடாதுன்னு"[37] கூறுகிறார். இவ்வாறாக சித்தப்பா மதுசூதனன் கலப்புத் திருமணத்தை ஆதரிப்பவராக இருக்கின்றார்.

**நிறைவேறும் காதல் உறவுகள்**

ஆணும் பெண்ணும் மன ஒருமைப்பட்டு விரும்பி ஏற்படும் காதல், திருமணத்தில் முடியும் போது நிறைவேறும் காதலாகக் கருதப்படுகிறது.

**ஆதிசேஷய்யர் ஜகதம்மா காதல் உறவு**

ஆதிசேஷய்யர்! ஜகதம்மா நாயர் கலப்புத் திருமணம் கருத்து ஒருமித்த காதல் உறவாகும். உயர்ந்த சாதி ஒட்டு காதலாகும். "நாற்பத்தி அஞ்சு வயசு வரைக்கும் நைஷ்டிக பிரம்மச்சாரி. கடைசியில் கோயில் நெல்குத்துக்காரி ஜகதம்மா நாயரிடம் எப்படித்தான் மனசைப் பறிகொடுத்து விட்டாரோ….."[38] என வியக்க வைக்கும் வைதீக காதல். "காரணவரே ஒட்டு மாங்காய்க்கு இருக்கும் ருசியே அலாதிதானே….. அதுவும் நாடன் ஒட்டா? உயர்ந்த சாதி ஒட்டு!"[39] என்று கேட்க வைத்த காதல்.

**அலோஷியஸ் - கீதா காதல் உறவு**

பள்ளிகொண்டபுரத்தில் கிளைக் கதை ஒன்றில் மகாதேவய்யர் மகள் கீதாவுக்கும் அலோஷியஸ் என்ற மீனவக் கிறிஸ்தவ பையனுக்கும் காதல் பிறந்து பெற்றோர் ஒப்புதல் இல்லாமல் அரசியல்வாதியின் உதவியால் திருமணம் நடந்ததாக நிகழ்ச்சி ஒன்று சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்நாவலில் வரும் இரண்டு நிகழ்ச்சிகளும் சாதி, சமய ஒற்றுமையை ஏற்படுத்தும் வண்ணம் காதல் உறவு அமைந்துள்ளது என்பதனை ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.

மகாதேவய்யர் மகள் கீதா எம்.எஸ்.ஸி பாஸாய் விட்டு பி.எச்.டிக்கு ஆராய்ச்சி செய்து கொண்டு இருந்தாள். அலோஷியஸ் காலேஜ் லெக்சரராக பணிபுரியும் இடத்தில் உள்ள லைப்ரரிக்கு, கீதா அடிக்கடிச் சென்று வந்தாள். இருவருக்கும் அடிக்கடிச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. கீதா தன்னிடம் உள்ள நகைகளையும், பணத்தையும்

எல்லாம் எடுத்துக்கொண்டு இரவிலேயே எல்லாம் வீட்டை விட்டுச் சென்று மதுசூதனன் தலைமையில் ரெஜிஸ்டர் கல்யாணம் செய்து கொண்டாள்.

கீதா வீட்டை விட்டு ஓடிப்போய் நேற்றைக்கு ஒரு கிருஸ்துவனை ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக் கொண்டாள்."[40]

இருவரும் வெவ்வேறு மதத்தினைச் சார்ந்தவர்கள் என்ற காரணத்தால் தந்தை மகாதேவய்யர் இவர்களின் திருமணத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. "அலோஷியஸ் ஒரு கிருஸ்துவன் அல்லவா! ஒரு ஜாதி ஹிந்துப் பெண்ணை ஒரு கிருஸ்துவன் கல்யாணம் பண்ணிக்கொள்ள விடலாமா?"[41] என்று அவர் கேட்கிறார்.

**பிரபாகரனின் கலப்புக் காதல் உறவு**

பிரபாகரன் நாயர், லீலாக்குமாரித் தங்கச்சி இருவரும் படித்த பொறியியல் கல்லூரி வளாகமே இவர்களின் காதல் உறவுக்கு அடித்தளமாக அமைந்தது. "அவள் என் கூடத்தான் இன்ஜினியரிங் காலேஜில் படித்தாள் அப்போதிருந்தே எனக்கு அவளைத் தெரியும்!"[42] என்கிறான் பிரபாகரன்.

மாணவப் பருவத்திலேயே இருவரும் கருத்து ஒருமித்து பழகி வந்தனர். தந்தையைத் தவிர மற்ற குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் அவர்களின் காதல் உறவுக்கு ஆதரவு கொடுத்தனர். "அம்மா அதைப் பற்றியும் லீலா குமாரியின் அம்மாவிடம் பேசிவிட்டாங்க. அவர்களுக்கும் சம்மதம்தான். அதோடு தம்பிக்கு, கமலத்தம்பிராட்டி என்னவோ தூர உறவாம். அதனால் அவருக்கும் இந்தச் சம்பந்தம் எப்படியும் நடக்கணுமுன்னு ஒரே ஆவல்!"[43] என்று குறிப்பிடக் காணலாம்.

பிரபாகரன், லீலாகுமாரி காதல் உறவை ஆதரிக்காத அனந்தன் நாயர் லீலாகுமாரியின் பூர்வீகத்தைப் பற்றியும் குறை கூறுகிறார். மகன் பிரபாகரன் தன் தாய்

கார்த்தியாயினி பூர்வீகத்தைப் பற்றி நினைவு படுத்துகிறான். பணத்திற்கு முக்கியத்துவம் தரும் பிரபாகரன் விசுவாசத்துக்கும் இடம் அளிக்கிறான். மனையாட்டி நம்பிக்கையாக இருக்கும் வரை ஒன்றாக இருக்கலாம் என்பது அவன் வாக்குவாதம். “அப்பா….. நான் வெறும் பேச்சுக்காகச் சொல்லவில்லை நதிமூலம் போலத்தான் ஸ்திரீ மூலத்தையும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. அவகிட்டே நிறையச் சொத்திருக்கு, பார்க்கவும் லட்சணமாகத்தான் இருக்காள். படிப்பிலும் குறைச்சல் இல்லை. பிறகு அவள் பூர்வீகத்தைப் பற்றியெல்லாம் நான் எதுக்குக் கவலைப்படணும்? நான் தான் முதலிலேயே சொல்லிவிட்டேனே…. எங்கிட்டே விசுவாசமா இருப்பது வரையிலும் எனக்கும் அவகிட்டே விசுவாசம் தான்….! என்னைக்கு என்மீது அவள் அவநம்பிக்கை கொள்கிறாளோ பிறகு நானும் அவளை நம்பப் போவதில்லை. இதுதான் என் தாம்பத்திய வாழ்க்கையின் அடிப்படைப் பிரதானமாக இருக்கும்”[44] எனத் தன் காதல் உறவை நியாயப்படுத்தியே பிரபாகரன் பேசுகிறான். பருவ காலத்தின் உணர்ச்சிக் குமுறலாக மட்டுமின்றி சமுதாயத்தின் நடப்பியலுக்கேற்ற பிரபாகரன் எண்ணுகிறான். பிரபாகரனின் காதல் இறுதியில் வெற்றி பெறுகிறது.

**வைரவன் பிள்ளையின் மகள் இராஜேஸ்வரியின் நிறைவேறும் காதல்**

‘பள்ளி கொண்டபுரம்’ நாவலில் தலைமைப் பாத்திரமான அனந்தன் நாயர் பெரும் வணிகர் வைரவன் பிள்ளையின் கடையில் வேலை பார்த்து வருகிறார் முதலாளியின் மகள் இராஜேஸ்வரி, மருத்துவமனையில் டாக்டராகப் பணிபுரிகிறாள். அங்கு பணிபுரியும் டாக்டரைக் காதலிக்கிறாள். அவர் வேறு இனத்தைச் சார்ந்தவர். ‘காலத்திற்கேற்றவாறு நாமும் வாழ வேண்டும்’ என்ற எண்ணத்தில் வைரவன்பிள்ளை அவர்களின் திருமணத்தை நடத்தி வைக்கிறார். இத்திருமணம் பெற்றோரின் ஆசியோடு நடந்த காதல் திருமணம்.

**நிறைவேறாக் காதல் உறவு**

காதலில் சாதி குறுக்கிடும் போதும் காதலித்த ஆண்டு மகனுக்கு மன உறுதி இல்லையென்றால் காதல் தோல்வியுறுகிறது. அப்படிப்பட்டவர்களின் காதல் நிறைவேறாக்காதல் உறவாகிறது.

**இராஜம்மா உம்மர் காதல் உறவு**

பள்ளிகொண்டபுரத்தில் நிறைவேறாதக் காதல் உறவு ஒன்று காணப்படுகிறது. இராஜம்மா என்ற இந்து பெண் உம்மர் என்ற முஸ்லிம் பையனைக் காதலிக்கிறாள். அவன் முதலில் இராஜம்மாவை விரும்பினாலும் பின்பு தன் சமயப் பெண்ணை நிக்காஷ் செய்து கொண்டு ஊரைவிட்டுப் போய் விடுகிறான். இதனை அறிந்த இராஜம்மா விரக்தியில் ஒன்பது வருஷம் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் நர்சிங் பயிற்சியில் சேர்ந்து விடுகிறாள். “ஒம்பது வருஷம் கழிஞ்சு தானே கல்யாணம் பண்ணிக்கலாமண்ணு எக்ரிமென்டு! நாலு வருஷம் தான் ஆச்சு இனி அஞ்சு வருஷம் கழிச்சுப் பார்த்துக் கொண்டால் போதும். அதுக்குள் அவள் கிழவியாகிவிடுவாள். பிறகு யார் கட்டப் போகிறார்கள்”[45] எனத் தன் மகளின் வாழ்க்கை வீணாகி விடக்கூடாது என்று நினைக்கிறார் தந்தை. காரணமாகத் தன் மகள் மாதவிக் குட்டியின் காதல் உறவை அனந்தன் நாயர் ஏற்றுக்கொள்ளுகிறார். இராஜம்மா வாழ்க்கை வரலாறு அவருக்குள் மனமாற்றத்தை ஏற்படுத்தும் துணையாகவும், தூண்டுகோலாகவும் அமைகிறது.

**அருள்தாஸ் - புஸ்கிலாவின் நிறைவேறாக் காதல் உறவு**

‘உதயதாரகை’ என்னும் நாவல் முக்கோணக் காதல் உறவை வெளிப்படுத்துகிறது. புஷ்கிலா என்னும் ஆசிரியை உதயதாரகையாக உருவகப்

படுத்துகிறார். மாணவன் ஆசிரியை, ஆசிரியர் மாணவி, மாணவி ஆசிரியர் என்ற வகையில் அவர்களின் காதல் உறவு அமைந்திருக்கிறது.

ஆசிரியர் அருள்தாஸ், மாணவி புஷ்கிலா இருவரும் மனதளவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறார்கள். இருவரும் தங்கள் காதல் உறவை ஒருவருக்கொருவர் வெளிப்படுத்தவில்லை. ஆசிரியர் அருள்தாஸ் கோட்டயம் கல்லூரிக்கு மாற்றப்பட்டவுடன் காதலை வெளிப்படுத்தாமலேயே அவளிடம் விடைபெற்றுச் செல்லுகிறார்.

**புஷ்கிலாவின் மனநிலை**

ஒரு பெண் ஆணை விரும்புகின்ற பொழுது அவன் உருவ அழகிற்கு முக்கியத்துவம் தராமல், அவனது அன்பு, பேச்சு, செயல்பாடு, நடவடிக்கை, குணம் முதலியவற்றுக்கு மட்டுமே முக்கியத்துவம் தருவாள். இதைப் புஷ்கிலா மூலம் உணர்ந்து கொள்ளவியலும், பாடம் எடுக்கும் போது நிதானம், ஆத்மார்த்தம் ஒவ்வொரு வார்த்தையையும் அளந்து எடுத்துப் பேசும் இலாவகம், அடக்கமான சிரிப்பு, அறிவின் தீட்சண்யம், யாரையும் கடிந்து கொள்ளாத நிலை, கோபப்படாமல், சந்தேகத்தைப் போக்கும் நிலை, எழுதும் போது மென்மை, அருவி போன்று வரும் அடக்கமான குரல் போன்ற அருள்தாஸின் ஆளுமைக்குள் புஷ்கிலா தன்னைச் சிறைப் படுத்திக் கொள்கிறாள். “என் உள்ளம் வீறிட்டது அருகில் வரமாட்டாரா? உடம்பை தொட்டுப் பார்க்க மாட்டாரா?”[46] கதைத் தலைவி புஷ்கிலா இவ்வாறு நினைக்கிறாள்.

**ஆசிரியர் அருள்தாஸின் மனநிலை**

படித்து முடித்து வேலை பார்க்கும் போது பக்குவப்பட்ட பின்னரும் ஓர் ஆண்மகன் பெண்ணை பார்க்கின்றபோது அவளது உருவப் பொலிவிற்கே

முக்கியத்துவம் தருகிறான். இதை அருள்தாஸ் ஆசிரியர் மூலம் உணர்ந்து கொள்ள முடியும். புஷ்கிலாவை அருள்தாஸ் முதன்முதலாகப் பார்க்கின்ற பொழுது “கண் நிறைந்த அழகுடன் தாவணி அணிந்த ஒரு பெண்”47 என்றே எண்ணுகிறார். “சூடான என் மூச்சுக் காற்றினால் கூட பொசுங்கிவிடக்கூடும் அந்த இளம் இதழ்கள்”[48] என்றும் கன்னங்கரிய கூந்தல், அதிசய விழிகள், உருண்டு திரண்ட பொன்னங்கங்கள்”[49] என்று உருவக அழகிற்கே முக்கியத்துவம் தருகின்றார். அருள்தாஸ் ஆசிரியரின் நினைவு இவ்வாறு இருக்கிறது.

“நான் ஆசிரியர் – குரு

அவள் மாணவி – சிஷ்யை

இது

இது

போராட்டங்கள்

சூழல்கள்

இருந்தும்

இன்பம்…

எண்ணங்கள் தங்களுக்குள் முட்டி மோதி குருதி வடியும் போதும் ஒரு சுகம். இப்போதெல்லாம்; அடிக்கடி என் அறைக்கு வருகிறாள். சிரிப்பது தெரியாமல் சிரிக்கும் எழில் வதனம், குறும்புப் பேச்சு என் மனசில்தான் என்னவெல்லாமோ..

ஆனால் அவள் மனசில்….?”[50] பட்டப்பகலில் வெட்ட வெளிச்சம் பரவப்பரவ, உதயதாரகையின் ஒளி மங்கி மங்கி இறுதியில் கண்ணுக்கே தெரியாமல் மறைந்து

விடுவது போன்ற நிலையில் இவர்களின் காதல் உறவு அமைந்துள்ளது. இருவர் மனமும் ஒன்றுபட்டாலும் காதல் உறவு நிறைவேறாமல் இருக்கின்றது.

**ஒரு தலைக் காதல், உறவு**

'உதயதாரகை' நாவலில் மாணவன் சாந்தசீலன், ஆசிரியை புஷ்கிலாவைக் காதலிக்கிறான். இளம் பருவத்தில் இருக்கும் ஒரு மாணவனுக்குத் தன் ஆசிரியையின் மீது ஒருவிதமான காதல் ஏற்படும். தன்னைவிட, வயது அதிகமான புஷ்கிலாவை அவன் விரும்புவதற்குக் காரணம் அவளது உருவப் பொலிவே ஆகும். அவளது அன்பில் மயங்கும் சாந்தனை உடல்நலக்குறைவினால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கும் பொழுது ஆசிரியயை புஷ்கிலா பார்க்கிறாள்.

"இது….
தன் நெற்றியில் மெல்லென
ஸ்பரிசிக்கும் கரம்….?
அப்படியே வைத்திருக்க மாட்டாரா
பட்டாய்
பூந்தளிராய் நெற்றியில் அழுத்த வேண்டுமென்று
ஒரு கொந்தளிப்பு"[51]

ஏற்கனவே காதல் உறவு கொண்ட சாந்தசீலன் தான் ஏன் திருமணம் புரியக்கூடாது? என்று எண்ணுகிறான். அதற்கு அவள் உடன்படாததால் அக்காதல் ஒரு தலைக் காதலாக முடிகிறது.

காதல் நிலையானது அல்ல, காதல் உறவு சமய சந்தர்ப்பங்களுக்கேற்ப மாறக்கூடியது. பொருளாதார நிலை, மதிப்பு இரண்டிற்கும் ஏற்றவாறு தங்களின்

மனதை மாற்றிக் கொள்ளக் கூடியவர்கள் பெண்கள் என்பதை ‘நேற்று வந்தவன்’ நாவலில் வரும் ஷீலா மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

ஷீலா பத்மநாபனைக் காதலித்து பரசுவை திருமணம் புரிந்துக்கொள்ளும் சூழ்நிலை ஏற்படுகின்றது.

**பத்மநாபனின் காதல்**

பகவதி அம்மன் கோயிலில் வைத்து ஷீலாவைப் பத்மநாபன் பார்த்த உடன் அவள் மீது விருப்பம் கொள்கிறான். கண்டதும் காதல் என்ற நிலையை அடைகிறான். ஷீலா தன் அறையில் வேலை பார்ப்பவள் என்பதைத் தவிர வேறு எந்தத் தகவலையும் தெரிந்து கொள்ளாத சூழலில் பத்மநாபன் அவளை மனைவியாக ஏற்றுக் கொள்ள நினைக்கிறான். “உங்க வீட்டுக்கு என்னை ஒருநாள் கூட்டிக்கிட்டு போவதா சொன்னீங்களே... என்று அவன் லேசாய் ஒரு கொஞ்சல் தொனியில் சொன்னபோது என் மனதில் சொல்லத் தெரியாத ஒரு உணர்ச்சித் தெறிப்பு.”[52]

இருவரும் தங்களின் காதலை வெளிப்படுத்துகின்றனர். “உன்னை என் வீட்டுக்கு எந்த உறவில் அழைத்துச் செல்ல வேண்டுமோ அந்த உறவின் உரிமையோடு ஒரு நாள் அழைத்துச் செல்லத்தான் போகிறேன்….. என்று மட்டும் எப்படியோ சொல்லி முடிக்கும் போது அவள் வதனத்தில் நிறைந்து நின்ற அந்த நிர் விருதி….”[53]

பத்மநாபன் நேரடியாக உன்னைத் திருமணம் செய்து கொள்கிறேன் எனக் கூறாமல் அவள் மறைமுகமாகத் தன் எண்ணத்தை வெளிப்படுத்துகிறான். ஷீலாவின் மௌனம் பத்மநாபனின் கருத்திற்கு உடன்பாடு உடையதாக அமைகிறது. ஷீலாவிற்கும் அவனைத் திருமணம் செய்து கொள்ள விருப்பம் இருப்பதை அறிய முடிகிறது.

இருவரும் காதலித்து திருமணம் செய்து கொள்ள இருந்தபோது பத்மநாபனின் தாயார் உடல்நிலை சரியில்லாத வேலையில் ஷீலாவை தன் நண்பன் பரசு வீட்டில் விட்டுவிட்டுத் தான் மட்டும் ஊர் திரும்புகிறான். இந்தச் சூழலில் அவர்களின் காதல் மணத்திற்கு தடைக்கல்லாக அமைந்து விடுகிறது.

**முடிவுரை**

நீல. பத்மநாபன் புதினங்களில் பண்பாட்டுக் கூறுகள் என்ற இயலில் தமிழ் இலக்கியங்கள் கூறும் பண்பாட்டுக் கூறுகள், பண்பாடும் மொழியும், சடங்கு முறைகள், பழக்கவழக்கங்கள், சமூகமும் மொழியும், வட்டார வழக்கு மொழிநடை, வாய்மொழி, கதை இலக்கியம், நகர வர்ணனை பழங்கதைகள், விடுகதைகள், விளையாட்டுக்கள், ஒப்பாரிப்பாடல்கள் மற்றும் காதல் உறவுகள், நிறைவேறும் காதல் உறவுகள், நிறைவேறாக் காதல் உறவுகள், முறையற்ற காதல் உறவுகள், சித்தரிக்கப்பட்டுள்ளன. காதலுக்கு சாதியோ, மொழியோ தடையில்லை என்பதை ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார். மேலும் ஆசிரியர் மனித உறவுகளில் பண்பாட்டின் அடையாளமாக காதல் உறவும் ஒன்றாகும். பருவகாலத்தில் உணர்ச்சிக் குமுறலாகக் காதல் தோன்றி பின்பு ஒருதலைக் காதலாக மறைந்து விடுவதை அவரது நாவல்களில் காண முடிகிறது. காதல் உறவிலும் கலப்பு மன உறவே மிகுதியாக சித்தரிக்கப்பட்டுள்ளது. நீல. பத்மநாபன் புதினங்கள் பண்பாட்டின் வெளிப்பாடாக அமைகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. நல்லந்துவனார், நெய்தற்கலி, கலித்தொகை பா.16, ப.133
2. திருவள்ளுவர், திருக்குறள் பெருமை - அதிகாரம் குறள் 978
3. மேலது குறள் 980
4. மேலது குறள் - 997
5. சு.சக்திவேல், நாட்டுப்புறவியல் ஆய்வு ப.152-153
6. புறம், பா.216
7. அ.ராஜேந்திரன், நாட்டுப்புறப் பண்பாட்டுப் பழம்பெரும் மரபுகள் ப.13
8. மேலது ப.13
9. மேலது ப.13
10. தொல், பொருள், ப.3-7
11. ஏ.பகவதி, திறனாய்வு அணுகுமுறைகள், ப.276
12. மேலது ப.276
13. வைத்தியலிங்கன், செ.தமிழ்ப்பண்பாட்டு வரலாறு, அண்ணாமலை பல்கலைக்கழக வெளியீடு, 1991, ப.66)
14. நீல. பத்மநாபன், பள்ளிகொண்டபுரம், சிதம்பரம்; மணிவாசகர் பதிப்பகம், 1985, ப.15
15. மேலது ப.25-27
16. மேலது ப.39
17. மேலது ப.36
18. மேலது ப.38
19. மேலது ப.120
20. நீல. பத்மநாபன், தலைமுறைகள், ப.25
21. மேலது ப.36
22. மேலது பக்.151-152
23. சு.சக்திவேல், நாட்டுப்புற ஆய்வு, பக். 152-153
24. வி.சரசுவதி, நாட்டுப்புறப் பாடல்கள் சமூக ஒப்பாய்வு, ப.152
25. நீல. பத்மநாபன், தலைமுறைகள், ப.195
26. மேலது ப.195
27. மேலது பக். 143,144
28. மேலது ப. 343,344

29. மேலது ப. 351
30. Berrand Russel, marriage and morals, p.56
31. Irene clarrmont de castilljs “Kowing women, p.124
32. நீல. பத்மநாபன், பள்ளி கொண்டபுரம், ப.305
33. மேலது ப.307
34. மேலது ப.99
35. மேலது ப.253
36. மேலது ப.290
37. மேலது ப.251
38. மேலது. ப.37
39. மேலது ப.68
40. மேலது ப.116
41. மேலது ப.116
42. மேலது ப.320
43. மேலது ப.321
44. மேலது ப.324
45. மேலது ப.149
46. நீல. பத்மநாபன், உதய தாரகை, ப.102
47. மேலது ப.37
48. மேலது ப.41
49. மேலது ப.47
50. மேலது ப. 41
51. மேலது ப. 89
52. நீல. பத்மநாபன், நேற்று வந்தவன், ப.32
53. மேலது ப.33

# இயல் - 4

# நீல பத்மநாபன் புதினங்களில் கதாமாந்தர்கள்

# இயல் - 4

## நீல. பத்மநாபன் புதினங்களில் கதாமாந்தர்கள்

**அறிமுகம்**

ஒரு படைப்பாளி தன் மனதில் தோன்றுவதைத் தான் எழுத்துக்களாக நமக்கு படைக்கின்றான். அதில் தெளியும் காட்சிகளும் கதைமாந்தர்களும் நம் மனதை ஆட்கொள்ளும்போது அது ஒரு சிறந்த படைப்பாகிறது. இந்த வகையில் நீல பத்மநாபன் நமக்கெல்லாம் பரிச்சயமான கதாபாத்திரங்களைத் தன் கதைமாந்தர்களாகக் கொண்டு புதினம் படைத்து வெற்றி பெற்றவர். நீல பத்மநாபனின் இந்த வெற்றிக்குக் காரணம் அவர் மனிதாபிமானத்தை வெளிப்படுத்தும் காரணத்தினாலேயே ஈடேறியது என்பது அறிஞர்கள் கருத்து.

எழுத்தாளன் வாழ்க்கைச் சிக்கலிலிருந்து விலகியோடும் மனவுணர்வினாலேயே எழுதுகின்றனர். அவனது குறைகள், அனுபவங்கள் போன்றவற்றை படைப்பின் மூலமாகக் கூறுகிறான். அவனது பல்வேறு மனநிலைகளுக்கேற்ப பல்வேறு பாத்திரங்களைப் படைக்கிறான்.

நீல பத்மநாபன் புதினங்களில் வரும் தலைமை மாந்தர்களான திரவி, அனந்தன்நாயர், ஜெயக்குமார், அசோகன், சந்திரன், ரவீந்திரன், ராஜசேகரன், அவர்களுடைய தந்தைமார்கள், துணை மாந்தர்களான மூக்காண்டி, கூனாங்காணி, அவரது மகன்கள், சுப்புப்பிள்ளை, பண்டாரம் பிள்ளை, திரிகூடம்பிள்ளை, குற்றாலம், கண்ணுப்பிள்ளை, சிவானந்த பெருமாள், அனந்தன்நாயர், பிரபாகரன், ராமநாதன் தந்தை, ஜம்புலிங்கம், சண்முகம், சிவராஜப்பிள்ளை, பசுபதி, தியாகு தந்தை

போன்றவர்களைத் தந்தை – தனயன் உறவுக்குச் சான்று காட்டி விளக்குகிறார் ஆசிரியர்.

நீல பத்மநாபன் தந்தை – தனயன் உறவைப் புனித உறவாகக் கருதுகின்றார். அந்த உறவின் ஆழத்தைத் தேடித்தான் “உறவுகள் என்னும் நாவலை உருவாக்குகின்றார். நீல பத்மநாபன், உறவுகள் முன்னுரை”[1]. எனவேதான் இவரது நாவல்களில் வரும் தலைமை மாந்தர்கள் அனைவரும் தந்தை என்ற உறவைப் புனிதமெனக் கருதும் நிலையில் படைக்கப்பட்டு உள்ளனர். மகனுக்குத் தாய் மீதும், மகளுக்குத் தந்தை மீதும் அதிக அன்பு தோன்றும் என்பது நடைமுறை வழக்கு. நீல பத்மநாபன் இவ்வழக்கினை மாற்றி தந்தை-தனயன் உறவு புனிதம் என்று எடுத்துக் கையாள்கிறார். அவர் அடிமானத்தில் பதிந்துவிட்ட அந்தப் புனித உறவை சிந்தாமல் சிதறாமல் அள்ள அள்ளக் குறையாமல் முழுமையாகத் தன் நாவலில் உலாவர விட்டிருக்கிறார்.

நீல. பத்மநாபனின் பாத்திரங்கள் தனி மனிதர்களாகவும் சமூகத்தின் அங்கங்களாகவும் இப்பல்வேறு நிலைமைகளையும் பூரணமாகவே தம்முட் கொண்டு உருவாகியிருக்கிறார்கள். உண்ணாமலை ஆச்சியும், தாத்தா கூனாங்காணிப் பாட்டாவும் தமிழ் நாவல் இலக்கியத்திலேயே மறக்க முடியாத சிறந்த பாத்திரங்கள். சமூகத்தின் அங்கங்களாக அவர்களைப் பார்க்கும் பொழுது அவர்கள் தம்மைச் சிறைப்படுத்திக் கொண்ட நம்பிக்கைகள், வாழ்க்கை முறைகள் இவற்றோடு நமக்கு உடன்பாடு இல்லை என்றாலும் நிலையற்று, செயலற்று தம்மைத் தாமே அவர்கள் வதைத்துக் கொள்வதைக் கண்டு நாம் வெறுப்பும் ஆத்திரமும் கொண்டாலும், தனி மனிதர்களாக நம் நேசத்திற்கு மிகவும் உரியவர்களாகிறார்கள். கதையின் இடையில், உண்ணாமலை ஆச்சி உயிருடன் இருந்திருந்தால் என்ன சொல்லியிருப்பாள், எவ்வாறு

இந்நிகழ்ச்சிகளை எதிர்கொண்டிருப்பாள் என்று நம்மை எண்ண வைத்து அவள் மறைவை, ஒரு தலைமுறையின் மறைவை, உன்னதமான ஒரு உலகின் மதிப்புகளில் வாழ்க்கை முறையின் மறைவை ஒரு இழப்பாகத் தோன்றவைக்கும் அளவிற்கு வெற்றிகரமாக உருவாகிய பாத்திரங்கள் உண்ணாமலை ஆச்சியும் கூணாங்காணிப் பாட்டாவும் பள்ளிக்கொண்டபுரம் நாவலில் இடம் பெறும் அனந்தன் நாயர் தாழ்வு மனப்பான்மைக் கொண்டவராக விளங்குகிறார். அவரது தாழ்வு மனப்பான்மை உணர்வும் செயல்பாடும் குறித்து இங்கு விளக்கப்படுகிறது.

**தோற்றப் பொலிவில் தாழ்வு மனப்பான்மை**

அனந்தன் நாயர் மிகச் சாதாரண மனிதர். அவர் கீழ் குமஸ்தாவாகப் பணியாற்றினார். அவரது தோற்றம் மிகவும் விரும்பத்தக்க தோற்றமன்று. அனந்தன் நாயர் தம்மைப் பற்றி மிகவும் தாழ்வான எண்ணத்திலே இருந்தார். அவர் மனைவி கார்த்தியாயினி அழகு தேவதையாக இருந்தாள். அவளைப் பெண் பார்க்கச் சென்ற போது அனந்தன் நாயரை அவளது அழகு வெற்றிக் கொள்ளச் செய்தது. அவள் இருந்த தோற்றத்தை ஆசிரியர் கீழ்க்கண்டவாறு வருணிக்கிறார்.

“நேரியலும் வேஷ்டியும் உடுத்து, பின்பக்கம் ஜிலுஜிலுவென்று நீண்டு கிடந்த கூந்தலின் பிச்சி ஆரமும், சூடி இமைப்பீலிகளை விரித்து, மையெழுதிய விழிகளால் ஒரே ஒரு தடவை, தன்னை ஏறெடுத்துப் பார்த்து சடக்கென்று பார்வையைப் பின் வாங்கிவிட்டு, நிலம் நோக்கி கால் விரல்களால் கோலம் வரைந்து அவள் நின்ற நிலையைப்”[2] பார்த்து அனந்தன் நாயர் மனத்திற்குள் அந்த அபூர்வ நேரத்தில், நெடுஞ்சாண் கிடையாக அவன் முன்னால் விழுந்தது அவள் தளிர் பாதங்களைத் தம் கண்ணீரால் நனைக்க வேண்டுமென்று நினைத்தார். மேலும் அனைவரும் விரும்பும்

ஆராதிக்கத்தக்க மேன்மையான அழகு தேவதையாகக் கார்த்தியாயினி காட்சியளித்தாள்.

அனந்தன் நாயர் கார்த்தியாயினியைப் பெண் பார்த்துவிட்டு வந்த பின்னர் அவர் அவளுக்கு நான் பொருத்தமானவன் அல்லர் என்று நினைத்துத் தன் அம்மாவிடம் வாதாடினார். தாயின் பரிந்துரையின் பேரில் அவர் அவளை மனைவியாக ஏற்றுக்கொள்கிறார். அனந்தன்நாயர் கார்த்தியாயினியைத் தம் மனைவியாக அடைந்தது தாம் செய்த பெரும் பேறு என்று நினைத்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார். தம் மனைவி கார்த்தியாயினியின் அழகுக்கு முன் அவர் தம்மைப் பற்றிக் 'கோபுரமும் குடிசையும்' போல இருக்கிறது என்று நினைத்தார். அப்பொழுது அவர் பலவாறு சிந்தித்தார். இவள் அழகுக்கு முன்னால் தம்மால் தலைநிமிர்ந்து நிற்கமுடியுமா? இவளைத் தம்மால் கடைசிவரை கொண்டு செல்ல முடியுமா? என்று தம் தாழ்வு மனப்பான்மையால் தம் வாழ்க்கை மீதே சந்தேகப்பட்டார். இத்தகைய பய உணர்வு அவரை முழுவதுமாகப் பிடித்துக் கொண்டது.

அனந்தன் நாயர் கார்த்தியாயினியைத் தம் மனைவியாக ஏற்றுக் கொண்ட பின் அவரது நிலையை ஆசிரியர் நீல. பத்மநாபன் அழகுறச் சித்தரிக்கிறார்.

"முகர்ந்து பார்த்தால், எங்கோ வாடிவிடுமோ என்று தொலைவிலிருந்தே சௌந்தரிய பூஜை செய்து கொண்ட ஆத்ம நிறைவு அடைந்த, தன் பைத்தியக்காரத்தனத்தை அவள் குத்திக் காட்டியபோதுதான் விழித்துக் கொண்டோம்"[3]

அனந்தன்நாயர் ஏழ்மை நிலையை நினைத்து, அவள் தம்மை விட்டுப்போய் விடுவாளோ என்ற அவநம்பிக்கையுடன் காலம் கழித்தார். உடல் பலவீனத்துடனும்,

மன பலவீனத்துடனும் இருந்துகொண்டு கார்த்தியாயினி தன்னால் அடையமுடியாத பேரழகி என்று எண்ணிக் கொண்டு தம்மை மிகவும் தாழ்த்திக் கொண்டார்.

இந்தச் சமயத்தில் ஒரு ஆறாட்டு நாள் அன்று அனந்தன்நாயர் மகாராஜாவை தம் மனைவியோடு வணங்கி நின்றார். தான் வேலை பார்க்கும் கொட்டாரத்தில் தாசில்தாராக இருந்த விக்ரமன் தம்பியின் கண்களால் கார்த்தியாயினி கவரப்பட்டாள். அந்தப் பவனியின் போதே விக்ரமன் தம்பி கார்த்தியாயினியை எப்படியாவது கவர்ந்து தன் மனைவியாக்கிக் கொள்ள தீர்மானித்தார். இதனைக் கண்ணுற்ற அனந்தன்நாயர் மிகுந்த மனவேதனைக்கு உட்பட்டார். விக்ரமன் தம்பியின் அழகோடு அனந்தன் நாயர் தமது அழகை ஒப்பிட்டுப் பார்க்கிறார். அனந்தன்நாயர் அவரைவிட அழகில் குறைந்தவர் என்று உறுதி செய்து தாழ்வுணர்வு கொள்கிறார். இவ்வாறு அனந்தன்நாயர் தம் மனைவி, விக்ரமன் தம்பி இருவரைவிடத் தோற்றப்பொலிவில் குறையுடையவராக கருதி தாழ்வு மனப்பான்மை கொண்டவராக நினைத்தார்.

**பொருளாதாரத்தில் தாழ்வு மனப்பான்மை**

அனந்தன்நாயர் கொட்டாரத்தில் கீழ்குமஸ்தாவாக வேலை பார்த்தார். அதிலிருந்து வரும் வருமானத்தால் அவரது குடும்பத் தேவைகளை நிறைவு செய்ய முடியவில்லை. அவர் தமது வருமானத்தைப் பெருக்க முடியவில்லையே என்று அடிமனதில் எழுந்த எண்ணத்தில் தம்மை மிகவும் தாழ்மையாக நினைக்கிறார். இதனை ஈடுசெய்யும் விதமாக கார்த்தியாயினியிடம் உடல் உறவு கொள்கிறார். இதன் விளைவாகக் காசநோயினால் பீடிக்கப்பட்டு, மேலும் மனம் நொந்தவராகக் காணப்படுகிறார்.

அவரது நோய் குணமாகவும், குணமானபின் சத்துள்ள ஆகாரங்களை உட்கொள்ளவும் அதிகமான பணம் செலவழித்தார். இந்தச் சமயத்தில் விக்ரமன் தம்பி புத்திசாலித்தனமாக செயல்பட்டார். அனந்தன்நாயர் கேட்காமலேயே கார்த்தியாயினியை நினைத்துக் கொண்டு, அவளை நிரந்தரமாக அடைவதற்குப் பிரதிபலனாக அவருக்கு மேல் குமஸ்தாவாகப் பதவி உயர்வு வாங்கிக் கொடுத்தார். அனந்தன் நாயர் பலவாறு சிந்தித்து மனம் குழம்பினார். அவன் அளித்த பதிவி உயர்வு அவனும் வேண்டாம் என்று வெளிப்படையாகக் கூறமுடியாதவாறு அவரது வீட்டின் நிலைமை தடுத்தது. அதிகப்பணம் வீட்டுச் செலவுக்குத் தேவைப்பட்டது. தன்னுடைய நிலைமை கருதியும் தம் தாழ்வு மனப்பான்மையினாலும் பதவி உயர்வை ஏற்றுக் கொண்டார்.

பதவி உயர்வை ஏற்றுக் கொண்டபின் அனந்தன்நாயருக்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டன. அவர் நோயினால் பீடிக்கும் போது, அடிக்கடி அனுமதியின்றி விடுப்பு எடுப்பதற்கு உரிமை பெற்றார். இந்தப் பலன்களுக்கெல்லாம் பதிலாகக் கார்த்தியாயினியை இழக்க வேண்டியது வந்து விடுமோ என்று அவர் அஞ்சினார். விக்ரமன் தம்பியை நேருக்கு நேர் மோதமுடியாமல் கார்த்தியாயினியை துன்புறுத்தினார்.

விக்ரமன் தம்பி தாசில்தார் பதவி வகித்ததோடல்லாமல் ஏராளமான சொத்துக்கு சொந்தக்காரர் ஆவார். அவருக்கு அரண்மனை போன்ற வீடு வெளியில் செல்லப் பலவகையான கார்கள், எடுபிடி ஆட்கள் பலர். இப்படி மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தார். இவரது பொருளாதார நிலையை மனத்திற்கொண்டு, அனந்தன் நாயர் தாம் மட்டும் பொருளாதாரத்தில் தாழ்ந்தவனாக, வீட்டுச் செலவுகளையே எண்ணிப் பார்த்து செலவழிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று மனம் கலங்கினார்.

அனந்தன்நாயர் எவ்வளவுதான் பணம் கொண்டு கார்த்தியாயினியிடம் கொடுத்தாலும் அதனால் வீட்டுச் செலவுகளையோ, பிற செலவுகளையோ சரிக்கட்ட முடியவில்லை. அதனால் செல்வச் செழிப்பு உள்ள விக்ரமன் தம்பியுடன் கார்த்தியாயினி சென்றுவிடுவாளோ என்ற பயம் அவரது அடிமனத்தை வாட்டியது. இந்தப் பயத்தின் எதிரொலியாய் அவரால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. தன் எரிச்சல் முழுவதையும் தன் மனைவி கார்த்தியாயினியிடம் காட்டினார்.

கொட்டாரத்தில் ஆட்குறைப்புக் காரணமாக அனந்தன்நாயருக்கு வேலை இழப்பு ஏற்பட்டவுடன் அவர் வீட்டின் பொருளாதார நிலையை மனத்தில் எண்ணிப் பலசரக்கு வியாபாரி வைரவன் பிள்ளையிடம் கணக்கு பிள்ளையாக பணியாற்றி வந்தார். அவர் தமது வயதான காலத்திலும் ஓடிஓடி வெயிலும் மழையும் பார்க்காமல் உழைக்க வேண்டியுள்ளதே மீண்டும் பாதிக்கப்பட்டு உடல் தளர்ந்தாலும், பொருளாதாரக் குறைவினால் வேலை பார்க்க வேண்டியாயிற்று.

அனந்தன்நாயர் தமது தாழ்வு மனப்பான்மைக் காரணமாகத் தான் நேர்மையும் நீதியும் இல்லாத வைரவன் பிள்ளையிடம் வேலை பார்த்தார். ‘நாம் இருக்கும் நிலையில் எந்தத் தொழில் செய்தால் என்ன? அடிப்படையிலே தாழ்ந்தவன்தானே’ என்ற மனநிலையில்தான் நியாயமற்ற செயல்களையும், திருட்டுக் கணக்கு வழக்குகளையும் செய்யத் தயாரானார். அதிகாரிகளை வசப்படுத்தியும், சமுதாயத்தைக் கொள்ளையடித்தும் செல்வம் குவிக்கும் வைரவன் பிள்ளைக்கு கணக்குப்பிள்ளையாக இருந்தார்.

**உடலுறவில் தாழ்வு மனப்பான்மை**

தம் மனைவி கார்த்தியாயினி தம்மைவிட்டுச் சென்று விடுவாளோ என்ற பயத்தில் தான், மருத்துவர் ஆலோசனையையும் மீறி பலதடவை உடலுறவு கொண்டார். தன் பலவீனத்தை மறைக்கவே இவ்வாறு ஈடுபட்டார். இதன் விளைவாக காசநோய் ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மருத்துவமனையில் தம்மைச் சேர்ப்பதற்கு முன், நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் போது தம்மைவிடக் கார்த்தியாயினி மீது ஏற்பட்ட அர்த்தமில்லாத ஒரு அனுதாப உணர்ச்சியில் உடலுறவு கொள்ளும் போது அவளது நிலையை ஆசிரியர் கீழ்வருமாறு கூறுகிறார்.

“சாதுபோல் தோற்றமளிக்கும் இவருக்கு எங்கிருந்துதான் இந்த ராட்சஸ பலமும், பைசாச வெறியும் வந்து விடுகின்றனவோ”[4]

இதன்மூலம் தன் மனைவியும் உடலுறவு கொள்வதில் சளைத்தவள் அல்லள் என்பதை விளங்கிக் கொண்டார்.

பதவி உயர்வு பெற்றுத் தந்த விக்ரமன் தம்பி ஏதாவது காரணம் காட்டிக் கொண்டு அனந்தன்நாயர் வீட்டுக்கு வர ஆரம்பித்தான். விக்ரமன் தம்பி வரும் நாளெல்லாம், கார்த்தியாயினியிடம் எந்தவித தவறும் இல்லையானாலும் அவளிடம் தன் கோபத்தைக் காட்டி அவளை அடிப்பதும், திட்டுவதும் வழக்கமாக்கிக் கொண்டார் அனந்தன்நாயர்.

அழகிலும், பொருளாதாரத்திலும் தாழ்ந்தவராயிருப்பதால் உடலுறவு கொள்வதன் மூலமாவது கார்த்தியாயினியிடம் வெற்றிக் கொள்ள வேண்டும் என்று எவ்வளவு முயற்சி எடுத்தாலும் அதிலும் அவருக்கு தோல்வியே ஏற்பட்டது. இந்த எண்ணம் அவரது மனதில் தங்கி அவரைப்பாடாய் படுத்தியது. தம் மனக்

கொந்தளிப்பையெல்லாம் எரிச்சலாக மாற்றிக் காரணமில்லாமல் கார்த்தியாயினியை வேதனைக்குட்படுத்தினார்.

இத்தகைய தாழ்வு மனப்பான்மையினால் அவர் தம் மனைவியை கண்டவற்றிற்கெல்லாம் குற்றம் கண்டு பிடிப்பதையும், வீணாக அடிப்பதையும் தமது குறிக்கோளாக்கிக் கொண்டார்.

**அதிகாரி முன் தாழ்வு மனப்பான்மை**

அனந்தன் நாயருக்கு விக்ரமன் தம்பி மூலம் பதவி உயர்வு கிடைத்தது பற்றி அலுவலகத்தில் பலர் பலவிதமாகப் பேசினர். வீட்டில் அழகான மனைவி இருந்தால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை என்று அவர் கேட்குமாறு பேசி அவரைத் தலைகுனியச் செய்தனர். இதன்மூலம் அவர் தம்மை தாழ்த்திக் கொண்டார்.

விக்ரமன் தம்பி மேலதிகாரியாய் இருந்ததால் அவரிடம் தமக்கு அவ்வளவாக மனமில்லாத பதவி உயர்வை வேண்டாம் என்று சொல்லத் தயங்கினார். விக்ரமன் தம்பி பெரிய அதிகாரி மட்டுமல்லாமல் அனைத்து வசதிகளையும் உடையவர் அவரை எதிர்த்து வாழ முடியாது என்ற தாழ்வு மனப்பான்மையினால் பதவி உயர்வை ஏற்றுக் கொண்டார்.

விக்ரமன் தம்பி காரணமின்றி அடிக்கடி அனந்தன்நாயரின் வீட்டுக்கு வருவதனை அவர் விரும்பவில்லை என்றாலும் அதனை வெளிப்படையாக அவரிடம் கூறமுடியாமல் தவித்தார்.

விக்ரமன் தம்பியின் வரவினால் அடிக்கடி அனந்தன்நாயருக்கும் அவர் மனைவிக்குமிடையே ஏற்படும் சண்டை சச்சரவுகளை வளர்த்து, தன் பணப்பகட்டை காட்டுவதற்கு வகை தேடினார். தான் எண்ணியதை செயல்படுத்த என்ன வழியென்று

அறிந்து, அனந்தன்நாயரிடம் நட்புடன் பழகுவது போல நடித்துக் குடும்பத்தோடு தன் வீட்டுக்கு வருமாறு அழைத்தார். அனந்தன்நாயர் தன்னைவிடப் பல வழியிலும் மேம்பட்ட அதிகாரி கூப்பிட்டவுடன் அதனை மறுக்கும் சக்தியின்றி தம் பிள்ளைகள், மனைவி ஆகியோருடன் விக்ரமன் தம்பி வீட்டுக்குச் செல்கிறார். அங்கு விக்ரமன் தம்பியின் வீட்டுச் சூழலையும், செல்வச் செழிப்பையும், வேலையாட்களையும், பயண ஊர்திகளையும் கண்டு தாமே வியந்தார். கார்த்தியாயினி கண் அகல எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்தாள். அவள் மனதில் சிறு குழப்பம் ஏற்பட்டது.

விக்ரமன் தம்பி வீட்டில் தம் குடும்பத்தினருக்கு கிடைத்த வரவேற்பைக் கண்டு திணறிப்போய்விட்டார் அனந்தன்நாயர். முதல் தரமான சிறந்த விருந்து அளிக்கப்பட்டது. விக்ரமன் தம்பியின் வீட்டைப் பற்றி ஆசிரியர் நீல.பத்மநாபன் கீழ்வருமாறு கூறுகிறார்.

“விஸ்தாரமான அலங்கார அறைகள் கொண்ட மூன்று மாடிகள், நிலமெங்கும் அழகான ரத்தினக் கம்பளம், கதவு சன்னல்களுக்குப் பட்டாடைகள், உத்திரங்களில் ஜிலுஜிலுவென்று தொங்கிக் கொண்டிருக்கும் சரவிளக்குகள், பூக்கள் மண்டி நின்ற பூங்கா…”[5] இவ்வளவு வசதியிருந்தும் விக்ரமன் தம்பிக்கு திருமணம் ஆகவில்லை. அவனுக்கு பெண் கொடுக்க யாருமே முன்வரவில்லை. தன் அந்தஸ்தை உயர்த்தவும் பெருக்கிக் கொள்ளவும் கார்த்தியாயினி போன்ற அழகு தேவதை தனக்கு மனைவியாக வாய்த்தால் மிகவும் நல்லது என்று கருதினான். இதனை மனத்திற்கொண்டு, அனந்தன்நாயர் மனைவி கார்த்தியாயினியின் பிள்ளைகளை அழைத்து நன்கு விருந்தோம்பினான்.

அனந்தன்நாயரின் குடும்பத்தினர் விடைபெற்றுக் கொண்டு விக்ரமன் தம்பியின் வாகனத்திலேயே வீடு திரும்பினர். வீடு சேர்ந்ததும், வாகன ஓட்டுனர் வீட்டுக்குள் கொண்டு வந்து வைத்துவிட்டுச் சென்ற தாம்பளங்களில் இருந்த பட்டுச்சேலை, ஜரிகை வேஷ்டி, முத்திரை பவுன் நாணயங்கள் முதலியவற்றைக் கண்ட போது அனந்தன் நாயரே மூச்சு விடும் நிலைமைக்கு வந்தார். விக்ரமன் தம்பி விருந்துக்கு கூப்பிட்டு தாம் போகாமல் இருப்பது முறையன்று என்று கருதி மனமில்லாமல் சென்றார். அனந்தன்நாயர் விக்ரமன் தம்பி கொடுத்த பரிசுப் பொருட்களுக்கெல்லாம் பதிலீடு தன் மனைவி கார்த்தியாயினிதான் என்பதை அவரது உள்ளுணர்வு உணர்த்தியது.

இதனை நிரூபிக்கும் வகையில் முன்பு ஒருமுறை நிகழ்ந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார்க்கிறார். ஒருநாள் விக்ரமன் தனது வாகனத்தில் அனந்தன் நாயரை அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு கொண்டு வந்து சேர்க்கிறார். அப்பொழுது அவன் மனக்கிடக்கையை அனந்தன்நாயர் அறிந்தார். அதனை ஆசிரியர் நீல. பத்மநாபன் கூறும் விதம் இங்கே காணலாம்.

“அனந்தன்நாயர்… லோகத்திலே பெரிய பாக்கியவான் ஆருண்ணு எங்கிட்ட கேட்டா, ஊர்வசி போல, திலோத்தமை போல அழகா இருக்கும் பொண்ணை பொண்டாட்டியா அடைய எவனொருவனுக்கு முடியுதோ அவன்தான்! அப்படீண்ணுதான் நான் சொல்லுவேன்…”[6] என்று விக்ரமன் தம்பி அனந்தன்நாயரிடம் கூறினான்.

இந்த உண்மையை விக்ரமன் தம்பி வாயிலாகக் கேட்ட அனந்தன்நாயரின் மனம் வேதனையில் உழன்றது. தம் மனைவியிடம் கொண்டிருந்த பயம்

உண்மையாகிவிடுமோ என்ற தவிப்பில் அவளைச் சொல்லத் தகாத பல வார்த்தைகளினால் ஏசி நிம்மதியிழக்கச் செய்தார்.

அனந்தன்நாயர் தம் உள்ளத்தின் பலவீனத்தால் கொதித்து, தம் சினத்தை விக்ரமன் தம்பியிடம் காட்ட முடியாமல் தம் மனைவி கார்த்தியாயினியை அதிகமான துன்பத்திற்கு ஆளாக்கினார். விக்ரமன் தம்பி தன் அதிகாரியாக இருப்பதனால், அவரிடம் எதுவும் பேசவில்லை. விக்ரமன் தம்பியை எதிர்த்து தாம் உயிர்வாழ முடியாது என்ற கோழைத்தனமே, அவரை ஒன்றும் செய்யத் தோன்றாமல் இருக்கச் செய்தது.

தம் தாழ்வு மனப்பான்மை காரணமாகத் தம்மை மிகவும் தாழ்த்திக் கொண்டு வேலை பார்த்தார். வைரவன் பிள்ளை பெரிய பணக்காரர். அவரிடம் தம் மனக்கிடக்கையைக் கூற முடியாது. தாம் இருக்கும் நிலையில் அவர் சொன்னதைச் செய்வதே மேல் என்ற தாழ்வு உணர்வே வைரவன் பிள்ளை செய்யும் கீழ்த்தரமான, சமூக விரோதச் செயல்களுக்குத் துணைபோகச் செய்தது. உயரதிகாரியைத் தன் வசப்படுத்தியும், கலப்பு வியாபாரம் பண்ணியும் பணம் சம்பாதிப்பதற்கு இவரும், தான் செய்தால் என்ன? நாம் என்ன அவ்வளவு உயர்ந்தவனா என்ற தாழ்வு மனப்பான்மையினால் உந்தப்பட்டு சொன்ன வேலைகளையெல்லாம் யோசிக்காமல் செய்தார்.

அனந்தன்நாயருக்கு மகள் மாதவிக்குட்டி பிறந்தவுடன், விக்ரமன் தம்பி அழைக்காமல் வந்தான். வந்தவன் மாதவிக்குட்டிக்கு ஒரு வைர மோதிரத்தையும் பிரபாகரன் நாயருக்கு ஒரு தங்கச் செயினையும் பரிசளித்துவிட்டுச் சென்றான். இதன் மூலம் பணப்பகட்டை வெளிக்காட்டிக் கொண்டான். எதனைக் கொடுத்தாவது கார்த்தியாயினியை தன் வசப்படுத்திக் கொள்வதில் குறியாயிருந்தான். இதனை அறிந்த

அனந்தன்நாயர் அவன்மீது உள்ள வெறுப்பையெல்லாம் தன் மனைவி கார்த்தியாயினி மீது காண்பித்தார். அவளைப் பலவாறாகத் திட்டி எரிச்சலடையச் செய்தார்.

தம் பிள்ளைகளுக்குக் கொடுத்த பரிசுப்பொருட்களைத் திருப்பிக் கொடுக்க மனமிருந்தும், அவர்தம் அதிகாரியான காரணத்தால் அவரிடம் அப்படி நடப்பது முறையன்று என்ற தாழ்வு மனப்பான்மையில் தான் அனந்தன்நாயர் செய்வதறியாது மனம் நொந்தார்.

**வாழ்க்கைத் தரத்தில் தாழ்வு மனப்பான்மை**

வாழ்க்கைத் தரம் உயர்வாக இருந்தால் எல்லா வழியிலும் சிறப்படையலாம். வாழ்ககைத்தரம் குறைந்து போனால் தன்னால் எவ்வளவுதான் முயன்றாலும் முன்னுக்கு வரமுடியாது. இத்தகைய நிலையில் தான் அனந்தன்நாயர் இருந்தார்.

அனந்தன்நாயரின் உடன்பிறந்தவர்கள் நல்ல நிலையில் இருக்கிறார்கள். அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததாக இருந்தது. அவர்களும் சமுதாயத்தில் உயர்ந்தவர்களாக மதிக்கப்பட்டு வருகிறார்கள். தமக்கு அழகான மனைவியிருந்தும் அந்த மகிழ்ச்சி அனந்தன்நாயருக்குக் கிட்டவில்லை. அவர் எவ்வளவு தான் பாடுபட்டு உழைத்தாலும் அவரது வாழ்க்கைத் தரம் உயர்வதாக இல்லை. அவர் பெற்ற பலன் இவ்வளவுதான் என்று மனம் கலங்கினார். தமது வாழ்க்கைத்தரம் மிகவும் கீழாகிவிட்டதே என்ற தாழ்வு மனப்பான்மை அவரை வாட்டியது.

அனந்தன் நாயரின் தம்பி மதுசூதனன் நாயர். அவர் தீவிர அரசியல்வாதியாய் இருப்பதோடு மட்டுமின்றி ஊரிலுள்ள எல்லா முற்போக்குச் சமுதாய நடவடிக்கைகளுக்கும் தோள் கொடுக்கும் மக்களிடையே பெயரும் புகழும் பெற்ற எம்.எல்.ஏ ஆவார். தம்பியின் வாழ்க்கைத் தரம் பற்றிச் சொல்லத் தேவையில்லை. அவன்

புகழ்பெற்ற எம்.எல்.ஏ ஆவார். அவனது உடையும், நடையும், காரும், பங்களாவாசமும் அவன் கால்தூசுக்குக் கூட பெறமாட்டோம் என்ற உள்ளார்ந்த உணர்வே அவரைத் தனக்குத் தானே தாழ்ந்தவராக்கிச் செயலிழக்கச் செய்தது.

அனந்தன் நாயரின் அண்ணன் நாராயணபிள்ளை. தன் தந்தை உயிரோடு இருக்கும்பொழுது வீடு என்று இல்லாமல் காடு மேடு எல்லாம் சுற்றித் திரிந்து நிலையில்லாத வாழ்க்கை வாழ்ந்து வந்தான். அவன் இப்பொழுது பெண் மோகத்தால் திரிந்து கொண்டு, சினிமா நடிகனாக கொடி கட்டிப் பறக்கும் வசதி படைத்த வாழ்க்கை உடையவனாகத் திகழ்கிறான். அவனது தோற்றத்தை ஆசிரியர் நீல. பத்மநாபன்

“சில்க் ஜிப்பா…செயின் கழுத்தில், பளிச்சென்று தெரியும் அகலமான மீசை… கார் ஸ்டீயரிங்கைப் பற்றிக் கொண்டிருந்த கைவிரல்களில் எல்லாம் வைர மோதிரங்கள் டால் அடிக்கின்றன. பக்கத்தில் ஒரு நவநாகரிக யுவதி…”[7] என்று குறிப்பிடுகின்றார்.

உடன்பிறந்த அண்ணனும், தம்பியும் பணச் செழிப்புடனும், நிறைவுடனும் வாழ்வதனாலும், மனைவியைப் பிரிந்த துயரத்தினாலும், “எல்லாம் என் தலைவிதி இல்லாவிடில், தன் வாழ்க்கையில் மட்டும் ஏன் இப்படியொரு பேரிடி விழுந்தது”[8] என்று மனம் வருந்தினார். இவ்வாறு அவரது வாழ்க்கைத்தரம் உயர வழியின்றி, இருந்ததோடு மனைவி கார்த்தியாயினியின் செயலால் தம் வாழ்க்கைத்தரம் அடியோடு சாய்ந்துவிட்டது என்று மனம் கலங்கினார்.

அனந்தன்நாயர் தம் மனைவியுடன் வாழ்ந்த வாழ்க்கை உயர்ந்த வாழ்க்கை என்று கூற முடியாது. விக்ரமன் தம்பி பல வழிகளிலும் அனந்தன் நாயரது வீட்டில் நுழைந்து அவர் மனைவியைக் கவர்ந்து சென்று அவளது அழகுக்கு ஏற்ற உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொடுத்து விடுவானோ என்ற பயத்துடனே காலங்கழித்தார்.

அவரது வாழ்க்கைத் தரம் குறைந்ததனால் தம் மனைவி தம்மை விட்டுப் போய்விடுவாளோ என்ற பயவுணர்வும் அவரிடம் குடிகொண்டது.

அனந்தன்நாயர் தம் தமக்கை கல்யாணியின் மகன் பாஸியிடம் மேலான அன்பு கொண்டிருந்தார். அவன் கை நிறைய சம்பாதிக்கத் தொடங்கிவிட்டான். அவனைத் தம் மகள் மாதவிக்குட்டிக்கு மணம் முடிக்க மனவிருப்பத்துடன் இருந்தார். ஆனால் அவர் மனைவியால் கைவிடப்பட்ட நிலையில் இருந்த மதிப்பு போய்விட்டது. தனியனாக இருப்பதால் ஏற்பட்ட தாழ்வு மனப்பான்மையினால் அந்த ஆசையை வெளிக்காட்டாமல் இருந்தார். பாஸியிடமோ கல்யாணி அக்காவிடமோ முறைப்பையன் தானே என்ற முறையுடன் கூடப் பேசத் தயங்கினார். இத்தகைய தயக்கத்துக்கு அவளைவிடத் தாம் மதிப்பிலும், பணச் செழிப்பிலும் வாழ்க்கைத் தரத்திலும் தாழ்ந்தவர் என்ற மன உறுத்தல் தான் காரணம் ஆகும்.

அனந்தன் நாயரின் வாழ்க்கைத்தரம் மிகவும் குறைந்த நிலையிலே இருந்தது. அவர் தம் மகன் பிரபாகரன் நாயரைப் பொறியியல் (Engineer) படிப்புப் படிக்க வைத்தார். படித்து முடித்து வேலை தேடிக் கொண்டிருந்தான். அனந்தன்நாயரிடம் இருக்கும்போது அவன் வாழ்க்கைத்தரம் குறைந்திருந்தது. இதனை உணர்ந்த பிரபாகரன் நாயர் தன் அம்மா கார்த்தியாயினியோடு போய் வசிக்கத் திட்டமிட்டான். தான் அப்பாவை விட்டு விலகி, அம்மாவிடம் போய்ச் சேருவதால் தன் வாழ்க்கைத்தரம் பன்மடங்கு உயரும் என்று எண்ணினான்.

தன் தாயின் கணவர் விக்ரமன் தம்பி ஒரு ஸ்கூட்டர் பாக்டரி தொடங்க இருக்கிறார் என்றும் அதில் தனக்குத் தலைமை என்ஜினியர் பதவிக்கு ஏற்பாடாகிவிட்டது என்றும் மகன் தந்தையிடம் கூறுகிறான். இதனையறிந்த அனந்தன்

நாயர் தம் வாழ்க்கைத்தரம் குறைவு பட்டதனால் தான் தாம் அன்பு செலுத்தி வளர்த்துப் படிக்க வைத்து ஆளாக்கிய மகனே தம்மை உதறிவிட்டுச் செல்லத் தீர்மானித்தான் என்று தம்மீதே வெறுப்புக் கொண்டு கலங்கினார்.

அனந்தன்நாயர் தம் மனைவியின் தோற்றப் பொலிவு, உடல் உறவு கொள்ளுதல் முதலியவற்றில் தாழ்வு மனப்பான்மையுடன் விளங்குகின்றார். மற்றும் பொருளாதாரத்திலும் வாழ்க்கைத் தரத்திலும் தாழ்வு மனப்பான்மை கொண்டவர் என்பதையும் அறிய முடிகின்றது.

**க.த. திருநாவுக்கரசு கூற்று**

“தனிமனிதர்களுடைய இயல்புகளில் பல சமூகத்தின் நெறிமுறைகளுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் (வழக்காற்று ஒழுக்க நெறிக்கு) முரண்பட்டனவாகவே உள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை அவர்கள் வாழும் சமூகத்தால் ஏற்கப்படுவது இல்லை. இத்தகைய சமூக ஏற்பினைப் பெறாத விருப்புகளினால் மனிதன் உந்தப்படுவது மனித இயல்பு”[9] என்னும் சொல்லினால் தெளிவுபடுத்துகிறார்.

மேலும், “பள்ளிகொண்டபுரம்” நாவலில் வரும் கார்த்தியாயினி, குஞ்சுலஷ்மி, விக்ரமன் தம்பி போன்றவராவர்.

**கார்த்தியாயினி**

பள்ளிகொண்டபுரம் நாவலின் கதைத் தலைவி கார்த்தியாயினி கார்த்தியாயினியின் கணவன் அனந்தன்நாயர். இவர் தம் மனைவியிடம் எப்பொழுதும் சந்தேகப்பட்டும் சண்டையிட்டும் காலம் கழித்து வந்தார். ஏனென்றால், அவள் அழகும், கவர்ச்சியும் ஒழுங்கமைந்த பெண். அவளது அடிமனம் தனக்கு ஒரு நிம்மதியான வாழ்க்கை அமையவில்லையே என்று தவித்துக் கொண்டிருந்தது. அத்தகைய

வாய்ப்பினை எதிர்நோக்கிக் கொண்டிருந்த அவளது அடிமனம் தன்னை அன்பாக வைத்துக் கொள்ளும் ஒருவனுக்காக ஏங்கியது. அவளது மனக் கொந்தளிப்பை ஆசிரியர் நீல. பத்மநாபன் கீழ்க்கண்டவாறு கூறுகின்றார்.

“இங்கே நான் ராஜ வாழ்க்கையல்லவா வாழுதேன்... எதுக்கெடுத்தாலும் உங்களுக்கு மூக்கு நுனியில் இஞ்சிதான். கெட்டின மாப்பிள்ளைன்னும் ஒரு வாக்கு பேசப்படாது கேட்கக் கூடாது? வேயொண்ணும் இல்லாவிட்டாலும் ஒரே ஒரு நாளைக்காவது எங்கிட்டே எரிஞ்சு விழாமே நீங்க இருந்திருக்கீங்களா?”[10] என்று கார்த்தியாயினி தன் எண்ணத்தை அனந்தன்நாயரிடம் சண்டையின் போது கூறுகிறாள்.

அனந்தன்நாயர், விக்ரமன் தம்பி தம் வீட்டுக்கு வரும் போதெல்லாம் கார்த்தியாயினியைக் கடுமையாகப் பேசிக் கொடுமைப்படுத்தினார். வீட்டில் எப்பொழுது பார்த்தாலும் சண்டை சச்சரவுதான், எடுத்ததெற்கெல்லாம் குற்றம் கண்டுபிடித்துக் கொண்டிருந்தார் அவர். தம் கோபத்தையெல்லாம் அவள் மீது தீர்த்துக் கொண்டார். இதனால் கார்த்தியாயினி முற்றிலுமாக மனமுடைந்து காணப்பட்டாள். அவள் பதிலுக்கு சில சமயம் அவரைத் திட்டவும் செய்தாள். அவளது மனக்கிடக்கையை ஆசிரியர் கூறுவதிலிருந்து அறியலாம்.

“உங்களைக் கட்டினதுக்கு எனக்கு எண்ணைக்கும் நரக வாழ்க்கைதானே! மற்ற பெண் பிள்ளைகளைப் போல், ஒரு தடைவ கூட இந்த ஊரை விட்டு வெளியூருக்கு என்னை நீங்க கூட்டிகிட்டுப் போயிருக்கேளா? இந்த என் பாழும் ஜென்மம் முடிவது வரையிலும் உங்களுக்கும் உங்க பிள்ளைகளுக்கும் வீட்டு வேலை செய்துகிட்டு கிடக்கத்தான் எனக்கு நேரம்”[11] என்றெல்லாம் கத்துவாள். கார்த்தியாயினி

அடிமனத்தூண்டல் ஒரு நிம்மதியான வாழ்க்கையை விரும்பியது என்பதனை உணர்த்தியது.

அனந்தன்நாயரின் தொல்லை தாங்க முடியாததாலும், விக்ரமன் தம்பி காட்டிய பரிவும், அன்பும் அவளை மிகுதியாகக் கவர்ந்ததாலும் அவள் யாரைப் பற்றியும் கவலைப்படாமல் தன் மனநிம்மதி ஒன்றுதான் முக்கியம் என்று நினைத்து, விக்ரமன் தம்பியுடன் சென்றுவிட்டாள். அவள் அன்பாகப் பெற்ற இரண்டு பிள்ளைகளைப் பற்றி கூடச் சிந்திக்கவில்லை. அனந்தன்நாயரைப் பற்றி சிறிதளவு கூட எண்ணவில்லை. அவள் தனது அடிமனத் தூண்டலின் படி விக்ரமன் தம்பியுடன் சென்றால், தனக்கு அமைதியான வாழ்க்கை கிடைக்கும் என்று நம்பிச் சென்றாள். அவள் சமூக நியதியை, இல்லற நெறியை உதறிவிட்டு தன் மனச்சாட்சியை களவு கொடுத்து உள்மனத் தூண்டலின் படி செயல்பட்டாள். தம் சிறுபருவத்துப் பிள்ளைகளையும், நோயாளிக் கணவனையும் விட்டுச் செல்லும் அளவுக்கு அவளைப் பற்றிய மனநிலையை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

**குஞ்சுலஷ்மி**

அனந்தன்நாயரின் அத்தை குஞ்சுலஷ்மிக்கு சங்குண்ணிநாயரை அனந்தன்நாயரின் தந்தை திருமணம் செய்து வைத்தார். சங்குண்ணி நாயர் நல்ல உடல் திடமும், அழகும் கொண்ட ஒரு மெலிந்த இளைஞர், அவர் தம் மனைவி மீது உயிரையே வைத்திருந்தார். அந்தச் சமயத்தில் ஒரு நாள் அவள் குளித்து விட்டு வீட்டுக்குள் வரும்பொழுது பாசியில் வழுக்கிக் கீழே விழுந்தாள். விழுந்ததில் அவள் இடுப்பு எலும்பில் முறிவு ஏற்பட்டது. அவள் வலியால் துடித்தாள். அதைப் போக்க மிகவும் செல்வாக்குப் பெற்ற கொச்சு கிருஷ்ணகர்த்தாவைக் கூட்டிக் கொண்டு வந்தார்கள்.

அவர் எண்ணெய் தடவி வைத்தியம் பார்த்ததில் குஞ்சுலஷ்மிக்கு நல்ல குணம் கிடைத்தது.

கர்த்தாவுக்கு ஏற்கெனவே ஒரு மனைவியும் ஐந்தாறு குழந்தைகளும் உண்டு. அப்படிப்பட்டவனிடம் குஞ்சுலஷ்மி தன் மனத்தை இழந்தாள். அவன் இல்லாமல் தன்னால் உயிர் வாழ முடியாது என்று தன் முதல் கணவனைப் பிரிந்து கர்த்தாவுடன் குடும்பம் நடத்தச் சென்று விட்டாள். தன் பாலுணர்வு வேட்கையை நிறைவு செய்வதற்கு வயதான கர்த்தாவை அவள் அடிமனம் அவளது விருப்பப்படி ஏற்றுக் கொண்டது. அவள் அறநெறியைப் பற்றிக் கவலைப்படாமல் அவனோடு வாழ்ந்தாள்.

அவளது அடிமனத்தூண்டல் எப்படி செயல்பட்டது என்பதை ஆசிரியர் நீல. பத்மநாபன் கீழ்க்கண்டவாறு கூறுகிறார். "குஞ்சுலஷ்மி அம்மாவின் மனசு இரங்கவே இல்லை. உங்கிட்டே எனக்கு எந்த வெறுப்பும் இல்லை. ஆனா... கர்த்தா இல்லாம எனக்கு ஜீவிக்க முடியாது. அப்படீன்னு ஒரேயடியாகச் சாதித்து விட்டாளாம் அவள்"[12] இவ்வாறாகத் தன் கணவன் சங்குண்ணி நாயரை விட்டுப் பிரிந்தாள். தன் மன இச்சை ஒன்றே பெரிதாகக் கருதி செயல்பட்டது குஞ்சுலஷ்மியின் அடிமனம்.

அன்பான கணவனைப் பிரிந்து, மணவிலக்குப் பெற்றாள். தன் உடலுறவு இச்சையை நிறைவு செய்வதற்காக, தனக்கு வைத்தியம் பார்த்த கொச்சு கிருஷ்ண கர்த்தாவுடன் வாழ்ந்தாள்.

**விக்ரமன் தம்பி**

விக்ரமன் தம்பி, இந்நாவலின் கதைத் தலைவரான அனந்தன்நாயர் வேலைபார்க்கும் கொட்டாரத்தில் தாசில்தாரராகப் பணிபுரிகின்றார். பெரிய பணக்காரனாக இருந்தபோதும் அவனது தவறான நடத்தையினால் எவரும் அவனுக்கு

பெண் கொடுக்க முன்வரவில்லை. அவன் தனக்கு ஒரு அழகான தோற்றம் கொண்ட பெண்ணைத் தேடிக் கொண்டிருந்தான். அத்தகைய பெண்ணைத் தேடி அவன் உள்மனம் செயல்பட்டுக் கொண்டிருந்தது.

விக்ரமன் தம்பி பலதரப்பட்ட பெண்களிடம் தொடர்பு கொண்டிருந்தாலும் அவன் அடிமனத் தூண்டலுக்கு ஏற்புடையதாக ஒரு பெண்ணும் அமையவில்லை. ஒரு நாள் ஆறாட்டு நாள் நடந்தபோது விக்ரமன் தம்பி அதிகாரிகள் சூழ மகாராஜாவிக் பின்னால் பவனி சென்றான். அப்பொழுது அனந்தன் நாயர், தம் மனைவி கார்த்தியாயினி, குழந்தைகளுடன் வணங்கி நின்றார். அந்தச் சமயம் விக்ரமன் தம்பியின் கண்கள் கார்த்தியாயினியைப் பார்த்தன. பார்த்த உடனேயே அவளை எப்படியாவது அடைந்துவிட வேண்டும் என்று தன் மனதிற்குள் அவன் தீர்மானித்து விட்டான். அதற்கான சூழ்நிலைகளை உருவாக்கினான்.

முதற்கட்டமாக அனந்தன் நாயருக்கு பதவி உயர்வு கொடுத்தான். நினைத்தபொழுது விடுப்பு எடுக்க அதிகாரம் கொடுத்தான். பின் கொஞ்சம் கொஞ்சமாக தன் பணப்பகட்டைக் கார்த்தியாயினியிடம் காட்டி அன்பொழுகப் பேசினான். கார்த்தியாயினி தன் கணவன் அனந்தன்நாயரிடம் கிடைக்காத அன்பும், ஆதரவும் விக்ரமன் தம்பியிடம் கிடைத்ததால் அவன் தன்னை அழைத்தவுடன் அனந்தன்நாயரின் தொல்லைகள் தாங்க முடியாமல் விக்ரமன் தம்பியுடன் சென்று விட்டாள். இவ்வாறு தன் மனத்தூண்டலின் ஆசையை நிறைவேற்றிக் கொண்டான். விக்ரமன் தம்பி தனது அடிமன ஆசையை நிறைவேற்றுவதற்காகக் கார்த்தியாயினி, பிறன் மனைவியாயிருந்தும் அவள் அனந்தன்நாயரைப் பிரியும் சூழ்நிலையை உருவாக்கித் தனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டான்.

கார்த்தியாயினி தன் கணவன் அனந்தன் நாயரின் தொல்லைகளால் நிம்மதியற்ற வாழ்க்கை வாழ்ந்து வந்தாள். மன நிம்மதியுடன் கூடிய பாதுகாப்பான வாழ்க்கை வசதிகளுக்காக, விக்ரமன் தம்பியுடன் தொடர்பு கொண்டாள். குஞ்சுலஷ்மி தன் கணவன் சங்குண்ணி நாயர் இருந்தபோதும் நிறைவேறாத தனது பாலுணர்வு இச்சையைப் பெரிதாக நினைத்து, அதனை முழுவதுமாக நிறைவேற்றிய கொச்சு கிருஷ்ணகர்த்தாவைத் திருமணம் செய்து கொண்டாள். திருமணமாகாத விக்ரமன் தம்பி, தனக்குக் கார்த்தியாயினி போன்ற அழகான பெண் மனைவியாக அமைந்தால் அவளைப் பல இடங்களுக்குக் கூட்டிச் செல்ல முடியும். அவளால் தனக்கு மதிப்பு மிகுதியாவதோடல்லாமல், பல காரியங்கள் இலகுவாகி, தான் அதிகமான பணம் சேர்ப்பதற்கு வழி வகுக்கும் என்று கருதி, விடாமுயற்சியுடன் முயன்று அனந்தன்நாயருடைய மனைவியாகிய கார்த்தியாயினியை மணம் முடித்துக் கொண்டான்.

கார்த்தியாயினி, குஞ்சுலெஷ்மி, விக்ரமன் தம்பி மூவரும் செயல்களுக்கு ஏற்றாற் போல செயல்படுகின்றனர். தங்கள் பாலுணர்வு இச்சையை நிறைவு செய்வதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். இந்த அடிமன எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள தடைகளைகளையும் கட்டுப்பாடுகளையும் மீறி செயல்பட்டுள்ளனர்.

அனந்தன் நாயரின் மனைவி கார்த்தியாயினி. இவள் அழகும் கவர்ச்சியும் உடையவள். அனந்தன் நாயர் தமது தாழ்வு மனப்பான்மையின் விளைவாக அவளை வீணாகச் சந்தேகப்பட்டு அடக்கி, அடித்துத் துன்புறுத்தினார். இதன் விளைவாகக் கார்த்தியாயினி விக்ரமன் தம்பியுடன் சென்று விட்டாள்.

அனந்தன் நாயர் தம் உணர்வுகளை அடக்கி தன்நலமின்றிப் பிள்ளைகளை வளர்த்துப் படிக்க வைப்பதில் தம் கவனம் முழுவதையும் செலுத்தினார்.

அவர் தமக்குக் கொட்டாரத்தில் வேலை போன பின்பும் தம் பிள்ளைக்காக வைரவன் பிள்ளையிடம் கணக்குப் பிள்ளையாகப் பணியாற்றினார். பிள்ளைகளிடம் அவர் கொண்ட அன்பினால் தான் நிம்மதியாக வாழ்ந்தார் என்பதை ஆசிரியர் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார். "உங்க ரெண்டு பேரையும் இங்கே என்கூட விட்டு வச்ச ஒரே காரணத்தினால்தான் இத்தனை நாளா என்னால் உயிர் வாழவே முடிஞ்சது. ஏனக்கு அவ்வளவு தூரத்துக்கு உங்க ரெண்டு பேரு மேலையும் அபிரிமிதமான வாஞ்சையிருந்தது"[13] என்று அனந்தன் நாயர் பிள்ளைகளிடம் கூறுகிறார். தம் மனைவியைப் பற்றிக் கவலைப்படாமல் தம் பிள்ளைகளுக்காக வாழ்ந்தார். அனந்தன் நாயர் நினைத்திருந்தால் அவர் மனைவி அவரைப் பிரிந்த பின் வேறு திருமணம் புரிந்திருக்கலாம். ஆனால் அவர் தன்நலமின்றிப் பிள்ளைகளுக்காக வாழ்ந்தார். தம் பிள்ளைகளுக்காக தாம் வாழ்ந்து தான் தீர வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு மனத்தைக் கட்டுப்படுத்தி வாழ்ந்து வந்தார். ஒருவர் எந்தப் பலனும் எதிர்பாராமல் தம் மனசாட்சியின்படி (அறநெறிப்படி) முறையான வாழ்க்கை வாழ்வதனை பள்ளிக்கொண்டபுரம் நாவலில் இத்தகைய பண்புகளைக் கொண்ட கதைமாந்தர்களை படைத்துக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

**கல்யாணி அம்மாள்**

'பள்ளிக்கொண்டபுரம்' நாவலில் வரும் கதைத்தலைவர் அனந்தன் நாயரின் அக்காள் கல்யாணி அம்மாள் ஆவார். இவளை இவர் பெற்றோர் சீரும் சிறப்புமாக வளர்த்து வேதாந்தத்தில் அறிஞர் பட்டம் பெற்ற அரவிந்தாட்சக் குறுப்புக்கு திருமணம் செய்து கொடுத்தனர். அவள் கணவன் ஒருநாள் தன் வேதகுருவின் கருத்தை சோதித்துப்

பார்த்ததன் விளைவாக திடீரென இறந்து விட்டான். இளம் விதவையான கல்யாணி அம்மாளுக்கு மூன்று மாதங்களுக்குப் பின்னர் பாஸி என்ற பாஸ்கரன் பிறந்தான்.

கல்யாணி இளம் பருவத்தவளாக இருந்தமையால் அவள் பெற்றோர் அவளிடம் மறுமணம் செய்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டடினர். ஆனால் அவள் பிடிவாதமாக மறுத்துவிட்டாள். அவள் பெற்றோர் அவளிடம் மறுமணம் செய்யுமாறு கட்டாயப்படுத்தினர். அப்போது அவள் "இந்த விஷயத்தில் மட்டும் நீங்க யாரும் தயவுசெய்து குறுக்கிடப்படாது. இனி எனக்கொரு கல்யாணமே வேண்டாம்…தாங்க ஆள் உண்டுமானால் தளர்ச்சியும் உண்டு அவ்வளவுதான்! என் பாஸிக்கு அச்சனைத் தவிர இன்னொருவரை அவர் என்னதான் பெரிய மகாராஜாவாக இருந்தாலும் சரி, என் பார்த்தாவாக என்னால் நினைச்சு பார்க்கவே முடியாது…உம்… வாயில் கொள்ளப்பட்டதை தானே கொத்த முடியும்! ஆனால் உங்களுக்கு நான் ஒரு பாரமாக இருக்க மாட்டேன்"[14] என்று திட்டவட்டமாக தன் உள்ள கிடக்கையை பெற்றோரிடம் கூறினாள்.

பின்பு அவள் முப்பத்தைந்து ஆண்டுகள் ஆன்மீக வாழ்க்கை வாழ்ந்தாள். காலையில் இருந்து இரவு படுக்கைக்குச் செல்லும் வரை ஆசிரமம், கோயில், குளம், பூஜை, புனஸ்காரம், புராணங்கள் வாசிப்பு இப்படிப் பயனுள்ள வழியில் நேரத்தை செலவிட்டாள்.

அவளது மனத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கொள்கையே மேலோங்கி இருந்தது. மேலும், தன் ஒரே மகன் பாஸியை நன்கு வளர்த்து படிக்க வைத்து ஆளாக்க வேண்டும் என்றும் மனத்தில் எண்ணினாள். இக்கருத்துக்கள் அவள் மனத்தில்

தோன்றினமையால் அவள் மறுமணத்தை மறுத்தாள். புனிதமாக வாழ்ந்தாள். இவள் பிறருக்கு தீங்கு விளைவிக்காமல் வாழ்ந்து வந்தாள்.

**காமாட்சி அம்மாள்**

பள்ளிக்கொண்டபுரத்தில் வரும் கதையில் அனந்தன் நாயருடைய அம்மாவின் ஒருமுறைக்கு தங்கையானவள் காமாட்சி அம்மாள். தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்ந்தாள். அவளது வாழ்க்கை, தேவை உள்ளவர்களுக்கெல்லாம் தன்னால் முடிந்த உதவி செய்வது அவளது நோக்கமாக இருந்தது. அங்ஙனம் செய்வதால் அவளுக்கு ஒரு மனநிறைவு கிடைத்தது. முதலில் அனந்தன் நாயரின் தம்பி மதுசூதனன் நாயர் நல்ல நிலைக்கு வரும் வரை அவனோடு இருந்து காக்கா வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்ட, அனந்தன் நாயரின் கடைசி தம்பியையும் பார்த்துக் கொண்டாள் கல்யாணி அக்கா. சிறுபிள்ளை பாஸ்கரனுடன் தனியாக இருக்கும் பொழுது அவளுக்கு உதவியாக உடன் இருந்தவள் இந்த காமாட்சி அம்மாள் தான். அனந்தன் நாயர் காசநோயினால் பீடிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பொழுது அவருக்கு காலையும் மாலையும் உணவு கொடுத்து பார்த்து செல்வதும், வீட்டில் பிரபாகரனோடு தனியாக இருக்கும் கார்த்தியாயினிக்கு தேவையான உதவிகளை செய்து கொண்டும் இருந்தாள். கார்த்தியாயினி விக்ரமன் தம்பியுடன் சென்றவுடன், குழந்தைகளையும் தம்மையும் கவனிக்க அனந்தன் நாயர் தம் வீட்டுக்கு காமாட்சி அம்மாளை அழைத்து வந்தார். வீட்டில் உள்ள அனைத்து வேலைகளையும் கவனிப்பதுடன் வேலை பார்க்கும் மாதவிக்குட்டிக்கும் அனந்தன் நாயருக்கும் சோறு கொடுத்து விடுவாள். வேலையில்லாமல் நேரத்துக்கு சாப்பாடு போட்டும் தன் காலத்தைக் கழித்தாள் காமாட்சி அம்மாள். எந்தவித பிரதிபலனும் கருதாமல், துன்பத்தில் உள்ளவர்களுக்கு

உதவி செய்வதிலேயே தன் காலத்தைக் கழித்தாள். இது அவளது சிறந்த பண்பினை காட்டுகிறது.

கல்யாணி அம்மாள் அறநெறி தவறாது செயல்பட்டார். தன்னலம் கருதாது பிறர் நலம் கருதி ஆன்மீக வாழ்வு வாழ்ந்து வந்தாள். காமாட்சி அம்மாள் பிறருக்கு எவ்விதத் தீங்கும் விளைவிக்காது உதவி செய்யும் உயர்ந்த உள்ளத்தினராய் விளங்கினார்.

பள்ளிக்கொண்டபுரம் நாவலில் தலைமைப் பாத்திரமான அனந்தன்நாயர் தாழ்வு மனப்பான்மையின் விளைவாக மனைவியைத் துன்புறுத்தினார். அதனால் அவள் வேறொரு ஆடவருடன் சென்று விட்டாள். அனந்தன் நாயர் தன்னலம் இன்றி தம் பிள்ளைகளுக்காக நல்லெண்ணத்தோடு மனதை கட்டுப்படுத்தி வாழ்வது மூலம் அவளுடைய மனப்பான்மையை அறிய முடிகிறது. தன் உடலுறவு இச்சையை நிறைவு செய்வதற்காக தன் அன்பான கணவனை பிரிந்து தனக்கு வைத்தியம் பார்த்த கொச்சு கிருஷ்ண கர்த்தாவுடன் வாழ்ந்த செயலும், கார்த்தியாயினி தம் சிறு பருவப் பிள்ளைகளையும், நோயாளிக் கணவனையும் விட்டுச் சென்ற செயலும் இந்நாவலில் கல்யாணி அம்மாள் காமாட்சி அம்மாளின் பண்புகள் நல்ல மனிதநேய கதாமாந்தர்களாகப் படைத்துக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

**உதயதாரகை**

ஓர் இரண்டுங்கெட்டான் பருவத்தில் இருக்கும் ஒரு மாணவனுக்கு தன் ஆசிரியை இடத்தில் ஒரு விதமான காதல் ஏற்படும். பல நிலைகளில் தோன்றி மறையும் அல்லது நிற்கும் அந்த காதலில் ஏற்படும் மன உலைச்சலை சொல்லுவது “உதயதாரகை” யின் நோக்கமாக அமைந்திருக்கின்றது. ஆசிரியை புஷ்கிலாவிடம், மாணவன்

சாந்தக்குமாருக்கு தோன்றும் காதல் உறவைக் கூறுவது இந்த புதினத்தின் நோக்கமாகும்.

**பருவ மாற்றங்களும் உணர்வுகளும்**

பருவ உணர்ச்சியில் ஆரம்பகாலம் விசித்தரமாகத்தான் இருக்கிறது. முதலில் தன் தாய் மேல் அன்பு பிறக்கிறது. இது பின்னால் தன்னைவிட வயதும் முதிர்ந்தவர்களை தன் வயதுக்கு மூத்த பெண்ணை காதலிக்கச் செய்கிறது. சாந்தசீலன் புஷ்கிலா டீச்சரை நினைக்கிறான். “தன்னை விட ஒரு பத்து வயதுக்காவது அவர் பெரியவராக இருக்க மாட்டாரா? இருபத்தி அஞ்சு, இருபத்தி ஆறு வயது இருக்குமே!”[15] இதன்மூலம் காதலின் பருவ உணர்ச்சியையும் இனக்கவர்ச்சியையும் அறிய முடிகிறது.

இளமைப்பருவத்தில் உடம்பில் சம்பவித்துக் கொண்டிருக்கும் மாற்றங்கள் அவர்களுக்குள் ஓர் உணர்வை தோற்றுவிக்கும்.

“குரலில் கரகரப்பு...

நினைவுகளில் இனிமை

ரொமான்டிக் புத்தகங்களைப் படிப்பதில் ஒரு நாட்டம்

தாவணி சாரி அணிந்தவர்கள் தூரத்தில் தென்படுகையில் அவர்கள் படங்களை பார்ப்பதில் ஒரு சுகம்”[16] மாணவன் சாந்தசீலனின் செயல் மூலம் பருவமாற்றங்களை அறிய முடிகிறது.

**இனக்கவர்ச்சி**

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் தன் நண்பன் கோபக்குமாரை சாந்தசீலன் பார்க்கச் செல்கிறான். சாந்தன் கோபக்குமாரோடு பேச முற்படும்போது,

கோபக்குமார் தடுத்து அடுத்த அறையில் பேசும் குரலை கேட்கச் சொல்கிறான். “வகுப்பறையில் மட்டுமல்ல தன் இதயத்தில் யாரும் தெரிந்திடாத அடி ஆழத்தில் எதிரொளித்துக் கொண்டிருக்கும் இந்தக் குரல்”[17] புஷ்கிலா ஆசிரியையுடையது என்பதை உணர்கிறான். டீன் ஏஜில் தோன்றும் ஓர் இனக்கவர்ச்சியை புரிந்து கொள்ள முடியாதவகையில் இரண்டுங்கெட்டான் வயதில் இருக்கும் ஒருவனின் மனநிலையை அறிந்து கொள்ள முடிகிறது.

**மாணவப்பருவம்**

சாந்தக்குமாரின் நண்பன் கோபக்குமாரின் உடல்நலத்தை விசாரிக்க வந்த மேனண் அந்தரங்க நெருக்கத்துடன் பேசிக்கொண்டிருந்தார். “மாணவப்பருவம் உணர்ச்சி நிரம்பியது. அங்கே அறிவுக்கோ அனுபவத்தின் தத்துவங்களுக்கோ இடமில்லை. சிரிப்பு, அழுகை இவைதான் அப்போ வாழ்வு. அது இந்த பருவத்துக்கு கோளாறு. அந்தப் பருவத்தில் மற்றவர்களைப்போல் அறிவையும் நெறியையும் உதைச்சு தன் போக்கில் வாழ்ந்தவர்களும் பிறகு மகான்களாகி தாராளமாய் அறநெறிகளை உபதேசிப்பாங்க. தீவிரமான படிப்பு வீட்டிலும், வெளியிலும் கட்டுப்பாடு இப்படி இருக்கும்”.[18]

தனக்கு அன்பானவர்களை பார்க்கச் செல்லும் பொழுது ஆடைகளை மாற்றி மாற்றி அணிந்து அழகாக செல்ல வேண்டும் என்ற எண்ணங்கள் உள் மனதில் தோன்றும். “காலை நாலு மணியிலிருந்தே பருவ பெண்ணைப் போல் உடை ஒவ்வொன்றாய் மாற்றி மாற்றி அணிந்து கண்ணாடி முன் நின்றுகொண்டு… அலங்காரங்கள்”[19] செய்து கொண்டு சாந்தசீலன் புஷ்கிலா ஆசிரியைப் பார்க்கச் செல்கிறான். பருவ உணர்வின் செயல் மாற்றங்களை ஆசிரியர் இவ்வாறு விளக்குகிறார்.

**மாணவர் மனநிலை**

ஓர் ஆசிரியையை காதலிக்கும் மாணவர் மனநிலை உணர்வுகளை அறிய முடிகிறது. மாணவர் மனநிலை என்கிற போது, புஷ்கிலா – சாந்தன் அதில் இடம்பெறுகின்றனர்.

**மாணவர் ஆணாய் இருந்தால் அவன் மனநிலை**

மாணவன் ஆணாய் இருந்தால் அவனது மனநிலை முழுக்க முழுக்க அவ்வயதில் தோன்றும் பருவ கவர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலையினை நாம் நடைமுறையில் காணலாம். அந்தப் பருவ கவர்ச்சியை அவனை காதல் என்னும் கலி மயக்கத்தில் சுற்றி சுழல வைக்கிறது. இங்கு சாந்தன் புஷ்கிலாவின் அழகைப் பற்றியும் அது தரும் போதையைப் பற்றியும் மிகுதியாக நினைக்கிறான். அவனது எதிர்ப்பார்ப்பு முழுமையும் அதையொட்டியே செல்கிறது.

ஒரு பெண்ணை ஒரு ஆண் காதலிக்கிறான் என்றால் அதற்கு இரண்டு காரணங்கள் அமையும்.

1. அவளது பருவக் கவர்ச்சி

2. அவளின் பேச்சு, செயல், செயலின் வெளிப்பாடு

உருவப் பொலிவு, எல்லோரிடமும் ஏற்படக் கூடிய ஒரு விதமான இன்பத் தவிப்பு. இரண்டாவதாக வருவது அன்பின் படிம வளர்ச்சி. அதாவது நாகரீகமாக, இனிமையாக, இதமாக, அறிவுப் பூர்வமாக, நகைச்சுவை கலந்த பேச்சு, நளினமும், நாணமும் இணைந்திருக்கும் செயல். அது கலாப்பூர்வமான முறையில் வெளிப்படுத்தும் நிலை இந்த மூன்றையும் பாலமாக இணைப்பது அன்பு. இரண்டாவது நிரந்தரமானது

என்றாலும் முதலாவதை முன் நிறுத்தித்தான் பின்னது செயல்பட வைக்கிறது. இதற்குப் பருவமே காரணமாக அமைகிறது.

சாந்தனைவிட, வயது அதிகமான புஷ்கிலாவை அவன் விரும்புவதற்குக் காரணமாக அவளது உருவப் பொலிவே அமைகிறது. எனவேதான் அவள் உருவப் பொலிவில் மயங்கும் சாந்தனை நாவலில் காண முடிகின்றதே தவிர அவளின் அன்பில் மயங்கும் சாந்தனைக் காண முடியவில்லை.

சாந்தசீலன் முதன்முதலில் அவளை நேருக்கு நேராகப் பார்க்கின்ற பொழுது "அந்த கணத்தில் இடம் காலம் அந்தஸ்து தராதரம் எல்லாம் அற்றுப் போய்விட்ட ஓர் அபூர்வ அனுபவம்"[20] என்றும், மழையில் நனைந்து வரும் சாந்தனுக்குப் புஷ்கிலா தன் துண்டைக் கொடுக்கின்ற பொழுது "டவலால் தலையைத் துவட்டும் போது, சாந்தனை சோப்பின் மணம் இவனை என்னமோ செய்தது. டீச்சர் காலையில் நீராடிவிட்டு மேனியைத் துவட்ட இந்தத் துண்டைத்தான்…"[21] இது போன்ற பல எடுத்துக்காட்டுகள் நாவலில் இடம் பெற்றுள்ளன. எனவே மாணவன் ஆசிரியையைக் காதலிக்கின்ற பொழுது அவளது அழகிற்கே முக்கியத்துவம் கொடுக்கிறான் என்பது கூறப்படுகின்றது.

மாணவப் பருவத்தில் பருவ உணர்ச்சியால் ஏற்படும் காதலே சாந்தசீலனின் காதல் ஆகும். டீன் ஏஜில் தோன்றும் ஓர் இனக்கவர்ச்சியைப் புரிந்து கொள்ள முடியாத வகையில் இரண்டுங்கெட்டான் வயதில் இருக்கும் ஒருவனின் மனநிலையை அறிய முடிகிறது.

**போதையில் கரைந்தவர்கள்**

நீல. பத்மநாபனின் 'போதையில் கரைந்தவர்கள்' என்ற நூலில் உள்ள மூன்று குறுநாவல்களில் உள்ள 'தீ…தீ' என்ற புதினத்தில் வரும் டாக்டர் பூதலிங்கம் என்ற பாத்திரப் படைப்பை ஆராயப்பட்டுள்ளது.

உணர்வுகள் (feelings) அல்லது மனவெழுச்சிகளால் (emotions) ஒருவர் பாதிக்கபடும் பொழுது அப்பாதிப்பைப் பகிர்ந்து கொள்ளும் வேறொருவருக்கும் அது மாற்றம் பெறுவது இயற்கையே என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

**மனஉறுத்தல் *(fixation)***

மனிதனின் மனம் பருவங்களைக் கடந்து வளர்ச்சி அடையும் பொழுது அந்த வளர்ச்சி எந்த இடத்திலும் நிலை நிறுத்தல் எனும் மன உறுத்தல் ஏற்படாமல் இருக்க வேண்டியது அவசியம். எந்தப் பருவத்தில் மனஉறுத்தல் ஏற்பட்டு விடுகிறதோ அங்கு மனவளர்ச்சி தடைபட்டு விடுகிறது. அதனால் பண்பாட்டுணர்ச்சியின் வளர்ச்சிக் குன்றிப் போகிறது. தன் உள்ளத்துக்குள் இருந்து உறுத்தும் விலங்குணர்ச்சியை நினைத்துப் பயப்படுவதற்கு பதிலாக தனக்கு வெளியில் ஏதோ ஆபத்து இருப்பது போலவும், அதனால் தனக்கு பெரிய அபாயம் நேரிடப் போகிறது போன்றும் நினைத்துப் பயப்படுகிறது. டாக்டர் பூதலிங்கம் தன்னை இந்தக் கேவலமான நிலைமைக்குக் கொண்டுவரக் காரணங்களாகக் கூறுவது, "மரண பயம் அதிலிருந்து தப்பிக் கொள்ள அவர் நாடிய அதிக அளவிலான உடலின்பம், அறிவுப்பேச்சுகளில் துணைவர இயலாமல் உடம்புத் துணையோடு நின்ற அசட்டு மனைவி, அந்தப் பாலுறவுத் துணையும் மாறுபடுமளவிற்கு அவள் நோய்வாய்பட்ட நிலை"[22]

இம்மாதிரியான மனநோய்கள் எல்லாம் பண்பாட்டுணர்ச்சியால் விலங்குணர்ச்சிளை எதிர்த்து அடக்கி வைக்க முடியாத பலவீனத்தின் விளைவாக உண்டாகின்றன.

**டாக்டர் பூதலிங்கம் பாத்திரப்படைப்பு**

டாக்டர் பூதலிங்கத்திற்கு ஒரு தாத்தாவின் வயது, அதாவது அவர் முதுமையை அடைந்து விட்டார். ஆனால் ஒருவித மனநோய்க்கு ஆளாகி, மானம், மரியாதை, தொழில் ஆகியவற்றை இழந்து நிற்பவர். உரிய காலத்தில் திருமணமாகி, நல்ல நீண்ட இல்லறத்திற்குப் பிறகு தான் மனைவியை இழந்தவரேனும், பெண் வேட்கையின் பிடியிலிருந்து மீள முடியாமல் தவிப்பவர். அதன் காரணமாக, பெண்கள் கூட்டத்தின் நடுவில் இருக்கும்படியான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொண்டு, அவர்களிடம் தகாத முறையில் நடந்து கொண்டு, திட்டும் வசவுமாக வெளியே தூக்கி எறியப்படும் அனுபவங்களுக்குத் திரும்பத் திரும்ப ஆளாகிக் கொண்டிருப்பவர்.

டாக்டர் பூதலிங்கத்தை நாவலாசிரியர் இவ்வாறு அறிமுகம் செய்கிறார். “முக்கால் பங்கு வழுக்கை, பின்பக்கம் மட்டும் தும்பைப் பூ போல் கொஞ்சம் மயிர்... சுருக்கு விழுந்த சருமம், இருந்தும் எண்ணெய் மினுமினுப்பு, சின்னக் கண்களுக்குள் முட்டி மோதி நிற்கும் அந்தப் பரவசம்... எழுபது வயது இருக்காதா? இருந்தும் இளைஞர்களைத் தோற்கடிக்கும்”[23]

மனதின் கட்டுப்படாத காதல் வேட்கை, மனிதனை உணர்ச்சிக்கு அடிமையாக்குகிறது. சில ஆண்களிடம் காணப்படும் விபரீதமான மோகச் சேட்டைகள் பலவாகும். பாலுணர்ச்சி கட்டுக்கடங்காததால், இச்செயல்களில் ஈடுபடுகின்றனர். “தான் காதலித்த பெண்ணின் ரோமம், உள்ளாடை அல்லது அவள் அணிந்த பூ, கைக்குட்டை முதலியவற்றைக் கிளர்ச்சிப் பொருளாகக் கொண்டு தங்கள் ஆசையைத்

தணித்துக் கொள்ள முயலும் ஆடவரும் உண்டு”[24] சிலர் பெண்களிடம் காதல் கொள்வது மட்டுமின்றி, அவர்களைத் தொட வேண்டும் என்ற ஏக்கத்துடன் செயல்படுவர். இதற்குக் காரணம் அடங்காப் பாலுணர்வின் வெறித்தனமே ஆகும்.

‘நைட் கவுன்’ இருக்கிறதா? என்று கேட்டுக் கொண்டே துணிக்கடையில் டாக்டர் பூதலிங்கம் நுழையும் போதே, கடைக்காரனுக்கு கலவரம் முன்பு நடந்தது போல், மோசமாக ஏதேனும் நிகழ்வதற்கு முன்னால் இவரை அனுப்பி வைக்க வேண்டும் என்று எண்ணுகிறான்... ஆனால் அவன் எண்ணம் நிறைவேற முடியாதபடி டாக்டர் பூதலிங்கம் நுழைந்த சிறிது நேரத்தில், தொப்புள், வயிறு, முதுகு, கை இடுக்குகள் தெரிய சோளி அணிந்திருந்த ஒரு இளமங்கை “யு பிளடி, இந்த வயசில்... என்று சத்தம் போட்டுக் கொண்டே அவர் மீது பாய்கிறாள். என்னம்மா இத்தனை கோவப்படறே, நா உன் தாத்தா மாதிரி... கூட்டத்திலே கையோ காலோ மேலே பட்டு விட்டது...”[25] என்று சற்று அசடு தட்டச் சமாதானம் கூறுகிறார். ஆனால் அந்தப் பெண் கடைக்காரனிடம் ஓடிவந்து “சார் போலீசுக்கு போன் பண்ணுங்கோ, இவனுக்கு இதுவே வழக்கமாகி விட்டது. கட்டையிலே போற வயசில்... இன்னிக்கு சும்மா விடக்கூடாது”[26] என்று ஆர்ப்பரிக்கிறாள். கடைசியில் ஒருவாறாக மகேசுவரன் இந்தக் கதையின் கதாநாயகன் அப்பெண்கள் கூட்டத்திலிருந்து பூதலிங்கத்தை விடுவித்துக் கொண்டு காரில் ஏற்றி அனுப்பி விடுகிறான்.

தன்னுடைய அறிவும் உணர்ச்சியும் ஒரே நிலையில் இயங்க மறுக்கின்றன என்று கூறி, பூதலிங்கம் தொடருகிறார். “பெண்களைக் காணும் போதும், கற்பனையிலும் என் உணர்ச்சிகள் எதற்கெல்லாமோ வீறிடுகின்றன. ஆனா... உடம்பு ஒத்துழைக்க மறுக்கிறது. ஒரு ஸ்பரிசம், இல்லாட்டி ஒரு முத்தம், அதுவும் இல்லாட்டி இடையில் நின்றால் கூட போதும் இதுதான் இன்னிக்கு என் நிலைமை... டிக்கெட் வாங்கின

ஸ்டேசன் வரும் முன்னாடியே ரயிலை விட்டு இறங்க வேண்டிய நிலைமை"[27] அவருக்குள் இருக்கும் கீழ்த்தரமான எண்ணங்களை, செயல்களை அவரின் வாயிலாகவே ஆசிரியர் சித்தரிக்கிறார்.

**மனநோய்**

மனிதர் எந்த எண்ணம் அவமானகரமானது என்று கருதி மனதுள் அடக்கிவிட நினைக்கிறார்களோ அந்த எண்ணம் எவ்வாறாவது வெளிப்படத் துடிக்கிறது. வேறுவிதத்தில் வெளிப்பட முடியாத போது ஏதாவது மாறுவேஷம் போட்டுக் கொண்டு உடல் மனநோயாக வெளிப்படுகிறது. ஆற்றோட்டத்தில் பாறைகள் மறைந்துள்ள இடத்தில் சுழல் ஏற்படுவதைப் போல் மனதின் அடித்தளத்தில் பாறையாக உறைந்துபோன நிறைவேறாத பாலுணர்வின் தாக்கத்தால் சிந்தனை ஓட்டத்திலும் சில இடங்களில் சுழல் ஏற்படுகிறது. அப்பொழுது மனத்தின் அடித்தளத்தில் புதைந்துள்ள அந்தரங்க உணர்ச்சியினால் ஏதோ வெளிப்படப் போகிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம். நோயாளிகள் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லும் பொழுது, வார்த்தைகளில் தடுமாற்றம் ஏற்படும் பொழுது அவர்கள் விரும்பாத நினைவு ஏதாவது வெளிப்படப் போகிறது என்பதை தெரிந்து கொள்ளலாம்.

மனத் தடையால் அவர்கள் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்ள முயற்சிக்கும் பொழுது சங்கடப்பட்டார்கள். தங்களுக்கு ஊறு உண்டாக்கிய உணர்ச்சியைக் களைந்து கொள்ள விரும்பாத இந்த நோயாளிகள் ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லித் தப்பித்துக் கொள்ள முயல்வார்கள் மற்றும் இவ்வகை மன நோயாளிகள், தங்களுடைய செயல்களை நியாயப்படுத்திக் கொண்டிருப்பவர்கள். "மரண பீதியின் பரப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளத்தான் செக்ஸில் முழுக்க முழுக்க முகம் புதைக்கிறேனோ என்று எனக்குத் தோன்றியது… இதுவும் ஒரு ஆத்ம சோதனை

… இந்த என் மானசீக அவஸ்தையை எல்லாம் புரிந்து கொள்ளும் அறிவு, பாவம் என் பொண்டாட்டிக்கு இருக்கவில்லை. பசிக்காதிருக்கவும், பசிக்கும் போதும் எனக்கு சாப்பாடு போட்டது போல், இவ்விஷயத்திலும் இயங்கினாள். ஆனால் அதனால் மட்டும் என் ஆர்ப்பரிப்புகள் அடங்கிவிடவில்லை. இன்டெலக்சுவல் கம்பெனி என்கிறோமே அதைத்தான் சொல்கிறேன். எங்களிடையில் பேச ஒன்றுமேயில்லாத அளவுக்கு விஷயம் பஞ்சம் பேசினாலும் ஒரு லெவலுக்கு மேல் போக இயலாத அவள் லிமிட்டேஷன்ஸ்”[28] டாக்டர் பூதலிங்கம் இவ்வாறு தன் செயல்களை நியாயப்படுத்திக் கூறுகிறார்.

**வலுக்கட்டாயச் செயல் மனநோய்** (Obsessional newrosis)

தன் படிப்பிற்கும் வயதுக்கும் சற்றும் பொருந்தி வராத மிகக் கீழ்த்தரமான நடத்தையிலிருந்து டாக்டர் பூதலிங்கத்தால் தன்னை விடுவித்துக் கொள்ள முடிவதில்லை. ஏனெனில் அவருடைய அறிவும் உணர்ச்சியும் ஒன்றிணைந்து இயங்க மறுக்கின்றன. திரும்பத் திரும்ப நிகழும் அவமானங்களுக்கு முடிவு காண அவர் எந்த முயற்சியும் எடுப்பதில்லை. இவைகள் மனப்பகுப்பாய்வியல் மூலமாக ஆராயப்பட்டு மனநோய்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. டாக்டர் பூதலிங்கத்தைப் பாதித்திருக்கும் மன நோயை வலுக்கட்டாயமாகச் செயல் மனநோய் என்று உளவியலாளர் கூறுவர்.

டாக்டர் பூதலிங்கத்தின் வாழ்க்கையும் இப்படித்தான் நடக்கிறது. பெண்கள் கூடும் இடங்களில் தகாத வலுக்கட்டாயச் செயலுக்கு அடிமைப்படுகிறார். இந்நோயிலிருந்து விடுதலை பெற அவர் எடுத்துக் கொண்ட அத்தனை முயற்சிகளும் வீண், வினை, அவமானம், தோல்வி, “பிரபலமான டாக்டராக பிராக்டிஸ் பண்ணிக் கொண்டிருந்தவர். பிராக்டிஸ் பண்ணும் போதும் இதே பலவீனத்தால் பல பிரபல நிறுவனங்களிலிருந்து வேலை இழக்க வேண்டி வந்தது. இதைத் தெரிந்து கொண்டதால்

சொந்தமாய் பிராக்டிஸ் பண்ணும் போதும் யாரும் குறிப்பாய் பெண்கள் இவர் பக்கம் போவதில்லை”[29] எனலாம்.

மேல் மனதிலிருந்து தொடங்கும் உள்நோக்கிய பயணத்தை அடிமனதின் வழியாக ஆழ்மனதில் உணர்ச்சி வழி ஒன்றிணைந்து மண்டிக் கிடக்கும் சம்பவ புதையல்களுக்கு, இட்டுச் செல்லத் தேவையான எல்லையில்லாப் பொறுமையும், அனுபவ முதிர்ச்சியும் அவனுக்கில்லை. மேலும் நோயின் மூலகாரண உணர்ச்சியானது ஆழ் மனதின் அடியில் வேரூன்றி நின்று கொண்டிருக்கும். அது மேல் மனத்தை, நனவுகளை எட்டுவதற்கு முன்னால், உருமாறி பாதுகாப்பான முகமூடிகள் அணிந்து தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும். டாக்டர் பூதலிங்கம் இதைதான் செய்கிறார். “மரணபயம்… இதிலிருந்து தப்பித்துக் கொள்ள தான் செக்ஸில் முழுக்க முழுக்க முகம் புதைக்கிறேனே… அசடு, சிடு மூஞ்சி, அகங்காரி என்றெல்லாம் எனக்குத் தோன்றத் தொடங்கியதே ஆனாலும்… அவளிடம் இருந்து மட்டுமே ரதி சுகம் பெற்றுக் கொண்டிருந்தேன். அவள் நோய்வாய்ப்பட்ட பின்தான், என்பாடு திண்டாட்டமாகிவிட்டது”[30]

டாக்டர் பூதலிங்கம் ஒருவித மனநிலையிலிருந்து தகாத ஆசைகள் முதன் முதலில் தோன்றியிருக்கும். தொட்டனுபவிக்கும் சுகம் முதன்மையானதாக இவ்வகை மனநோயாளிகளுக்கு அமைந்திருக்கும். பல வருடங்களுக்கு முன் நோய் நீடித்திருக்குமாயின் அதன் அறிகுறிகளே மகிழ்ச்சி அளிக்கக் கூடிய ஒன்றாக மாறிவிட்டிருக்கும், நோயாளி குணமடையத் தேவையான உறுதியான எந்த முயற்சியையும் மேற்கொள்ள விரும்பமாட்டான். எல்லாவற்றிற்கும் மேலாக, நோயின் ஒவ்வொரு அறிகுறியும் மறைமுக இச்சை சுய பூர்த்தி செயல்களாக மாறி இருக்கும். இவ்வளவு தன்மைகளையும் நாம் டாக்டர் பூதலிங்கத்திடம் காண்கிறோம்.

ஆசிரியர் நீல. பத்மநாபன் அவரைக் கொண்டே அவருடைய நடத்தையை விளக்க வைக்கிறார்.

**அனந்தர்நாயர் பழமையின் பிடியிலிருந்து விலக முடியாத நிலை**

பழமையின் பிடியிலிருந்து விலகாமல், புதுமைக்குள் நுழைய மறுக்கின்ற நிலையினை அனந்தன்நாயரிடம் காண முடிகின்றது. பழமை மேல் அவருக்கிருந்த ஆழமான நம்பிக்கையைப் பத்மநாப சுவாமி கோயில், பழங்காடி மைதானம், பத்மநாபதாசனான மகாராஜா, தீர்த்த குளம், ஏகாந்தமயமான கோயில் பிரகாரம், ஊட்டுப்பரை முதலியவற்றைப் பார்வையிடுகின்ற பொழுது அவர் அடைகின்ற ஆனந்தம், பெருமையும், பழமையின் மீது அவர் கொண்டிருந்த பிடிப்பினைப் புலப்படுத்துகின்றன. அதற்குப் பிறகு நகரம் எவ்வளவுதான் வளர்ச்சி பெற்றிருந்தாலும் வளர்ச்சியினை ஒதுக்கிவிட்டு, பழங்காலத்தில் அவை இருந்த நிலை தான் அவருக்குப் பெரிதாகத் தெரிகின்றது. இடங்களின் மாற்றங்களிலேயே இவரது மனம் இத்தகைய மாற்றம் அடைந்தது என்றால் பழைய பண்பாடுகளில் ஊறித் திளைக்கின்ற இவர், எவ்வாறு புதியவற்றை ஏற்றுக் கொள்வார்? தன்னை விட்டு ஓடிப்போன கார்த்தியாயினியின் துரோகத்தை எண்ணியெண்ணிக் கழித்திருக்காமல் வேறொரு திருமணம் செய்திருக்கலாம். அவர் செய்ய முடியாததற்குக் காரணம் பழமையின் பிடிப்பே, தன் மகன் பிரபாகரனிடம் அவர் கூறும் கூற்று இதனை உணர்த்தும் கார்த்தியாயினி இறங்கிப் போன பிறகு “இன்னொருத்தியைக் கூட்டிக் கொண்டு வந்து காலியாகக் கிடந்த அவள் ஸ்தானத்தில் குடி வைக்கவோ நான் துளி கூட ஆசைப்படவில்லை”[31] “யாரெல்லாமோ என்னவெல்லாமோ சொல்லிக் கேலி செய்துங்கூட அதுதான் என் முழு வெற்றின்னு ஒரு தகப்பனின் கடமையைச் சரிவரச் செய்துகிட்டிருந்த என் கடமை வெறியின் அடிமைப்பலம்”[32] என்றும் பிரபாகரனிடம்

அவர் உரையாடுவது பழமையில் அவர் கொண்டிருந்த நம்பிக்கையைப் புலப்படுத்துகிறது.

**பாலியல் தோல்வி**

"பகல் வேளையில் கார்த்தியாயினி அழகுக்குத் தான் ஏற்றவன் இல்லை என்ற அவர் கருத்து, இரவு வேளையில் எதிராகத் திரும்புகிறது. பல இரவுகளில் போர்க்களமாக இருவரும் முட்டி மோதிக் கொண்டாலும் முடிவில் அவர் தோல்வியைத்தான் தழுவினார் எனலாம். இத்தனை காலமாக இந்திரியத்தை அடக்கி நிறுத்தி தக்க தருணத்தில் விதைத்திடும் வித்தையால் இவளுக்கு சமத்திற்குச் சமம் என்று ஒருவாறு இவளைச் சமாளித்துக் கொண்டிருந்ததின் ஒருமுகச் சித்தத்தை, இத்தகைய எத்தனை எத்தனையோ மக அவலங்கள் கீழ்ப்படுத்திப் பாழாக்கிவிட்டன. பலன்? அநேகமாய் அவளுடைய வெற்றியில் இரவுகளும் விடியத் தொடங்கிவிட்டன"[33] என அவர் கூறுகின்ற மொழியின் வாயிலாகவே அவர், பாலியலில் தோற்றுப் போன நிலை வெளிப்படுத்தப் படுகிறது. எனவே தான் அனந்தன்நாயர் ஓர் ஆளுமைச் சிதைவுடைய பாத்திரமாகத் திகழ்ந்தார்.

**இராஜகோபாலன்**

'உறவுகள்' நாவலில் இடம் பெறுகின்ற ராஜகோபாலன், ஒரு ஆளுமைச் சிதைவுடைய பாத்திரமே. இதற்கான காரணங்கள் பின்வருமாறு அமைகின்றன.

1.தந்தையின் நற்பண்புகள் காரணமாக ஈர்க்கப்படுதல்

2.தந்தையின் பகைவர்களைத் தன் பகைவர்களாகக் கருதுதல்

3.அன்பினை தந்தையிடம் மட்டுமே பங்கிடுதல்

4.சிறிய நிலையைப் பெரிதாக எண்ணுதல்

**தந்தையின் நற்பண்புகள் காரணமாக ஈர்க்கப்படுதல்**

தந்தையின் இளமைக்காலத்து நிகழ்வுகள் முழுமையும் தந்தை வழிப் பாட்டியான சிவகாமி மூலமே, ராஜகோபாலன் அறிகிறான். ராஜகோபாலனின் தந்தை பரமேசுவரன் பிள்ளை. ஏழுவயதாக இருக்கின்ற போதே அவரது தந்தையார் இறந்துவிட்டார். எனவே, பொருளாதாரச் சிக்கலின் காரணமாக, பரமேசுவரன் பிள்ளையின் படிப்பு பாதியில் போய் நின்றுவிடுகிறது. எனவே வறுமை நிலையைப் போக்குவதற்காக மரக்கடையில் வேலை பார்க்கின்றார். அங்கு அவர் பட்ட துன்பங்களை, "சின்னபாடா இவன் பட்டிருப்பான்! காலம்பரெ கொஞ்சம் நீத்தண்ணியைக் குடிச்சுக்கிட்டு கடைக்குப் போய்விட வேண்டியது உடம்புக்கு அலதியா இருக்கன்னு கொஞ்ச நேரங்கூட படுத்திட்டா, உடனேயே தேடிக் கொண்டு கடையிலிருந்த கூலி ஆள் வந்துடுவான்"[34] எனக் கூறுகின்ற சிவகாமிப் பாட்டியின் மூலம் தெரிகின்றது.

சிறுவனாக இருந்த காலத்திலிருந்து, வாலிபனாகும் வரை அவர்பட்ட இடர்ப்பாடுகளையெல்லாம் சிவகாமிப்பாட்டியின் மூலம் ராஜகோபாலன் தெரிந்து கொள்கிறான்.

தன் தந்தையின் இந்தக் காலக்கட்டத்தை எண்ணிப்பார்க்கின்றான் ராஜகோபாலன். அவன் மனம் வருந்துகிறது. தந்தையோடு பின்னிக் கிடந்த அவரது தியாக நிகழ்ச்சிகளையெல்லாம் ஒரு சேர அறிகின்றான். அவை ராஜகோபாலனுக்குத் தந்தையின் மீது ஓர் ஆழமான பிடிப்பினைப் பாசத்தைப் பெற வைக்கின்றது. "இப்படியெல்லாம் இளமைப்பிராயத்திலிருந்தே ஓய்வு ஒழிச்சல் இல்லாத உழைப்பினால் அப்பாவின் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டுத்தான் இருந்திருக்கிறது. ஆனால் உழைப்பால் அவர் உடம்பு பண்பட்டுத்தான் இருந்தது"[35] என்று தந்தையைப் பற்றி எண்ணுகிறான். ராஜகோபாலனின் மனம், தந்தையின் இளமைக்காலத்

தியாகத்தின் மூலம் அவர் மீது அளவு கடந்த அன்பினைச் சுரக்கிறது. அது அவனிடம் ஒரு செயலற்ற தன்மையை உருவாக்கித் தந்தை உடல்நலமற்ற தன்மையினை எண்ணிப்பார்க்க வைத்து நிகழ்கால உண்மைகளைச் சீரணிக்க இயலாமல் அவனை கோழையாக்கி விடுகிறது. இவன் செயல்பட முடியாமல் கோழையாகப் போனதற்குத் தந்தையின் இளமைக்காலத் தியாகங்கள் காரணமாக அமைகின்றன.

தந்தையின் பண்புக்குள் நுழைந்து அவருடைய அன்பின் ஆளுமையில் சிக்கித் திணறிவிடுவதால் இவனுடைய ஆளுமைச் சிதைந்து உணர்வுப்பூர்வமாகத் தந்தையை எண்ணி இரக்கம் கைகூடி வருகிறதே தவிர, நடைமுறைச் செயலில் இவனால் உடமைகளை ஏற்றுக்கொள்ள முடியாத பக்குவமற்ற நிலை தோன்றுகிறது. இதற்குக் காரணம் இவன் தந்தையின் உயர்ந்த பண்புகளே, வேறு வகையில் சிந்திக்க விடாமல் அன்பின் ஆழத்தையே தேடிச் சென்று இவனைச் செயல்பட விடாமல் தடுக்கிறது.

முழுக்க முழுக்க தந்தையிடம் மட்டுமே, அன்பைக் கொட்டியதால், தந்தையிடம் இவன் மீது அன்பினைச் சொரிந்ததால் தான் தந்தையின் அன்புப் பிடியிலிருந்து விடுபட முடியாமல் தவிக்கிறான். எனவேதான், மருத்துவமனையில் இருக்கின்ற தந்தையின் நிலையை எண்ணியெண்ணித் தன்னைத்தானே சித்திரவதை செய்து கொள்கிறான். "அப்பா என்ற உறவிலிருந்து மீறி வேறு உறவுகளை நாடிச்செல்லும் நினைவுகூட ஒரு விதத்தில் பார்க்கப்போனால் அப்பா என்ற உறவிலிருந்து வேரறுக்க முடியாது உழலத்தான் செய்கிறதா?[36] என்ற ராஜகோபாலனின் எண்ணவோட்டம் அவனது மனநிலையை உணர்த்துகிறது.

**சிறிய நிலையை பெரிதாக எண்ணுதல்**

சிறிய ஒன்றினைக்கூட பெரிதுபடுத்தி அது தனக்கு இழைக்கப்பட்ட அநீதி என்று வருந்தும் பண்பு ஆளுமைச் சிதைவினைத் தோற்றுவிக்கிறது. இவனுடைய மனைவி தன் தந்தை வீட்டிற்குச் செல்ல அனுமதி தராமல் புனல்புரத்திற்கு வேலை நிமித்தமாகச் சென்று விடுகிறான். அங்குச் சந்தேகம் ஏற்பட உடனே புறப்பட்டு வீட்டிற்கு வருகிறான். வீட்டில் மனைவி இல்லை. அவள் தன் தந்தையைப் பார்க்கச் சென்று விட்டாள். இதை ஒரு அநீதியாகக் கருதி எரிமலையாகக் கொந்தளிக்கிறான். குடும்ப வாழ்வில் சில வேளைகளில் மனைவி கணவனிடம் சொல்லாமல் தன் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதுண்டு. அதுபோல இவனது மனைவியும் தந்தையைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை உந்தித்தள்ள அவள் சென்றுவிட்டாள். இவன் அதைப் பெரிதாக எண்ணி அவளோடு சண்டையிட்டு, மனைவியின் தந்தையால் அது வருகிறது. இச்சிறிய செயலை அநீதி என்று அவன் மனம் எண்ணுவதும் அந்த அநீதியை எதிர்க்க முடியாமல் திணறுவதும் இந்தச் சிக்கல் கூட தன் தந்தையால் ஒரு தீர்வை அடைவதும் இவன் ஆளுமைச் சிதைவிற்கு வலுகோலுகின்றது.

**ஜெயக்குமார்**

‘வட்டத்தின் வெளியே’ நாவலில் வருகின்ற ஜெயக்குமார் ஆளுமைச் சிதைவிற்குரிய பாத்திரமாகத் திகழ்கிறான். ஆளுமைச் சிதைவிற்குரிய காரணங்கள் பின்வருமாறு அமைகின்றன.

1.முறையானவற்றை நடைமுறைப்படுத்த முடியாத நிலை

2.சூழலுக்கேற்றபடி வாழ முடியாத நிலை

3.ஐயத்தை துணைக்கு அழைத்துக் கொள்ளும் நிலை

4.வசதிகளைப் பயன்படுத்தாத நிலை

5.சிக்கல்களை எதிர்கொள்ள முடியாமை

6.தனக்குள்ளே மருகிக் கொள்ளும் நிலை

ஜெயக்குமார் பள்ளிக்கொண்டபுரத்திலிருந்து மகாபலிக்கரைக்கு மாற்றலாகி வருகிறான். பொறுப்பேற்பதற்காக அலுவலகத்திற்கு அவன் வருகின்ற பொழுது பொறுப்பை ஒப்படைக்க வேண்டிய சின்னச்சாமி இவனிடம் "சார், இந்த மெட்டிரியல் லிஸ்டில் டேக்கன் சார்ஜில் சார் கையொப்பம் போட்டுத் தந்தால் நான் போகலாமின்னு இருக்கேன்"[37] என்று கூறுகிறான். இதனை முறையானது அல்ல என்பதனை உணர்ந்த ஜெயக்குமார், "மெட்டிரியல்ஸ், பர்னிச்சர் எல்லாம் என்னென்ன இருக்கு எங்கெங்கே கிடக்குது, ஒண்ணும் வெரிபை பண்ணிப் பார்க்காமல் இப்படி கண்ணை மூடிக்கிட்டு கையொப்பம் போடச் சொன்னா எப்படி"[38] என்று கூறுகிறான். ஆயினும் தன் மேலதிகாரி கூறியவுடன் தன் மனத்தில் பட்டதை வற்புறுத்தாமல் விட்டுவிடுகிறான்.

ஜெயக்குமாருக்கு இடமாற்ற உத்தரவு வந்தபோது அது தனக்கு இழைக்கப்பட்ட முறையற்ற உத்தரவு என அறிகிறான். மாற்றலுக்குக் கூறப்பட்ட சாதாரண காரணங்களை ஏற்றுக்கொண்டு பணிந்து செல்கிறான்.

அலுவலகத்திலும் சரி, தங்கும் இடத்திலும் சரி சிக்கல்களை நேருக்கு நேராக எதிர்கொள்ள முடியாமல் தனக்குள் தானே மருகிக் கொள்கின்ற நிலை சிதைவின் அடுத்த கட்டம் எனலாம்.

ஜெயக்குமாரின் ஆளுமைச் சிதைவிற்கு அலுவலகச் சூழலும் தங்கும் இடச்சூழலும் காரணிகளாக அமைகின்றன. இவை இரண்டும் அவனுடைய மனத்திற்கு

ஏற்ப அமையவில்லை எனவேதான் இவ்விரண்டு வகைகளின் மூலம் பிறக்கின்ற சிக்கல்களை எண்ணியெண்ணி வருந்துகிறான்.

"ஆபிஸ் என்ற நாலுசுவர்

அறை என்ற நாலுசுவர்

இரண்டையும் இணைக்கும் இரண்டு மைல் பாதை

இதனிடையே செக்குமாடாய் உழலப்போகும் தான்…

இந்த நாடகம் மீண்டும் மீண்டும் நடைபெறப் போகிறதா?...

இது எங்கே தொடங்கிற்று?

எங்கே போய்ச்சேரும்?"[39]

என்று இவன் கூறுவதிலிருந்து இவன் அடிமன உணர்வுகளைப் புரிந்து கொள்ளமுடிகிறது.

**ராஜசேகரன்**

'மின் உலகம்' நாவலில் வருகின்ற ராஜசேகரன் ஆளுமைச் சிதைவுடைய பாத்திரமே, ராஜசேகரன் நாவல் முழுமையும் கடமை தவறாத அதிகாரியாய் தான் நாவலில் வலம் வருகின்றான். முழுக்க முழுக்க அலுவலகச் சூழலில் எழுந்த நாவல் இது. அப்படி இருக்கின்ற பொழுது கடமையும் நேர்மையும் முறையாகப் பின்பற்றி வருகின்ற ராஜசேகரன் ஆளுமைச் சிதைவுடைய பாத்திரமாக ஏன் திகழ்கின்றான் என்று பார்த்தால் இயல்பாக உள்ள அவனது மனப்பலவீனமே இவனின் ஆளுமைச் சிதைவிற்குக் காரணமாகிறது. இவன் மனமானது எதையும் எதிர் கொள்ள முடியாமல்

துவண்டு போய்விடுகின்றது. தேவையில்லாத குற்றச்சாட்டுகளைப் பிறர் கூறுகின்ற பொழுது அந்தக் குற்றச்சாட்டு முழுமையும் தவறானவை என்று தான் எண்ணியபிறகும் முழுமையான மனநிலை விளக்கங்களைக் கூற வழி இருந்தும், வழி இல்லாதவனாக அவன் திகழ்வதே ஆளுமைச் சிதைவின் அடிப்படைகளாக அமைகின்றன.

1.செயலூக்கம் இழந்த தன்மை

2.எதிர்ப்புகளை முறியடிக்க இயலாத நிலை

செயலூக்கம் இல்லாமைக்கும், எதிர்ப்புகளை முறியடிக்க இயலாமைக்கும் இவனது திடமற்ற மனநிலையே காரணமாக அமைந்து விடுகின்றது. இவனது இயல்பான திடமற்ற மனதே இவனை ஆளுமையற்றவனாக்கி மனத்திற்குள் மட்டுமே மருகும் தன்மையைத் தோற்றுவிக்கின்றது.

**அசோகன்**

‘சமர்’ நாவலில் வருகிற அசோகன் ஆளுமைச் சிதைவிற்கு உட்பட்ட பாத்திரமாக திகழ்கிறான்.

1.முடிவு எடுக்க முடியாத மனப்போராட்டம்

2.சுய மதிப்பீட்டை இழக்க முடியாத நிலை என்ற இரண்டும் சிதைவினை வெளிப்படுத்தும் கருவி ஆகின்றன.

மின் பொறியியலில் பட்டதாரி இன்ஜீனியர்கள் டிப்ளமோ பட்டம் பெற்றவர்களைவிட அதிகமான சலுகைகள் வேண்டி அறுபத்தியாறு நாட்கள் வேலை நிறுத்தம் செய்கின்றனர். பட்டதாரி இன்ஜீனியரான அசோகன் வேலை நிறுத்தத்தில் ஈடுபட விரும்பவில்லை. தான் மட்டும் கருங்காலி ஆகிவிடக்கூடாதே என்ற ஒரே

பயத்தினால் மட்டுமே வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்வதா வேண்டாமா என்ற வினாவிற்குத் தெளிவான முடிவு எடுத்து அதை அவன் பின்பற்றவில்லை. கருங்காலி என்ற பட்டத்திற்குப் பயந்து கொண்டுதான் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுகிறான். ஈடுபட்டபின் அதிலாவது அழுத்தமாகக் கால் ஊன்றுகிறானா என்றால் இல்லை. போராட்டம் எல்லாம் கீழ்நிலை ஊழியர்களுக்குடையன்: தன்னைப்போல் அந்தஸ்து உள்ளவர்கள் தம் தகுதிக்குக் குறைவு என்று சங்கோசப்படுகிறவர்கள். முதல் நாள் போராட்டத்தில் அனைவரும் சத்தம் போடும் போது அசோகன் வாயசைக்கவில்லை. நண்பன் ரகு அவனைத் தூண்டுகிறான். “அசோகன் கொஞ்சங் கொஞ்சமாகத் தன் குரலை மேலே ஏற்ற முயற்சி செய்தான். இருந்தாலும் தொண்டையில் என்னவோ அடைத்தது, கை மேலே எழுப்ப மாட்டேன் என்கிறது”[40] என்ற நிலைகாட்டப்படுகிறது. போராட்டத்தில் முழுமையாக ஈடுபட முடியாத கூச்சம். அதைவிட்டு வெளியேற முடியாமல் சிக்கித் தவிக்கின்ற நிலை என்ற இரண்டும் ‘சமர்’ நாவலில் காண முடிகிறது. மேலும், நாற்பதாவது நாள் வேலை நிறுத்தத்திற்குப் பிறகு நாற்பது வருட முதுமையை அடைந்தது போன்ற தளர்ச்சியை விலையுயர்ந்த மதிப்பையும் கூட இழந்து விட்டதாகப்படுகிறது அவனுக்கு.

**சுயமதிப்பீட்டை இழக்க முடியாத நிலை**

வேலை நிறுத்தத்தின் போது தோன்றும் மற்றொரு மனப்போராட்டம் உடன் பணிபுரியும் துளசியை அடைதல் தொடர்பானது. துன் நண்பன் ரவி வேலை நிறுத்தம் தொடங்கி அன்று “குடிபோதையில் துளசியை அடைய வேண்டும் என்று எண்ணுகிறான்”[41] வேலை நிறுத்தம் தோல்வி அடைந்தபோது ரவி துளசியை அடைவதில் வெற்றிபெறுகிறான். சரியோ தவறோ தான் எண்ணியதை நிறைவேற்றும் தன்மை கொண்டவனாக திகழ்கிறான். அவனது இச்செயல்கள் அசோகனை எங்ஙனம்

பாதித்திருக்கிறது என்று பார்த்தால், சுயமதிப்பீட்டை இழக்க இயலாத நிலைமை காணப்படுகிறது. ரவி துளசியைப் பற்றிப் பேசுகிற பொழுது இவன் மனத்திலும் துளசியின் போதையூட்டும் அந்த உருவம் மெல்லப்பற்றி விரிந்தது.

முடிவில் ரவி வேலை நிறுத்தப் போராட்ட நாளன்று அசோகனிடம், "நேற்றிரவு துளசி எனக்குக் கிடைத்தாள்"[42] என்று கூறுகிறான். இதைக் கேட்டவுடன் அவன் மீது பொறாமையும், அவனைப் போல் தன்னால் அவிழ்த்து எறிய முடியாத தன் சமுதாயச் சுயகௌரவ அங்கியை நினைத்து ஒருவித மன வேதனையையும் ஒரே நேரத்தில் அடைகிறான். தனக்காக வாழ்கிறோம் என்று எண்ணாமல் மற்றவர்களுக்காக வாழ்கிறோம் என்ற உணர்வைப் பெரிதாக்கித் தன் எண்ணப்படி வாழாமல் இருப்பதே ஆளுமைச் சிதைவிற்கு அடிப்படைக் காரணமாக அமைகிறது என்ற 'சமர்' நாவலில் அசோகன் பாத்திரப்படைப்பு மூலம் சித்தரிக்கிறார், ஆசிரியர்.

**சிவப்பிரகாசம்**

'யாத்திரை' என்ற நாவலில் வருகின்ற சிவப்பிரகாசம் ஆளுமைச் சிதைவுடையப் பாத்திரமாகச் சுட்டப்படுகின்றான். நாவலில் நேரிடையாக இடம் பெறாமல் நண்பர்கள் நால்வரின் வாய்மொழியாகவே இவனுடைய பாத்திரப் பண்புகள் நாவலில் படைக்கப்படுகின்றன.

1.மர்ம நோயால் ஏற்பட்ட அவமானம்

2.விலை மகளிர் தொடர்பு

3.சாவைப் பற்றிய பயம்

4.பெத்தடின் உண்டதால் இழிநிலை

**மர்மநோயால் ஏற்பட்ட அவமானம்**

சிவப்பிரகாசம், எப்பிக்குரியன், பிலாசபி, உமர்கயாம் தத்துவம் இவற்றின் அடிப்படையில் வாழ்ந்தவன். அதன் விளைவால் மர்மநோயால் பிணிக்கப்படுகிறான். மர்மநோய் நிபுணர் டாக்டர் ஹமீது வீட்டிலிருந்து இவன் வருவதை நண்பன் குமரேசன் கண்டு காரணங்களை அறிந்து கொள்கிறான். குமரேசன், "நவீன வைத்திய முறையில் மிக எளிதில் குணமாகி விடக்கூடிய ஒரு சாதாரண நோய் இது"[43] என்று கூற அதை ஏற்றுக் கொள்ளாமல் இவன் என்னை நானே அழித்துக் கொள்ளலாமுன்னு இருக்கேன் என்று பதில் கூறுகிறான். தற்கொலை செய்வது தவறு என்று குமரேசன் கூறுகிறான். மனக்கவலையின் போதும் ஸ்கிஸோஃப்ரேனியா வியாதியின் போதும் தற்கொலை நினைவுகள் வருவது சகஜம் என்று இவன் பதில் கூறுகிறான். நோயைத் தீர்க்க வழி இருந்தும் இவன் தற்கொலையைத் தேடுவது ஆளுமைச் சிதைவின் முதல் கட்டமாக அமைகிறது.

**விலைமகளிர் தொடர்பு**

தன் நண்பன் கோபாலனின் காதலியும் கல்லூரி மாணவியும் விலைமகளுமான சரோஜாவை அவனிடமிருந்து சிவப்பிரகாசம் மீட்டு தன் நோயை அவளுக்குப் பரிசாக அளிக்கிறான். அவர்கள் இருவரும் தகாத முறையில் இருக்கின்ற வேளையில் போலீஸால் கைது செய்யப்பட்டு அது செய்தித்தாளில் வெளிவருகிறது. அதன் காரணமாக அவன் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என அறிகின்ற பொழுது அந்தத் தகாத உறவும், அவமானமும் தற்கொலை என்ற ஆளுமைச் சிதைவிற்குச் சிவப்பிரகாசத்தை இட்டுச் செல்கின்றன. தவறுக்கு தண்டனை பெற்றுத் திருந்துவது தான் முறையே தவர தற்கொலையை நாடுவது கோழைத்தனம் என்பதைச் சிவப்பிரகாசம் உணரவில்லை.

**சாவைப் பற்றிய பயம்**

சாவைப் பற்றிய சிந்தனைகளை வேதாந்தத்துடன் சிவப்பிரகாசம் பகிர்ந்து கொள்கிறான். முடிவில் என்னை இப்பவெல்லாம் சதா அரிச்சிக் கொண்டிருக்கும் வேட்கை செத்து அதன் உணர்வுகளைத் தனக்குத் தானே அனுபவிச்சு அறியனுமுண்ணு கூறுகிறான். மேலும், "எல்லோரும் தான் செத்துப் போவதாக நம்பவைத்து பின் உயிருடன் திரும்ப வேண்டும்"[44] என்றும் கூறுகிறான். இவன் விஞ்ஞானி அல்ல, சாவு தொடர்பான புத்தகங்களை மட்டுமே படித்துவிட்டு அதைச் சோதனை செய்ய வேண்டும் என்று ஆசைப்படுவது பொருத்தமில்லாத முறையாகத் தெரிகிறது.

**பெத்தடின் உண்டதால் இழிநிலை**

நான்காவது மெடிக்கல் ஷாப் வைத்திருக்கும் நண்பன் நடராஜன் மூலம் பெத்தடின் மருந்தின் மகிமையைத் தெரிந்து கொள்கிறான். பெத்தடின் மருந்தை அவன் கேட்க நடராஜன் மறுக்க நடராஜன் செய்யும் ரகசிய ஸ்பிரிட் வியாபாரத்தை ஹெல்த் டிபார்ட்மெண்டில் கூறிவிடுகிறான். பின்பு, அவன் கேட்கின்ற பொழுதெல்லாம் பெத்தடின் மருந்தைத் தருகிறான். இதனால் அவன் படிப்படியாக ஆளுமைச் சிதைவு உடையவனாக மாறுகிறான்.

நண்பர்கள் நால்வரின் வாக்குமூலமாகச் சிவப்பிரகாசம் தற்கொலை ஒன்று தான் வழி என்றால் இவ்வுலக வாழ்வின் பயனே அர்த்தமில்லாததாகி விடும். தவறுகளை திருத்தி மீண்டும் நல்லவனாகத் தலைநிமிர்ந்து வாழ்வதுதான் தீவிரமான வாழ்வாகும். அந்தப் பயனை உணராத அனுபவிக்காத சிவப்பிரகாசத்தின் வாழ்வு ஆளுமைச் சிதைவால் தற்கொலை வரை சென்று நொறுங்கி விடுகிறது.

**விசுவம்**

'முறிவுகள்' நாவலில் வருகிற விசுவம் ஆளுமைச் சிதைவடைந்த கதைமாந்தனாகப் படைக்கப்பட்டிருக்கிறான்.

1.குற்றச் சாட்டுகளை எவ்வகையிலும் எதிர்க்கத் துணிவில்லாமை.

2.பாலியல் உணர்வுகளைக் கட்டுப்படுத்த இயலாமை என்ற இரண்டும் இவன் ஆளுமைச் சிதைவிற்குக் காரணமாக அமைகின்றன.

**குற்றச்சாட்டை எதிர்க்கத் துணிவில்லாமை**

மாமனார், மாமியார், மைத்துனன், மைத்துனன் மனைவி தன் மனைவியின் தங்கை, தங்கையின் புகுந்த வீட்டார் அனைவரும் விசுவத்தைக் குற்றம் சாட்டுகின்றனர். இவள் வீட்டைத் தொட்டுக் கிடக்கும் இடத்தை இவனது மனைவி பெயரில் எழுதிக் கொடுப்பதாக வாக்களித்துவிட்டு வாக்குத் தவறுகிறார் மாமனார். இதனை மையமாக வைத்தே அனைவரும் அவரவர்க்கு ஏற்றபடி குற்றச் சாட்டுகளைத் தொடுக்கின்றனர். இவர்கள் கூறும் குற்றச்சாட்டுகள் எதுவும் முறையானது அல்ல என்று தெரிந்திருந்தும் அவர்களை எதிர்க்கத் துணிவில்லாத மனநிலை உடையவனாகக் காட்டப்படுகின்றான். விசுவம் இதனை, "முன்னெல்லாம் என்னைப்பற்றி யாராவது அபாண்டம் பேசினால் என்னால் பொறுத்துக்க முடியாது. இப்போதெல்லாம் நான் அலட்டிக் கொள்வதில்லை"[45] என்ற அவனது கூற்றின் மூலம் உணரமுடிகிறது. பேச்சு ஒன்றுதான் தெரிந்திருக்கிறது. தவிர செயலின் மூலமாக அதை அவனால் எதிர்க்க முடியவில்லை. பேச்சின் மூலமாக எதையும் சாதிக்க இயலாத நிலையில் செயலின் மூலம் நிறைவேற்றித் தன்னை எதிர்ப்பவர்களை முறியடித்திருக்கலாம். முடியாமல் போனது அவனது மனப்பலவீனமே.

மனைவியுடன் சதா சண்டையிட்டுக் கொண்டிருந்தும் பின்பு வாழ முடியாது என்று எண்ணும் நிலை விசுவத்தை ஆளுமைச் சிதைவுடையவனாகக் காட்டுகிறது. இவ்வாளுமைச் சிதைவிற்கு அவனுடைய பாலியல் உணர்வு அடிப்படைக் காரணமாக அமைகிறது. "விசுவம் திருமணத்திற்கு பின் அடைந்த நிலையை எனக்கு அதுவரை இருந்த தன்னம்பிக்கை நலம் நாடிப்போக்கு வாழ்க்கை மீதுள்ள பிடிப்பு, பெண்களைப் பற்றிய மதிப்பு இவை அனைத்தையும் இழக்கும்படி செய்து விட்டது"[46] என்று கூறுவது சிந்தனைக்குரியது. இவன் மனைவியாலும், மனைவி வழி உறவினர்களாலும் அதிகம் துன்புறுகிறான்.

துன்பத்திலிருந்து விடுபட மனைவியை விட்டுப் பிரிந்து மணவிலக்குப் பெற வேண்டும். அந்த எண்ணம் இருந்தும் அதனைச் செயல்படுத்த விசுவம் துணியவில்லை. விசுவத்தின் இந்த நிலைக்குக் காரணம் என்னவென்று சிந்திக்கும்போது, மனைவியால் அவன் கொண்டுள்ள மிகையான பாலுணர்வு ஈடுபாடுதான் நாவலில் புலப்படுகிறது. "இங்கேதான் என் பலவீனம்? என் தாம்பத்திய வாழ்க்கையின் தோல்வியின் அடிப்படைக் காரணமே இதுதானோ என்று எனக்கு பயமா இருக்கு சந்தோஷமோ, சங்கடமோ மிதமிஞ்சி வரும்போது அதுக்கு என்னிடம் இருக்கும் ஒரே ஒரு வடிகால் இந்த செக்ஸீன்னு தோணுது"[47] என்று "பொண்டாட்டி என்பவளைத் தவிர வேறு யாரையும் என்னால் நாட முடியாது"[48] என்றும் இவன் கூறுவதினின்று உணரலாம். மனைவியால் மட்டுமல்லாமல் மனைவி உறவினர்களாலும் விசுவத்திற்குத் துன்பங்கள் ஏற்படப் பாலுணர்வுதான் காரணம் என்பதை, "விசாலமோ, அவ வீட்டுக்காரங்களோ என்னதான் எனக்குப் பிடிக்காத காரியங்களைச் செய்தாலும் என் மூளையுடன் உடம்பும் ஒத்துழைப்பதில்லை"[49] என்று கூற்று உணர்த்துகிறது.

**தலைமுறைகள் நாவலில் வரும் திரவி**

திரவி புதுமைச்சமுதாயத்தைக் காணும் புரட்சித்திறன் மிக்கவனாகத் திகழ்கிறான். தலைமுறை தலைமுறையாக நீக்கமற நிறைந்து ஆழமாகக் கால் ஊன்றியிருக்கும் சிக்கலைத் தன் தலைமுறையில் மாற்றிக் காண்பிப்பது என்பது சற்றுக் கடினமான ஒன்றாகும். இந்தப் பணியை மென்மையாக வன்மையாக இதமாகக் கையாண்டு மாற்றிக் காண்பிக்கிறான் திரவி. எனவே திரவி ஆளுமையுடைய பாத்திரமாகத் திகழ்கிறான்.

திரவியின் தமக்கை நாகம்மையைத் திருமணம் செய்துகொண்ட பிறகு ஆறுமாதத்திற்குப் பின் அவள் குழந்தை பெறுவதற்கு தகுதியற்றவள் எனக் களங்கம் கற்பித்து அவளது கணவன் சிவானந்தப் பெருமாள் அவளைப் பிறந்த வீட்டிற்கு அனுப்பி வைத்து விடுகிறான். அப்போது திரவி பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக்கும் பருவம் நாகம்மையின் பாட்டி உண்ணாமலை, தாய்குட்டியம்மை முதலியோர் தங்கள் இல்லத்தில் புலம்புவதோடு நின்று விடுகின்றனர். தந்தை நாகருப்பிள்ளை சாதிச்சங்க அமைப்பிடம் முறையிட்டுத் தோல்வியைத் தழுவி அவளை வீட்டோடு வைத்து விடுகின்றார். ஆனால் சிறுவனாக இருந்த திரவியின் மனதில் தன் தமக்கைக்கு ஏற்பட்ட அநீதி ஆழப் பதிந்து விடுகின்றது. இதனால் அவனுக்கு அவர்களது சமூகத்தின் மீதே படிப்படையாக வெறுப்பு வளர்ந்து கொண்டே போகிறது. துன் தமக்கைக்குத் தீங்கிழைத்த சமூகமரபுகளை உடைத்து வெளியேறிப் புதுமைச் சிந்தனைகளுக்குத் தன்னை ஆட்படுத்திக் கொள்கிறான்.

பழமையின் பிடியிலிருந்து வேரறுக்க முடியாத கடந்த தலைமுறையைச் சேர்ந்த உண்ணாமலை ஆச்சி அடுத்த நிலை பற்றிச் சிந்திக்காத தாய் தந்தை, தன்னுடைய சமுதாயம், இதற்குக் காரணகர்த்தாவான சிவானந்தப் பெருமாள் இங்கு நான்கு

முனைகளின் நடுவில் சிக்கிக்கிடக்கும் நாகம்மையை வெளிக்கொண்டு வருவதைத் தலையாய கடமையாக எண்ணுகிறான் திரவி.

கரிஸ்கல் கவர்மண்ட் ஸ்கூலில் தன்னுடன் பணிபுரிகின்ற மோசஸாரின் மனைவி டாக்டர் ரோஸம்மையிடம் தன் அக்காள் நாகம்மைக்கு மருத்துவப் பரிசோதனை செய்து நாகம்மை குறை இல்லாதவள் என்பதை உணர்கிறான். சமூக மரபுகளின் மீது தனது போராட்டத்தின் இரண்டாவது நிலையாக தன் தமக்கையின் கணவனிடம் உண்மையைக் கூறி அவளை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்துகிறான். அவன் மறுத்ததால் தமக்கைக்கு இரண்டாவதாகத் திருமணம் செய்து வைக்கவும் முடிவு செய்கிறான். முற்போக்கு எண்ணம் கொண்ட இளைஞன் குற்றாலத்தைத் தன் தமக்கைக்கு உரிய புதிய கணவனாகத் தெரிவு செய்கிறான்.

சமுதாயத்தின் மீது அவன் தொடுக்கும் சிலுவைப்போரில், புனித வேள்வியில் அவன் எக்காரணத்தாலும் சித்தம் கலங்கிவிடலாகாது என்று ஒருவிதத் திட்டத்தை தன்னில் ஊறவைத்துக் கொண்டுள்ளான். நாகம்மையின் நிலை குறித்து முதல் தலைமுறையான உண்ணாமலை ஆச்சி கடவுள் மீது பாரத்தைப் போட்டுவிட்டு நிம்மதியாக இருந்துவிட முடியும். இரண்டாவது தலைமுறையான நாகம்மையின் தாய் தகப்பன் தம் மகள் இனி வாழ்நாள் பூரா வாழாவெட்டியாக இருந்து அல்லல் படப்போவதை மௌனமாயப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறெதையும் நடைமுறையில் செயலாற்ற முடியாமல் உள்ளுக்குள்ளேயே குமுறி, கொந்தளித்து நாளைக் கடத்தி விடலாம். ஆனால் புதிய தலைமுறையின் சந்ததியான இளைஞனான திரவிக்குத் தன் கூடப்பிறந்தவளின் இந்த நிலைமையில் அப்படிப் பாரத்தை வேறு யார் தலையிலாவது போட்டுவிட்டோ இல்லை கோழைத்தனமான வெறும் மனப்புழுக்கத்துடனே நின்று விட முடியுமா? என்ற சிந்தனையின் விளைவே அவனைப்

பழைய சமுதாயத்தில் புரட்சிகரமான எண்ணத்தைத் தோற்றுவிக்கும் ஓர் இளைஞனாக உருவாக்குகிறது. எனவே இவன் ஆளுமை உடையவனாகக் காட்டப்படுகிறான்.

**முடிவுரை**

நீல. பத்மநாபனின் கதைமாந்தர்கள் வேறு யாருமல்ல, நீல. பத்மநாபனே தான். இதைப் பல ஆய்வாளர்களும் சொன்னது போல நீல. பத்மநாபனே சொல்லியிருக்கிறார். நீல. பத்மநாபன் தன் நாவல்களில் தன்னையே கதைமாந்தர்களாக உருவகப்படுத்திக் கொண்டு எழுதுவதால்தான் அவர் கதைமாந்தர்களும் மனித நேயத்தின் பிரதிநிதிகளாக வலம் வருகிறார்கள்.

நீல. பத்மநாபன் நாவல்கள் எழுதுவதே ஒரு விசித்திரமான காட்சி என்று பல ஆய்வாளர்களும் சொல்லியிருக்கிறார்கள். அவர் தான் நேரடியாகப் பார்த்து புரிந்து கொண்டவர்களின் வாழ்க்கையை அல்லது தான் கேட்டுத் தெரிந்து கொண்ட வாழ்க்கையை மனதில் நினைத்துக் கொள்வார். பிறகு அதிலிருந்து தம் நாவல்களுக்குத் தேவையான கதைமாந்தர்கள் எத்தனை பேர் என்பதையும் தீர்மானித்துக் கொள்வார். அதன்பிறகு ஒருசிறு சம்பவத்தை விளக்கிவிட்டு அவரே ஒவ்வொரு கதாபாத்திரமாகி ஏற்ற இறக்கங்களோடு வசனங்களைப் பேசிக் காட்டுவார். இப்படி நீல. பத்மநாபனே ஒவ்வொரு பாத்திரமாகச் சிந்தித்து, பேசி எழுதுவதாலேயே அவர் கதைமாந்தர்கள் சமுதாயத்தின் மறக்க முடியாத பாத்திரங்களாக, மனித நேயத்தின் பேச்சாளர்களாக வலம் வருகிறார்கள்.

**அடிக்குறிப்புகள்**

1. நீல.பத்மநாபன், உறவுகள், பக் - 7
2. நீல.பத்மநாபன், பள்ளிக்கொண்டபுரம், ப - 69
3. மேலது, பக் - 73-74
4. மேலது, ப - 83
5. மேலது, ப - 274
6. மேலது, ப - 207
7. மேலது, ப - 64
8. மேலது, ப - 65
9. க.த.திருநாவுக்கரசு, ‘உளவியல் அணுகுமுறை’ திறனாய்வு அணுகுமுறைகள் பா. 113
10. நீல. பத்மநாபன், பள்ளிக்கொண்டபுரம், பா - 264
11. மேலது, ப - 265
12. மேலது, ப - 174
13. மேலது, ப - 327
14. மேலது, ப - 51
15. நீல. பத்மநாபன், உதயதாரகை, பா - 19
16. மேலது, பக் - 111-112
17. மேலது, ப - 2
18. மேலது, ப - 21
19. மேலது, ப - 19
20. மேலது, ப - 16
21. மேலது, பக் - 70-71

22. நீல.பத்மநாபன், ‘தீ…தீ’ போதையில் கரைந்தவர்கள், ப - 102

23. மேலது, ப - 84

24. மேலது, ப - 114

25. மேலது, ப - 85

26. மேலது, ப - 86

27. மேலது, ப - 105

28. மேலது, ப - 103

29. மேலது, ப - 87

30. மேலது, பக் - 103-104

31. நீல.பத்மநாபன், பள்ளிக்கொண்டபுரம், ப - 328

32. மேலது, ப - 328

33. மேலது, ப - 255

34. நீல.பத்மநாபன், உறவுகள், பா - 39

35. மேலது, ப - 45

36. மேலது, ப - 172

37. நீல.பத்மநாபன், வட்டத்தின் வெளியே, பா - 14

38. மேலது, பக் - 14-15

39. மேலது, ப - 106

40. நீல.பத்மநாபன், சமர், யாத்திரை, அனுபவங்கள், சமர், பக் - 13-14

41. மேலது, ப - 10

42. மேலது, ப - 37

43. நீல.பத்மநாபன், ‘யாத்திரை’, யாத்திரை, அனுபவங்கள், சமர், பா-210

44. மேலது, ப - 141

45. நீல.பத்மநாபன், ‘முறிவுகள்’, போதையில் கரைந்தவர்கள், பா - 210

46. மேலது, ப - 211

47. மேலது, பக் – 212-213

48. மேலது

49. மேலது

# முடிவுரை

## ஆய்வு முடிவுரை

**“பகுப்பாய்வு நோக்கில் நீல பத்மநாபன் புதினங்களில் சமூகச் சிக்கல்கள்”** என்னும் தலைப்பில் நிகழ்த்தப்பெற்ற இவ்வாய்வில் கண்டறிந்த மெய்ம்மைகள் பின்வருமாறு.

சமுதாயத்தின் முன்னேற்றத்தைச் சீர்குலைக்கும் அனைத்தும் சமூகச் சிக்கல்களாகும். ஒரு மனிதன் சிக்கலில் அகப்பட்டுத் தவிப்பது தனிமனிதச் சிக்கல் என்றும் பல மக்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ சிக்கலினால் துன்பப்படுவது சமூகச் சிக்கல்களுக்கு அடிப்படையாக அமைகின்றன. சமூகத்தில் நிகழ்கின்ற சிக்கல்களை எடுத்துக்காட்டும் விதமாக பலவிதமான இலக்கியப் படைப்புகள் தோன்றிய வண்ணம் உள்ளது. அவ்வகையில் நீல பத்மநாபனின் படைப்புகளும் மக்களின் வாழ்வியலில் எதிர்கொள்ளுகின்ற சிக்கல்களையும் வடிவமைக்கிறது. அரசு அலுவலர் உலகத்தைக் களமாகத் தன் நாவல்களில் படைத்துள்ளார். அவரது படைப்பின் நோக்கமே அலுவலக உலகம் என்றால் அது மிகையன்று. தாம் ஓர் அரசு ஊழியராக இருக்கின்ற காரணத்தால் அரசு அலுவலகத்தின் இயக்கமும், ஊழியர்களிடம் உள்ள பாகுபாடும், அதனால் ஏற்படுகின்ற விளைவுகளும் அதை ஒட்டிய நிறை குறைகளும் ஆசிரியருக்கு நேரடியாக நன்கு பழக்கப்பட்ட சூழலாகிவிட்டதால் இதைத் தம் படைப்புகளுக்கு உரியதாக்கிக் கொண்டார்.

நீல பத்மநாபன் தனது இலக்கியப் படைப்பில் கூறுவது வாழ்க்கையின் தொடக்கத்திலிருந்து தொட்டால் சிணுங்கி செடியைப் போல் இருந்ததாக ஒத்துக்கொள்கிறார். எனவேதான் அவர் மனிதன் படும் துயரைக் கண்டு வேதனைப்படுவதை நம்மால் உணரமுடிகிறது. ஆங்காங்கே மாறிவரும் சூழ்நிலையைப் பயன்படுத்தி பணம் சம்பாதித்து வாழ்க்கை நடத்தும் பணக்காரர்களைப் பற்றியும் இவர்

புதினங்களில் காணமுடிகின்றது. பொய், இலஞ்சம், பித்தலாட்டம் மற்றும் தவறான வழியில் சலுகைகள் பெறுதல் ஆகிய செயல்கள் மூலம் செல்வத்தைப் பெருக்கி வாழும் மனிதர்களைப் பற்றியும் பேசப்படுகிறது.

மதம், மொழி, இனம், நாடு, பண்பாடு, பழக்கவழக்கங்கள் எனப் பல்வேறு பிரிவினைகள் சமூகத்தில் இருப்பினும் குடும்பம் என்னும் ஒற்றைச் சொல்லுக்குள் அனைவரையும் ஒன்றிணைக்கிறது.

மனிதஉறவு முறைகளில் இணக்கமும் பிணக்கமும் தோன்றியும் மறைந்தும் இன்பமும் துன்பமும் ஒன்றாகவே பிறக்கின்றன. மனித மனத்தில் தோன்றக்கூடிய குண இயல்புகளின் உணர்வில் உருவாகும் மாற்றங்கள் பல்வேறு சிக்கல்களை உருவாக்குகின்றன. குடும்பம் சமுதாய அமைப்பின் உயிர்நாடியாக விளங்குகின்றது. சமூக அமைப்பில் தொன்மையான வடிவம் குடும்பமே ஆகும். அக்குடும்பத்திலிருந்தே சமுதாயத்தின் இயக்கம் தொடர்கின்றன. பல குடும்பங்களின் இணைப்பு சமூகமாகும். சமுதாயத்தின் ஒட்டுமொத்த அமைப்பிற்கு குடும்ப அமைப்பே மூல அலகாகத் திகழ்கிறது. ஆண், பெண் தங்களுடைய வாழ்க்கையைத் தொடங்குவதும், அவர்களுக்கு உதவியாக சுற்றமும், நட்பும், பிற உறவினர்களும் இயங்குவதுமான ஒரு அமைப்பு நிலையே குடும்பம். இவ்வமைப்பு சமூகத்தோடு தனிமனிதனின் ஆசைகளையும், தேவைகளையும் நிறைவு செய்யும் பொருட்டே தோன்றியிருக்கும். ஆதலால் குடும்பம் என்ற அமைப்பு நீல பத்மநாபன் புதினங்களின் வாயிலாக தனிமனிதனையும் குடும்பத்தையும் பாதிக்கும் கூறுகள், பெண்ணின் அகச்சிக்கல்கள், தலைமுறையாகத் தொடரும் உறவுகள் குடும்பத்தில் பெண் எதிர்கொள்ளும் சிக்கல்கள், குடும்ப வாழ்வும் தொழிலும், சமூகப்பாகுபாடும், பொருளாதார பின்னடைவும் போன்ற பலவிதமான சிக்கல்களைப் பற்றி அவர் எடுத்துரைக்கின்றார். பலவிதமான உறவு நிலைகளால்

ஏற்படும் இடர்ப்பாடுகளையும் குடும்பச் சிக்கலின் வழியாக குடும்ப அமைப்பின் அடிப்பைடைத் தேவை ஆழமான புரிதல்தான் என்பதை உணர்ந்து செயல்படுதல் நன்று என தன்னுடைய புதினங்களின் வாயிலாகத் தொகுத்துக் கூறுகிறார்.

மேலும் சமூகங்களில் காணப்படும் மனிதனின் நடத்தைகளும் நெறிமுறைகளும் பண்பாடு என்று அழைக்கப்படுகிறது. மனிதன் சமூகத்தின் ஒரு அங்கம், மனிதன் பேசும் மொழி, அணியும் ஆடை, உண்ணும் உணவு, வாழும் முறை, செய்யும் பணி, எண்ணங்கள் ஆகியவை சமூகத்தின் பண்பாட்டை வெளிப்படுத்துவதாகக் காணப்படுகின்றன. தமிழ்மொழி தோன்றிய காலம் முதல் மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், வாழ்வியல் முறைகள், அரசு, ஆட்சிமுறை, போர், வீரம், காதல் போன்றவை வெளிப்படுத்தி நிற்கின்றது. தன் சிந்தனையாற்றலை எழுத்தாளர்கள் கையாள்வதற்கு மொழிநடை துணைபுரிகிறது. அவர்கள் கையாளும் மொழிநடைக்கு ஏற்ப படைப்புகளும் உயிரோட்டம் பெறுகின்றன. நீல பத்மநாபனின் புதினங்களில் வட்டார வழக்கும் மொழிநடையும் கையாளப்பட்டுள்ளது.

இவருடைய கதாமாந்தர்கள் தனிமனிதர்களாகவும் சமூகத்தின் அங்கங்களாகவும் இப்பல்வேறு நிலைமைகளையும் பூரணமாகவே தம்முட்கொண்டு உருவாகியிருக்கிறார். உண்ணாமலை ஆச்சியும், தாத்தா கூனாங்காணிப் பாட்டாவும் தமிழ்ப்புதின இலக்கியத்திலேயே மறக்கமுடியாத சிறந்த பாத்திரங்கள், சமூகத்தின் அங்கங்களாக அவர்களைப் பார்க்கும் பொழுது அவர்கள் தம்மைச் சிறைப்படுத்திக் கொண்ட நம்பிக்கைகள், வாழ்க்கைமுறைகள் இவற்றோடு நமக்கு உடன்பாடு இல்லை என்றாலும் நிலையற்று செயலற்று தம்மைத் தாமே அவர்கள் வதைத்துக் கொள்வதையும் கண்டு நாம் வெறுப்பும் ஆத்திரமும் கொண்டாலும், தனிமனிதர்களாக நம் நேசத்திற்கு மிகவும் உரியவர்களாகிறார்கள். புதியதொரு சமூகத்தினை மாற்றி

அமைக்கும் மகத்தான பணியில் ஒவ்வொரு படைப்பும் கலைஞனுக்கும் பங்கு உண்டு என்பதனையும், மேலும் இந்த ஆய்வில் கூறப்பட்டுள்ள மக்களின் சமூகப் பொருளாதாரம், அதனால் அவர்கள் குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்கள் அதற்கான தீர்வுகள் ஆகியவற்றை ஆய்வு செய்வதன் மூலம் வரும் காலங்களில் அந்த மக்களின் நிலையை அறிந்து கொள்ளவும், இது போன்ற நிலை அடுத்த தலைமுறைக்கு வராத சூழலையும் உருவாக்க முடியும் என்பது இந்த ஆய்வின் மூலம் பெறப்பட்டது.

# துணைநூற்பட்டியல்

## துணைநூற்பட்டியல்

**முதன்மைச்  சான்றாதாரங்கள்**


1. **நீல பத்மநாபன்** **இலை உதிர்காலம்,**
வானதி பதிப்பகம்,
23, தீனதயாள தெரு, தி.நகர், சென்னை -17.

2. **நீல.பத்மநாபன்** **உணர்வுகள் சிந்தனைகள்**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட்,
41பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை – 600098.

3. **நீல.பத்மநாபன்** **உணர்வுச் சிந்தனைகள் கட்டுரைத் தொகுதி,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட்
41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை - 600 098.

4. **நீல. பத்மநாபன்** **உதயதாரகை,**
திருவரசு புத்தக நிலையம்,
23, தீனதயாள தெரு, தியாகராய நகர்,
சென்னை - 600017.

5. **நீல பத்மநாபன்** **கூண்டினுள் பட்சிகள்,**
வானதி பதிப்பகம் 13, தீனதயாளு தெரு, தி நகர்
சென்னை 17.

6. **நீல.பத்மநாபன்** **தலைமுறைகள்,**
காலச்சுவடு பதிப்பகம்,
கே.டி சாலை, நாகர்கோவில் - 629001
முதல் பதிப்பு, 1968.

7. **நீல.பத்மநாபன்** **தேரோடும் வீதி,**
காவியா வெளியீடு,
16, இரண்டாம் குறுக்கு தெரு, டிரஸ்ட் புரம்
கோடம்பாக்கம், சென்னை – 600024.
முதல் பதிப்பு, 1987.

8. **நீல.பத்மநாபன்** **பகவதிகோயில் தெரு,**
திருவரசு புத்தக நிலையம்,
23, தீனதயாள தெரு, தியாகராய நகர்,
சென்னை - 600017.

9. **நீல பத்மநாபன்** **பள்ளிகொண்டபுரம்,**
காலச்சுவடு பதிப்பகம்,
முதல் பதிப்பு டிசம்பர் 1970.

10. **நீல. பத்மநாபன்** **பார்வைகள் மறுப்பார்வைகள்**
திருவரசு புத்தக நிலையம்,
23, தீனதயாளு தெரு, தியாகராய நகர்,
சென்னை – 600017.

11. **நீல பத்மநாபன்** **போதையில் கரைந்தவர்கள்,**
வானதி பதிப்பகம்,
23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை 17.

**12. நீல. பத்மநாபன்** **ஃபைல்கள்,**
திருவரசு புத்தக நிலையம்,
23, தீனதயாள தெரு, தியாகராய நகர்,
சென்னை - 60017.

**13. நீல. பத்மநாபன்** **மின் உலகம்,**
அன்னம் 4, புது தெரு,
அக்டோபர் 1976.

**14. நீல. பத்மநாபன்** **யாத்திரை அனுபவங்கள்,**
சமர் முத்து பதிப்பகம்,
முதல் பதிப்பு, மார்ச் 1977.

**15. நீல.பத்மநாபன்** **வட்டத்தின் வெளியே,**
திருவரசு புத்தக நிலையம்,
13 புதிய எண் 23 தீனதயாள தெரு,
தியாகராய நகர், சென்னை – 600017.

**துணைமைச் சான்றாதாரங்கள்**

**16. கல்கி** **கள்வனின் காதலி,**
பதிப்பாசிரியர் திருமதி ச.சஃபிக்யா,
சுஃபியா பப்ளிகேஷன்ஸ், தாம்பரம்,
சென்னை - 600063.

**17. கண்மணி குணசேகரன்** **அஞ்சலை,**
யுனைடெட் ரைடர்ஸ்,
63, பீட்டர் சாலை, ராயப்பேட்டை, சென்னை -14
முதல் பதிப்பு, 1999.

**18. கார்த்திகேசு சிவத்தம்பி** **நாவலும் வாழ்க்கையும்,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை - 60098.

**19. குணசேகரன், அ.** **தமிழ் நாவல்களில் குடும்பச் சிதைவுகள்**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட்,
41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை – 60098.

**20. சக்திவேல், சு.** **இருபதாம் நூற்றாண்டு தமிழ் உரைநடை**
மணிவாசகர் பதிப்பகம்,
8/7 சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை - 600108.

**21. சக்திவேல், சு.** **நாட்டுப்புற இயல் ஆய்வு,**
மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை- 600108.

**22. சண்முகசுந்தரம், சு.** **நீல.பத்மநாபன்**
காவியா வெளியீடு,
16, இரண்டாம் குறுக்குத்தெரு, டிரஸ்ட்புரம்,
கோடம்பாக்கம், சென்னை – 600024.
முதல் பதிப்பு, 2010.

**23. சண்முகசுந்தரம், சு.** **நீலபத்மநாபன் இலக்கியத்தடம்,**
காவியா வெளியீடு,
16, இரண்டாம் குறுக்குத்தெரு, டிரஸ்ட்புரம்,
கோடம்பாக்கம், சென்னை – 600024.
முதல் பதிப்பு, டிசம்பர் 1999.

**24. சாந்தா பழனிச்சாமி, கி.** **சின்னப்ப பாரதி நாவல்கள்,**
முதல் பதிப்பு, ஜூன் 1999.

**25. சுப்பிரமணியம், க.நா.** **நாவல் கலை,**
நாவல் இலக்கியம் பற்றிய விமர்சனக் கட்டுரைகள்,
கலைஞன் பதிப்பகம்,
10, ஹன்ஸ்மெண்ட் ரோடு, தியாகராய நகர்,
சென்னை - 60017.

**26. செண்பகம் ராமசுவாமி** **முதல் மனிதனும் கடைசி மனிதனும்,**
முதல் பதிப்பு, 1998.

**27. ஞானசம்பந்தன், அ.ச.** **இலக்கியக் கலை,**
திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த
நூல் பதிப்பு கழகம் லிமிடெட்,
154 டி.டி.கே சாலை, சென்னை -18.

**28. தண்டாயுதம், இரா.** **நாவல் வளம்,**
தமிழ்ப்புத்தகாலயம்,
15, மாசிலாமணி தெரு, பாண்டி பஜார்,
தியாகராய நகர், சென்னை - 600017.

**29. தமிழண்ணல்** **ஆய்வியல் அறிமுகம்,**
மீனாட்சி புத்தக நிலையம்
48, தானப்ப முதலி தெரு, மதுரை -625001.

**30. தரன் கணேசன்,** **உப்பு வயல்**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட்
41பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
சென்னை - 60098.

**31. நடராசன், தி.சு.** **திறனாய்வுக்கலை கொள்கைகளும் அணுகுமுறைகளும்,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பிரைவேட் லிமிடெட்
41பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை – 600098.

**32. நளினிதேவி, நா.** **ராஜம் கிருஷ்ணன் புதினங்களில் சமுதாய மாற்றம்,**
மணிவாசகர் பதிப்பகம்,
55, லிங்கு செட்டித்தெரு, சென்னை - 600001.

**33. பக்தவச்சல பாரதி** **இலக்கிய மானிடவயல் தமிழ் சமூகத்தில் செல்நெறிகள் மீதான பண்பாட்டியல் பார்வை,**
முதல் பதிப்பு, 2014.

**34. பஞ்சாங்கம், க.** **இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும்,**
அன்னம், மனை எண் 1, நிர்மலா நகர்,
தஞ்சாவூர் – 613007.

**35. பரமசிவானந்தம், அ.மு. தமிழ் உரைநடை,**
பச்சையப்பன் கல்லூரி, சென்னை – 30.

**36. பாலசுப்பிரமணியன், கு.வெ. ஆய்வியல் நெறிகள்,**
உமா நூல் வெளியீட்டகம்,
156, காமாட்சியம்மன் கோவில் தெரு,
சரபோசி நகர், மருத்துவக் கல்லூரி சாலை
தஞ்சாவூர் – 613004.

**37. புலியூர்க்கேசிகன் குறுந்தொகை மூலமும் உரையும்**
சாரதா பதிப்பகம், சென்னை – 600143.

**38. பிள்ளை, கே.கே. தென்னிந்திய வரலாறு,**
பழனியப்பா பிரதர்ஸ், கோனார் மாளிகை,
14, பீட்டர் சாலை, சென்னை - 14.
முதல் பதிப்பு, ஜூலை 1960.

**39. பொற்கோ ஆராய்ச்சி நெறிமுறைகள்,**
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

**40. மேத்தா, மு. மனச்சிறகு,**
கவிதா பப்ளிகேஷன், மாசிலாமணி தெரு,
பாண்டி பஜார், தி.நகர், சென்னை – 60017.

**41. வரதராசன்,மு. இலக்கிய மரபு,**
7 பி, கொடிமரத் தெரு, ராயபுரம்,
சென்னை - 60013.
முதல் பதிப்பு, 1997.

**42. வரததராசன்,மு.** **கள்ளோ? காவியமோ?,**
பாரிநிலையம்,
90 பிராட்வே, சென்னை - 600108.

**43. வானமாமலை, நா.** **இக்கால இலக்கியம்**
பதிப்பாசிரியர் ரா. காமராசு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்
41பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை – 600098.

**44. வைரமுத்து** **இதுவரை நான்,**
சூர்யா
22, நான்காம் குறுக்கு தெரு
டிரஸ்ட்புரம், சென்னை - 24.
முதல் பதிப்பு, 1983.

**45. யெகாந்தன்,த.** **யெகாந்தன் சிறுகதைகள்**
நேஷனல் புக் ட்ரஸ்ட் இந்தியா
முதல் பதிப்பு, 1973.

**46. ராமலிங்கம், மா.** **பொய்யான இரவுகள்,**
பூங்குடி பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை - 4.
முதற்பதிப்பு, ஆகஸ்ட் -1973.

**47. ராஜம் கிருஷ்ணன்** **வனதேவியின் மைந்தர்கள்,**
தாகம் திநகர், சென்னை - 60017
முதல் பதிப்பு, ஆகஸ்ட் 2001

**48. ராஜம் கிருஷ்ணன்** **வேருக்கு நீர் தாகம்**

பு.எண்.34 ப.எண் 35 சாரங்கபாணி தெரு,

தி.நகர், சென்னை 60017.

**49. ஜானகிராமன், தி.** **நாவல் கலை,**

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பிரைவேட் லிமிடெட்

41பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,

சென்னை - 60098 .

**50. ஜெயமோகன்** **ஆயிரம் கால் மண்டபம்**

கவிதா பப்ளிகேஷன்

தபால் பெட்டி எண் 6123


8 மாசிலாமணி தெரு பாண்டி பஜார்

தி நகர் சென்னை 60017.

முதற்பதிப்பு, டிசம்பர் 1999.

# பின்னிணைப்புகள்

# ஆசிரியர் அறிமுகம்




- ❖ பிறப்பு
- ❖ இளமைக்கால நிலை
- ❖ கல்வி கற்ற நிலை
- ❖ பணி நிலை
- ❖ இலக்கிய ஈடுபாடு
- ❖ எழுத்துலகில் நுழைவு
- ❖ எழுத்துத் துறையில் ஈடுபட்ட நிலை
- ❖ புனை பெயர்கள்
- ❖ படைப்பிலக்கியங்கள்

## ஆசிரியர் அறிமுகம்

### தோற்றம்

1938 - ஆம் ஏப்ரல் திங்கள் இருபத்தாறாம் நாள் (26.04.1938) நீல. பத்மநாபன் பிறந்தார். இவர் பெற்றோர் நீலகண்டபிள்ளை, ஜானகி அம்மாள் ஆவர். இவர் திருவனந்தபுரத்திலே பிறந்து, வளர்ந்து, கல்வி கற்று முதன் முதலில் பணியிலும் அவ்வூரிலே அமர்ந்தார். எனவே தான் 'பள்ளிகொண்டபுரம்' நாவலில் திருவனந்தபுரம் ஊரினைத் தெள்ளத்தெளிவாய்ப் படம் பிடித்துக் காட்ட அவரால் முடிந்தது எனலாம்.

### இளமைக் கால நிலை

நீல பத்மநாபனின் தந்தையார் திருவனந்தபுரத்திலுள்ள ஒரு கடையில் மேலாளராகப் பணிபுரிந்தவர். நீல. பத்மநாபனுடன் பிறந்தவர்கள் ஒன்பது பேர். இதில் நான்கு தமையன்களும், ஐந்து தமக்கைகளும், அடங்குவர். நீல.பத்மநாபன் மாணவப்பருவத்தில் மாணவர் குழுவில் இணைந்து கிளர்ச்சியில் ஈடுபட்டார். அந்நிலையை அவரே பின்வருமாறு கூறுகின்றார்.

"சுதந்திரப் போராட்டத்தின் வீச்சோ, அலைகளோ, பாதிக்கத்தக்க வயசு ஆகியிருக்கவில்லையானாலும், சுதந்திர இந்தியாவுடன் இணைய மறுத்த ஒரு குறுநில மாகாண ஆட்சியாளர்களின் முடிவை மாற்றிக் கொள்ள வேண்டி கிளர்ந்தெழுந்த மாணவர் குலத்தின் கூட அணிவகுத்து சாலைவழி கோஷம் போட்டுச் சென்ற ஒரு நினைவுப் பொறி இப்போதும் ஞாபகத்தில் தங்கி நிற்கிறது" இந்தப் போராட்ட நினைவினைத் தன்னுடைய 'ஃபைல்கள்' நாவலிலும் 'தேரோடும் வீதி' நாவலிலும் விவரித்திருக்கிறார்

**கல்வி கற்ற நிலை**

நீல பத்மநாபன் தன் பள்ளிப்படிப்பினை இரண்டு இடங்களில் பயின்று உள்ளார். முதலில் 1944 ஆம் ஆண்டு முதல் 1946 ஆம் ஆண்டு வரை திருவனந்தபுரத்திலுள்ள அரசாங்க இடைநிலைப் பள்ளியிலும், இரண்டாவதாக 1946 ஆம் ஆண்டு முதல் 1953 ஆண்டு வரை அங்குள்ள அரசாங்க உயர்நிலைப்பள்ளியிலும் பயின்றார். கல்லூரிக் கல்வியினை மூன்று இடங்களில் கற்றுள்ளார். ஒன்று 1953 ஆம் ஆண்டு முதல் 1955 ஆம் ஆண்டு வரை திருவனந்தபுரத்திலுள்ள மார்இவானியோஸ் கல்லூரி, இரண்டாவது 1956 ஆம் ஆண்டு முதல் 1958 ஆம் ஆண்டு வரை பல்கலைக் கழக கல்லூரி, மூன்றாவதாக 1958 ஆம் ஆண்டு முதல் 1963 ஆம் ஆண்டு வரை அரசாங்கப் பொறியியல் கல்லூரியில் கல்வி கற்றுள்ளார். இவர் இயற்பியலிலும், பொறியியலிலும் பட்டம் பெற்றவர்.

இவரது தாய் மொழி தமிழ். பள்ளிப் படிப்பில் முதன் மொழியாக மலையாள மொழியைக் கற்றதாலும், மலையாளச்சூழலில் வாழ்ந்து வருவதாலும், இவர் மலையாள மொழியில் நல்ல பயிற்சி பெற்றுள்ளார். இப்பொழுது, இவர் ஹிந்தியிலும், பயிற்சி பெற்றுள்ளார். எனவே, நான்கு மொழிப்புலமை இவருக்குண்டு.

**பணி நிலை**

நீல பத்மநாபன் கல்லூரிக் கல்வியின் போது விடுமுறைக் காலத்தில் கேரள அரசின் பாசன இலாகாவில் எழுத்தராகப் பணிபுரிந்தார். பின் 1963 ஆம் ஆண்டில் இவர் மின் உலக அலுவலகத்தில் இளம் பொறியாளராகப் (Junior Engineer) பணியில் அமர்ந்தார். இப்பொழுது, துணைத் தலைமைப் பொறியாளராக இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

**இலக்கிய ஈடுபாடு**

பாரதியார், புதுமைப்பித்தன், தாகூர், ஈ.எம். பாஸ்டர், மாப்பசான், டால்ஸ்டாய், சோமர்செட்மாம் போன்ற எழுத்தாளர்களின் படைப்புக்களில் ஈடுபாடு கொண்டுள்ளார். இருபதாம் நூற்றாண்டு எழுத்தாளர்களில் மிகவும் பிடித்தவர் அமரர் க.நா சுப்ரமணியம் ஆவார்.

**எழுத்துலகில் நுழைவு**

நீல. பத்மநாபன் 1950 ஆம் ஆண்டிலிருந்து கதை எழுதத் தொடங்கினார். முதலில் ராஜாராணி கதை எழுதினார். பின் 1951 இல் ஒரு சிறுவர் கதைப்புத்தகம் எழுதி அச்சடித்துப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை முன்னுரையுடன் வெளியிட்டார். 1952 இல் ‘பதில் இல்லை’ என்ற சிறுகதையினை எழுதினார். அது இதழ்களில் நிராகரிக்கப்பட்டு, 1956 ஆம் ஆண்டு கல்லூரி ஆண்டு மலரில் வெளிவந்தது. 1965 ஆம் ஆண்டு. 'இலக்கிய வட்டம்' இதழில் 'விட்டுக் கொடுத்தவன்’ என்ற கதை இதழில் வந்த முதல் கதையாகும். 1969 -ஆம் ஆண்டு முதல் சிறுகதைத் தொகுதி வெளியானது.

இவர் எழுதிய முதல் நாவல் 'உதய தாரகை' ஆகும். இந்நாவல் 1958 ஆம ஆண்டு எழுதப்பட்டது. ஆனால் அச்சு வடிவில் வெளிவந்த நாவல் ‘தலைமுறைகள்' நாவல் ஆகும். இதனைத் தொடர்ந்து நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் என்று நீல பத்மநாபனின் படைப்புகள் வெளிவந்தன. 1961 ஆம் ஆண்டு வானொலிப் போட்டிக்காக ‘என்ஜினியர்' என்ற நாடகத்தை இவர் எழுதியுள்ளார். தம் ‘தனிமரம்’ என்ற சிறு கதையை நாடகமாக்கியுள்ளார். இவர் ‘அறத்திற்காக ஒரு போர்’ என்று பிறிதொரு நாடகத்தையும் எழுதியுள்ளார்.

இவர் மலையாள மொழியிலிருந்து சில சிறுகதைகள், கட்டுரைகள் முதலியவற்றைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். அக் கட்டுரைகளில் ஒன்று குருஷேத்திரம் எனும் நூலில் வெளிவந்துள்ளது. இவருடைய ஏனைய மொழிபெயர்ப்புகள் 'பரசுராமஷேத்திரம்' என்ற பெயரில் தொகுப்பாக வெளிவந்துள்ளன. இவர் பன்னிரெண்டு தமிழ்ச் சிறுகதைகளை மலையாளத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவை 'குருஷேத்திரம்' என்ற பெயரில் தொகுப்பாக வெளிவந்துள்ளன.

**எழுத்துத் துறையில் ஈடுபட்ட நிலை**

“அறிவு வந்த ஆதி நாளிலிருந்தே இது ஒரு துறை என்று எனக்கு தெரியவருமுன்பே. ஒழுங்கு முறையோ, பிரக்ஞைத் தெளிவோ இல்லாது, இதில் நான் ஆட்பட்டிருந்தது புகை மூட்டமாய் இப்போது புலனாகிறது” என்று தான் எழுத்துத் துறையில் ஈடுபடட நிலையை விளக்குகிறார் நீல. பத்மநாபன். “சின்னச் சின்ன விஷயங்களில் எழுத்தில் உணர்ச்சி வயப்படும் தொட்டால் வாடிவிடும் குணம், சுற்றுப் புறத்தின் பரும, நுண்ம மெல்லிய சலனங்களால் வெகுவாகப் பாதிக்கப்படும் குண அமைப்பை பாரம்பரியமாகவும், கதை சொல்லும் கலையை மூன்று, நான்கு வயதிலேயே மூளையில் கருப்பிடித்த நிலை, பாட்டியிடமிருந்து ஆராய்ச்சி மனப்பான்மையும், உணர்ச்சிப் பூர்வமாய் வெளியிடும் நிலையைத் தாயிடமிருந்தும், சாதாரண செய்திகளைக் கூட கதையாயச் சொல்லும் நிலையைத் தந்தையிடமிருந்தும் தான் கற்றுக் கொண்டதாகக்” கூறுகிறார். மேலும் "உறவினர்கள், நண்பர்கள், பள்ளி ஆசிரியர்கள், தன்னை எழுதத் தூண்டியவர்கள்" என்று கூறுகிறார்.

**புனை பெயர்கள்**

நீலத்திலகம், விதிவிலக்கன், நீல. பத்மன், அனந்த சயனம் என பல புனை பெயர்களில் நீல. பத்மநாபன் எழுதியுள்ளார்.

**படைப்பிலக்கியங்கள்**

நீல. பத்மநாபன் நாவல், சிறுகதை, நாடகம், கவிதை, கட்டுரை ஆகியன படைத்துள்ளார். பல மொழிபெயர்ப்புகளையும் இவர் செய்துள்ளார். இருபது நாவல்கள், எட்டு சிறுகதைத் தொகுப்புகள், மூன்று கவிதைத் தொகுதிகள், நான்கு கட்டுரைத் தொகுப்புகள் இவர் எழுதியுள்ளார்.

**நாவல்கள்**

1. தலைமுறைகள்
2. பள்ளிகொண்டபுரம்
3. பைல்கள்
4. உறவுகள்
5. மின் உலகம்
6. யாத்திரை
7. அனுபவங்கள்
8. சமர்
9. நேற்று வந்தவன்
10. உதய தாரகை
11. வட்டத்தின் வெளியே
12. பகவதி கோயில் தெரு

13. போதையில் கரைந்தவர்கள்
14. தீ.. தீ..
15. முறிவுகள்
16. தேரோடும் வீதி
17. பாவம் செய்யாதவர்கள்
18. கூண்டினுள் பட்சிகள்
19. வெள்ளம்
20. இலை உதிர்காலம்

**சிறு கதைகள்**

1. மோகம் முப்பது ஆண்டு
2. சண்டையும், சமாதானமும்
3. மூன்றாவது நாள்
4. இரண்டாவது முகம்
5. நாகம்மா வா
6. சிறகடிகள்
7. சத்தியத்தின் சந்நிதியில்
8. வான வீதியில்

**கவிதைகள்**

1. நீல பத்மநாபன் கவிதைகள்
2. நாகாக்க
3. பெயரிலென்ன

**கட்டுரைகள்**

1. சிதறிய சிந்தனைகள்
2. இலக்கியப் பார்வைகள்
3. சமூகச் சிந்தனை
4. யாரிடம் பகையின்றி

**மொழி பெயர்ப்புகள்**

1. குருஷேத்திரம் (மலையாளம்)
2. தற்கால மலையாள இலக்கியம் (தமிழ்)
3. பரசுராமஷேத்திரம் (தமிழ்)

**தமிழிலிருந்து மலையாளத்தில் மொழி பெயர்த்த நாவல்கள்**

1. பந்தங்கள் (உறவுகள்)
2. தீ... தீ...
3. மின் உலகம்
4. ஃபைல்கள்
5. தலைமுறைகள்
6. பள்ளிகொண்டபுரம்

**மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்ட சிறு கதைகள்**

1. கதைகள் இருபது
2. எறும்புகள்

**தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட நாவல்கள்**

1. The Generations (தலைமுறைகள்)

2. Pallikondapuram (பள்ளிகொண்டபுரம்)

**ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட கவிதைகள்**

1. Surrender and other Poems
2. The Incarnation

**ஜெர்மன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட நாவல்**

1. DIEMTGIFT

**ருசியன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட நாவல்**

1. FROM THE OCEAN OF TO HIMALAYAS

பள்ளிகொண்டபுரம் நாவல் இந்தி உருது, பஞ்சாபி. மராத்தி, அசாமி. தெலுங்கு, மலையாளம், குஜராத்தி ஆகிய மொழிகளில் வெளிவந்துள்ளது

**பாட நூல்கள்**

இவரது புத்தகங்கள் கேரள கோழிக்கோடு, மதுரை, தில்லிப் பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்புப் பாடநூல்களாக வைக்கப்பட்டுள்ளன

**பரிசுகளும் பாராட்டுகளும்**

1. அனைந்திந்திய பல்கலைக் கழக ரேடியோ நாடகப் போட்டியில் இவர் எழுதிய நாடகத்திற்கு முதல் பரிசு கிடைத்தது.
2. 'உறவுகள்' நாவலுக்கு 1977 ஆம் ஆண்டுக்காக ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் பரிசு அளிக்கப்பட்டுள்ளது.
3. "நாவலரசு"என்ற பட்டமும் கொடுக்கப்பட்டுள்ளது